## 2.1 நோக்கங்கள்

இந்த அலகுக்குச் சென்ற பிறகு, உங்களால் முடியும்:

• கேத்தரின் II இன் கீழ் ரஷ்யாவின் நிலைமையைப் புரிந்து கொள்ளுங்கள்

• கேத்தரின் II இன் உள்நாட்டுக் கொள்கைகளைப் பற்றி விவாதிக்கவும் மற்றும் பகுப்பாய்வு செய்யவும்

• கேத்தரின் II இன் வெளியுறவுக் கொள்கைகளை விவரிக்கவும்

## 2.2. கேத்தரின் II (1762 - 95)

மகாபீட்டருக்குப் பிறகு அவரது சீர்திருத்தங்களையும் இதர பணிகளையும் தொடர்ந்து செயல்படுத்தியவர் ரஷ்ய அரசி இரண்டாம் காதரின் ஆவார். இவரது ஆட்சிகாலம் நீண்டதோர் நல்லாட்சிக் காலமாக அமைந்தது.

குறிப்பு

இவர் கடைப்பிடித்த வெற்றிகரமான வெளிநாட்டுக் கொள்கையும், போர்க்களங்கள் கொடுத்த புகழ்மிக்க வெற்றிகளும் ரஷ்யாவுக்குப் பெருமையையும், காதரினுக்குப் புகழையும் கொடுத்தன. ரஷ்யநாடு செழிப்படைய தன்னையே அர்ப்பணித்தார். எனவே தான் ரஷ்ய வரலாற்றில் “மகாகாதரின்“ என்று புகழ் மிக்க இடம் பெற்றுள்ளார்.

- பீட்டர் இறந்த 1725-ம் ஆண்டிலிருந்து 1762-ம் ஆண்டு வரை ரஷ்யாவில் ஸ்திரமற்ற அரசியல் நிலையே காணப்பட்டது. 1762-ல் பதவியேற்ற மூன்றாம் பீட்டர் திறமையற்றவராகவும், நோய் வாய்ப் பட்டவருமாக இருந்தார். மிகக் குறுகிய காலமே ஆண்ட இவர் நோயினால் இறந்து விட்டதாக சொல்லப்பட்டது. ஆனால் உண்மையில் அவரது மனைவி காதரினால் கொல்லப்பட்டதாக ஆனால் வரலாற்றாசிரியர் கருதுகின்றனர். தனது கணவன் இறந்ததும் “இரண்டாம் காதரின்“ என்ற பட்டத்துடன் ரஷ்யாவின் அரியணை ஏறினார்.

### 2.2.1. உள்நாட்டுக் கொள்கை :

1762-ல் அரசியாகப் பதவியேற்ற காதரின் சுமார் முப்பத்தி நான்கு ஆண்டு காலம் ரஷ்யாவின் அரசியாகப் பதவி வகித்தார். மகா பீட்டரின் கொள்கைகளை அப்படியே பின்பற்றினார். துணிவோடு செயல்படும் ஆற்றலும், மக்களின் நல்லெண்ணத்தைக் கவரும் திறமையும் அவரிடம் இருந்தன. சிறந்த அறிவும், சக்தியும், தந்திரமும் படைத்தவர். ரஷ்ய மொழியைக் கற்று, ரஷ்ய கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றி, ரஷ்ய மக்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். ரஷ்யாவைப் பன்னாட்டு அரசியலில் பங்கெடுக்க வைத்து அதில் வெற்றியும் கண்டார். ஐரோப்பிய அரசியல் தலைவர்களுள் தலைசிறந்தவராக விளங்கினார். உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் மகாபீட்டர் ஆரம்பித்த பணிகளை மகாகாதரின் முழுமையடையச் செய்தார்.

### 2.2.2. சீர்திருத்தங்கள் :

பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பரவிக் கொண்டிருந்த அறிவு வளர்ச்சி இயக்கத்தின் முற்போக்குக் கருத்துக்களில் அதிக ஈடுபாடு காட்டினார் காதரின். இவர் தன்னை மக்களின் நலன் நாடும்

வல்லரசியாகவே கருத வேண்டும் என்று விரும்பினார். எனவே மக்களின் நலன் கருதியே பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார்.

குறிப்பு

இவரது ஆட்சியில் அதிகாரம் முழுவதும் அரசியின் கையில் குவிக்கப்பட்டிருந்தது. நாட்டின் நிர்வாகப் பிரிவுகளான மாநிலங்கள் மற்றும் மாவட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டு கவர்னர்கள், உதவி கவர்னர்கள், அதிகாரிகள் ஆகியோர் நியமிக்கப்பட்டார்கள். நாட்டில் நிலவி வந்த பல்வேறு வகையான சட்டங்களின் தொகுப்பைத் தயாரிக்க ஒரு குழுவை அமைத்து, எந்த அடிப்படையில் இந்த சட்டங்களின் தொகுப்பு தயாரிக்கப்பட வேண்டும் என்று ஆணைகள் விடுத்தார். திருச்சபையிலும் பல சீர்திருத்தங்களைப் புகுத்தினார். திருச்சபையை தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரும் நோக்கத்துடன், திருச்சபையின் நிலங்களை பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். அந்த நிலங்களை உழுதுவந்த குடியானவர்களுக்கு அவை சொந்தமாக்கப்பட்டன.

தனது ஆட்சியை ஆதரித்து வந்த பிரபுகளுக்கு நிர்வாகத் துறையிலும் படைத்துறையிலும் அதிக அதிகாரங்கள் அளித்தார் காதரின். உண்மையாக ஊழியம் செய்த பிரபுக்களுக்கு நிலத்தையும், அதனை உழுவதற்கு குடியானவர்களையும் அளித்தார். பிரபுக்கள் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தனர். ஆனால் அவர்கள் அரசியலில் எந்த வித முக்கியத்துவமும் பெற்றிருக்க வில்லை. ரஷ்யாவில் நில அடிமை முறையை ஒழிப்பதற்கு மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார் காதரின். ஆனால் பிரபுக்களின் எதிர்ப்பு காரணமாக குடியானவர்களின் முன்னேற்றத்திற்காக நன்மைகள் ஏதும் செய்ய முடியவில்லை.

பிரெஞ்சு அரசியல் அறிஞர்களான வால்டர், திதரோ ஆகியோர் களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் காதரின். அந்த நூற்றாண்டின் அறிவு வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சியில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த காதரின், ரஷ்யாவில் பல பள்ளிகளையும், ஆராய்ச்சிக் கூடங்களையும் நிறுவினார். ரஷ்ய இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கம் அளித்தார். கெரஸ்கோப், விஷின், டெர்ஷாலின் போன்ற ரஷ்யக் கவிஞர்கள் இவரால் போற்றி ஆதரிக்கப்பட்டனர். மாண்ட்ஸ்கியூ, ரூசோ ஆகியோரது நூல்களை நிறையப் படித்தவர் காதரின். அதனால் ரஷ்யாவில் ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்க முயன்றார். 1768-ல் ஒரு

அவையைக் கூட்டி நீண்ட ஆலோசனைகளையும், விவாதங்களையும் நடத்தினார்.

குறிப்பு

ஆனால் பிரபுக்களின் சுயநல மனப்பான்மையால் அதைச் செயல்படுத்த முடியாமல் போய்விட்டது.

காதரின் காலத்தில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரம் மேலும் அழகுபடுத்தப்பட்டது. பீட்டரின் மரணத்திற்குப் பிறகு புறக்கணிக்கப்பட்டு போன தொழிலும், வாணிபமும் இப்போது மறுபடியும் ஊக்குவிக்கப் பட்டன. பீட்டர்ஸ்பர்க்கில் ஒரு அக்கடமியும், பல உயர்நிலைப் பள்ளிகளும் திறக்கப்பட்டன. இங்கிலாந்தில் தொழிலிலும், விவசாயத்திலும் ஏற்பட்டு வந்த புதிய மாறுதல்களை நேரில் கண்டறிந்து வருவதற்காக பல பிரபுக்கள் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டனர். இவ்வாறு உள்நாட்டுக் கொள்கையில் பீட்டரைக் காட்டிலும் திறமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு ரஷ்யாவின் மதிப்பை உயர்த்தினார். எனவே தான் ரஷ்ய மக்கள் இவரை “மகா காதரின்“ என்று பெருமையுடன் அழைத்தார்கள்.

### 2.2.3. வெளிநாட்டுக் கொள்கை :

அயல்நாட்டுக் கொள்கையிலும் பீட்டரின் நோக்கங்களையே பின்பற்றினார் காதரின். ரஷ்யாவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையே மூன்று முக்கிய நாடுகள் இருந்தன. அவை ஸ்வீடன், துருக்கி, போலந்து ஆகியவை யாகும் இவைகளில் ஸ்வீடனை ஏற்கனவே முறியடித்து பால்டிக்கடல் வரைக்கும் எல்லைகளை விரிவுபடுத்தினார் பீட்டர். எனவே மற்ற இரண்டு நாடுகளையும் தோற்கடிக்கும் பணியில் ஈடுபட்டார் காதரின். தனது ராஜதந்திரத்தால் போலந்தை பங்கு போட்டுக் கொள்ள முடிந்தது. ஆனால் துருக்கியை காதரினால் வெற்றி பெற முடியவில்லை. கருங்கடலின் வட பகுதியில் உள்ளதுருக்கியின் சில பிரதேசங்களை அவர் கைப்பற்றிய போதும் துருக்கியை முழுவதுமாக அழித்து விட முடியவில்லை. தன்னுடைய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவாக பிரஷ்யாவுடனும், ஆஸ்திரியா வுடனும் கூட்டுச் சேர்ந்து கொண்டார் காதரின். தனது வெளிநாட்டுக் கொள்கையில் வெற்றி பெறுவதற்கான கீழ்க்கண்ட சூழ்நிலைகள் காணப்பட்டன.

1. போலந்தில் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பமும், திறனில்லாத ஆட்சியமைப்பும் அந்நியர்களின் தலையீட்டுக்கு ஏதுவாக இருந்தது.

2. இதே நேரத்தில் துருக்கியும் வலிமையிழந்து வீழ்ச்சியடையும் நிலையிலிருந்தது. இந்த இரண்டு நாடுகளுக்கும் ரஷ்யாவை எதிர்க்கக்கூடிய வலிமையும் ஆற்றலும் இல்லை .

3. அத்துடன் ஏழாண்டுப் போரின் விளைவாக பிரான்சு நாடு வலிமையிழந்து தனது நண்பர்களான போலந்துக்கும், துருக்கிக்கும் உதவி செய்ய முடியாத நிலையிலிருந்தது.

4. எல்லாவற்றிற்கும் மேலாக காதரினின் திட்டங்களை நிறைவேற்ற ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் தொடர்ந்து அவருக்கு ஒத்துழைப்பையும், ஆதரவையும் அளித்தன. எனவே ரஷ்யாவைக் கட்டுப்படுத்தக்கூடிய வல்லரசு அப்போது ஐரோப்பாவில் ஒன்றுகூட இல்லை .

## 2.2.4. காதரின் துருக்கியுடன் நடத்திய போர்:

போலந்து நாட்டில் காதரின் தலையிட்டு தனது செல்வாக்கை நிலைநாட்டி விட்டதால் துருக்கி பயமடைந்தது. போலந்தின் நிலை தனக்கும் ஏற்படும் என்று அஞ்சியது. இச்சூழ்நிலையில் துருக்கியின் நட்பு நாடான பிரான்ஸ் ரஷ்யாவுக்கு எதிராக துருக்கியைத் தூண்டி விட்டது. எனவே போலந்தின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டும், ஐரோப்பிய சக்தி சமநிலையை நிலைநாட்டவும் ரஷ்யா மீது போலந்து போர் தொடுக்கக் காரணமானது. அதே நேரத்தில் போலந்து புரட்சியாளர்களுக்கு துருக்கி தஞ்சமளித்ததால் ரஷ்யாவும் துருக்கி மீது போர் தொடுத்தது.

ரஷ்யாவுக்கும் துருக்கிக்குமிடையே 1768லிருந்து 1774 வரை போர் நடைபெற்றது. அப்போது துருக்கிய சுல்தானாக இருந்தவர் மூன்றாம் முஸ்தபா ஆவார். இவரது ஆட்சி வலிமையற்றும், ஊழல்கள் நிறைந்தும் காணப்பட்டது. படைவலிமையில் மிகவும் பின் தங்கியிருந்தது. துருக்கிய ஆட்சியில் கொடுந்துன்பங்களை அனுபவித்து வந்த தகஸ்தான், சுபார்தா, ஜார்ஜியா, பால்கன் தீபற்கபம் ஆகிய பகுதியிலுள்ள மக்கள் ரஷ்யர்களை விரும்பி வரவேற்றனர். ரஷ்யப்படை 1769-ல் வாலாச்சியா, மோல்டேவியா பகுதிகளைக் கைப்பற்றியதுடன், தனுபே பகுதியில் பல கோட்டைகளைக் கைப்பற்றியது. பெரும் எண்ணிக்கையிலிருந்த

குறிப்பு

துருக்கியப் படைகள் லார்கா, ககுலா, ஆகிய போர்க்களங்களில் முற்றிலும் தோற்கடிக்கப் பட்டன. ரஷ்யத் தளபதிகளான கவுரோவ், ரூமியன்சேவ் ஆகியோர் 1771-ல் கிரிமியாவைக் கைப்பற்றி அங்கிருந்த பல கோட்டை களைக் கைப்பற்றினார். தொடர்ந்து போரை நடத்த முடியாத துருக்கி 1774-ல் ரஷ்யாவுடன் கட்சக் கைனார்ஜி உடன்படிக்கையைச் செய்து கொண்டது. கட்சக் கைனார்ஜி உடன் படிக்கை இந்த உடன்படிக்கையின்படி

1. ஆசாவ் துறைமுகமும், அதைச் சுற்றியிருந்த பகுதிகளும் ரஷ்யாவுக்குக் கொடுக்கப்பட்டன.

2. கருங்கடலுக்கு வடபகுதியிலுள்ள பிரதேசங்களின் மீது தனக்கிருக்கும் ஆதிக்கத்தை துருக்கி விட்டுக் கொடுக்க இசைந்தது.

3. வாலாச்சியா, மோல்டேவியா, கிரீஸ் ஆகிய பகுதிகளைத் துருக்கியே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. ஆனால் அப்பகுதி மக்களுக்கு நல்லாட்சியை வழங்குவதாகதுருக்கி உறுதியளித்தது.

4. பாஸ்பரஸ், டார்டனல்லஸ் போன்ற துருக்கியக் கடல் பகுதிகளில் ரஷ்யக்கப்பல்கள் வியாபாரத்திற்காக நுழைவது அனுமதிக்கப் பட்ட து.

5. கான்ஸ்டாண்டிநோபிளிலுள்ள சில கிறிஸ்தவ ஆலயங்களைப் பாதுகாக்கும் உரிமையும், துருக்கியர் ஆளுகையிலிருக்கும் கிறிஸ்தவர்களின் சார்பில் பேசும் உரிமையும் ரஷ்யாவுக்கு அளிக்கப்பட்டன.

இதன் உடன்படிக்கையின் விளைவாக கிழக்கு ஐரோப்பாவில் துருக்கியின் வீழ்ச்சி துவங்கியது. அங்கு ரஷ்யாவின் ஆதிக்கம் வளரத் தொடங்கியதால் கிழக்கத்தியப் பிரச்சனை ஏற்பட ஆரம்பித்தது. கிழக்கு ஐரோப்பாவில் ரஷ்ய ஆதிக்கம் வளரலானது. கருங்கடல் பிரதேசத்தில் ரஷ்யா ஒரு முக்கிய அரசாக விளங்கியது. பாஸ்பரஸ், டார்டனல்லஸ் வழியாக ரஷ்ய வியாபாரக் கப்பல்கள் செல்ல உரிமை கிடைத்ததால் ஐரோப்பாவுடன் தொடர்பு கொள்ள மேலும் ஒரு வழி ரஷ்யாவுக்குக் கிடைத்தது. மேலும் துருக்கியப் பேரரசில் அடிக்கடி ரஷ்யாதலையிடுவதற்கு இந்த உடன்படிக்கை வழிவகுத்துக் கொடுத்தது.

இவ்வாறு உலக அரசியலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தது. துருக்கியுடன் மீண்டும் போர்:

குறிப்பு

அடுத்தபடியாக காதரின் கருங்கடலுக்கு வடக்கிலுள்ள கிரிமியா பகுதிகள் மீது தன் ஆதிக்கத்தை ஏற்படுத்தும் பணியை மேற்கொண்டார். அங்கு கலகங்களைத் தூண்டி விட்டார். கிரிமியா ரஷ்யாவுடன் சேரவேண்டுமென்றும், அதை எதிர்த்தும் இரண்டு பிரிவுகள் கிரிமியாவில் ஏற்பட்டு விட்டன. இந்த குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு 1784-ல் காதரின் ஒரு ரஷ்யப் படையை அனுப்பி கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைத்துக் கொண்டார். மேலும் கிரிமியாவில் செபஸ்டபூல் என்னுமிடத்தில் ரஷ்யக் கப்பற்படைத் தளம் ஒன்றும் அமைக்கப்பட்டது. 1787-ல் ஆஸ்திரியப் பேரரசர் இரண்டாம் ஜோசப்புடனும், வேறு பல நாட்டுத் தூதர்களுடனும் கிரிமியாப்பகுதிக்குப் போய் வந்தார்காதரின்,

இதனைக் கண்டு ஆத்திரமடைந்தார் சுல்தான் அப்துல் ஹமீது கிரிமியாவிலிருந்து ரஷ்யா வெளியேற வேண்டுமென்று கூறி, ஸ்வீடனின் உதவியையும் நம்பி 1787-ல் இரண்டாவது முறையாக ரஷ்யா மீது படையெடுத்தது துருக்கி. இப்போர் 1791 வரை நீடித்தது. பல இடங்களில் நடைபெற்ற போர்களில் ரஷ்யாவெற்றி பெற்றது. துருக்கியின் உதவிக்கு வந்த ஸ்வீடன் கப்பற்படையை ரஷ்யக் கப்பற்படை கோக்லாந்தில் நடைபெற்ற போரில் தோற்கடித்தது. மேலும் ரஷ்யத் தளபதி உசாகோவ் துருக்கியக் கடற்படையை இருமுறை தோற்கடித்தார். தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்த துருக்கி 1792-ல் ஜெஸ்ஸி உடன்படிக்கை மூலம் போரைமுடித்துக் கொண்டது.

### 2.2.5. ஜெஸ்ஸி உடன்படிக்கை :

இந்த உடன்படிக்கையின்படி,

1. கிரிமியாவை முன்பு ரஷ்யா இணைத்துக் கொண்டதை துருக்கி இப்போது ஏற்றுக் கொண்டது.

2. கருங்கடலுக்கும் காஸ்பியன் கடலுக்குமிடையிலுள்ள காகஸஸ் பகுதியை ரஷ்யா பெற்றது. இதனால் ரஷ்யாவின் எல்லை மேற்கே நீஸ்டர் ஆறு வரைவிரிவடைந்தது.

குறிப்பு

இவ்வாறு ரஷ்யப் பேரரசின் எல்லை கருங்கடலின் கரையைத் தொடவேண்டும் என்ற பீட்டரின் கனவு நனவாகியது. ரஷ்யா இன்னமும் விரிவடைய நினைத்த போது தான் கிழக்கத்தியப்பிரச்சனை எழுந்தது.

## 2.3. போலந்து பிரிவினை :

### 2.3.1. போலந்து பிரிக்கப்படக் காரணங்கள்:

காதரின் அரியணை ஏறியபோது போலந்து ஒரு பரிதாபகரமான சூழ்நிலையிலிருந்தது அரசர் வலிமையிழந்து காணப்பட்டார். பாராளு மன்றம் வலிமை இழந்திருந்தது. மத்திய அரசாங்கம் செயலற்று விளங்கியது. பிரபுக்களிடம் போட்டி பூசல் மலிந்து அண்டை நாடுகளான ரஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகியவை போலந்து விவகாரங்களில் தலையிடு வதற்கு ஒரு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியது. இந்த வல்லரசுகளின் தலையீட்டின் விளைவாக போலந்து பங்கிடப்பட்டு ஐரோப்பிய வரைபடத்திலிருந்தே அகற்றப்பட்டது.

போலந்துக்குச் சொந்தமான பகுதிகளைக் கைப்பற்றும் நோக்கத்துடன் காதரின் ஒரு திட்டம் வகுத்து அதைச் செயல்படுத்த பிரஷ்யாவின் அரசர் மகாபிரடரிக்கை நாடினார். போலந்தில் காணப்பட்ட குழப்பநிலையைப் பயன்படுத்தி 1764-ல் தனது நம்பிக்கைக்குரிய இரண்டாம் ஸ்தானிஸ்லாஸ் என்பவரைப் போலந்தின் அரியணையில் அமர்த்தினார். இதிலிருந்து போலந்தின் உள்நாட்டு விவகாரத்தில் ரஷ்ய ஆதிக்கம் வளர ஆரம்பித்தது. அங்கு ரஷ்யாவுக்கு எதிராக ஏற்பட்ட கிளர்ச்சியை ஒடுக்கினார்காதரின்.

### 2.3.2. முதல் போலந்து பிரிவினை : (1772)

முதல் துருக்கியப் போரில் டான்யூப் நதிக்கரையிலிருந்த மோல்டேவியா, வாலாச்சியா ஆகிய மாநிலங்களை ரஷ்யா கைப்பற்றியது கண்டு ஆஸ்திரியா பொறாமையடைந்தது. எனவே ஆஸ்திரிய அரசி மரியதரசா 1771-ல் துருக்கியுடன் உடன்படிக்கை செய்து கொண்டு அதற்கு உதவினார். ரஷ்யா பெற்ற பல வெற்றிகளைக் கண்டு பிரஷ்யாவும் அச்சங்கொண்டது. போலந்து முழுவதையுமே காதரின் இணைத்துவிடக் கூடாது என்பதற்காக மரியதரசாவும், பிரஷ்ய அரசர் மகாபிரடரிக்கும்

குறிப்பு

ஒன்று சேர்ந்தனர். 1772-ல் போலந்தைப் பங்கிடும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. காதரின் உடனே இதற்கு இணங்கினார். இந்த நேர்மையற்ற திட்டத்திற்கு மரியதரசா முதலில் இணங்கவில்லை . ஆனால், தான் கூட்டுச் சேரா விட்டாலும் போலந்து பங்கிடப்படும் என்ற நிலை ஏற்பட்டபின் இறுதியில் அதற்கு அவரும் இணங்கினார். இந்த மூன்று நாடுகளும் போலந்தைப் பங்கிட்டதைப் போன்ற பொல்லாத நிகழ்ச்சியை வரலாற்றில் எங்கும் பார்க்க முடியாது. முதல் போலந்து பிரிவினையில் கீழ்க்கண்டபடி போலந்து பங்கிடப்பட்டது.

1) ரஷ்யா : டியூனா, நீபர் நதிகளுக்குக் கிழக்கே யிருந்த பைலோரஷ்யா என்ற பகுதி முழுவதும், உக்ரெயின் மாநிலத்தின் பெரும்பகுதியும் போலந்திடமிருந்து ரஷ்யாபெற்றுக்கொண்டது.

2) பிரஷ்யா : டான்சிக், தார்ன் பட்டிணங்கள் நீங்கலாக மேற்கு பிரஷ்யா முழுவதும் பிரஷ்யாவுக்குக் கிடைத்தது. கிழக்கு பிரஷ்யாவையும் பிராண்டன்பர்க்கையும் இணைக்க இது உதவியது.

3) ஆஸ்திரியா : கிராக்கோவ் பட்டிணம் நீங்கலாக காலீஷியா(ஊயடஉைடயை) பகுதி முழுவதும் ஆஸ்திரியாவுக்கு கிடைத்தது.

இந்த முதல் பிரிவினையின் விளைவாக போலந்து தன் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியையும், நான்கில் ஒரு பகுதி நிலத்தையும், செல்வத்தில் பாதியையும் இழந்தது. அதன் பின்னர் சுமார் இருபத்தொரு ஆண்டுகாலம் போலந்து பிறநாட்டு மன்னர்களின் பிடியில் சிக்கித்தவித்தது.

### 2.3.3. இரண்டாம் போலந்து பிரிவினை : (1793)

போலந்தில் ரஷ்யாவின் தலையீடும், அதன் ஆதிக்கமும் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படுத்தத் தடையாக இருந்தன. மேலும் நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களே அந்நியர் தலையீட்டுக்குக் காரணம் என்று நினைத்த போலந்து, மக்கள் அரசியலில் சில சீர்திருத்தங்கள் செய்ய முற்பட்டனர். மேலும் பிரெஞ்சுப் புரட்சியில் பயங்கர ஆட்சியைக் கண்டு பயந்து போன காதரின் போலந்தின் பிரச்சனைகளைத் தீர்க்க எண்ணினார். 1788-ல் டயட் என்ற போலந்து பாராளுமன்றத்திற்கான

தேர்தல் நடைபெற்றது. இந்த பாராளுமன்றம் சில சீர்திருத்தச் சட்டங்களை இயற்றியது. 1791, மே 3-ம் தேதி புதிய அரசியலமைப்புச்சட்டத்தையும் நிறைவேற்றியது.

பிரெஞ்சுப் புரட்சியினைப் பின்பற்றி போலந்தின் புதிய அரசும் விடுதலை இயக்கத்தை துவங்கக்கூடும் என்று எண்ணிய காதரின் 1793-ல் பிரஷ்யாவுடன் இணைந்து இரண்டாவது போலந்து பிரிவினைக்கு ஏற்பாடு செய்தார். ஆஸ்திரியா, பிரான்சுடன் தீவிரப்போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் இப்பிரிவினையில் பங்கெடுக்கவில்லை. இரண்டாவது போலந்து பிரிவினையின்படி ரஷ்யா போலந்தின் தென்கிழக்கிலிருந்த வோல்கைனியா, பொடோலியா ஆகிய பரந்த மாநிலங்களை எடுத்துக் கொண்டது. போசன், வார்சா (ூளநெ, றுயசளயற) வரையிலுள்ள மேற்கு போலந்தை பிரஷ்யா எடுத்துக் கொண்டது.

## 2.3.4. மூன்றாவது போலந்துப் பிரிவினை (1795)

தங்கள் கண்முன்னாலேயே தங்கள் நாடு பங்கு போட்டு சிதைக்கப்படுவதைக் கண்ட போலந்து மக்கள் கிளர்ந்தெழுந்தனர். அக்கிளர்ச்சியில் நகரத்து ஏழைகளும், கைவினைஞர்களும், நடுத்தர மக்களும், சிந்தனையாளர்களும் பங்கு கொண்டனர். அமெரிக்க விடுதலைப் போரில் பங்கு பெற்றுத் திரும்பியிருந்த தளபதி கோசியஸ்கோ இக்கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார். வல்லரசுகளின் ஆதிக்கத்திலிருந்து போலந்தை விடுவிக்கவும், போலந்தின் பழைய எல்லைகளைப் பெறுவதுமே புரட்சியாளர்களின் நோக்கமாக இருந்தது. ஆயினும் வலிமையானக ரஷ்ய ராணுவத்தின் முன் கிளர்ச்சியாளர்கள் என்ன செய்ய முடியும்? “ரஷ்ய தளபதி சுவரோவ் இக்கிளர்ச்சியைக் கடுமையாக ஒடுக்கினார்.

எனவே போலந்தில் எஞ்சியிருந்தது சிறு பகுதியே என்றாலும் அது விடுதலை விரும்பிகளான புரட்சிக்காரர்களின் கூடாரமாக மாறி விடக்கூடாதே என்று கருதிய காதரின் முடிவாக அதன் மூன்றாவது பிரிவினைக்கும் ஏற்பாடு செய்தார். இந்த மூன்றாவது பிரிவினையில் ஆஸ்திரியாவும் சேர்ந்து கொண்டது. 1795ல் மூன்றாவது போலந்து பிரிவினை எவ்வித தடையுமின்றி எளிதில் நிறைவேறியது.

குறிப்பு

ரஷ்யா : கூர்லாந்து, லிதுவேனியாவில் எஞ்சியிருந்த பகுதி, எஞ்சியிருந்த உக்ரேன் பகுதி ஆகியவைரஷ்யாவுக்குக் கிடைத்தது.

பிரஷ்யா : நீமெனுக்கும், விஸ்துலாவுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி வார்சாவுடன் பிரஷ்யாவுக்குக் கிடைத்தது.

ஆஸ்திரியா : விஸ்துவா நதிப்பள்ளத்தாக்கின் மேல் பகுதியான கிராகோ, காலிஷியாஆகியவை ஆஸ்திரியாவுக்குக் கிடைத்தன.

இந்த போலந்து பிரிவினைகளின் விளைவாக போலந்து என்ற நாடே ஐரோப்பிய வரைபடத்திலிருந்து முற்றிலும் மறைந்து போயிற்று. போலந்தின் பிரிவினையைத் தொடங்கி வைத்த இரண்டாம் காதரின் அதற்கு முற்றுப் புள்ளி வைத்து, அதன் முடிவு கண்டு மிகவும் மனம் மகிழ்ந்தார்! வரலாற்றுச் சிறப்பு மிக்க எவ்வளவு பெரிய சாதனை! ஆனால் இப்பிரிவினையால் ரஷ்யா விரிவடைந்தது. பைலோ ரஷ்யா, உக்ரேன், லிதுவேனியா ஆகிய பகுதிகளை ரஷ்யா பெற்றதால், ரஷ்யாவின் எல்லை பிரஷ்ய ஆஸ்திரிய எல்லைகளுக்கு அடுத்து வந்துவிட்டது. நிலவியல் ரீதியாக ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாகக் கருதப்படும் தகுதியைப் பெற்றது ரஷ்யா. போலந்து மீண்டும் சுதந்திரம் அடைய 123 ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய தாயிற்று. ஆம், 1918-ல் முதல் உலகப்போர் முடிவில் தான் போலந்து மீண்டும் சுதந்திரம் பெற்ற நாடானது.

## மதிப்பீடு

ரஷ்யாவை ஒரு ஐரோப்பிய நாடாக்கியது பீட்டரின் சாதனை என்றால் அதை ஓர் உன்னத நிலைக்கு கொண்டு வந்து புகழ் ஏணியின் உச்சியில் வைத்தது, காதரினின் சாதனையாகும். ரஷ்யாவின் வளத்திற்கும், எல்லைப்புற விரிவாக்கத்திற்கும் காதரினேகாரணம். ஐரோப்பிய அரசியலில் ரஷ்யா ஒரு முக்கியப் பங்கை ஏற்கும் நிலையை உருவாக்கியவர் காதரின். போலந்தை அழித்து ரஷ்யாவுக்கு மேற்கு வழியை உண்டாக்கிய பெருமை இவரையே சாரும். போலந்தைப் பிரித்தது ஒரு பகல் கொள்ளை என்று வர்ணிக்கப்பட்டாலும், பதினெட்டாம் நூற்றாண்டின் அரசியலில் இவ்விதச் செயல்கள் சகஜமாகக் காணப்பட்டது. இது தவிர கருங்கடல் பகுதியில் முக்கியத் துறைமுகங்களைப் பெற்றது. காதரினின் சாதனை யாகும். காதரின்

காலத்தில் ஏற்பட்ட ரஷ்யாவின் இந்த பெரும் வளர்ச்சி போலந்து, ஸ்வீடன், துருக்கி ஆகிய நாடுகளின் வளர்ச்சியை பெரிதும் பாதித்தது. பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய ஒளியூட்டும் வல்லரசர்களின் வரிசையில் காதரின் சிறப்புமிக்க இடத்தைப் பெறுகிறார்.

## 2.4. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1. இரண்டாம் கேத்தரின் தந்தை யார்?
2. கேத்தரின் முதல் அறிக்கை எப்போது வெளியிடப்பட்டது?
3. கேத்தரின் வெளிநாட்டு மையத்தில் என்ன இரண்டு ராஜ்யங்கள் இருந்தன கொள்கைகள்?
4. 1774 அமைதி ஒப்பந்தத்தின் நன்மைகள் என்ன?
5. எந்த நாடுகள் "ஆயுத நடுநிலைமை பிரகடனத்தில்" கையெழுத்திட்டன?

## 2.5. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்க கேள்விகள் பதில்கள்

1. கேத்தரின் II ஒரு ஜெர்மன் இளவரசர், கிறிஸ்டியன் ஆகஸ்ட், இளவரசரின் மகள்

Anhalt-Zerbst இன்.

2. கேத்தரின் முதல் அறிக்கை டிசம்பர் 4, 1762 அன்று வெளியிடப்பட்டது. அது அச்சிடப்பட்டது.

ரஷ்ய, ஜெர்மன், பிரஞ்சு, ஆங்கிலம், போலிஷ், செக் மற்றும் அரபு மொழிகளில்.

## 2.6. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

### குறுகிய பதில் கேள்விகள்

1. கேத்தரின் II இன் ஆளுமை பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதுங்கள்.
2. இரண்டாம் கேத்தரின் ஆட்சியின் போது நடந்த போர்களைப் பற்றி விவாதிக்கவும்.

**நீண்ட பதில் கேள்விகள்**

1. கேத்தரின் II இன் உள்நாட்டுக் கொள்கையைப் பற்றி விவாதிக்கவும்.
2. கேத்தரின் II இன் வெளியுறவுக் கொள்கையின் சிறப்பம்சங்களை விவரிக்கவும்.

குறிப்பு

## 2.7. கூடுதல் வாசிப்புகள்

Kamenskii, A. and D. Griffiths. 2015. *The Russian Empire in the Eighteenth Century: Tradition and Modernization.* United Kingdom: Taylor & Francis.

Bushkovitch, P. 2011. *A Concise History of Russia*. United States: Cambridge University Press.

Dukes, P. 1998. *A History of Russia: Medieval, Modern, Contemporary, C.882-1996*. United States: Duke University Press.

Boterbloem, K. 2013. *A History of Russia and Its Empire: From Mikhail Romanov to Vladimir Putin*. United States: Rowman & Littlefield Publishers.

Ziegler, C. E. 1999. *The History of Russia. United Kingdom*: Greenwood Press.

# அலகு 3

## அலெக்சாண்டர் I இன் ஆட்சி

**பாட அமைப்பு**

**3.0 அறிமுகம்**

**3.1 நோக்கங்கள்**

**3.2 அலெக்சாண்டர் I (1801-1825)**

- **3.2.1. உள்நாட்டுக் கொள்கை :**
- **3.2.2. அதிகாரபூர்வமற்ற குழு :**

**3.3. முதலாம் அலெக்சாந்தர்**

- **3.3.1. அரக்ஷாவ் காலம்**
- **3.3.2. ரஷ்ய பைபிள் கழகம்**

**3.3.3. கல்வித்துறையில் கண்காணிப்பு**

**3.3.4. போலந்து அரசியலமைப்பு** :

**3.4. வெளியுறவுக் கொள்கை :**

**3.4.1. நெப்போலியப்போர்கள்** :

**3.4.2. டில்சிட் உடன்படிக்கை (1807) :**

**3.4.3. 1812-ம் ஆண்டு போர் :**

**3.4.4. வியன்னா மாநாடு (1815)** :

**3.4.5. ஐரோப்பிய வல்லரசு மாநாடுகள்** :

**3.4.6. புனிதக் கூட்டு**

**3.5. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்**

**3.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்க பதில்கள் கேள்விகள்**

**3.7. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்**

**3.8. கூடுதல் வாசிப்புகள்**

## 3.0 அறிமுகம்

1801 இல் இருந்து ரஷ்யாவின் பேரரசர் (Czar), போலந்து காங்கிரஸின் முதல் மன்னர் 1815 முதல், மற்றும் பின்லாந்தின் கிராண்ட் டியூக் 1809 முதல் அவர் இறக்கும் வரை, அலெக்சாண்டர் நான் அல்லது அலெக்ஸாண்டர் பாவ்லோவிச், பேரரசர் பால் I மற்றும் சோ.ஃ.பி ஆகியோரின் மூத்த மகன். வூர்ட்டம்பேர்க்கின் டோரோதியா. அலெக்சாண்டர், செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் கிராண்டிற்கு பிறந்தவர் டியூக் பால் பெட்ரோவிச் (பின்னர் பால் I) படுகொலைக்குப் பிறகு அரியணை ஏறினார் அவரது தந்தையின். நெப்போலியன் போர்களின் கொந்தளிப்பான காலத்தில், அவர் ரஷ்யாவை ஆட்சி செய்தார். அலெக்சாண்டர், இளவரசராகவும் மற்றும் அவரது ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளில், அடிக்கடி தாராளவாதத்தைப் பயன்படுத்தினார் சொல்லாட்சி, ஆனால் உண்மையில் ரஷ்யாவின் முழுமையான கொள்கைகள் தொடர்ந்தன. இந்த அலகு, நாம் அலெக்சாண்டர் I இன் ஆட்சியின் போது உள்நாட்டு சீர்திருத்தங்கள் மற்றும் வெளியுறவுக் கொள்கைகள் பற்றி விவாதிக்கவும். நாங்கள் செய்வோம் புனித கூட்டணியை நிறுவுவதில் கவனம்

குறிப்பு

## 3.1 நோக்கங்கள்

இந்த அலகுக்குச் சென்ற பிறகு, உங்களால் முடியும்:

• அலெக்சாண்டர் I இன் ஆட்சியைப் புரிந்து கொள்ளுங்கள்

• அலெக்சாண்டர் I இன் உள்நாட்டு மற்றும் வெளியுறவுக் கொள்கை களைப் பற்றி விவாதிக்கவும்

• புனித கூட்டணியின் செயல்பாடுகள் மற்றும் முக்கியத்துவத்தை விவரிக்கவும்

## 3.2 அலெக்சாண்டர் I (1801-1825)

முதலாம் அலெக்சாந்தர் முரண்பாடுகளின் மொத்த வடிவம் என்றால் அது மிகையல்ல. அவரது தொடக்கக்கால கல்வி அவரது பாட்டி இரண்டாம் காதரீனால் ஏற்பாடு செய்யப்பட்டது. அது ஸார் மன்னர்களின் பாரம்பரிய வல்லாட்சி கருத்துக்களை ஊட்டியது. அதன்பின் லாஹார்ப் என்ற ஸ்விஸ் குடியரசுவாதியின் கல்வி பகுத்தறிவு, சமத்துவம், மனிதாபிமானம் போன்ற பண்புகளை ஊட்டியது. இரண்டு கல்வியும் அவர் எதிர்காலத்தில் ஆட்சிபுரியப் போகும் ரஷியாவைப் பற்றி எதுவும் கூறவில்லை . பொதுவாக அவர் உறுதியான மனோபாவமற்றவர், கனவுலகில் சஞ்சரித்து கற்பனைத் திட்டங்கள் தீட்டுவதில் வல்லவர். இளமைக்காலம் :

சுமார் கால் நூற்றாண்டு காலம் ரஷியாவை ஆட்சி செய்யும் வாய்ப்பினைப் பெற்ற அலெக்சாந்தர் பாலின் மைந்தராவார். தந்தையாரின் கொலையில் மறைமுகமான பங்கு இவருக்கு உண்டு. இளமையில் சுவிஸ் நாட்டைச் சார்ந்த ஆசிரியர் ஒருவரிடம் கல்வி பயின்றார். எனவே அவரிடமிருந்து தாராளக்கோட்பாடுகளை கற்றுக் கொண்டார். இக்கோட் பாடுகள் அவரது மனதில் 1820 வரையிலும் அழியாது நிலை கொண்டிருந்தன. ஆனால் பின்னர் ஆஸ்திரிய நாட்டு சான்சலரான மெட்டர்னிக்கோடு நெருங்கிய தொடர்பு ஏற்பட்ட போது அவை சூரியனைக் கண்ட பனிக் கட்டியைப் போன்று அவரது மனதிலிருந்து மாய்ந்துவிட்டன.

ஐரோப்பாவில் நெப்போலியன் போன்ற மாமேதைகள் ஆட்சி செய்து வந்த காலத்தில் இவர் ரஷ்யாவை ஆட்சி செய்து வந்தார்.

ஆனால் அவர்களைப் போன்று இவர் திறமையுடையவர் அல்லர். எனினும் தனது அதிர்ஷ்டத்தால் ரஷ்யாவைப் பேரழிவில் நின்றும் பாதுகாத்துக் கொண்டார். தனது இருபத்தி மூன்றாவது வயதில் ரஷ்யாவின் சாராகப் பொறுப்பேற்ற போது ஐரோப்பா பல நெருக்கடிகளுக்கு உள்ளாயிற்று. உள் நாட்டிலும் குழப்பங்கள் மலிந்து காணப்பட்டன. இவரது ஆட்சிக் காலத்தை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்

1. 1801-1815 வரை- பிரெஞ்சுப் புரட்சியின் சகாப்தகாலம்
2. 1815-1825 வரை - நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் மெட்டர்னிக்கின் தலைமையின் கீழ் ஐரோப்பாவை சீர்திருத்தி அமைக்க முயற்சித்த காலம்

### 3.2.1. உள்நாட்டுக் கொள்கை :

அலெக்சாண்டர் 1801ல் அரியணை ஏறும்போது ரஷ்ய உள்நாட்டு, நிர்வாகம் குழப்பநிலையிலிருந்தது. அறியாமை, லஞ்ச ஊழல், தேசியக் கடன் ஆகியவை மிகுந்திருந்தன. மக்கள் தொகையில் பாதிப்பேர் நில அடிமைகளாக இருந்தனர். அவர்கள் நிலை பரிதாபமாக இருந்தது. இப்பிரச்சனைகளைத் தீர்ப்பது அவரது சக்திக்கு அப்பாற்பட்டவை களாயிருந்தன. எனினும் அவர் பதவி ஏற்றதும், இரண்டாம் காதரீன் காலத்து சட்டங்கள், உணர்வுகளின்படி ஆட்சி புரியப் போவதாக அறிவித்தார். நாடு கடத்தப்பட்டவர்களையும் சிறைச்சாலையிலிருந தவர்களையும் விடுவிக்கும் ஆணை பிறப்பித்தார். ஏற்றுமதி கட்டுப்பாடு, செய்தித்தாட்கள் மீதான கட்டுப்பாடு மற்றும் வெளிநாட்டுப் பயணத்தடை ஆகியவை அகற்றப் பட்டன. எழுத்தாளர்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் நிதி உதவி அளித்தார்.

### 3.2.2. அதிகாரபூர்வமற்ற குழு :

அரசியல் சமுதாய சீர்திருத்தங்களில் முற்போக்கு கருத்துக்கள் கொண்ட இளைஞர்கள் பலர் அலெக்சாந்தரின் ஆலோசகர்களாக இருந்தனர். இவர்கள் எந்தவிதப் பதவிப் பொறுப்பிலும் இல்லாததால் ““அதிகாரப் பூர்வமற்ற குழு““ எனப்பட்டனர். ஆனால் பழமை விரும்பிகள் இக்குழுவை ”ஜாக்கோபியன் கும்பல்““ எனப் பழித்தனர். இக்குழுவின் பரிந்துரையின் பேரில் நில அடிமைகளை விடுவிக்க ஓர் சிறு முயற்சி எடுத்தார். அதன்படி நில அடிமைகள் தனியாகவோ, ஒரு கூட்டமாகவோ

குறிப்பு

அவர்களது எஜமானர் களுடன் கலந்து பேசி பரஸ்பரம் இசைவுடன் ஓர் ஏற்பாட்டிற்கு வந்ததால் அவர்கள் விடுதலையை அனுமதிக்கும் ஆணை வெளியிடப்பட்டது. இது நடைமுறையில் எதிர்பார்த்த பயனளிக்கவில்லை. இவரது 24 ஆண்டு ஆட்சிக்காலத்தில் பத்துமில்லியன் நில அடிமைகளில் 37,000 பேர் மட்டும் தான் இத்திட்டப்படி விடுதலை பெற முடிந்தது.

அடுத்த ஒரு முக்கியமான சீர்திருத்தம் நிர்வாகத் துறைகள் அமைச்சகங்களாக மாற்றப்பட்டது ஆகும். அதன்படி போர், கப்பற்படை, வெளியுறவு, நீதி, நிதி, உள்நாடு, வாணிபம், கல்வி என்ற எட்டு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். கல்விச் சீர்திருத்தம் : 1803-ல் முதன்மைப் பள்ளி நிர்வாகம் என்ற அமைப்பை ஏற்படுத்தினார். கிராமியப் பள்ளி, மாவட்டப்பள்ளி,

## 3.3. முதலாம் அலெக்சாந்தர்

55 உடற்பயிற்சி பள்ளி, பல்கலைக்கழகம் என்ற நான்கடுக்கு கல்வி முறையை புகுத்தினார். வில்னோ , டோர்பர்ட், காஸன், கார்கோவ் ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. போதிய நிதி வசதியின்மையினாலும், பயிற்சி பெற்ற ஆசிரியர் பற்றாக்குறையினாலும் இந்தக் கல்விச் சீர்திருத்தங்கள் ஏட்டளவிலே இருந்தன. ஸ்பெரன்ஸ்கி காலம் ஸ்பெரன்ஸ்கி என்பவர் 1807 லிருந்து 1812 வரை ஸார் அலெக்சாந்தரின் முதன்மை ஆலோசகராக இருந்தார். அவரது சீர்திருத்தங்களாவன:

(i) ரஷ்ய ஆட்சி அலுவலகங்களில் திறமையைப் புகுத்துவதற்கு பல மாறுதல்களைக் கொண்டு வந்தார்.

(ii) போர்களில் ஏற்பட்ட பணப்பற்றாக்குறையைச் சரிக்கட்டுவதற்கு அரசு செலவுகளைக் குறைத்தார். காகித நாணயங்களை கட்டுப்படுத்தினார். பொது மக்களிடம் கடன் எழுப்பினார். பண்ணை வருமானங்கள் மீது வரி விதித்தார். இந்த சீர்திருத்தங்கள் ஸ்பெரன்ஸ்கிக்கு புதிய பகைவர்களை தோற்றுவித்தேயன்றி பொருளியல் வளத்தை அல்ல.

(iii) புதியதொரு அரசியலமைப்புத் திட்டத்தை தயாரித்தது அவரது மிகப்பெரிய சாதனை. இத்திட்டத்தை ஸார் முழுமையாக ஏற்காது ஒரு சிறு பகுதியை மட்டும் செயல்படுத்தினார். அதன் காரணமாக அவர்

அலெக்சாந்தரை குறை கூறியதால் பதவி நீக்கம் செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார்.



### 3.3.1. அரக்ஷாவ் காலம் :

ஸ்பெரன்ஸ்கி வீழ்ச்சிக்குப் பின் பத்தாண்டு காலம் அரக்ஷாவ் என்பவர் ஸார் அலெக்சாந்தரின் மிக நெருங்கிய ஆலோசகராக விளங்கினார். ”படை குடியமைப்பு““ அரக்ஷாவின் புதியதொரு திட்டமாகும். இது நிர்வாகத்தில் திறமை, ஒழுங்கு, கட்டுப்பாடுகளை புகுத்தும் என எதிர்ப் பார்க்கப்பட்டது. ஆனால் இது அரசு அதிகாரிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

### 3.3.2. ரஷ்ய பைபிள் கழகம் :

பைபிள் போதனையை ரஷ்ய மக்களிடை பரப்பும் நோக்குடன் இது. நிறுவப்பட்டது.

### 3.3.3. கல்வித்துறையில் கண்காணிப்பு :

1812க்குப் பின் கல்வி நிறுவனங்கள் கடும் கட்டுப்பாட்டிற் குள்ளாக்கப்பட்டன. தாராள முற்போக்கு கருத்துக்கள் கல்வி நிலையங்களுள் புகுந்துவிடாதபடி கண்காணிக்கப்பட்டன.

### 3.3.4. போலந்து அரசியலமைப்பு :

1815ல் வியன்னா ஏற்பாட்டின்படி ரஷியாவிற்களிக்கப்பட்ட போலந்திற்கு ஒரு தாராள அரசியலமைப்பு ஒன்றை வகுத்துக் கொடுத்தது அலெக்சாந்தரின் சாதனைகளுள் ஒன்றாகும். ஆனால் அவ்வரசியல் அமைப்பு எந்த உணர்வுடன் வரையப்பட்டதோ அந்த உணர்வுடன் செயல் படுத்தப்படவில்லை . அதற்குக் காரணம் அங்கு நியமிக்கப்பட்ட அரசப் பிரதிநிதிகள் பிற்போக்கு வல்லாட்சியாளர்களாக இருந்தது தான்.

## 3.4. வெளியுறவுக் கொள்கை :

### 3.4.1. நெப்போலியப்போர்கள் :

தமது காலம் அமைதியின் காலமாகும். என அலெக்சாண்டர் கூறிக்கொண்டாலும் அவருடைய காலத்தில் தான் ரஷ்யா அதுவரை

இல்லாத அளவிலான மிகப்பெரிய போரை சந்திக்க நேர்ந்தது. அவர் பதவி ஏற்றதும் முந்திய ஸார் பால் ஏற்பாடு செய்திருந்த இந்தியப் படையெடுப்புத் திட்டத்தைக் கைவிட்டார். ஆமியன்ஸ் உடன்படிக்கைப்படி நெப்போலியப் போர்கள் தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. எனவே ஸார் அலெக்சாந்தரும் பிரிட்டன், பிரான்ஸ், பிரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுடன் நல்லுறவு கொண்டிருந்தார்.

ஆனால் பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையில் போர் மூண்டது. இப்போது ஸார் பிரான்சிற்கு எதிரான மூன்றாவது கூட்டணியில் பிரிட்டன், ஸ் வீடன், ஆஸ்திரியா ஆகிய நாடுகளுடன் இணைந்து போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். ஆனால் இந்த மூன்றாவது கூட்டணியை எதிர்த்து நெப்போலியன் மிகப்பெரிய வெற்றிகளைப் பெற்றார். 1805-ல் ஆஸ்திரியப் படைகளை உல்ம் என்ற இடத்திலும், ஆஸ்திரிய - ரஷ்ய கூட்டுப் படைகளை ஆஸ்டர்லிட்ஸ் என்ற இடத்திலும் தோற்கடித்து வெற்றி பெற்றார்.

அதனைத் தொடர்ந்து 1806-ல் ஜினா என்ற இடத்தில் பிரஷ்யாவைத் தோற்கடித்து பெர்லினில் வெற்றிப் பவனி வந்தார். அதன் பின் பிரெஞ்சுப் படைகள் ரஷியா நோக்கி முன்னேறின. ரஷ்யா இச்சமயத்தில் பிரெஞ்சு ராஜ தந்திரிகளால் தூண்டப்பட்ட துருக்கிப் போரிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. இந்த பிரெஞ்சுப் படைகள் 1807-ல் ரஷ்யப் படைகளை எய்லென, ஃபிரிட்லாந்து ஆகிய இடங்களில் தோற்கடித்து பெரும் வெற்றி பெற்றன. எனவே ரஷ்யா அமைதியை நாடியது.

### 3.4.2. டில்சிட் உடன்படிக்கை (1807) :

இந்த உடன்படிக்கை இரு நாடுகளுக்கிடையிலான போரை முடிவிற்கு கொண்டு வந்தது. ஜெர்மனி, ஹாலந்து, இத்தாலி, போலந்து ஆகிய இடங்களில் நெப்போலியன் செய்த அரசியல் ஏற்பாடுகளை ஸார் ஏற்றுக் கொண்டார்.

முதலாம் அலெக்சாந்தர் பொருளாதார திட்டத்தை நிறைவேற்ற ஒத்துழைப்பு அளிப்பதாகவும் ஸார் உறுதி கூறினார். இந்த டில்சிட் அமைதி ஒரு வகையில் ரஷ்யாவிற்கு நன்மை பயப்பதாக இருந்தது. நெருக்கிக் கொண்டிருந்த உள்நாட்டுப் பிரச்சனைகளில் ஸார் கவனம்

குறிப்பு

செலுத்த முடிந்தது. பின்லாந்தில் தம் ஆதிக்கத்தை உறுதி செய்து கொள்ள முடிந்தது. துருக்கியுடனான போரை வெற்றிகரமாக நடத்த முடிந்தது.

**3.4.3. 1812-ம் ஆண்டு போர் :**

டில்சிட் உடன்படிக்கை இரு நாடுகளிடை நிரந்தர அமைதியை ஏற்படுத்தி விடவில்லை. ஸார் அலெக்சாந்தரின் சகோதரியை நெப்போலியன் மணமுடிக்க விரும்பிய போது ஸார் அதற்கு இணங்கவில்லை. மேலும் நெப்போலியனின் கண்டப் பொருளாதாரத் திட்டம் ரஷியாவின் நலன்களுக்கு பாதகமாயிருப்பதைக் கண்ட ஸார் அதனைக் கைவிட்டார். எனவே மீண்டும் இரு நாடுகளும் போருக்கு தயாராயின. ஸார் துருக்கியுடனான போரை 1812-ல் அவசரமாக முடித்துக் கொண்டு இங்கிலாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு நெப்போலியனுடனான போருக்குத் தயாரானார்.

1812 ஜூனில் ஆறு லட்சம் போர் வீரர்களைக் கொண்ட மாபெரும் படையுடன் நெப்போலியன் ரஷ்யா மீது படையெடுத்தார். பொரோடினோ என்ற இடத்தில் நடைபெற்ற போரில் ரஷியப் படைகள் தோல்வியுற்றன. ஆனால் இரு தரப்பிலும் ஏராளமான உயிர்சேதம் ஏற்பட்டது. அதன் பின் ரஷியப்படைகள் ""பொசுக்கும் கொள்கையைக் "" கடைப்பிடித்து பின்வாங்கின. செப்டம்பர் 14-ல் நெப்போலியன் மாஸ்கோவினுள் வெற்றிகரமாக நுழைந்தார். இனியாவது ஸார் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு முன்வருவார் என நெப்போலியன் ஐந்து வார காலம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

குளிர்காலம் நெருங்கிக் கொண்டிருந்ததை அச்சத்துடன் எதிர்நோக்கினார். வெறிச்சோடிக் கிடந்த அந்நகரில் தமது மாபெரும் படைக்கு உணவுப் பொருள் எதுவும் கிடைக்காதது கண்டு அதிர்ச்சியுற்றார். இச்சமயத்தில் மாஸ்கோவில் பெரும் தீ விபத்து ஏற்பட்டு நகரின் பெரும் பகுதியை சாம்பலாக்கி விட்டது. எனவே நாடு திரும்ப முடிவு செய்தார். அப்பெரும் படை நாடு திரும்பவும் வழியில் குளிரிலும் பணியிலும் கோசக்கு களின் கொரில்லா தாக்குதல்களிலும் பெரும் நாசத்திற்குள்ளானது. 50,000 வீரர்களே மீண்டும் ரஷ்ய எல்லையைக் கடந்து நாடு மீண்டனர்.

இச்சமயத்தில் அலெக்சாந்தர், நெப்போலியனின் ஆதிக்கம் நீடிக்கும் வரை ஐரோப்பாவிற்கு அமைதி கிடைக்காது என்று முடிவுகட்டி நெப்போலியனுக்கு எதிரான போரை தொடர்ந்து நடத்தினார். 1814-ல் லீப்சிக்கில் நெப்போலியனை பன்னாட்டுப் படைகள் தோற்கடித்தன. நெப்போலியன் எல்பாதீவிற்கு கைதியாக அனுப்பப்பட்டார்.

பிரஷ்ய மன்னரும் ஆஸ்திரிய தளபதியும் புடைசூழ அலெக்சாந்தர் தமது படைகளுக்கு தலைமை தாங்கி பாரிஸ் நகரினுள் வெற்றிப் பவனி வந்தார். பிரெஞ்சுப் படைகள் மாஸ்கோவை பாழடித்தது போல் ரஷ்யப் படைகள் பாரிசை பாழ்படுத்தவில்லை . முதல் பாரீசு ஒப்பந்தம் (1814) கையெழுத்தான பின் இங்கிலாந்திற்கும் விஜயம் செய்தார். மீண்டும் ரஷியாவிற்குத் திரும்பிய போது அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப் பட்டது.

### 3.4.4. வியன்னா மாநாடு (1815) :

நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பின் ஐரோப்பிய அரசியல் ஏற்பாடுகள் பற்றி விவாதிக்க ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் வியன்னாவில் கூடினார்கள். ""நெப்போலியனை வென்றவர்"" என அங்கு முதலாம் அலெக்சாந்தர் போற்றப்பட்டார். "கொள்ளைப் பொருளில்" ரஷியாவின் பங்கான போலந்தைப் பெறுவதில் அதிக ஆர்வம் காட்டினார். அதன் விளைவாக போலந்தையும் பின்லாந்தையும் ரஷியாபெற்றது.

### 3.4.5. ஐரோப்பிய வல்லரசு மாநாடுகள் :

ஆஸ்திரியா, பிரஷ்யா, பிரிட்டன் ஆகிய வல்லரசுகளோடு ரஷ்யா 1815-ல் நால்வர் கூட்டு செய்து கொண்டது. அதன்படி ஐரோப்பிய அமைதியை பாதுகாக்கவும், வியன்னாவில் செய்து கொள்ளப்பட்ட அரசியல் ஏற்பாடுகளை செயல்படுத்தவும் ஒருங்கிணைந்து நிற்பது என ஒப்புக் கொண்டார். அமைதிக்கு ஏதாவது இடையூறு ஏற்படும் போது வல்லரசுகள் ஒன்றுகூடி கலந்து பேசி பிரச்சனைகளை தீர்த்து வைப்பது எனவும் முடிவு செய்தனர். அதன்படி பிரச்சனைகள் தோன்றிய போது கீழ்க்கண்ட இடங்களில் கூடினர்.

1) ஐய்லாஷேப்பல் 1818 2) திரோப்போ 1819 3) லேபேக் 1820 4) வெரோனா 1822

குறிப்பு

### 3.4.6. புனிதக் கூட்டு :

நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பின் ஐரோப்பாவில் புரட்சி ஏற்படாத படி பாதுகாத்து அமைதியை நிலைநாட்டுவதில் அதிக அக்கரை காட்டினார். அமைதியை நிலைநாட்டுவதற்காக கடவுளால் அனுப்பப்பட்டவர் என்று உணரத் தொடங்கினார். கிறிஸ்துவ போதனைகளின்படி மன்னர்கள் நடந்து கொண்டால் போரே வராது என்று உறுதியாக நம்பினார். எனவே பன்னாட்டரசியலுக்கு கிறிஸ்துவ ஆன்மீக உணர்வு ஊட்டுவதற்கு முயன்றார். அதன் விளைவுதான் புனிதக் கூட்டு. இதன்படி ஐரோப்பிய நாடுகளின் மன்னர்கள் கிறிஸ்துவ சகோதரத்துவ உணர்வுடன் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ள வேண்டும். தங்கள் நாட்டு குடிகளை சொந்த குழந்தை களைப் போல் நடத்த வேண்டும். இந்த இரு கொள்கைகளையும் பின்பற்றினால் உலகில் போர் மூளாது புரட்சியும் எழாது என அறிவித்தார். இந்தக் கொள்கை சொல்வதற்கு எளிதானது ஆனால் நடைமுறைப் படுத்த இயலாதது. எனவே தான் மெட்டானிக் என்பவர் இதனை “அர்த்தமற்ற கூச்சல்““ எனக் குறை கூறினார். எனினும் அலெக்சாந்தரை திருப்திப்படுத்த வல்லரசுகள் புனிதக் கூட்டில் கையெழுத்திட்டன.

**மதிப்பீடு** :

தாராள முற்போக்கு கருத்துக்கள், பாரம்பரிய வல்லாட்சிக் கோட் பாடுகள் ஆகிய ஒன்றுக்கொன்று முரணான கொள்கைகளில் ஈடுபாடு காட்டிய ஸார் அலெக்சாந்தர் வரலாற்றாசிரியர்களுக்கு ஒரு புரியாத புதிராக இருக்கிறார். அரசியலில் ஆன்மீக நெறிகள் பின்பற்றப்பட வேண்டுமென எதிர்பார்த்தவர் தம் சொந்த தந்தையின் படுகொலை சதியில் சம்பந்தப் பட்டிருந்தது அவரது குணநலன்களில் முரண்பாடிருப்பதை தெளிவாக விளக்குகிறது. பின்னாளில் அந்த சதிச் செயலுக்காக மனம் வருந்தியதாகக் கூறப்படுகிறது.

## 3.5. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1. அலெக்சாண்டர் I இன் முதல் ஆசிரியர் யார்?
2. இளவரசர் ஆடம் சர்டோரிஸ்கி யார்?

குறிப்பு

3. எப்பொழுது முதலாம் அலெக்சாண்டர் நிலத்தின் உரிமையை மக்களுக்கு நீட்டித்தார்?

4. நெப்போலியன் எப்போது, எங்கே ரஷ்யர்கள் மற்றும் ஆஸ்திரியர்களை தோற்கடித்தார் முதல் போர்?

5. எந்த நாடுகள் புனிதக் கூட்டணியின் பகுதியாக இருந்தன?

## 3.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்க பதில்கள் கேள்விகள்

1. கேத்தரின் தனக்கு அறிமுகமானவர் மற்றும் ஒரு தத்துவஞானியை அழைத்தார் பிரெஞ்சு அறிவொளி, டெனிஸ் டிடெரோட், அலெக்சாண்டர் I இன் தனிப்பட்ட ஆசிரியராக ஆனார்.

2. இளவரசர் ஆடம் சர்டோரிஸ்கி அலெக்சாண்டர் I இன் நான்கு நண்பர்களில் ஒருவர் ஒரு முக்கிய போலந்து அரசியல்வாதி, வெளியுறவு மந்திரி மற்றும் கண்காணிப்பாளர் வில்னா.

3. அலெக்சாண்டர் I நிலத்தை சொந்தமாக வைத்திருக்கும் உரிமையை மக்களுக்கு முக்கியமாக நீட்டித்தார்

1801 இல் அரசுக்கு சொந்தமான விவசாயிகளை உள்ளடக்கியது.

4. நெப்போலியன் 1805 இல் ஆஸ்டர்லிட்ஸில் ரஷ்யர்கள் மற்றும் ஆஸ்திரியர்களை தோற்கடித்தார் மற்றும் 1807 இல் ∴பிரைட்லேண்டில் ரஷ்யர்களை வென்றது.

5. புனிதக் கூட்டணி என்பது முடியாட்சி பெரும் சக்திகளால் உருவாக்கப்பட்ட ஒரு கூட்டணி ரஷ்யா, ஆஸ்திரியா மற்றும் பிரஷியா, இறுதி தோல்விக்குப் பிறகு அங்கீகரிக்கப்பட்டது நெப்போலியன் ரஷ்யாவின் ஜார் அலெக்சாண்டர் I இன் வேண்டுகோளின் பேரில் பாரிஸில் கையெழுத்திட்டார் 1815.

## 3.7. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

### குறுகிய பதில் கேள்விகள்

1. அலெக்சாண்டர; I பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதுங்கள்.

2. புனிதக் கூட்டணியின் உருவாக்கத்தை சுருக்கமாக விளக்கவும்.

**நீண்ட பதில் கேள்விகள்**

குறிப்பு

1. அலெக்சாண்டர் I இன் ஆட்சியின் கீழ் உள்ள உள் சீர்திருத்தங்களைப் பற்றி விவாதிக்கவும்.
2. அலெக்சாண்டர் I இன் வெளியுறவுக் கொள்கை பற்றிய கருத்து.

## 3.8. கூடுதல் வாசிப்புகள்

Kamenskii, A. and D. Griffiths. 2015. *The Russian Empire in the Eighteenth Century: Tradition and Modernization.* United Kingdom: Taylor & Francis.

Bushkovitch, P. 2011. *A Concise History of Russia*. United States: Cambridge University Press.

Dukes, P. 1998. *A History of Russia: Medieval, Modern, Contemporary, C.882-1996*. United States: Duke University Press.

Boterbloem, K. 2013. *A History of Russia and Its Empire: From Mikhail Romanov to Vladimir Putin*. United States: Rowman & Littlefield Publishers.

Ziegler, C. E. 1999. *The History of Russia. United Kingdom*: Greenwood Press.

# பிளாக் II

## நிக்கோலஸ் I- நிக்கோலஸ் II இலிருந்து சீர்திருத்தங்கள்

குறிப்பு

## அலகு 4

## நிக்கோலஸ் I இன் ஆட்சி

பாட அமைப்பு

4.0 அறிமுகம்

4.1 நோக்கங்கள்

4.2 நிக்கோலஸ் I (1825-55)

- 4.2.1. வாரிசுரிமைச் சிக்கல் :
- 4.2.2. டிசம்பர்வாதிகள் புரட்சி :
- 4.2.3. உள்நாட்டுக் கொள்கை :
- 4.2.4. சான்சரி மன்றத்தின் விரிவாக்கம் :
- 4.2.5. சட்டத்தொகுப்பு :

4.3. முதலாம் நிக்கோலஸ்

- 4.3.1. நில அடிமைகள்
- 4.3.2. கல்விச் சீர்திருத்தம் :
- 4.3.3. குருஷோக்ஸ் :
- 4.3.4. சிறுபான்மையினரின் பரிதாபநிலை :
- 4.3.5. போலந்து சிக்கல் :
- 4.3.6. வெளியுறவுக் கொள்கை :
- 4.3.7. கிரேக்க விடுதலைப் போர் :
- 4.3.8. மெஹ்மத் அலி விவகாரங்கள் :
- 4.3.9. 1848 பிப்ரவரி புரட்சியும் நிக்கோலாசும் :
- 4.3.10. பாரசீகப் போர் : (1826 - 28)
- 4.3.11. மத்திய ஆசியாவில் விரிவாக்கம் :

4.4. கிருமியப்போர், (1854 - 56)

**4.4.1. போருக்கான காரணங்கள் :**

**4.4.2. துருக்கியின் மீது ரஷ்யாவின் திட்டங்கள் :**

**4.4.3. ரஷ்யத் திட்டங்களுக்கு இங்கிலாந்தின் எதிர்ப்பு:**

**4.4.4. மூன்றாம் நெப்போலியனின் பேராசை :**

**4.4.5. பெத்லகேம் ஆலயக் கட்டுப்பாட்டுப் பிரச்சனை:**

**4.4.6. ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு:**

**4.5. போரின் போக்கு :**

**4.5.1. பாரிசு உடன்படிக்கை 1859 மார்ச் 9**

**4.6. கிருமியப் போரின் முக்கியத்துவம் (விளைவுகள்) :**

**4.7. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்**

**4.8. கூடுதல் வாசிப்புகள்**

## 4.0 அறிமுகம்

1825 முதல் 1855 வரை, நிக்கோலஸ் I ரஷ்யாவின் பேரரசராக, போலந்தின் மன்னராக ஆட்சி செய்தார். மற்றும் பின்லாந்தின் கிராண்ட் டியூக். அவர் பால் I இன் மூன்றாவது மகன் மற்றும் அவரது முன்னோடி ஆவார். அலெக்சாண்டர் I இன் இளைய சகோதரர். எதிராக டிசம்பிரிஸ்ட் சதி தோல்வியுற்ற போதிலும் அவரை, நிக்கோலஸ் அவரது சகோதரரின் சிம்மாசனத்தை பெற்றார். வரலாற்றில், அவர் பெரும்பாலும் நினைவுகூரப்படுகிறார் ஒரு பிற்போக்குத்தனமாக அதன் கொந்தளிப்பான ஆட்சி வகைப்படுத்தப்பட்டது, ஒருபுறம் பிராந்திய விரிவாக்கம், விரைவான வளர்ச்சி மற்றும் குறிப்பிடத்தக்க தொழில்மயமாக்கல், மற்றும் மறுபுறம், நிர்வாகக் கொள்கைகளை மையப்படுத்துதல் மற்றும் ஒடுக்குதல் எதிர்ப்பின். இந்த பிரிவில் உள்நாட்டு மற்றும் வெளியுறவுக் கொள்கைகள் குறித்து விவாதிப்போம் நிக்கோலஸ் I. நாங்கள் கிரிமியன் போரில் கவனம் செலுத்துவோம்.

## 4.1 நோக்கங்கள்

இந்த அலகுக்குச் சென்ற பிறகு, உங்களால் முடியும்:

- நிக்கோலஸ் I இன் ஆளுமையை புரிந்து கொள்ளுங்கள்

- நிக்கோலஸ் I இன் கீழ் உள்நாட்டு மற்றும் வெளியுறவுக் கொள்கை பற்றி விவாதிக்கவும்
- கிரிமியன் போரின் முக்கியத்துவத்தை விவரிக்கவும்

குறிப்பு

## 4.2 நிக்கோலஸ் I (1825-55)

முதலாம் அலெக்சாந்தர் வல்லாட்சி நடைமுறைகளுக்கும் தாராளக் கோட்பாட்டிற்குமிடையில் ஊசலாடிக் கொண்டிருந்ததைப் போல் முதலாம் நிக்கோலஸ் ஊசலாடவில்லை. வல்லாட்சி கோட்பாட்டை உறுதியாகப் பற்றிக்கொண்டு வல்லாட்சி ஒன்றுதான் ரஷ்யாவிற்கு நல்லாட்சி தர முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டிருந்தார். தாராளச் சீர்திருத்தங்கள் குழப்பங்களுக்கு வழிவகுக்கும் எனக் கருதினார். இன்றுள்ள சமூக அரசியல் நிலையே என்றும் நீடிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார். எனவே ""முன்னேற்றம்" "முற்போக்கு" "மாறுதல்"" ஆகிய சொற்கள் அவரது அகாரதியிலிருந்து அகற்றப்பட்டு விட்டன. அதற்கு நேர்மாறாக ""வல்லாட்சி, வைதீகம், தேசியம்"" ஆகிய சொற்கள் அவரது பொன்மொழிகளாயின.

### 4.2.1. வாரிசுரிமைச் சிக்கல் :

ஸர் அலெக்சாந்தருக்கு பிள்ளை இல்லை எனவே அவருக்குப் பின் அவரது இளைய சகோதரர் கான்ஸ்டாண்டைன் அரியணை ஏற வேண்டும். ஆனால் அவர் விவாகரத்து பெற்று மறுமணம் புரியும் போது தமது மரபுவழி அரசுரிமையை உதறித்தள்ளிவிட்டார். எனவே அலெக்சாந்தர் அதனை ஏற்றுக்கொண்டு தமது அடுத்த இணையான சகோதரர் நிக்கோலஸ் தமக்குப்பின் அரியணை ஏறவேண்டும் என்று அறிக்கை தயார் செய்திருந்தார். அந்த அறிக்கையில் உள்ள விவரங்கள் கான்ஸ்டான்டைனுக்கோ நிக்கோலாசுக்கோ தெரியாது.

1825 டிசம்பரில் ஸார் மரணமடையவும் முதலாம் நிக்கோலஸ் தமது மூத்த சகோதரர் தான் பேரரசர் என்று அவருக்கு பற்றுறுதி காட்டும் உறுதி மொழி எடுத்து பிற பிரபுக்களும் உயர் அலுவலர்களும் படைத்தளபதிகளும் அவ்வாறே உறுதிமொழி எடுக்க வேண்டும் என அறிவித்தார். அச்சமயத்தில் வார்சாவில் இருந்த கான்ஸ்டன்டைன் அரியணை ஏறுவதற்கு மறுத்து தம் இளைய சகோதரரான நிக்கோலஸ்

தான் ஸார் என அறிவித்தார். இதனால் தலைநகரில் ஒரு வார காலம் குழப்பம் நிலவியது. அதன்பின் நிக்கோலஸ்



தாமே ஸார் என அறிவித்ததோடு தமக்குத்தான் அனைவரும் பற்றுறுதி காட்டும் உறுதிமொழி எடுக்க வேண்டும் என அறிவித்தார்.

### 4.2.2. டிசம்பர்வாதிகள் புரட்சி :

அலெக்சாந்தரின் இறுதிக் காலத்தில் நாட்டில் பல ரகசியப் புரட்சி இயக்கங்கள் உருவாயின. படை அதிகாரிகளான முற்போக்கு இளைஞர்கள் பாலபெஸ்டல் என்பார் தலைமையில் “மீட்பின் ஒன்றியம்““ என்ற அமைப்பை உருவாக்கினர். நில அடிமை முறையை ஒழித்தல், சட்டத்தின் முன் சமத்துவ உரிமை, படை குடியமைப்புகள் ஒழிப்பு, அரசியலமைப்பு முறையிலான கூட்டாட்சி போன்றவை அவர்கள் கொள்கைகளாயிருந்தன. பின்னர் அந்த அமைப்பிற்கு “பொது நல ஒன்றியம்““ என்ற பெயர் சூட்டப்பட்டது. இச்சமயத்தில் பெஸ்டல் ரஷியாவின் தென்பகுதிக்கு பணிமாற்றம் பெற்றதால் தெற்குப் பகுதியை தமது ரகசிய நடவடிக்கையின் தளமாக மாற்றினார். வடக்குப் பகுதி தலைமையை நிகிடா முரேலியவ் என்பார் ஏற்றார்.

இரு தரப்பினரும் முதலாம் அலெக்சாந்தர் காலத்திலே இந்த உரிமைகளைப் பெறவேண்டும் என்றும் இல்லாவிட்டால் அவருக்குப் பின் அரியணை ஏறுபவர் இந்த உரிமைகளை வழங்கும் வரை அவருக்குப் பற்றுறுதி காட்டும் உறுதிமொழி எடுக்கக்கூடாது என முடிவு செய்திருந்தனர். அதன்படி இப்போது வடக்கிலுள்ள பொதுநல ஒன்றியத்தினர் சுமார் 3,000 போர் வீரர்கள் அரண்மனை முன் கூடி முதலாம் நிக்கோலசிற்கு உறுதிமொழி எடுக்க மறுத்தனர். அவர்கள் ”கான்ஸ்ட ன்டைன் அல்லது அரசியலமைப்பு““ என குரலெழுப்பினார். உடனே நிக்கோலஸ் ஆதரவு படையினர் அவர்களை சூழ்ந்து கொண்டு துப்பாக்கியால் கட்டனர். சிலர் மாண்டனர் பலர் தப்பியோடினர்.

இந்தச் செய்தியறிந்த தென்பகுதி புரட்சியாளர்களும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். ஆனால் அக்கிளர்ச்சியும் ஒடுக்கப்பட்டு பெஸ்டல் உட்பட அனைவரும் கைது செய்யப்பட்டனர். புரட்சியாளர்கள் அனைவரையும் அடையாளம் கண்டு அரசு அவர்களை கைது செய்து விசாரணைக்கு கொண்டு வந்தது. பெஸ்டல், முரேவியவ் உட்பட ஐவர்

தூக்கிலிடப்பட்டனர். 116 பேர் சைபீரியாவிற்கு கட்டாய வேலை முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர்.

**குறிப்பு**

டிசம்பர் மாதம் நடைபெற்ற இக்கிளர்ச்சியில் பங்குபெற்ற அனைவரும் உயர்குடி இளைஞர்கள், அரசு காவற்படையைச் சேர்ந்தவர்கள். இப்புரட்சி பிற்கால புரட்சிவாதிகளுக்கு உள்ளுணர்வு அளிப்பதாயிருந்தது. ரஷ்ய சமுதாயத்தில் எவ்வளவு பெரிய குறைபாடு இருக்கிறது என்பதை ஸார் நிக்கோலஸ் உணர்ந்தார்.

### 4.2.3. உள்நாட்டுக் கொள்கை :

டிசம்பர்வாதிகளைத் தண்டித்த பின் தம் மூத்த சகோதரர் அலெக்சாந்தர் காலத்தில் உள்ள உயர் அரசு அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்து, தமக்கு நம்பிக்கையானவர்களை அதில் நியமித்தார். அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் படை அதிகாரிகளாக இருந்ததால் அவரது நிர்வாகம் ஏறத்தாழ ராணுவ வல்லாட்சியாக இருந்தது. தமது நம்பிக்கைக்குகந்தவர்கள் தலைமையில் ரகசியக் குழுக்களை நிறுவி மாநில நிர்வாகம், சமூக நிலை ஆகியவை பற்றி ஆய்வு நடத்தி அறிக்கை அளிக்க பணித்தார். ஆனால் அந்த குழுக்களின் பரிந்துரைகள் செயல்படுத்தப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### 4.2.4. சான்சரி மன்றத்தின் விரிவாக்கம் :

1812-ல் மன்னரது தனிப்பட்ட தேவைகளைக் கவனிக்க உருவாக்கப் பட்ட சான்சரி மன்றம் நிக்கோலஸ் காலத்தில் 6 துறைகளைக் கொண்ட பெரும் மன்றமாக விரிவாக்கம் பெற்றது.

முதல் துறை : பேரரசரது சொந்த செயலகமாக செயல்பட்டது.

2வது துறை : 1826-ல் அமைக்கப்பட்ட இத்துறைக்கு சட்டத்தை தொகுத்தமைக்கும் மாபெரும் பணி அளிக்கப்பட்டது.

3வது துறை : பாதுகாப்பு சம்பந்தப்பட்டவைகளை கவனித்து வந்தது.

4வது துறை : 1828-ல் நிறுவப்பட்ட இத்துறை, அறக்கட்டளை மற்றும் கல்வி சார்ந்த பொறுப்பை நிறை வேற்றியது. 5வது துறை : 1836-ல்

குறிப்பு

நிறுவப்பட்ட இத்துறை அரசு குடியானவர்கள் சார்ந்த விஷயங்களைகவனித்து வந்தது.

6வது துறை : 1843-ல் நிறுவப்பட்ட இத்துறை காகசஸ் பகுதி நிர்வாகத்தை கவனித்து வந்தது.

### 4.2.5. சட்டத்தொகுப்பு :

இரண்டாவது துறை ஸ்பெரன்ஸ்கி தலைமையில் சட்டங்களைத் தொகுத்தமைக்கும் மாபெரும் பணியில் ஈடுபட்டது. அது ரஷியப் பேரரசின் அரசு ஆணைகளை (1649 முதல் 1830 வரை பிறப்பிக்கப்பட்டவை) முழுமையாக சேகரித்து வெளியிட்டது. சட்டங்களின் தொகுப்பையும் தயாரித்தது.

### 4.2.6. குடியானவர்கள் பிரச்சனை :

1826-லிருந்து 1834 வரை ரஷ்யாவில் 145 குடியானவர் கலகங்களும் 1845-லிருந்து 1854 வரை 348 கலகங்களும் நடைபெற்றுள்ளன. இக்கலகங்கள் குடியானவர் பிரச்சனைக்கு உடனடித் தீர்வுகாண வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தன. ஸார் நிக்கோலஸ் 10 இரகசியக் குழுக்களை நியமித்து

## 4.3. முதலாம் நிக்கோலஸ்

63 அவற்றின் உண்மை நிலையையும் தீர்வுக்காண வழிமுறைகளையும் ஆராய்ந்து அளிக்குமாறு பணித்தார். அவற்றுள் கிசெலவ் என்பார். ”மாநிலங்களிலுள்ள அரசுப் பகுதிகளின் நிர்வாக ஒழுங்குகள்““ என்ற தலைப்பில் அளித்த அறிக்கையை ஸார் ஏற்றுக் கொண்டார். அதன்படி 16 மில்லியன் அரசுக் குடியானவர்கள் வாழும் பகுதிகளை கிராமத்தொகுதி களாகவும் பின் அவற்றை நகர்ப்புறத் தொகுதிகளாகவும் பிரித்து அவற்றிற்குத் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் உரிமையையும் பல நிர்வாகப் பொறுப்புகளையும் பகிர்ந்தளித்தார். இந்தச் சீர்திருத்தம் அரசுக்குடியான வர்கள் நிலை உயரவாய்ப்பளித்தது.

குறிப்பு

### 4.3.1. நில அடிமைகள்

நில அடிமைமுறை ரஷ்ய சமுதாயத்தின் சாபக்கேடு என்று உணர்ந்திருந்தாலும் அதை எவ்வாறு அகற்றுவது என்பது குறித்து அரசு உயர் அலுவலர்களிடையே கருத்து வேறுபாடு இருந்தது. அவர்கள் நிலை உயர் ஸார் நிக்கோலஸ் எடுத்த நடவடிக்கைகள் சிறிதுகூட போதுமானதாக இல்லை . எனினும் அவர் மரணப்படுக்கையில் இருக்கும் போது தமது மகனிடம் நில அடிமை முறையை ஒழிக்க அரசு மேலிருந்து நடவடிக்கை எடுக்காவிட்டால் அவர்கள் கீழிலிருந்து கிளர்ந்தெழுந்து புரட்சியிலிறங்கி விடுவார்கள் என எச்சரித்ததாகக் கூறப்படுகிறது.

### 4.3.2. கல்விச் சீர்திருத்தம் :

ஸார் நிக்கோலஸ் கடுமையான கண்காணிப்பு தணிக்கை முறைகளை பின்பற்றினாலும் தற்கால கல்வி முறைக்கு ரஷ்யாவில் அவர் காலத்தில் தான் அடிப்படை போடப்பட்டது. 1833 முதல் 39 வரைகல்வி அமைச்சராக இருந்த உவாரோவ் மேற்பார்வையில் ரஷ்ய கல்வி முறை அளவிலும் தரத்திலும் வளர்ச்சியுற்றது. இம்முறை ரஷ்ய சமூக வகுப்பு பிரிவுகளுக்கேற்றவாறு நான்கு அடுக்கு முறையாக இருந்தது. பாரிஷ் பள்ளிகள் சமூகத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களுக்கு கல்வியளித்தது. அரசு அறிக்கைப்படி 1067 பாரீஷ் பள்ளிகள் இருந்தன. அதற்கு அடுத்ததாக மாவட்டப்பள்ளிகள், இவை வணிகர், கைவினைஞர்களின் குழந்தைகளின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்தன. இத்தகைய பள்ளிகள் 445 இருந்தன. அடுத்து அதிகாரிகள், உயர்குடியினர் பிள்ளைகளுக்காக 76 உடற்பயிற்சி பள்ளிகளும் அதற்கு மேலாக 6 பல்கலைக்கழகங்களும் இருந்தன. ஆனால் 60 மில்லியன் மக்கள் தொகை கொண்டரஷ்யாவிற்கு இவை போதுமானதாக இல்லை.

### 4.3.3. குருஷோக்ஸ் :

முதலாம் நிக்கோலஸின் வரையறையற்ற வல்லாட்சி பல அதிருப்தி குழுக்களை உருவாக்கின. அவை குருஷோக்ஸ் எனப்பட்டன. அவைகள் கருத்து சுதந்திரங்களையும் அரசியலமைப்பையும்

வலியுறுத்தின. பொதுவாக அவை பல்கலைக்கழக வட்டாரங்களில் தோன்றின. இவை களைத் தவிர ரஷ்யாவின் வளமான எதிர்காலத்திற்கு ஆழ்ந்த தத்துவரீதியான விளக்கங்கள் அளிக்கும் இளைஞர் குழுக்களும் தோன்றின. அவைகளுள் ஒன்று ஸ்லாவ் இன அடிப்படையில் ரஷ்ய முன்னேற்றத்தை அடிப்படை யாகக் கொண்டது. மற்றொன்று மேற்கத்திய அரசியல் கண்ணோட்டங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. முந்தியது ரஷ்ய தேசிய பாரம் பரியங்களையும் வைதீக திருச்சபைக் கோட்பாடுகளையும் வலியுறுத்திய போது மற்றது. பாராளுமன்ற ஜனநாயகம், சோஷலிசம் போன்ற கருத்துக்களை வலியுறுத்தியது.

### 4.3.4. சிறுபான்மையினரின் பரிதாபநிலை :

ரஷ்ய மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் சிறுபான்மையினரே. அவர்கள் போலந்தியர், எஸ்தோனியர், லிதுவேனியர், பின்லாந்தியர், யூதர்கள் ஆவர். இவர்களின் மொழி, இசை, சமய பண்பாட்டு உணர்வுகள் மறுக்கப்பட்டன. அவர்கள் மீது ரஷ்ய சமயம், மொழி, பண்பாடுகள் கட்டாயமாகப் புகுத்தப்பட்டன. இது ““ரஷ்யமயமாக்கும் கொள்கை““ எனப்பட்டது. இவர்களுள் யூதர்கள் கடுமையான அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

### 4.3.5. போலந்து சிக்கல் :

1815ல் வியன்னா ஏற்பாட்டின்படி போலந்தின் ஆட்சிப் பொறுப்பு ரஷ்ய ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது அவர் போலந்தின் மன்னர் என்ற முறையில் ஆட்சி புரிந்தார். அதற்கென ஒரு அரசியலமைப்பு வகுத்துக் கொடுக்கப்பட்டது. எனினும் ஸாரின் அரசப்பிரதிநிதியாக போலந்திற்கு அனுப்பப்பட்டவர்கள் பிற்போக்காளர்களாக இருந்ததால் போலந்து மக்கள் தொல்லைகளுக்குள்ளாக்கப்பட்டார்கள். இந்நிலையில் பிரான்சில் 1830ல் ஜூலைப் புரட்சி வெடித்தது. இது ஐரோப்பாவெங்கிலும் தேசிய மக்களாட்சி மற்றும் சுதந்திரக் கோட்பாடுகளுக்கு உத்வேகமளித்தது. போலந்து மக்களும் தேசிய உணர்வால் உந்தப்பட்டு விடுதலை பெற கிளர்ந்தெழுந்தனர். ஸார் நிக்கோலஸ் அக்கிளர்ச்சியை ஒடுக்கியதோடு போலந்து மக்கள் அனுபவித்த அரைகுறை சுதந்திரத்தையும் பறிமுதல்

செய்தார். அதன் அரசியலமைப்பு ரத்து செய்யப்பட்டது. ரஷ்யப் பேரரசுடன் போலந்து இணைக்கப்பட்டது.

குறிப்பு

### 4.3.6. வெளியுறவுக் கொள்கை :

வெளியுறவுக் கொள்கையில் ஸார் நிக்கோலஸ் ஆஸ்திரிய சான்ஸ்லர் மெட்டர்னிக்கை பெரிதும் ஒத்திருந்தார். அரசியலில் தாராளக் கருத்துக்கள், தேசியம், சுதந்திரம் ஆகியவை குழப்பங்களுக்கு வழிவகுக்கும் என்ற திடமான கருத்தைக் கொண்டிருந்தார். அன்றைய ஐரோப்பிய அரசியல் ஏற்பாடுகளை சீர்குலைக்கும் தேசிய விடுதலைப் போராட்டங்களை கடுமையாக எதிர்த்தார். ஆனால் ஐரோப்பிய நோயாளி துருக்கியின் சொத்துக்களைப் பங்கு போடுவதில் தீவிரமாக இருந்தார்.

### 4.3.7. கிரேக்க விடுதலைப் போர் :

1821-ல் கிரேக்கர்கள் உதுமானிய துருக்கியர்களின் கொடுங் கோலாட்சியிலிருந்து விடுதலை பெற போரில் இறங்கினர். அப்போதைய ரஷிய ஸார் அலெக்சாந்தர், ஆஸ்திரிய சான்சலர் மெட்டர்னிக் செல்வாக்கிற்கு கட்டுப்பட்டிருந்ததால் கிரேக்கர்களுக்கு உதவி செய்ய இயலவில்லை. 1825-ல் ஸார் பதவி ஏற்ற நிக்கோலஸ் கிரேக்கர்களுக்கு உதவி புரிய விரும்பினார். முதலில் பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளுடன் இணைந்து கிரீசிற்கு சுய ஆட்சி அளிக்குமாறு துருக்கி சுல்தானுக்கு வேண்டு கோள்விடுத்தார். சுல்தான் இதற்கு இணங்காததால் மூன்று வல்லரசுகளின் கப்பற்படைகளும் 1827-ல் நவரினோ என்ற இடத்தில் துருக்கி கப்பற் படையை தாக்கி அழித்தன. அதன்பின் பிரிட்டனும் பிரான்சும் ஒதுங்கிக் கொண்டன. ரஷியா துருக்கி மீது போர்ப் பிரகடனம் செய்தது. பல இடங்களிலும் தோற்கடிக்கப்பட்ட துருக்கி, அமைதியை நாடியது. 1829-ல் ஏட்ரியானோப்பிள் உடன்படிக்கையின்படி கிரீஸ் சுதந்திரம் பெற்றது.

### 4.3.8. மெஹ்மத் அலி விவகாரங்கள் :

கிரேக்க விடுதலைப் போரின் போது எகிப்து பாஷா மெஹ்மத் அலி துருக்கி சுல்தானுக்கு படை உதவி புரிந்தார். அதற்கு கைமாறாக சிரியாவைக் கோரினார். இதற்கு சுல்தான் இணங்காததால் மெஹ்மத் அலி துருக்கி மீது படையெடுத்தார். இப்போரில் தோல்வியுற்ற சுல்தான்

ஐரோப்பிய வல்லரசுகளின் படை உதவியை நாடினார். ரஷ்யா சுல்தானுக்கு உதவி புரிய முன் வந்தது. 10,000 ரஷ்யப் போர் வீரர்கள் கருங்கடல் நீர்ச்சந்திக்கருகில் கரையிறங்கினர். இதனை விரும்பாத பிரிட்டனும், பிரான்சும் சுல்தானுக்கும் எகிப்து பாஷாவிற்குமிடையில் சமரசத்திற்கு ஏற்பாடு செய்தன. சுல்தான் சிரியாவை எகிப்து பாஷாவிற்கு வழங்கினார். எனினும் ரஷ்யா 1833-ல் துருக்கியுடன் உங்கியர் ஸ்கெலஸி என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. அதன்படி ரஷ்யப் படைகள் வெளியேறின. நீர்ச்சந்தியில் ரஷ்யக் கப்பல் போக்குவரத்து அனுமதிக்கப்பட்டது. எதிர்காலத்தில் ஒருவருக் கொருவர் படை உதவி செய்யவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதில் உள்ள இரகசியக் குறிப்பின்படி ரஷ்யாவிற்கு எதிரான நாடுகளின் போர்க் கப்பல் களை நீர்ச்சந்தியில் அனுமதிப்பதில்லை எனதுருக்கி உறுதியளித்தது.

மீண்டும் 1839-ல் சிரியா ஆதிக்கப் பிரச்சனையில் சுல்தானுக்கும் எகிப்து பாஷாவிற்கும் போர் மூண்டபோது ரஷ்யா தன்னிச்சையாக செயல்பட வில்லை . பிரிட்டன், ஆஸ்திரியா ஆகிய வல்லரசுகளுடன் இணைந்து செயல்பட்டது. அதன்பயனாக போர் தவிர்க்கப்பட்டது.

## 4.3.9. 1848 பிப்ரவரி புரட்சியும் நிக்கோலாசும் :

1830-ல் ஜுலைப் புரட்சியின் போது பிரான்சில் பூர்போன் மரபு வீழ்த்தப்பட்டு ஆர்லியன்ஸ் மரபு அரியணை ஏறியதை ஸார் நிக்கோலஸ் விரும்பவில்லை. பெல்ஜியம் ஹாலந்து பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திரம் பெற முயன்றதை எதிர்த்தார். அச்சமயத்தில் ஸார் போலந்து புரட்சியில் சிக்கியிருந்ததால் பெல்ஜிய சுதந்திர கிளர்ச்சியை ஒடுக்க படை அனுப்ப இயலவில்லை .

ஆனால் 1848 பிப்ரவரி புரட்சியின் போது ஆஸ்திரியாவிற்கு படை உதவி புரிந்தார். அதன் பயனாக ஹங்கேரியின் தேசிய புரட்சி ஒடுக்கப்பட்டு ஆஸ்திரியப் பேரரசின் ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட்டது.

## 4.3.10. பாரசீகப் போர் : (1826 - 28)

காகசஸ் பகுதியில் 1813-ல் ரஷ்யா கால் ஊன்றியதை பாரசீகம் விரும்பவில்லை . அப்பகுதியை மீட்க 1826-ல் பாரசீகம் போரிலிறங்கியது. ஆனால் பாரசீகத்தின் முயற்சி வெற்றி பெறவில்லை . 1828-ல் செய்து

கொள்ளப்பட்ட துருக்மான் சேய் என்ற உடன்படிக்கையின்படி வடக்கு அஸர்பைஜான், ஆர்மீனியா ஆகிய பகுதிகள் ரஷ்யாவிற்கு உறுதி செய்யப் பட்டன.

### 4.3.11. மத்திய ஆசியாவில் விரிவாக்கம் :

ஹமத்திய ஆசிய ஸ்டெப்ஸ் புல்வெளிகளில் ரஷ்ய ஆதிக்கம் நிக்கோலஸ் காலத்தில் தடையின்றி விரிவாக்கம் பெற்றுக் கொண்டே யிருந்தது. காஸ்பீயன் கடலுக்கும் ஏரல் கடலுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் ரஷ்ய ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டன. அதன் பயனாக மத்திய ஆசியாவில் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகள் ரஷ்ய ஆதிக்கத்தின் கீழ் வந்தன.

**மதிப்பீடு :**

ரஷ்ய ஸார்களின் பாரம்பரிய வல்லாட்சி முறையை நிக்கோலஸ் வெற்றிகரமாகக் கடைப்பிடித்தார். உள்நாட்டில் தாராள முற்போக்கு கருத்துக்கள் பரவுவதை தடுத்து நிறுத்தியது போல் வெளிநாட்டிலும் தேசிய உணர்வு மற்றும் மக்களாட்சி முறைமைகள் பரவுவதை தம்மால இயன்ற மட்டும் தடுக்க முயன்றார். 1848 பிப்ரவரி புரட்சி ஐரோப்பாவில் பரவிய போது நிக்கோலஸ் தனியொரு நபராக நின்று அதனை எதிர்த்துப் போராடினார். தற்காலிகமாக வல்லாட்சி முறைமைகள் நிலைபெற உதவினார். ஆனால் “ஐரோப்பிய நோயாளியின் சொத்துக்களை அபகரிக்க முயன்ற போது பிரிட்டனின் கடுமையான எதிர்ப்புகளுக்குள்ளானார். கீழைச்சிக்கல் அவரது ராஜதந்திரத்திற்குப் பெரும் சோதனையாக இருந்தது. அவரால் தொடங்கப்பட்ட கிரிமியப் போர் அவருக்கே எமனாக வந்தது.

## 4.4. கிருமியப்போர், (1854 - 56)

கிழக்கத்தியப் பிரச்சனையில் கிருமியப் போர் ஒரு திருப்பு முனையாக விளங்கியது. ஐரோப்பிய வரலாற்றில் இப்போர் மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். இந்தப் போரில் எல்லாஐரோப்பிய நாடுகளும் பங்கு கொண்டன. துருக்கியின் சீர்குலைவை மையமாக வைத்துக் கொண்டு ஐரோப்பிய வல்லரசுகள் நடத்திக் கொண்டிருந்த அரசியல் சூதாட்டத்தின் ஒரு பகுதியே கிருமியப் போர் ஆகும். மத்திய தரைக்கடல் பகுதியில்

ஆதிக்கம் செலுத்துவது பற்றி ரஷ்யாவுக்கும் நேச நாடுகளான பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் தான் இப்போர். இது ஐரோப்பிய அரசியலில் பல முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியது. கிருமியத் தீபகற்பத்தில் போர்கள் நடைபெற்றதால் இதற்கு கிருமியப்போர் எனப்பெயர் ஏற்பட்டது.

### 4.4.1. போருக்கான காரணங்கள் :

### 4.4.2. துருக்கியின் மீது ரஷ்யாவின் திட்டங்கள் :

ரஷ்ய சார் முதலாம் நிக்கோலஸ் துருக்கியை "ஐரோப்பாவின் நோயாளி" என்று வர்ணித்தார். சிதைந்து, சீர்குலைந்து போகக் கூடிய நிலையிலுள்ள துருக்கியப் பேரரசின் பகுதிகளை இங்கிலாந்துடன் சேர்ந்து கொண்டு பங்குபோட்டுக் கொள்ள விரும்பினார். இங்கிலாந்துக்கு எகிப்தையும் கிரீட்டையும் கொடுத்து விட்டு, தான் கான்ஸ்டாண்டி நோபிளை எடுத்துக் கொள்ளத் திட்டமிட்டார். மேலும் பால்கன் பகுதியிலுள்ள ஸ்லாவ் இனத்தனவரைப் பாதுகாக்கும் பொறுப்பு தனக்கே உண்டு என்று வாதாடினார். நிக்கோலஸின் இந்தத் திட்டங்களையும், விருப்பங்களையும், கொள்கைகளையும் இங்கிலாந்து ஏற்றுக் கொள்ள மறுத்தது.

### 4.4.3. ரஷ்யத் திட்டங்களுக்கு இங்கிலாந்தின் எதிர்ப்பு:

ரஷ்யாவின் திட்டங்களை இங்கிலாந்து நிராகரித்தது. துருக்கி ஒரு நோயாளி என்பதை இங்கிலாந்து ஏற்கவில்லை. ஐரோப்பிய வல்லரசுகள் துருக்கிக்கு உதவி செய்தால் அது மீண்டும் வலிமையாக இருக்க முடியும் என்று நம்பின. துருக்கியப் போரரசு பலவீனமடைந்து வீழ்ச்சியடைந்தால் அப்பகுதியில் ரஷ்யா தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தி விடும் என்றும், துருக்கிக்கு தான் செல்லும் வழிக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் என்றும் இங்கிலாந்து அஞ்சியது. எனவே இங்கிலாந்துக்கும் ரஷ்யாவுக்கும் இடையே உறவு நிலை பாதிக்கப்பட்டது.

### 4.4.4. மூன்றாம் நெப்போலியனின் பேராசை :

1852ல் பிரான்சின் பேரரசராக முடிசூட்டிக் கொண்ட மூன்றாம் நெப்போலியன், மாவீரன் நெப்போலியன் போனபார்ட் அடைந்த

பெருமையினைத் தானும் அடைய விரும்பினார். ஏதேனும் ஒரு போரில் பெரும் வெற்றி பெற்று புகழ் பெறுவதுடன் பிரான்சில் தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள நினைத்தார். பால்கன் நாடுகளின் நிலைமை அவருக்கு ஏற்ற வாய்ப்பினை அளித்தது. துருக்கிப் பேரரசைப் பங்கீடு செய்து அதில் பெரும் பகுதியைப் பிரான்சுக்குச் சேர்க்க வேண்டுமென்று பேராசைப் பட்டார்.

## 4.4.5. பெத்லகேம் ஆலயக் கட்டுப்பாட்டுப் பிரச்சனை:

துருக்கியின் ஆதிக்கத்திலிருந்த பாலஸ்தீனத்திலுள்ள ஜெருசலேம், மற்றும் பெத்லகேமிலுள்ள புனித ஆலயங்களை நடத்தி வரும் உரிமை பற்றி பிரச்சனை ஏற்பட்டது. "இந்தப் புனித ஆலயங்களை ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த மதகுருமார்கள் கட்டுப்பாட்டில் வைப்பதா, அல்லது கிரேக்க வைதீக திருச்சபைக் குருமார்களின் கீழ் வைப்பதா"" என்பதே பிரச்சனை. ரோமன் கத்தோலிக்க மதகுருமார்கள் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டுமென்று பிரான்சும், கிரேக்க வைதீக திருச்சபை குருமார்கள் கட்டுப் பாட்டில் வைக்க வேண்டுமென்று ரஷ்யாவும் கூறின. பெத்லகேம் நகர் சுல்தானின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததால் இப்பிரச்சனை பற்றி தீர்ப்பு அளிக்கும்படி சுல்தானிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால் சுல்தான் ரஷ்யாவின் நிலையை ஆதரிக்காமல் பிரான்சுக்குச் சாதகமாக 1852-ல் தீர்ப்பு வழங்கினார். இதனால் ரஷ்யாவில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. துருக்கியுடனான உறவுகளைரஷ்யாதுண்டித்துக் கொண்டது.

## 4.4.6. ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு:

துருக்கி சுல்தானின் தீர்ப்பினால் ரஷ்யா அதிகக் கோபமடைந்தது. துருக்கியிலுள்ள கிரேக்க வைதீக திருச்சபையைச் சார்ந்த மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு தன்னுடையது என்று ரஷ்யா கூறியது. இதனையும் சுல்தான் நிராகரிக்கவே கோபமடைந்த ரஷ்யா ஆக்கிரமிப்பு செயல்களில் ஈடுபட்டது. 1853- ஜூலையில் வாலாச்சியா, மோல்டேவியா ஆகிய இரு பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டது. 1853 அக்டோபரில் ரஷ்யாவின் மீது சுல்தான் போர்தொடுத்தார். கிருமியப் போர் ஆரம்பமானது.

## 4.5. போரின் போக்கு :

1853, நவம்பர் மாதம் அட்மிரல் நகிமோவ் தலைமையில் இயங்கிய ரஷ்யக்கப்பற்படைசினோப் போரில் துருக்கியக் கப்பற்படையைத் தோற்கடித்தது. ரஷ்யாவின் மீது போர்த்தொடுக்க ஏதேனும் காரணம் கிடைக்காதா எனக் காத்திருந்த இங்கிலாந்தும் பிரான்சும் சினோப்போரில் துருக்கியின் தோல்வியைக் காரணமாகக் கொண்டு ரஷ்யா மீது போர் தொடுத்தன. இத்தாலிய ஐக்கியத்திற்காக ஏதேனும் ஒரு வழியில் மேல் நாடுகளின் துணையைப் பெறவிரும்பிய கவூர் சார்டீனியப் படை ஒன்றினை நேசநாடுகளுக்குத்துணையாக அனுப்பினார்.

முதலில் வாலாச்சியா, மோல்டேவியா பகுதிகளிலிருந்து ரஷ்யா பின் வாங்கியது. இங்கிலாந்து, பிரான்ஸ் நாடுகளின் கூட்டுப்படைகள் 1854, செப். 20- ம் தேதி கிருமியாவில் இறங்கின. ரஷ்யா வசமிருந்த செபஸ்டபூல் துறைமுகம் முற்றுகையிடப்பட்டது. இந்த முற்றுகை ஓராண்டுக்கும் மேலாக நீடித்தது. செபஸ்டபூல் முற்றுகையின் போது பாலக்கிளாவா (டீயடயமடயஎய) என்ற இடத்தில் பெரும் போர் நிகழ்ந்தது. இதில் கூட்டுப் படையினர் தங்கள் உயிரையும் பணயம் வைத்துப் போராடி வெற்றி பெற்றதை டென்னிசன் தனது கவிதைகளில் தீட்டியுள்ளார். இதற்குச் சிறிது காலத்திற்குப் பின் இங்கர்மன் என்ற இடத்தில் நடைபெற்ற போரிலும் ரஷ்யர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.

செபஸ்டபூல் முற்றுகையின் போது கூட்டுப் படையினருக்கு பலத்த ஆட்சேதம் ஏற்பட்டது. ஏராளமான பிரிட்டிஷ் வீரர்கள் மாண்டு போயினர். எண்ணற்ற வீரர்கள் காயமடைந்தனர். விரைந்து பரவிய தொற்று நோய்களும் வீரர்களை நிலைகுலைய வைத்தன. எல்லாவற்றிற்கும் மேலாக தங்கள் முடியாத கடுங்குளிரினால் பலர் இறந்தனர். இந்த நேரத்தில் தான் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் என்ற அம்மையாரின் உதவி வீரர்கட்கு கிடைத்தது. ஸ்குட்டாரி என்ற இடத்திலுள்ள மருத்துவமனையில் சிறந்த மருத்துவ உதவி செய்ததால் ஏராளமான ஆங்கில வீரர்கள் காப்பாற்றப்பட்டனர். அவரது உதவியைப் பெற்ற வீரர்கள் என்று அவரை பெருமையுடன் அழைத்தனர்.

1855, செப்டம்பர் 9-ல் 349 நாள் முற்றுகைக்குப் பிறகு செபஸ்டபூல் வீழ்ந்தது. ரஷ்யாவில் முதலாம் நிக்கோலஸ் 1855,

குறிப்பு

பிப்ரவரியில் இறந்த பின் பதவியேற்றிருந்த சார் இரண்டாம் அலக்சாந்தர் தொடர்ந்து போரிடுவதில் பயனில்லை என்று முடிவு செய்து போரை நிறுத்த சமாதானத்தை நாடினார். தளர்ந்திருந்த கூட்டு நாடுகளும் சமாதானத்திற்கு இசைந்தன. செபஸ்டபூலைப் பாதுகாக்க ரஷ்யர்கள் மேற்கொண்ட பெரும் முயற்சிகள் ரஷ்ய வரலாற்றில் அழியா இடம் பெற்றுவிட்டன. ரஷ்ய எழுத்தாளர் லியோடால்ஸ்டாய் “செபஸ்ட பூலின் கதைகள்“ என்ற வீரகாவியத்தை எழுதினார்.

### 4.5.1. பாரிசு உடன்படிக்கை 1859 மார்ச் 9

கிருமியப் போர் பாரிசு உடன்படிக்கையின் படி முடிவடைந்தது. இந்த உடன்படிக்கையின் படி.

1. துருக்கியின் ஒன்றுமையும், சுதந்திரமும் பாதுகாக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளுடன் துருக்கி சமமாகக் கருதப்பட்டு சேர்க்கப்பட்டது.
2. துருக்கி சுல்தான் தனது ஆதிக்கத்தின் கீழ் வாழ்ந்து வரும் கிறிஸ்தவர்களை நன்றாக நடத்துவதாகவும், நாட்டில் பல சீர்திருத்தங்களைச் செய்வதாகவும் ஒப்புக்கொண்டார்.
3. வாலாச்சியா, மோல்டோவியா ஆகிய இரண்டு பகுதிகளும் சுதந்திரமடைந்தன. (பிற்காலத்தில் இவை இரண்டும் இணைந்து ருமேனியா என்று அழைக்கப்பட்டது.)
4. கருங்கடல் பொதுவாக்கப்பட்டது. அங்கு எல்லா நாடுகளின் வியாபாரக் கப்பல்கள் மட்டுமே சென்று வரலாம். எந்த நாட்டின் போர்க் கப்பலும் நுழையக்கூடாது.
5. அமைதிக் காலத்தில் டார்டனல்லஸ் துறைமுகத்தில் போர்க் கப்பல்கள் தங்கக்கூடாது.
6. டான்யூப் நதி எல்லா நாட்டுக் கப்பல் போக்குவரத்திற்கும் திறந்து - விடப்படவேண்டும்.
7. கருங்கடல் பகுதியில் கடற்படைத் தளங்கள் அமைக்க தனக்கிருந்த உரிமையை ரஷ்யா இழந்தது.
8. செர்பியா துருக்கியின் நேரடித் தலையீடு இல்லாத சுயாட்சி பெற்ற நாடாக அறிவிக்கப்பட்டது.

**4.6. கிருமியப் போரின் முக்கியத்துவம் (விளைவுகள்) :**

1. கிருமியப் போரின் விளைவாக, கருங்கடல் பகுதியிலும், மத்திய தரைக்கடல் பகுதியிலும், பால்கன் தீபகற்பத்திலும் ரஷ்யாவின் ஆதிக்கம் கட்டுப்படுத்தப்பட்டு விட்டது. பால்கனில் கிரேக்க வைதீகத் திருச்சபையைச் சார்ந்த கிறிஸ்தவ மக்களின் பாதுகாப்பாளராக தன்னை அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை கைவிட வேண்டியதாயிற்று. மொத்தத்தில் கிருமியப் போரினால் இதுவரை ரஷ்யாவுக்கிருந்த பெருமையும், மதிப்பும், புகழும், மரியாதையும் குலைந்து போயிற்று. பெருத்த அவமானம் அடைந்தது ரஷ்யா.

2. ஐரோப்பாவின் நோயாளி என்று வர்ணிக்கப்பட்ட துருக்கியின் வீழ்ச்சி ஒத்தி வைக்கப்பட்டது. ஐரோப்பியக் கூட்டமைப்பில் சேர்க்கப் பட்டதால் துருக்கிக்கு புதிய அந்தஸ்து கிடைத்தது. எனவே புத்துயிர் பெற்று தன் சொந்தக்கால்களால் நிற்கும் அளவுக்கு துருக்கியின் நிலை மாறியது.

3. கிருமியப் போரின் விளைவாக இத்தாலிய இணைவு ஏற்பட்டது. நேசப்படைகளுக்கு சார்டீனியா உதவியதால், பாரிசு மாநாட்டில் கவூர் கலந்து கொண்டார். அங்கு இத்தாலிய இணைவு குறித்து பிரச்சனையை எழுப்பினார். இதன் மூலம் மூன்றாம் நெப்போலியனுடன் கூட்டுச் சேரவும். பின்னர் இத்தாலி ஐக்கியம் அடையவும் காரணமானது.

4. கிருமியப் போரில் ஆஸ்திரியா நடுநிலை வகித்ததாலேயே ரஷ்யா எளிதில் தோற்றடிக்கப்பட்டது. இதனால் ரஷ்யாவுக்கும் ஆஸ்திரியாவுக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. இதனைப் பிஸ்மார்க் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தினார். 1866-ல் நடைபெற்ற ஆஸ்திரியப் பிரஷ்யப் போரில் ரஷ்யாவை நடுநிலை வகிக்கும்படி செய்து, ஆஸ்திரியாவைத் தோற்கடித்து ஜெர்மானிய இணைவை ஏற்படுத்தினார் பிஸ்மார்க்.

5. ரஷ்ய சார் முதலாம் நிக்கோலஸின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளின் தோல்வியையே இப்போர் காட்டுகிறது. போரில் ஏற்பட்ட தோல்வி ரஷ்யாவின் அனைத்து மக்களின் உள்ளங்களிலும் பெரும் சீர்திருத்தம் தேவை என்ற உண்மையை உணர்த்தியது. 1855-ல் பதவியேற்ற சார் இரண்டாம் அலக்சாந்தர் ஏராளமான சீர்திருத்தங்களை அறிவித்தார். சீர்திருத்த சகாப்தம் ரஷ்யாவில் தொடங்கியது.

அடிமைத்தனம் ஒழிக்கப் பட்டது. தாராளஜனநாயகச் சீர்திருத்தங்கள் பல அறிமுகப்பத்தப்பட்டன.

குறிப்பு

6. கிருமியப் போரின் விளைவாக பிரான்சுக்கு அதிக நன்மைகள் கிடைக்காமல் போனாலும் மூன்றாம் நெப்போலியனின் புகழும், பெருமையும் உயர்ந்தது. அமைதி ஒப்பந்தம் ஏற்பட பாரிசு தேர்ந்தெடுக்கப் பட்டதால் பாரிசு நகரம் பிரபலமானது. ஐரோப்பிய அரசியலில் மூன்றாம் நெப்போலியன் முன்னணி இடத்தைப் பெற்றார். இவ்வாறு எதை விரும்பி போரில் கலந்து கொண்டாரோ அது நெப்போலியனுக்குக்கிடைத்தது.

7. கிருமியப் போரின் போது ஸ்குட்டாரி மருத்துவமனையில் நைட்டிங்கேல் அம்மையார் செய்த மருத்துவ சேவை உலகப் பிரசித்தி பெற்று விட்டது. பெண்கள் நர்சுகளாகப் பணிபுரிய அது ஒரு முன் மாதிரியாக அமைந்தது. செஞ்சிலுவைச் சங்க இயக்கத்தின் ஆரம்பமாகவே அவரது சேவை அமைந்தது.

ஆனால் வரலாற்றில் இந்த கிருமியப் போர் தேவையில்லாத போராகவே கருதப்படுகிறது. ஏனெனில் இப்போரின் முடிவில் ஏற்பட்ட பாரிசு உடன்படிக்கை தண்ணீரில் எழுதப்பட்ட எழுத்து போலாகிவிட்டது. துருக்கியின் வீழ்ச்சியை இந்த உடன்படிக்கையால் நிறுத்த முடியவில்லை. சிறிது காலத்திற்குள்ளாகவே ரஷ்யா மீண்டும் கடல் வழியாகவும், நிலமார்க்கமாகவும் துருக்கியப் பேரரசில் முன்னேறத் தொடங்கியது.

## 4.7. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

### குறுகிய பதில் கேள்விகள்

1. நிக்கோலஸ் I இன் வாழ்க்கையைப் பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதுங்கள்.

2. நிக்கோலஸ் I இன் உள்நாட்டுக் கொள்கையை சுருக்கமாக விளக்கவும்.

### நீண்ட பதில் கேள்விகள்

1. நிக்கோலஸ் I இன் வெளியுறவுக் கொள்கையை விவரிக்கவும்.

2. கிரிமியன் போரை விரிவாக விவாதிக்கவும். இந்தப் போர் எப்படி வரலாற்றை வடிவமைத்தது ஒருபுறம் ஒட்டோமான் பேரரசு, மற்றும் ஐரோப்பிய சக்திகள் மற்ற?

## 4.8. கூடுதல் வாசிப்புகள்

Kamenskii, A. and D. Griffiths. 2015. *The Russian Empire in the Eighteenth Century: Tradition and Modernization.* United Kingdom: Taylor & Francis.

Bushkovitch, P. 2011. *A Concise History of Russia*. United States: Cambridge University Press.

Dukes, P. 1998. *A History of Russia: Medieval, Modern, Contemporary, C.882-1996*. United States: Duke University Press.

Boterbloem, K. 2013. *A History of Russia and Its Empire: From Mikhail Romanov to Vladimir Putin*. United States: Rowman & Littlefield Publishers.

Ziegler, C. E. 1999. *The History of Russia. United Kingdom*: Greenwood Press.

# அலகு 5

## அலெக்சாண்டர் II இன் ஆட்சி

**பாட அமைப்பு**

**5.0 அறிமுகம்**
**5.1 நோக்கங்கள்**
**5.2 அலெக்சாண்டர் II (1855-81)**
- **5.2.1. வாழ்க்கைக்குறிப்பு:**
- **5.2.2. இரண்டாம் அலெக்சாந்தரின் கொள்கைகள்:**
- **5.2.3. ரஷ்யாவில் சீர்திருத்தங்களுக்கான சூழ்நிலை**
- **5.2.4. சீர்திருத்தங்கள் செய்ய பத்திரிகைகளின் பங்கு:**

5.2.5. சீர்திருத்தங்கள் செய்ய மன்னர் எடுத்த முயற்சி :
5.3. இரண்டாம் அலெக்சாந்தரின் சீர்திருத்தங்கள் :
5.3.1. பண்ணை அடிமைகள் விடுதலை
5.3.2. விடுதலைக்கான திட்டம் தயாரித்தல்:
5.3.3. புதிய ஆணை
5.3.4. பண்ணை அடிமைகள் விடுதலை பற்றிய பிரபுக்களின் நிலை:
5.3.5. சீர்திருத்த சட்டத்தொகுப்புக் குழு:
5.3.6. பண்ணை அடிமைகள் விடுதலைச் சட்டம் 1861:
5.3.7. சட்டத்தின் நடைமுறைச் சிக்கல்கள்
5.3.8. இழப்பீட்டு தொகை நிர்ணயம் செய்யப்படுதல்:
5.4. விடுதலைச்சட்டத்தின் விளைவுகள் :
5.4.1. சமுதாய அமைப்பில் மாற்றம்
5.4.2. உள்ளாட்சித் துறை :
5.4.3. நிதித்துறை சீர்திருத்தங்கள்:
5.4.4. படைத்துறை சீர்திருத்தங்கள்
5.4.5. நிதிச் சீர்திருத்தங்கள்
5.4.6. கல்வித்துறை சீர்திருத்தங்கள்:
5.5. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்
5.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்க் கேள்விகள் பதில்கள்
5.7 சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
5.8. கூடுதல் வாசிப்புகள்

குறிப்பு

## 5.0 அறிமுகம்

மார்ச் 2, 1855 முதல் அவர் கொல்லப்படும் வரை, இரண்டாம் அலெக்சாண்டர் ரஷ்யாவின் பேரரசராக இருந்தார். போலந்து மன்னர் மற்றும் பின்லாந்தின் கிராண்ட் டியூக். ரஷ்யாவின் செர்ஃப்களின் விடுதலை 1861 ஆம் ஆண்டு பேரரசராக அலெக்சாண்டரின் மிக முக்கியமான சீர்திருத்தமாகும், அதற்காக அவர் அறியப்பட்டார் அலெக்சாண்டர் தி லிபரேட்டராக. மற்ற குறிப்பிடத்தக்க சீர்திருத்தங்களுக்கு அவர் பொறுப்பேற்றார் நன்றாக. இந்த பிரிவில், உள் சீர்திருத்தங்கள் மற்றும் வெளியுறவுக் கொள்கையின் கீழ் விவாதிப்போம் இரண்டாம் அலெக்சாண்டரின் ஆட்சி.

குறிப்பு

## 5.1 நோக்கங்கள்

இந்த அலகுக்குச் சென்ற பிறகு, உங்களால் முடியும்:

• அலெக்சாண்டர் II இன் ஆளுமையைப் பற்றி விவாதிக்கவும்

• அலெக்சாண்டர் II இன் கீழ் உள்நாட்டு மற்றும் வெளியுறவுக் கொள்கையை விவரிக்கவும்

• அலெக்சாண்டரின் கீழ் செர்.்.ப்கள் மற்றும் பெர்லின் காங்கிரஸின் விடுதலையை பகுப்பாய்வு செய்யுங்கள்

## 5.2 அலெக்சாண்டர் II (1855-81)

### 5.2.1. வாழ்க்கைக்குறிப்பு:

1855ஆம் ஆண்டு பிப்ரவரியில் கொடூரமான கிரீமியாப் போர் நடந்து கொண்டிருந்த போது முதலாம் நிக்கோலஸ் மரணமடைந்ததும் அவரது மகன் இரண்டாம் அலெக்சாந்தர் பேரரசரானார். 1818-ல் பிறந்த அவர் தனது இளம்வயதிலேயே செனட் சதுக்கத்தில் நடைபெற்ற டிசம்பர் வாதிகளின் புரட்சியையும், தனது தந்தையின் தலைமையில் சென்ற துப்பாக்கிப் படையினர் குண்டு மாரி பொழிந்து புரட்சியாளர்களைச் சரணடையச் செய்ததையும் நேரில் காணும் வாய்ப்பினைப் பெற்றார். இப்போது பதவியேற்றதும் சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டிருந்த டிசம்பர் புரட்சியாளர்களில் இன்னமும் உயிரோடு உலவிக் கொண்டிருந்தோரை மன்னித்து விடுதலை செய்தார்.

### 5.2.2. இரண்டாம் அலெக்சாந்தரின் கொள்கைகள்:

கவிஞர் சூகோவ்ஸ்கியீடம் கல்வி கற்றதால் ஓரளவு மனித இனத்தின் இயல்புகளை அறிந்திருந்தாலும் தனது தந்தையின் அரசியல் கோட்பாடுகளையே தனது ஆட்சி முழுக்கவும் கடைப் பிடிக்கலானார். ஜனநாயகம் என்பதோ, தேர்தல் என்பதோ, மக்கள் பிரதி நிதிகளின் ஆட்சி என்பதோ, அவருக்குப் பிடிக்காத ஒன்று. வல்லாட்சியை ஆதரித்து நிற்கும் சமயத்துறை, மன்னரின் வழி நடக்கும் அரசுத்துறை, உயர்குடி மக்களின் ஆதரவு ஆகியவை மட்டுமே அவருக்குப்பிடித்தமான சொற்கள்.

இவர் காலத்தில் சூழ்நிலையின் கட்டாயத்தால் இயற்ற வேண்டியதான சில சீர்திருத்த சட்டங்கள் குறுகிய நோக்கங்களைக் கொண்டதாகவும், நெடுங்கால நன்மைக்கு வழிவகுக்காததாகவும், அரசியலளவில் மாற்ற மெதனையும் ஏற்படுத்தாததாகவும் அமைந்து விட்டன. பெரும்பாலோருக்கு நலன் தரும் வகையில் அமைய வேண்டுமென அச்சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருந்தாலும், அரசின் நிர்வாக அமைப்பில் மலிந்திருந்த ஊழல்கள் களையப்பட்டிருந்தாலும் வரலாற்றில்

அவருக்குத் தனியிடம் கிடைத்திருக்கும். குடிமக்கள் மீது கொண்ட மனிதாபிமானத்தின் அடிப்படையில் இல்லாமலும், சீர்திருத்தங்களின் தன்மையையோ, தேவையையோ முற்றும் உணராத நிலையிலும் அத்தகைய சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டன. அவரது பதவியேற்பு வைபவத்தின் போது விக்டோரியா பேரரசியின் பிரதிநிதியாகச் சென்றிருந்த ஆங்கிலேயர் அவரைப் பற்றிக் குறிப்பிடும் போது “நல்லியல்புகளைக் கொண்ட வரானாலும் நீரைப் போல் பலவீனமானவர்“ என்றார்.

## 5.2.3. ரஷ்யாவில் சீர்திருத்தங்களுக்கான சூழ்நிலை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி உலகின் பல பகுதிகளிலும் நடுத்தர மக்கள் பங்கு கொண்டஜனநாயகமும், விடுதலை இயக்கங்களும் பல வெற்றிகளைப் பெற்ற காலமாகும். ஐக்கிய இத்தாலியும், ஐக்கிய ஜெர்மனியும் உருவான இதே காலத்தில் தான் பிரான்சில் மூன்றாவது குடியரசும் நிறுவப்பட்டது. அமெரிக்காவிலும் அடிமை முறை ஒழிக்கப் பட்டது. பிற்போக்குவாதிகளின் தலைமைக் கூடாரமாகவும், மக்களின் மாபெரும் சிறைக்கூடமாகவும் இருந்த ரஷ்யாவில் கூட அரசியலில் சில மாற்றங்கள் ஏற்படவே செய்தன. கிரிமியாப்போரே பண்ணை அடிமைகளின் நிலையை மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியத்தை உருவாக்கியதும் எனக் கூறலாம். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் வல்லரசுத் தன்மையை இழந்து விட்ட நாட்டின் அரசியலில் ஓரளவு மாற்றத்தை உண்டாக்க வேண்டியும் சில சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டிய உண்மையை மன்னரின் மனத்தில் பதிய வைத்தது. அதனால் அவர் விடுதலை வீரர் சார்“ என்றே அழைக்கப்படும் பேற்றினைப் பெற்றார்.

குறிப்பு

### 5.2.4. சீர்திருத்தங்கள் செய்ய பத்திரிகைகளின் பங்கு:

கிரீமியாப் போர் முடிவுற்றதை முறைப்படி அறிவித்தவுடன் பத்திரிக்கைகள் மீண்டும் தங்களது பிரசாரத்தைத் தொடங்கின. நிக்கோலஸ் காலத்திய கடுமையான தணிக்கைக் கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்த்தப் பட்டதும் லண்டனில் வெளியிடப்பட்ட ஹெர்சனின் “மணியும்“ ரஷ்யாவில் பிரசுரமான “சம காலமும்“ மீண்டும் உற்சாகத்துடன் தங்களது அரசியல், சமூகப் பணிகளைத் தொடரலாயின. நிக்கோலசின் மரணச் செய்தியளித்த பெரு மகிழ்ச்சியில் “துருவ நட்சத்திரம்“ என்ற புதிய பத்திரிக்கையும் தொடங்கப்பெற்றது. நிலத்துடன் கூடிய பண்ணை அடிமைகளின் விடுதலை, பத்திரிக்கைச் சுதந்திரம், உடலை வருத்தும் கடுந்தண்டனை யொழிப்பு ஆகிய மூவகைச் சீர்திருத்தங்கள் வேண்டி தனது கருத்துக்களை ஹெர்சன் வெளியிட்டார்.

மற்றோர் இதழான “சமகாலம்“ கூட செர்னிசேவ்ஸ்கியின் எழுத்துக்களைத் தாங்கி புதிய குரலாக வெளிவந்தது. பீட்டர்ஸ்ப ர்க் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற செர்னி 1சேவ்ஸ்கியின் உலகியல் தத்துவங்களையும், அரசியல் பொருளாதாரத்தையும், இலக்கிய விமரிசனங்களையும், வரலாற்று உண்மைகளையும் பற்றி மிக விரிவாக எழுதலானார். அவரது நீதிமுறைக் கோட்பாடுகள் இளைஞர்கள் மத்தியில் சுயசிந்தனை, பெண்களிடம் மரியாதை, உழைப்பில் நாட்டம், மக்களிடம் அன்பு ஆகிய பண்புகளை வளர்க்கலாயின. இவர்களைப் போலவே உயர்குடி மக்களில் சிலரும் தாராளக் கோட்பாட்டினை விரும்பலாயினர்.

### 5.2.5. சீர்திருத்தங்கள் செய்ய மன்னர் எடுத்த முயற்சி :

பெரும் சீர்திருத்தங்கள் பல செயல்படுத்தப்படுவதற்கு மன்னரே முன் நின்று செயல்படலானார். 1856ஆம் ஆண்டின் வசந்த காலத்தின் போது மாஸ்கோ பிரபுக்களின் மத்தியில் பேசிய பேரரசர் “சமுதாய அமைப்பின் கீழ் நிலையிலிருந்து பண்ணை அடிமைகள் விடுதலை பெறும் வழிமுறைகள் வெளிவரும் எனக்காத்திருப்பதை விட, அரசின் மேல் மட்டத்திலிருந்தே அத்தகைய விடுதலையை அளித்திட விரும்புகிறேன்“ எனக் கூறினார். அது சம்பந்தமாக உயர்குடிமக்களின் உணர்வுகளையும், உள்ளார்ந்த விருப்பங் களையும் திட்டங்களையும்

குறிப்பு

தெளிவாக அறியுமுன் அவசரப்பட்டு எதனையும் செயலாக்கிடவும் அவர் விரும்பவில்லை .

பிரபுக்களின் மனமாற்றத்தில் முழு நம்பிக்கை கொண்டால், தான் விரும்பும் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது எளிதாகிவிடும் என நம்பினார். தன்னிச்சையாகத் தான் செயல்பட வில்லை என்பதையும் உலகுக்கு உணர்த்தவும் முடியும். அவரது வேண்டுகோளைக் கேட்ட பிரபுக்களின் மனம் பனிக்கட்டியாய் உறைந்து விட்டநிலையில் எதிர்பார்த்த எந்தப் பதிலும் வரவேயில்லை . ஆனால் அதே சமயம் உள்துறை அமைச்சரான லான்ஸ்காயும் அவரது உதவியாளரான லெவ்சினும் பண்ணை அடிமைச்சிக்கல் குறித்த எல்லா விவரங்களையும் சேர்க்கலாயினர்.

## 5.3. இரண்டாம் அலெக்சாந்தரின் சீர்திருத்தங்கள் :

### 5.3.1. பண்ணை அடிமைகள் விடுதலை

### 5.3.2. விடுதலைக்கான திட்டம் தயாரித்தல்:

பண்ணை அடிமைச் சிக்கலை ஆராய்ந்ததில் அதை மூன்று முறைகளில் தீர்க்க முடியும் என்ற முடிவுக்கும் வர முடிந்தது. முதலாவதாக அரசின் ஆணையின் மூலம் பண்ணை அடிமைகள் அனைவரையும் நிலமேது மின்றி விடுதலை செய்துவிடுவது. இரண்டாவதாக அடிமைகளைக் கொண்ட பண்ணைகளே இல்லாது செய்துவிடுவது. மூன்றாவதாக நிலம் பெறும் விவசாயிகள் அதற்கான இழப்பீட்டுத் தொகையைக் கொடுப்பது அல்லது நிலத்திற்குப் பதிலாக ஒரு காவலரையறைக்குட்பட்டோ , காலவரையறை யின்றியோ தங்களது பழைய பிரபுக்களுக்கு உழைப்புத் தானம் அளிப்பது

இந்த முடிவுகளின் அடிப்படையிலேயே விவசாயிகளின் சிக்கல் அணுகப்படக் கூடுமாயினும், பிரபுக்களிடமிருந்தே அத்தகையதோர் நல்ல தொடக்கம் வரக்கூடுமென அரசர் நம்பினார். அவரது நம்பிக்கையெல்லாம் வீணான பின்னர் 1857 ஜனவரியில் ஓர் ரகசியக்குழுவை நியமித்து, தேவையான தகவல்களைச் சேகரித்துத் தகுந்த திட்டங்களையும் தயாரிக்கு மாறு ஆணையிட்டார். அக்குழு எட்டு மாதகாலம் பணிபுரிந்தும் விளைவேதும் ஏற்படவில்லை. அக்குழுவினரின் காலம் தாழ்த்தும் கொள்கையிலிருந்து சிக்கலை விடுவிக்க விரும்பிய மன்னர் தனது

சகோதரர் கான்ஸ்டன்டைன் தலைமையில் 1857 ஆகஸ்டில் மற்றொரு குழுவை நியமித்தார். அதே காலத்தில் லிதுவேனியாவைச் சேர்ந்த பிரபுக்கள் மன்னரிடம் ஒரு விண்ணப்பத்தை அளித்து, தங்களது நிலத்தைத் தாங்களே வைத்துக் கொண்டு விவசாயிகளை மட்டும் நிலமேதுமின்றி விடுதலை செய்துவிடத் தங்களுக்கு உரிமையளிக்குமாறு வேண்டினர். மன்னர் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

### 5.3.3. புதிய ஆணை

1857 நவம்பரில் உள்துறை அமைச்சர் லான்ஸ்காயின் திட்ட அடிப்படையில் ஆணையொன்றினை வெளியிட்டார். அதன்படி நிலமனைத்தும் நிலப்பிரபுக்களின் உடைமையாகவே இருக்கும். பண்ணைக் கூலிகள் அவர்களுக்காக ஒதுக்கப்படும் துண்டு நிலத்தினை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் விலைக்கு வாங்கிக் கொள்ளும் உரிமை பெறுவர். அம்மக்கள் உயிர் வாழவும், வரி செலுத்தவும் போதுமான நிலத்தைப் பெறவும் அனுமதிக்கப்படுவர். அதற்குப் பதிலாக உழைப்புத் தானத்தையோ, நிர்ணயிக்கப்படும் அளவில் விடுவரிக் குத்தகைப் பணத்தையோ அளிக்க லாம்.

அறிவிக்கப்பட்டுவிட்ட இவ்வாணையையொட்டி நாடு முழுவதிலும் பிரபுக்களைக் கொண்ட பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமெனவும் லிதுவேனியப் பிரபுக்களுக்கும், அனைத்து மாநில ஆளுநர்களுக்கும், மாவட்ட நிர்வாகத் தலைவர்களுக்கும் தாக்கீது அனுப்பினார். இதனால் பண்ணை அடிமை முறை ஒழிப்பு பற்றி இப்போது வெளிப்படையாகவே பத்திரிக்கைகளில் விவாதங்கள் வெளி வரலாயின. ரகசியக் குழுவாகச் செயல்பட்ட அமைப்பு விவசாயிகளின் விவகாரங்களைப் பற்றிய மிக முக்கியக் குழுவாயிற்று. சீர்திருத்தங்களைப் பற்றிய நுணுக்கமான விவரங்களையும் ஆராயத் தொடங்கியது. 1858-ல் நாடு தழுவிய அளவில் பிரபுக்களின் குழுக்கள்) அமைக்கப்பட்டன.

### 5.3.4. பண்ணை அடிமைகள் விடுதலை பற்றிய பிரபுக்களின் நிலை:

சீர்திருத்தக் கொள்கைகளை வகுப்பதில் பிரபுக்களனைவரும் தங்களது பொருளாதார நிலை எவ்வகையிலும் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்ற தன்னல மனப்பான்மையோடு தான் செயல்பட்டனரே தவிர,

குறிப்பு

நாட்டு நலன் பேணும் நன்னெறியைப் பற்றிய கொள்கையினை நினைவிலே வைக்கவில்லை . தங்களது வருவாயனைத்தையும் வாரித்தரும் கரிசல் நிலப் பகுதியைச் சேர்ந்த நில உடமையாளர்கள் தங்களது பண்ணைக் கூலிகளை நிலமேதும் இல்லாமலோ அன்றிப் பெயரளவுக்கு ஒரு சிறு துண்டு நிலத்துடனோ விடுதலை செய்து விட விரும்பினர். வட பகுதியிலிருந்த பிரபுக்களின் வருவாய்த் துறைக் கால்வாய்களாக வாணிபமும், தொழில்களும் அமைந்து விட்ட நிலையில், விடுவரிக் குத்தகைப் பணத்தின் மூலம் தங்களது வருவாய் பாதிக்காது என்ற அளவில் விவசாயிகளுக்கு விடுதலையளித்துவிடமுன் வந்தனர்.

விடுதலைச்சட்டம் வந்து விடக் கூடும் எனப்பயந்த பேராசைப்பிரபுக்கள் தங்கள் பண்ணைக் கூலிகளைக் கொடூரமான முறையில் பலி வாங்கலாயினர். பண்ணைக் கூலிகள் பலரும் தாங்கள் பயிரிட்டு வந்த பொன்னான மண்ணை விட்டு வெளியேற்றப்பட்டுப் பயிர்த்தொழிலுக்கு உதவாத தரிசு நிலங்களில் குடியேற்றப்பட்டனர். அதனை எதிர்த்தோர் நாடு கடத்தப்பட்டு வெகு தொலைவில் திண்டாடி அலையுமாறு தெருவில் விடப்பட்டனர். இன்னும் பலர் கட்டாய ராணுவ சேவைக்கு அனுப்பப் பட்டனர். இத்தகைய ஈவிரக்கமற்ற கொடுஞ்செயல்களைத் தனது பயணத்தின் போது நேரில் காண நேர்ந்த அலெக்சாந்தர் அத்தகைய பழிச் செயல்கள் நிறுத்தப்பட வேண்டுமென ஆணையிட்டார். ஆயினும் உயர் குடிப்பிறந்தோரின் பழி வாங்கும் செயல்கள் குறையவில்லை.

### 5.3.5. சீர்திருத்த சட்டத்தொகுப்புக் குழு:

1859 மார்ச்சில் கிடைக்கப்பெற்ற ஆய்வறிக்கையின் அடிப்படையில் சட்ட விவரங்களைத் தொகுக்கவென்று “சட்டத்தொகுப்புக் குழு“ ஒன்று பழைய டிசம்பர் வாதிகளில் ஒருவராகத் தொடக்க காலத்தில் பணியாற்றியிருந்த தளபதி ராஷ்தோவ்சேவ்தலைமையில் அமைக்கப்பட்டது. அதில் உள்துறைத் துணையமைச்சர் நிகோலஸ் மில்யுதின் கலாவோபிலிசக் கொள்கையாள ரான சாமரின் ஆகிய சீர்திருத்தச் சிந்தனையாளர்களும் இடம் பெற்றனர். சீர்திருத்தச் சட்டத்தொகுப்புக் குழுவினரின் பணி விரைந்து முடிந்திடாதவாறு தொல்லைகள் பல ஏற்பட்டன. சீர்திருத்த விரோதிகள் தங்கள் கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்தனர். பல விதிகள் குறித்துப்

பிற்போக்குவாதிகளின் தலைவர்களுடன் பேசித் தீர்த்தே சில முடிவுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. சட்டத்தொகுப்புப் பணி ஒருவாறு முடிந்தது.

பிரபுக்களின் குழுத்தலைவர்களில் ஒருவரான உங்கோவ்ஸ்கி என்பவர் விவசாயிகள் தாங்களாகவே தங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிலத்தோடு மேற்கொண்டு விரும்பும் நிலத்தினையும் சேர்த்து விலைக்கு வாங்கிக் கொள்ளும் தாராளத் திட்டமொன்றினைத் தயாரித்தார். பிரபுக்களின்

குழுக்களில் பணிபுரிந்த பலரும் விவசாயிகளுக்கு மிகக் குறைந்த அளவுக்கே நிலம் ஒதுக்கப்பட வேண்டுமென்பதிலும், அளிக்கப்படும் இழப்பீட்டுத் தொகையைச் செலுத்துவதில் கடுமையான நிபந்தனைகள் இருக்க வேண்டுமென்பதிலும் உறுதியாக நின்றனர். அவை சொல்லளவில் செயல்படுத்தப்பட்டாலே ரஷ்யாவின் எதிர்காலம் இருண்டு விடுவதோடு, சீர்திருத்தம் என்ற சொல்லுக்கே பொருளில்லாது போய்விடும் என்பதை அவர்கள் உணரவேயில்லை .

பிற்போக்குவாதிகளின் பிரதிநிதியாகச் செயல்பட்ட சிற்றரசர் பாணின் தலைமையில் அமைந்த சட்டத் தொகுப்புக்குழு தனது பணியினை 1860 அக்டோபரில் முடித்தது. தொகுக்கப் பட்ட வடிவில் முக்கிய அரசியல் ஆலோசனைக் குழுவின் பரிசீலனைக்குப் பின் தேசிய சபையின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. ஒவ்வொரு நிலையிலும் கடுமையான எதிர்ப்பைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும் இளவரசர் ககாரின் (புயபயசஜை) மட்டுமே அதன் அமைப்பையே மாற்றிவிட முனைந்தார். வெளிவர விருக்கும் சட்டத்தின்படி விவசாயிகளுக்குக் கிடைக்கவிருக்கும் நில அளவில் கால்பங்கு மட்டுமே கொடுத்து விட்டு அவர்களை நிபந்தனைகளேதுமின்றி விடுதலை செய்து விட நில உடைமையாளர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென அவர் வாதாடினார். அவரது திட்டப்படி கிடைக்கவிருக்கும் பிச்சைக்காரர்களின் ஒதுக்கீடுகளை தேசிய சபையும் அங்கீகரித்த அளவில் மன்னரும் ஏற்றுக் கொண்டார். கடும் புயலுக்குப்பின் கடைசியில் அனைவரும் ஆவலோடு எதிர் பார்த்திருந்த விவசாயிகளின் “விடுதலைச் சட்டம்“ 1861 ஆம் ஆண்டு பிப்ரவரி 19ஆம் நாள் மன்னரின் ஒப்புதலைப் பெற்று மார்ச் 5 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வந்தது.

குறிப்பு

### 5.3.6. பண்ணை அடிமைகள் விடுதலைச் சட்டம் 1861:

1861 ஆம் ஆண்டின் விடுதலைச் சட்டம் பதினேழு பெரும் பிரிவுகளையும், அதனுள் அடங்கிய பல்வேறு. சிறு துணை விதிகளையும் கொண்டதாக இருந்தது. முன்னூறு பக்கங்களுக்கு மேற்பட்டிருந்த அச்சட்டத்தொகுதி சிக்கல்கள் நிறைந்ததாகவும், வெளிப்பார்வைக்கு விவசாயிகளின் விடுதலையை உறுதி செய்வதாகவும் இருந்தது. இந்த விடுதலைச் சட்டத்தின்படி விடுதலை பெறும் பண்ணைக்கூலிகள் இனி தங்களின் முதலாளிகளின் ஒப்புதலின்றியே திருமணம் செய்து கொள்ளலாம். வெளி மக்களுடன்தாங்கள் விரும்பும் முறையில் வேண்டிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளலாம். தனியாகவோ, தனி நபர்களுடன் இணைந்தோ வியாபார நிறுவனத்தை நிறுவலாம். தொழிற் கூடத்தையும் தொடங்கலாம் தங்கள் உரிமைகளைக் காக்கச் சட்டத்தின் துணையையும் நாடலாம். விடுதலையின் மூலம் சுதந்திரமான கிராம வாசிகளாகி விட்ட இம்மக்கள் சொத்துக்களை வாங்கவும், விற்கவும், தங்களால் விலைக்கு வாங்கப்பட்ட நிலத்தைத் தங்கள் விருப்பப்படி பயன்படுத்திக் கொள்ளவும், பரம்பரை வழக்கப்படி நடைமுறையிலிருக்கும் சம்பிரதாய முறையில் அவற்றைத் தங்களின் வாரிசுகளுக்கு உடைமையாக்கவும் உரிமை பெற்றனர்

### 5.3.7. சட்டத்தின் நடைமுறைச் சிக்கல்கள்

பார்வைக்கு இவையனைத்தும் நல்ல சீர்திருத்தங்களாகப் பட்டாலும், நடைமுறையில் அவை செயல்படுத்தப்பட்ட போது பல சிக்கல்கள் தோன்றின. சொல்லப்பட்ட சுதந்திரங்களெல்லாம் சில நிபந்தனைகளையும் உள்ளடக்கியிருந்தன. ஒரு கிராமத்தின் விவசாயக் கூட்டமைப்பான "கம்யூன்" அதற்கென ஒதுக்கப்பட்டிருந்த நிலத்தினை வாங்கும் உரிமையைப் பெறுமுன் பழைய நில உடைமையாளர் களுடன், அவர்களுக்குச் சேரவேண்டிய பணம், அதைச் செலுத்தும் வகை போன்ற நிபந்தனைகள் சம்பந்தமாக ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம். இரு சாராரும் ஒப்புக்கொள்ளத்தக்க உடன்பாடொன்று உருவாகும் வரையில் அந்த விவசாயிகள் நில உடைமையாளர்களின் "தற்காலிகக் கட்டப்பாட்டில் இருப்பதாகவே கொள்ளப்படும்.

கம்யூன்களைச் சேர்ந்த விவசாயிகள் நில உடைமையாளர்களோடு ஏற்பட்ட உடன்பாட்டின்படி தங்களுக்கான நிலத்தைப் பெற்றுக்கொண்ட பின் எக்காரணத்தை முன்னிட்டும் தனக்கான நில ஒதுக்கீட்டைத் திரும்பக் கொடுத்துவிட்டு வெளியேறி விடமுடியாது. விடுதலைச் சட்டம் வெளியான பின் ஒன்பதாண்டு காலத்திற்குக் கம்யூனின் உறுப்பினர்கள் அவ்வமைப்பை விட்டு வெளியேறக் கூடாது. நில ஒதுக்கீடுகள் சம்பந்தமான அளவுகள், அவற்றின் வெளி மதிப்பு பற்றிக் கூட விரிவானதும், கண்டிப்பானதுமான விதிகள் வகுக்கப்பட்டிருந்தன. சட்டத்தில் காணப்பட்ட கட்டுப்பாட்டு விதிகள்

விடுதலைச் சட்டம் வரும் முன் விவசாயம் செய்து வந்த விவசாயியின் நிலம், சட்டத்தில் அவருக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் நில அளவைவிட அதிக அளவில் இருந்தால், அதிக அளவுள்ள நிலம் துண்டிக்கப் பட்டு நில உடைமையாளருக்குக் கொடுக்கப்படும். இவ்வகை நிலங்கள் “துண்டிக்கப்பட்டதுண்டுகள்“ (முவசநணமை) என வழக்கில் வரலாயின. சட்டத்தில் கண்டுள்ள நில அளவைவிடக் குறைந்த அளவு நிலமே விவசாயியின் வசமிருந்தால், அக்குறைபாட்டை நிறை செய்யவென்று நில உடைமை யாளர்கள் வேறு நிலப்பகுதியைக் கொடுத்து ஈடு செய்யலாம். அல்லது நிலம் கொடுப்பதற்குப் பதில் விவசாயிக்கு விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளில் சிலவற்றைத் தளர்த்திக்கொள்ளலாம்.

இத்தகைய சிக்கல்கள் எழும்பேர் தெல்லாம் விவசாயிகளுக்கான நில ஒதுக்கீடுகளின் அளவு குறையலாயிற்றே தவிர பிரபுக்களின் நலன் எள்ளளவும் பாதிக்கப்படவில்லை. இவ்வகை ஏற்பாடுகளினால் சட்டம் வரும் முன் தங்கள் வசமிருந்த நிலத்தில் ஒரு பகுதியை இழக்க வேண்டியதாயிற்று. பல மாநிலங்களிலும் வளமான நிலங்களைத் தங்களுக்கென வைத்துக்கொண்டு, வளமற்றதும், பயனற்றது மான நிலங்களையே விவசாயிகளுக்கு ஒதுக்கினர்.

விவசாயிகளிடம் உண்மையில் ஒப்படைக்கப்பட்ட நிலத்தின் அளவு, திரும்பச் செலுத்த வேண்டிய இழப்பீட்டினைப் பணமாகச் செலுத்துவதா அல்லது உழைப்பாக அளிப்பதா என்பனவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு விவசாயிகள் நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் வரையறுக்கப்பட்டன. விடுதலைச் சட்டம் வெளியான இரண்டு ஆகஸ்டு காலத்திற்குள் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளையெல்லாம்

நிறைவேற்ற வேண்டியிருந்ததோடு, அதனை ஒரு நடுநிலையாளரும் உறுதி செய்யவேண்டியிருந்தது.

குறிப்பு

### 5.3.8. இழப்பீட்டு தொகை நிர்ணயம் செய்யப்படுதல்:

இறுதியில் விவசாயிகள் கொடுக்க வேண்டிய ஈட்டுத்தொகையின் அளவும் ஒருவாறு நிர்ணயிக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட நிலத்தின் உண்மையான அளவையோ, அதன் வெளி மதிப்பையோ, தரத்தையோ வளத்தையோ கணக்கில் கொள்ளாமல் பெருந்தொகைகள் இழப்பீட்டுத் தொகைகளாக நிர்ணயிக்கப்பட்டன.

நிலத்தின் அளவு சிறுத்து, வளம் குன்றி யிருப்பினும் தொகை மட்டும் குறைவதேயில்லை. அடிமை வாழ்விலிருந்து மீண்டிருந்த மக்களில் பெரும்பாலோர் நிலத்தை வாங்க வழியேதும் இல்லாது தவிக்க, அரசே அவர்களுக்கு உதவ முன் வந்தது. நில உடைமை யாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகையில் 80 சதவீதத்தை அரசே முன் பணமாகக் கொடுக்க, 20 சதவீதத் தொகையை விவசாயிகளே கொடுக்க வகை செய்யப்பட்டது. விவசாயிகளுக்குக் கடனாக அளிக்கப்பட்ட இப்பணத்தை அதற்குரிய வட்டியுடன் அடுத்த 49 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தவும் வழி செய்யப்பட்டது.

நிலமானிய முறையில் தங்களுக்கிருந்த உரிமைகளை இழந்த பிரபுக்களைத் திருப்திப் படுத்தவே இந்த ஏற்பாடு களெல்லாம் செய்யப்பட்டனவே தவிர, விவசாயிகளுக்கு உதவும் உயர்ந்த உள்ளத்தோடு செய்யப்படவில்லை. இதனால் அரசுக்குத் திரும்பச் செலுத்த வேண்டிய பணத்தைக் காலா காலத்தில் செலுத்த இயலாது போயிற்று. நிலுவைத் தொகையும் கூடிக்கொண்டே போயிற்று.

பயிடுவோரின் நிலை பரிதாபகரமானதாயிற்று. அவர்கள் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை பற்றிய மறு பரிசீலனை 1896-ல் செய்யப்பட்ட போது, 1905 வரையில் அரசு கடனைத் திரும்பச் செலுத்தலாம் எனத் தவணைக்காலம் நீடிக்கப்பட்டது. அதே சமயம் 1861-ல் 500 ரூபிள் பெறுமானமே உள்ள நிலத்திற்கு 1905 ஆம் ஆண்டுக்குள் 2,000 ரூபிள் வரை நில உடைமையாளருக்குச் செலுத்திய பின்னும் அவர்களது கடன் தீரக்காணோம். வறுமையும் அவர்களை விட்டு விலகவில்லை. அத்துடன் அவர்களது தனி வாழ்க்கையில் ஓரளவு

சுதந்திரம் கிடைத்ததே தவிர, கட்டாய படைப் பணியிலிருந்தும், உடலை வருத்தும் கடுந்தண்டனைகளிலிருந்தும் விடுதலை கிடைக்கவில்லை.



**விடுதலைச் சட்டம் பற்றிய மதிப்பீடு:**

1) விவசாயிகளின் விடுதலைச் சட்டம் அவர்களைத் தனி நபர்களாகக் கவனிக்கத் தவறியதே அதன் தோல்விக்கு ஒரு காரணமாயிற்று. இதைப் பற்றி பீஸ்மார்க் குறிப்பிடும் போது பண்ணைக் கூலிகளுக்கு விடுதலையளித்தது அலெக்சாந்தரின் அரிய செயலே. கம்யூனின் உரிமையாளர் பொறுப் பிலிருக்கும் அவர்களை விடுவித்து விட்டால் அதுவே ரஷ்யாவுக்கு அவர் செய்யும் அரிய தொண்டாகும்" என்றார்.

2) விவசாயிகளின் வருமானத்துக்குத் தக்கவாறு வரி விதிப்பும் அமையவில்லை. தலைவரியாக விதிக்கப்பட்ட வரி கூடத்தனியே செலுத்தப் பட அனுமதிக்கப்படாமல், கம்யூன் உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஓர் உடன்பாட்டின் படி அத்தகைய கூட்டமைப்பின் மூலமே செலுத்தப்பட வேண்டியதாயிற்று.

3) கம்யூனின் அமைப்பை நிர்வகிக்கவும், ஒழுங்கை நிலை நாட்டவும் சில தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குற்றவாளிகளைத் தண்டிக்கவும், கைது செய்து விசாரிக்கவும், கட்டாய உழைப்புக்கு உத்தரவிடவும் இவர்கள் அதிகாரம் பெற்றிருந்தனர். அத்தலைவர்கள் அரசின் காவல்துறை, உள்ளாட்சித்துறை ஆகியவற்றின் நேரடிக் கண்காணிப்பிலேயே செயலாற்ற முடியும்.

4) இவர்களுக்கும் மேலாக வட்டார நிர்வாக அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களைக் கொண்டு இயங்கி வந்தன. சிறுவகையிலான நிலத் தகராறுகளையும், சிறு குற்றங்களையும் விசாரிக்க வட்டார வழக்கு மன்றங்களும் இருந்தன. கம்யூன்களின் நிர்வாக அமைப்பையும், கோட்ட நிர்வாகத்தையும் கவனித்து அமைதியை நிலை நாட்டவென நிலப்பிரபுக்களால் ஒரு நடுநிலையாளரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

5) இவ்வமைப்பு களனைத்துமே விவசாயிகளின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவே பயன்பட்டன. பொருளாதாரத் துறையில் அவர்கள் முன்னேறுவதைத் தடுக்கும் பொருட்டு நிலங்களைத் தனியாரின்

உடைமையாக்குவதற்குப் பதில் கம்யூனின் கூட்டுப் பொறுப்பில் விடப்பட்டது. அக்கூட்டமைப்பைச் சேர்ந்த விவசாயிகளுக்கிடையே அதையே பரம்பரை உரிமையாக்கிக் கொள்ளும் முறையில் பங்கீடு செய்து கொள்ளலாம்.

6) கம்யூனின் சபை விரும்பினால் அதையே மறு பங்கீட்டுக்கும் உட்படுத்தலாம். இதனால் தங்களுக்குக் கிடைத்த நிலத்தைப் பண்படுத்தி வளமாக்க வேண்டுமென்ற ஆவலோ, ஆசையோ எவருக்கும் இல்லாது போயிற்று.

7) எவ்வகையில் பங்கிடப்பட்டாலும் அவர்களது தேவைக்கான நில அளவில் ஒரு பகுதியே கிடைத்ததால் தங்கள் வாழ்வை நிலைப்படுத்தவும், வரி செலுத்தவும், நிலத்திற்கென ஏற்பட்ட கடனை அடைக்கவும் வேண்டி நிலப்பிரபுக்களிடமே குத்தகை முறையிலோ, உழைப்பு தானம் வழங்கிடும் முறையிலோ மேலும் நிலம் பெற வேண்டியதாயிற்று. இது ஒரு வகையில் “நிலம் - உழைப்புத்தானம்“ என்ற பழைய முறைக்கே மக்களை இட்டுச் சென்றது. இதனால் விடுதலை பெற்றுவிட்ட நிலையிலும் விவசாயிகளின் மீதான பிரபுக்களின் பிடி மேலும் இறுகியது..

8) ரஷ்யாவின் புதிய விடுதலைச் சட்டத்தால்மிக மோசமான நிலையில் பாதிக்கப்பட்டோர் பிரபுக்களின் மாளிகைகளில் பணிபுரிந்து வந்த அடிமை வேலையாட்களே. நிலமேதும் கிடைக்காது போன நிலையில் அவர்களில் பலரும் நகரங்களை நாடிச்சென்று புதிய வேலைகளைத் தேட வேண்டியதாயிற்று.

9) பிரபுக்களின் பண்ணைகளிலேயே அமைக்கப்பட்டிருந்த தொழிற் கூடங்களிலும், தனியாரின் நேரடிப் பொறுப்பில் இருந்த தொழிலகங் களிலும் அடிமைத் தொழிலாளர்களாக இருந்தோர் தங்கள் வேலைகளை விட்டு வெளியேற நேரிட்டதால் கம்பளி உற்பத்தியும், சுரங்கத் தொழில்களும் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டன.

10) மன்னரின் விவசாயிகளும், அரசு விவசாயிகளுமே ஓரளவுக்கு நன்மை பெற்றனர். அவர்களுக்கு அதிக அளவு நிலம் கிடைத்ததோடு, திருப்பிச் செலுத்த வேண்டிய தவணை முறைப்பணமும் ஓரளவு குறைவாகவே இருந்தது.

குறிப்பு

## 5.4. விடுதலைச்சட்டத்தின் விளைவுகள் :

### 5.4.1. சமுதாய அமைப்பில் மாற்றம்

1) நீண்ட காலமாக ரஷ்ய மண்ணில் நிலவிய அடிமை முறை அகற்றுப் பட்டுவிட்ட நிலையில் அதனால் ஏற்பட்ட பலன்கள் மிகக் குறைவே யாயினும், சமுதாய அமைப்பில் அது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது செய்தது. அடிமைகளைக் கொண்ட நிலமானிய சமூக அமைப்புக்குப் பதில், நடுத்தர, முதலாளித்துவ சமுதாய அமைப்பு உருவாயிற்று. நில உடைமை யாளர்களே நாட்டின் பிரதான குடிமக்களாகி அரசின் நிர்வாக இயந்திரத்தை இயக்கலாயினர்.

2) எல்லோரும் மிக விரும்பிய விடுதலைச் சட்டத்தால் எதிர்பார்த்த பயன் ஏற்படாமல் போகவே விவசாயிகளின் மத்தியிலும், தாராளக் கோட்பாடுகளைக் கொண்டிருந்த சிந்தனையாளர்களின் சிந்தையிலும் பெரும் ஏமாற்ற உணர்வினை உண்டாக்கியது.

3) காசன் பென்சா மாநிலங்களில் உண்மையான விடுதலை வேண்டுமெனக் கோரி விவசாயிகள் கிளர்ச்சி செய்தனர். 1861 ஏப்ரலில் பெசட்னா என்னும் ஊரில் ஆண்டன் பெத்ரோவ் என்பவரின் தலைமையில் கிளர்ச்சி வலுக்கவே, கடுமையான ராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, 500 பேருக்குமேல் படுகொலை செய்து கிளர்ச்சியை அடக்க வேண்டியதாயிற்று. முழு அளவில், முழு விருப்போடு இயற்றப்படாத சட்டத்தால் வேறெந்த வகையான விளைவுகளைத்தான் விளைவிக்க முடியும்!

4) இக்கிளர்ச்சிகளைக் கண்ட அலெக்சாந்தர் விடுதலைச் சட்டத்தை உருவாக்கிய லான்ஸ்காய், மில்யுதின் ஆகியோரைப் பதவியிலிருந்து நீக்கி விட்டு வலுயேவ் என்பவரை உள்துறை அமைச்சராக்கினார். அதன் பின் அரசு பிற்போக்கு வாதிகளின் உறைவிடமானது.

விடுதலைச் சட்டம் எத்தனையோகுறைபாடுகளைக் கொண்டிருந்தாலும் சமுதாய அமைப்பில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. அலெக்சாந்தரின் பிற சீர்திருத்தங்கள் :

குறிப்பு

## 5.4.2. உள்ளாட்சித் துறை :

பிற்போக்குவாதிகளைக் கொண்ட அரசின் அரசராக இருந்தும் அலெக்சாந்தர் வேறு சில சீர்திருத்தங்களையும் நிறைவேற்றினார். 1864ஆம் ஆண்டில் உள்ளாட்சித் துறைச் சீர்திருத்தச்சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. இதன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட மாநிலச் சபைகளும் மாவட்ட ஊராட்சிச் சபைகளும் ஏற்படுத்தப்படும். அச்சபை உறுப்பினர்களும், அவர்களால் தேர்வு பெறும் நிர்வாகக்குழு உறுப்பினர்களும் மூன்றாண்டுக் காலம் பதவியில் இருப்பர். ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மூன்று வகையான தேர்தல் முறை மூலம், மூன்று வகையான தேர்வாளர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

முதல் இருவகைத் தேர்வாளர்களாகக் குறிப்பிட்ட அளவு சொத்துரிமை உள்ளவர்களாகவோ, வருவாய் உள்ளவர்களாகவோ இருந்த நில உடைமையாளர்கள், பெரும் வணிகர்கள், தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்கள், உயர்குடி மக்கள் ஆகியோர் மற்றும் செல்வந்தர்கள் இருப்பர். மூன்றாம் வகையினர் வட்டாரச் சபைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளின் பிரதிநிகளாவர். மாவட்டக் கழக உறுப்பினர்களை மாநில மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப்பர். மாவட்டக் கழகங்களின் தலைவர்களாகப் பிரபுக்களே இருந்ததால் மாநில மன்றமும் அவர்களது கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

உள்ளாட்சித் துறையில் ஏற்பட்ட இத்தகு சீர்திருத்தங்களால் ரஷ்ய அரசியல் உலகில் தோன்றிய ஜனநாயக உணர்வுகளால் உந்தப்பட்ட மக்கள் மென்மேலும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்குரிய சலுகைகள் பலவற்றையும் கேட்கலாயினர். ஜனநாயகச் சீர்திருத்தங்கள் வேண்டி எழுந்த கோரிக்கைகளெல்லாம் கிணற்றில் எறியப்பட்ட கற்களாயின. எனினும் உள்ளாட்சித்துறை நிறுவனங்களால் சில நன்மைகளும் ஏற்பட்டன.

அவைகளின் அதிகாரங்களுக்குட்பட்ட அளவில் புதிய பள்ளிகள் தோன்றின. மருத்துவமனைகள் சிலவும் எழும்பின. புதிய சாலைகள் அமைக்கப்பட்டன. சிறைகளும் நிர்வகிக்கப்பட்டன. விவசாயம், வியாபாரம் தொழில்துறைகள் வளரவும் ஆக்கபூர்வமான ஆதரவு அளிக்கப்பட்டது. இவைகள் சீரிய முறையில் செயல்படத் தொழில் திறம் பெற்ற ஊழியர்கள் வேலையில் அமர்த்தப்பட்டனர். இப்புதிய அரசு ஊழியர்கள்

குறிப்பு

நாளடைவில் நாட்டின் மூன்றாவது அங்கமாகி அரசியல் உலகிலும் மிக்க செல்வாக்கு பெற்றவர்களாயினர்.

1870ஆம் ஆண்டின் மற்றொரு சட்டத்தால் பெரும் நகரங்களில் நகராட்சி மன்ற உறுப்பினர்கள், நிர்வாகக் குழுவினர், நகரவைத் தலைவர் ஆகியோர் நான்காண்டுக் காலம் பதவியில் இருப்பர். ஆனால் வாக்காளர்களில், அதிக வரி செலுத்துவோரே அதிகச்சலுகைகளும், உரிமைகளும் பெற்றனர்.

### 5.4.3. நிதித்துறை சீர்திருத்தங்கள்:

1864ஆம் ஆண்டில் நீதித்துறை சீர்திருத்தச் சட்டம் ஒன்று இயற்றப் பட்டது. ரஷ்ய மன்னரின் வல்லாட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட முக்கியமான சட்டம் இதுவாகும். நீதித்துறையை எளிமையானதாகவும், தூய்மை யானதாகவும் ஆக்கவேண்டுமென்பதே அதன் உள்ளார்ந்த நோக்கமாகும். இச்சட்டத்தின்படி கீழ்நிலையில் நகராட்சி மன்றங்களாலும், ஊராட்சி மன்றங்களாலும் தேர்ந்தெடுக்கப்படும் நீதிபதிகளால் சிறிய அளவிலான சிவில் வழக்குகளும் , ஜூரிகளின் குற்றவியல் வழக்குகளும் ஜூரிகளின் துணையுடன் விசாரிக்கப்படும். அதற்கும் மேற்பட்ட மாவட்ட நீதி மன்றங்களும், உயர் நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டு எல்லா வகையான வழக்குகளும் விசாரிக்கப்பட ஏற்பாடாயிற்று. செனட் மன்றமே நாட்டின் தலைமை நீதிமன்றமாகத் தொடர்ந்து செயல்படும்.

சட்டத்தின் முன் அனைவரும் சமமே என்ற கோட்பாட்டினை நீதிமன்றங்கள் நிலைநாட்டவும், நிர்வாக அமைப்பிலிருந்து நீதித்துறையைத் தனியே பிரித்து விடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நீதித்துறையில் நிலவிய ஊழலைக் களைய நீதிபதி களின் நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட்டன. உயர்ந்த சம்பள விகிதங்கள் அளிக்கப்பட்டன. வழக்கு விவரங்களை வெளியிடப் பத்திரிகைகள் அனுமதிக்கப்பட்டன. வாதிகளும், பிரதிவாதிகளும் கற்றுத் தேர்ந்த வழக்கறிஞர்களின் சட்ட உதவியைப் பெறலாம்.

குற்றவியல் குற்றங்களைப் பொறுத்த மட்டில் ஓர் ஆய்வு நீதிபதி காவல் துறையினருக்குப் பதிலாகத் தானே தொடக்கப் புலன் விசாரணையை மேற்கொள்ளுவார். இப்புதிய ஏற்பாடுகளால் நல்ல மனம் கொண்ட வல்லவர்கள் நீதித்துறையில் பணியாற்ற முன்வரலாயினர்.

குறிப்பு

ஆனால் 1866-ல் இயற்றப்பட்ட சட்டம் தணிக்கை செய்யும் அதிகாரத்தை உயர்நீதி மன்றங்களுக்கு மாற்றியதைத் தொடர்ந்து அதன் நடைமுறையில் சிறிது பழுது ஏற்பட்டது. நீதித்துறை அமைச்சரான பாஹ்லென் 1867-ல் குற்ற ஆய்வுத்துறை நீதிபதிகளின் பதவியைத் தற்காலிகமான தாக்கினார்.

1871-ஆம் ஆண்டின் சட்டமொன்று அரசுக்கெதிரான குற்றங்களை விசாரிப்பதில் தொடக்கப்புலன் விசாரணையை மேற்கொள்ளும் அதிகாரத்தை நீதிபதிகளிடமிருந்து ரகசியக் காவல் துறைக்கு மாற்றியது. இதன் மூலம் அத்தகைய குற்றங்களை முறைப்படியான விசாரணை ஏதுமின்றி நிர்வாக அமைப்பின் விசாரணைக்குட்படுத்தித் தீர்ப்புக் கூறவும் முடிந்தது.

1872ஆம் ஆண்டின் சட்டம் முக்கியமான அரசியல் வழக்குகளை யெல்லாம் தனியானதோர் செனட் நீதி மன்றத்தின் விசாரணைக்கு உட்படுத்தியது. 1873ஆம் ஆண்டின் சட்டம் உடலை வருத்தும் கடுமையான தண்டனைகள் அதிகாரப்பூர்வமாக ஒழித்தாலும், ராணுவத் தினரும், நீதிமன்றங்களில் தண்டனை பெற்றோரும், நாடு கடத்தப்பட் டோரும், ஊராட்சி மன்றங்களால் தண்டிக்கப்பட்ட விவசாயிகளும் அத்தகைய கடும் தண்டனைகளுக்கு மீண்டும் உள்ளாக்கப்பட்டனர். எனவே நீதித்துறை மறுபடியும் ஊழலானதோர் நிர்வாக அமைப்பாயிற்று.

### 5.4.4. படைத்துறை சீர்திருத்தங்கள்:

அலெக்சாந்தர் காலத்திய சீர்திருத்தங்கள் படைத்துறையிலும் செயல்படுத்தப்பட்டன. மன்னரின் இளவலான கான்ஸ்டன்டைன் கோமகனே கடற்படை அமைச்சராகவும் பணியாற்றியதால் கடற்படை அமைப்பு பல சீர்திருத்தங்களுக்கு உள்ளானது. ஆனால் ஐரோப்பிய நாடுகள் கலந்துகொண்ட பாரிசு உடன்பாட்டினால் அதன் கடற் படைவலிமை பெருமளவுக்குக் குறைக்கப்பட வேண்டியதாயிற்று.

தளபதி திமித்ரி மில்யுதின்)மத்திய படையமைப்பின் நிர்வாகத்தையே மாற்றியமைத்தார். நாடு பதினைந்து படை வட்டாரங் களாகப் பிரிக்கப்பட்டது. படையை நவீனமாக்கவும், புதுவகை ஆயுதங்களை அதிக அளவில் உற்பத்தி செய்வதன் மூலம் படையின் வலிமையை அதிகரிக்கவும் திட்டமொன்று தீட்டப்பட்டது. இதுவரை இருபத்தைந் தாண்டு காலச்சேவை என்ற அடிப்படையில் விவசாயக்

குடும்பங்களைச் சேர்ந்தோரே கட்டாயமாகப் படையில் சேர்க்கப்பட்டு வந்த நடைமுறைக்குப் பதிலாக அனவரும் கட்டாயமாகப் படைப்பயிற்சி பெறும் சட்டமொன்று 1874-ல் வெளியிடப்பட்டது. இதனால் இருபத்தைந்து வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் அனைவருமே கட்டாயப் படைப்பயிற்சி பெற வேண்டியதாயிற்று. நிலப்படையில் ஆறாண்டுக் காலமும், கடற்படையில் ஏழாண்டுக் காலமும் தொடர்ந்து சேவை செய்ய வேண்டியதும் கட்டாயமானது. உயர் கல்வி பெற்றவர்கள் மட்டும் மூன்று மாதகால அளவுக்குப் பணிக்காலத்தைக் குறைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர்.

இச்சீர்திருத்த நடவடிக்கையால் பெருமளவுக்கான நிரந்தரப் படையைப் பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லாது போனது. படை வட்டார அமைப்பால் அவசியப்படும் போது போர்ப்பணி புரிய படைப்பயிற்சி பெற்ற பல்லாயிரக்கணக்கானோர் நாடெங்கும் தயார் நிலையில் இருந்தனர். படைத்தலைவர்களின் பயிற்சி முறையிலும் முன்னேற்றமான முறைகள் புகுத்தப்பட்டதோடு, படைத் தலைவர்களிடையே பரவலாக நிலவிய படிப்படியான இழிநிலையும் நீக்கப்பட முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன. இவையனைத்தும் படையை நவீனமாக்கும் நோக்கோடு செயல்படுத்தப்பட்டாலும், ஐரோப்பிய, ஆசிய நாடுகளின் வேகமான மாறுதலை எட்டிப்பிடித்திடும் நிலை உருவாகாமல் போய்விட்டது.

### 5.4.5. நிதிச் சீர்திருத்தங்கள்

1860ஆம் ஆண்டில் அரசு வங்கி ஒன்று புதிதாக ஏற்படுத்தப்பட்டது. கிரிமியாப் போரின் விளைவாகவும், 1857-59ல் நாட்டில் நிலவிய கடுமையான பொருளாதாரச் சிக்கல்களாலும் நாட்டின் நிதிநிலை மிக மோசமான நிலையை அடையவே இதுவரை செயல்பட்டு வந்த பல்வகை அரசுக் கடனுதவிச் சங்கங்களுக்குப் பதிலாக இவ்வங்கி ஏற்படுத்தப்பட்டுக் குறுகிய காலக் கடனுதவிகள் கிடைக்க வழி செய்யப் பட்டது.

இதே காலத்தில் தான் நடைமுறையிலிருந்து வந்த மதுபானங்களின் மீதான பண்ணை வரி முறையும் ஒழிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக மதுபானங்கள் விற்பனையின் மீது உள்நாட்டு வருவாய் வரி விதிக்கப் பட்டது.

நிதித்துறை அமைச்சகத்திலும் வரவு - செலவுத் திட்டங்களும், நிதி விவகாரங்களும் மாறுதல்களுக்குள்ளாயின. வரவு - செலவுத் திட்டத் தயாரிப்பும், வரி விதிப்பு முறையும் கூடத் திருத்தியமைக்கப்பட்டன. 1862 முதல் பொதுமக்களின் பார்வைக்கென வரவு - செலவுத் திட்டம் வெளியிடப் பட்டது. திறமைமிக்க உயரதிகாரியான. தாதரினோவ் மேற் கொண்ட நடவடிக்கைகளால் அரசுச் செலவினங்களும் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டன.

1862 முதல் நிதியமைச்சராகப் பணியாற்றிய ரெய்டர்ன் நாட்டின் காகித நாணய மதிப்பை உயர்த்தப் பல நடவடிக்கை களை மேற்கொண்டார். வெளிநாடுகளில் பல கடன்கள் எழுப்பப்பட்டன. நாடு தழுவிய அளவில் தனியார் வங்கிகள் செயல்பட ஊக்குவிக்கப்பட்டன. இருப்புப் பாதைகள் அமைப்பது போன்ற பெரும் முதலீடுகள் தேவைப் படும் திட்டங்கள் வெளிநாட்டு முதலீடுகளின் மூலம் நிறைவேறும் வகையில் கொள்கைகள் வகுக்கப்பட்டன.

இத்தகைய பெரும் திட்டங்கள் வெளியார் கட்டுப்பாட்டுக்கு உள்ளானதால் அதன் பொருளாதார விளைவுகள் மிக மோசமாக ரஷ்யாவைப் பாதித்தது. உள்நாட்டில் நிலவிய குழப்பமான நிலைகளால் வெளிநாட்டில் எழுப்பப்பட்ட அதிக அளவிலான கடன்களும் பொருளாதாரக் கட்டுக் கோப்பினைச் சீரழித்தன. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டங்களால் பணவீக்கம் பெருமளவுக்கு ஏற்பட்ட காலத்தில் 1877-78ல் நடைபெற்ற ரஷ்ய - துருக்கியப் போரினால் ரூபிளின் மதிப்பு பெரும் வீழ்ச்சியை அடைந்தது.

### 5.4.6. கல்வித்துறை சீர்திருத்தங்கள்:

மன்னரின் தாராள மனப்பான்மையை வெளிக்காட்டும் வகையில் கல்வித்துறைச் சீர்திருத்தங்கள் அமைந்தன. பேராசிரியர் காவலின் உருவாக்கிய பல்கலைக்கழகப் பட்டயத்தினை 1863-ல் கல்வித்துறை அமைச்சரான கோலவ்னின் ஏற்றுச் செயல்படுத்தினார். இதன்படி பல்கலைக் கழகங்கள் தங்களுக்குரிய நிர்வாக அமைப்புகளையும், துறைத் தலைவர்களையும், பிற அதிகாரிகளையும் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள முடிந்தது. ஆனால், இப்பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் கல்வியமைச்சரின் ஒப்புதலைப் பெற்றவராக இருக்கவேண்டும். சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளையும் சார்ந்தோர்

**குறிப்பு**

எவ்விதத் தடையுமின்றிப் பல்கலைக்கழகங்களில் படிக்க அனுமதிக்கப்பட்டனர்.

1869-ல் பெண் களுக்கான தனிக்கல்லூரியொன்று பீட்டர்ஸ்பர்க்கில் துவக்கப்பட்டது. 1864ஆம் ஆண்டின் சட்டமொன்று பழைய இலக்கியப் பாடங்களையும், நவீன அறிவியல் பாடங்களையும் போதிக்கும் இருவகைக் கல்விமுறைகளைக் கொண்ட உயர்நிலைப்பள்ளிகள் தொடங்கப்படத் துணை செய்தது. இருமுறைகளும் ஏழாண்டு காலப்பாடத் திட்டத்தினைக் கொண்டிருந்தன. அதேபோல நான்காண்டு காலப் பாடத்திட்டத்தினைக் கொண்ட துணைப் பள்ளிகளும் திறக்கப்பட்டன. உள்ளாட்சித்துறை நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும்கூட தொடக்கப்பள்ளிகள் தொடங்கிட அனுமதிக்கப்பட்டன. பெண்களுக்கெனத் தனியாகவே அரசி மேரி உயர்நிலைப்பள்ளிகள் நடத்தப்பட்டன.

இந்நிலையில் 1866-ல் அலெக்சாந்தரைக் கொலை செய்யும் முயற்சிகள் நடைபெற்றதைத் தொடர்ந்து கோலவ்னின் பதவியிலிருந்து வெளியேற்றப் பட்டு, பிற்போக்கின் எதிரொலியாயிருந்த திமித்ரி டால்ஸ்டாய் கல்வி அமைச்சராக்கப்பட்டார். 1864-ல் செயல்படுத்தப்பட்ட கல்விச் சட்டம் திருத்தப்பட்டு 1871-ல் புதிய திட்டம் வெளியிடப்பட்டது. இதன் மூலம் உயர்நிலைப்பள்ளிகளின் படிப்புக் காலம் எட்டாண்டுகளானது. கணிதம், பழங்கால இலக்கியங்கள் போன்ற தீயவனல்லாத பாட போதனைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பேரபாயமான பாடங்களாகக் கருதப்பட வரலாறு, புவியியல், நவீன மொழிகள், அறிவியல் ஆகிய பாடங்கள் பள்ளிப்படிப்பிலிருந்து நீக்கப்பட்டன.

அறிவியல் பள்ளி களுக்குப் பதிலாக அறிவியல் தொழிற்கல்விக் கூடங்கள் அமைக்கப்பட்டன. பழைய இலக்கியங்களைப் படித்துத் தேறி வந்தோரே பல்கலைப் படிப்புப் பெறவும் அனுமதிக்கப்பட்டனர். தொடக்கப் பள்ளிகளையும்கூட அரசின் கண்காணிப்புக்குக் கொண்டுவரக் கல்வித்துறை ஆய்வாளர்கள் நியமிக்கப் பட்டனர். வரலாற்றுக்கே உரிய தனிச்சிறப்பை உலகுக்கு உணர்த்துவது போல இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவரான லெனினின் தந்தையாரான இலியா நிகோலயவிச் உலியனோவ் 1869-ல் சிம்பிரிஸ்க் என்னும் ஊரில் கல்வி ஆய்வாளராகப் பொறுப்பேற்றார்.

குறிப்பு

**சீர்திருத்தங்களின் தன்மை :**

உள்ளாட்சி, நீதித்துறைகளில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங் களெல்லாம் மன்னரின் தாராள மனப்பான்மையைக் காட்டுவதாக உள்ளது என்பதைவிட விவசாயிகளின் விடுதலைச் சட்டத்தினால் தங்களது கடந்த கால அதிகாரத்தையும், செல்வாக்கினையும் இழந்துவிட்ட உயர்குடி மக்களின் மன ஆறுதலுக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்றே கொள்ளலாம். ஏனெனில், இச்சீர்திருத்தங்களின் விளைவாக எல்லாப் பதவி களையும் பெற்று அவர்களே அனைத்து அதிகாரங்களையும் மேற் கொண்டனர்.

உண்மையான சீர்திருத்தங்களே மக்கள் நலனைப் பேண முடியும் என நம்பிய சிந்தனையாளர்களும் சீர்திருத்தவாதிகளும் அரை மனத்துடன் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய நடவடிக்கைகளை எதிர்க்கத் தொடங்கவே, உள்ளாட்சித்துறை நிறுவனங்களுக்கும் நீதித்துறைக்கும் அளிக்கப்பட்டிருந்த சில அதிகாரங்கள்கூட நாளடைவில் குறைக்கப்பட்டன. தொடக்கத்தில் சில நல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும், அதன் பலனை மக்கள் நுகரும் முன் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்வதுமான இருதலை நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டதால் நாட்டின் நிலைமையில் எவ்வித மாறுதலும் ஏற்படாமல் போயிற்று. அரசியலமைப்பில் மேற்கத்திய நாடுகளில் ஏற்பட்டிருந்த மாறுதல்களின் நிழல்கூட அங்கு தோன்றவில்லை.

விவசாயத்துறை முதல் படைத்துறை வரை அனைத்து அரசுத் துறைகளிலும் பெரும் மாறுதல்களைப் புகுத்துவதாகச் சில சீர்திருத்தங்கள் அமைந்தன என்றாலும் நீண்ட நெடுங்காலமாக நாட்டின் வாழ்வோடு பின்னிப் பிணைந்திருந்த மரபுகளால் மிகப் பின் தங்கிய நிலையிலிருந்த ரஷ்யாவை ஓரளவுக்கு மட்டும் முன்னேற்றப்பாதை நோக்கி இட்டுச் செல்ல முடிந்தது. பிற நாடுகளோடு ஒப்பிடும் போது இவை யாவும் வடிவளவில் தாராளக் கோட்பாடுகளாகக் காட்சியளித்தனவே தவிர, அரசியல் - சமுதாய அமைப்பின் மேல்தளத்திலிருந்தோரால் பரவலாகப் புழக்கத்திற்கு வந்துவிட்ட மக்களாட்சிக் கோட்பாடுகளின்பால் காட்டப்பட்ட சில சிறு சலுகைகளாகவே இருந்தன.

சீர்திருத்தம் என்னும் நீரின் துணைகொண்டு புரட்சி என்னும் புதியதோர் சமுதாய மரம், மக்கள் மனம் என்னும் மண்ணில் ஆழமாக வேர்விடத் தொடங்கியிருந்த காலத்தில் அலெக்சாந்தரின் சீர்திருத்தங்களெல்லாம் விண்வெளியின் வெண்மேகங்களாகவே இருந்தனவே தவிர, மண்ணின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை என்றாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் அறுபதாம் ஆண்டுகளைப் பெரும் சீர்திருத்தங்களின் தொடக்க காலம்“ என்றே குறிப்பிடலாம். அக்காலம் பெரும் சீர்திருத்தங்களின் காலம்“ என்றே அழைக்கப்படுகிறது. சீர்திருத்தங்கள் தோல்வியுற்றதற்கான காரணங்கள்:

இரண்டாம் அலெக்சாந்தரின் காலம் அனைத்துத் துறைகளிலும் சீர்திருத்தங்களைக் கண்டன. ஆயினும் அவையனைத்தும் அனைவரும் எதிர் நோக்கியிருந்த நற்பலன்களை அளிக்கவில்லை என்பதோடு வேறு விளைவு களுக்கும் காரணமாயின. சில வரலாற்று ஆசிரியர்களின் கருத்துப்படி அவை தோல்வியடைந்தன என்றும் கொள்ளலாம். அதற்கானகாரணங்களாவன:

1) விடுதலைச் சட்டத்தினால் விடுதலை பெற்ற விவசாயிகள் கொத்தடிமை முறையிலிருந்து விடுபட்டாலும், குடியிருக்கக் குடிசையும் இல்லாமல் போன தொழிலாளர்களாக மாறியதால் பொருளாதார அடிமை களாயினர்.

2) சட்டம் அளித்த சுதந்திரம் அவர்களை வறுமைப் படுகுழியில் தள்ளவே முதலாளிகளின்சுரண்டலுக்கு இரையாயினர்.

3) அடிமைகள் என்ற நிலை போய் சிறு நில உடைமையாளர்கள் என்ற நிலைக்கு உயர்ந்தாலும் “புனிதச் சொத்துரிமைக் கோட்பாடு“ என்ற கொள்கையை அழித்தவர்களாயினர். இதனால் நிலங்களை இழந்த நிலப் பிரபுக்களின் வெறுப்பைப் பெற்றனர்.

4) நிலப் பங்கீட்டு வேலையைக் கவனிப்பதற்காக நியமிக்கப் பட்ட அமைதி காக்கும் நடுவர்கள் பிரபுக்களாகவே இருந்ததால் அவர்கள் நடு நிலையில் நின்று நீதி வழங்குவர் என எதிர்பார்த்தது தவறாப்போனது.

5) புதிய விவசாயிகள் அளிக்க வேண்டியிருந்த இழப்பீட்டுத் தொகையை அரசே அளித்ததால் அவர்கள் அரசின்கடனாளிகளாயினர்.

6) அரசுக்குக் கடனைத் திருப்பியளித்து, எஞ்சி நின்ற இழப்பீட்டுத் தொகையையும் கொடுத்து, செலுத்த வேண்டிய வரிகளையும் செலுத்திய பின் வறுமை ஒன்று மட்டுமே விவசாயிகளுக்கென எஞ்சி நின்றது.

7) உடைமையாளர்களாயிருந்த நிலப்பிரபுக்களுக்குப் பதில் “கம்யூன்களே“ நிலப் பொறுப்பை ஏற்றதால் விவசாயிகளின் தனியுடைமை என்ற நிலை ஏற்படவில்லை.

8) பிரபுக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாயினர், “முன்னர் கணக்கேது மின்றி உயர் மதுவகைகளில் ஊறிக்கிடந்த தாங்கள் இப்போது கணக்குப் பார்த்து பீர் மட்டுமே குடிக்க வேண்டியவர்களானோம் எனப் பிரபுக்கள் மனம் வெதும்பினர்.

9) நீதித்துறை, உள்ளாட்சித்துறை, கல்வித் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஏட்டளவில் இருந்தனவேயொழிய உண்மையில் செயல் படுத்தப்படவில்லை .

10) திறமைமிகு சட்ட வல்லுநர்களும், அறிவுத்திறன் மிக்க அதிகாரி களும் இல்லாமல் போன நிலையில் நீதித்துறையிலும் நிர்வாகத் துறையிலும் ஊழல்கள் மலிந்தன.

11) அனைத்துக்கும் மேலாக அரசியல் தாராளக் கோட்பாட்டில் அரசருக்கே நம்பிக்கையில்லை.

12) ஓர் உயர் இலட்சிய நோக்கோடு சீர்திருத்தங்கள் செயல்படுத்தப் படவில்லை . சமுதாய, அரசியல் மாற்றங்கள் தவிர்க்க இயலாதவை என்ற அச்சம் காரணமாகவே புதிய சட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

13) மன்னரின் ஆலோசகர்களாகவும், கொள்கை வகுப்போருமாக இருந்த அரச தந்திரிகள் பிற்போக்கு வாதிகளாகவே இருந்தனர். அரசின் இரும்புக்கரத்திலேயே அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

14) போலந்துப் புரட்சியின் விளைவாக மன்னர் தனது கொள்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. அரசியல் சலுகைகள் அளிப்பதால் மன்னரின் ஆதிக்கம் நாளடைவில் வலுவிழந்து விடக் கூடும் என்ற அச்சம் ஏற்பட்டது.

15) ஒரு பேரரசைக் கட்டிக் காப்பது என்பது தனியொரு மனிதனுக்குப் பெருஞ்சுமையாகும். மக்களுக்குப் பொறுப்பான ஆட்சியே நீடித்த அமைதியை அளிக்க முடியும்.

16) மக்களின் பிரதிநிதிகள் இடம்பெற ஓர் அரசியல் அமைப்பை உருவாக்குமாறு பிரபுக்களே வேண்டிய போதும் மன்னர் செவிசாய்க்க வில்லை .

17) விவசாயிகள், பிரபுக்கள், தொழிலாளர்கள், அரசியல் அறிஞர்கள், சிந்தனையாளர்கள், புரட்சியாளர்கள், இலக்கிய வாதிகள் ஆகிய அனைத்து சமுதாயப் பிரிவினரும் அரசின் கொள்கைகளில் அவநம்பிக்கை கொண்டனர்.

18) புதிய இலக்கியங்களும், புரட்சி இயக்கங்களும் பரப்பிய பொதுவுடைமை, சமதர்மக் கோட்பாடுகள் மகளிரையும், இளைஞர் களையும் ஈர்த்தன.

19) மூடநம்பிக்கைகளை ஒழிப்பதற்காக தோன்றிய சூனியவாதிகள் புரட்சிவாதிகளாக மாறிப் பின்னர் அரசியல் பயங்கரவாதிகளாக மாறினர்.

20) இரண்டாம் அலெக்சாந்தர் பயங்கரவாதிகளால் கொலை செய்யப் பட்டபின் அனைத்துச் சீர்திருத்தங்களும் கைவிடப்பட்டன. அரசின் அடக்கு முறைக் கொள்கை கட்டவிழ்த்து விடப்பட்டது. எனவே, அலெக்சாந்தரின் சீர்திருத்தங்கள் தோல்வியுற்றன.

## 5.5. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1. ரஷ்யாவின் இரண்டாம் அலெக்சாண்டர் ஏன் ஜார்-லிபரேட்டர் என்று அழைக்கப்பட்டார்?
2. 1861ல் அடிமைகளுக்கு சுதந்திரம் வழங்கிய சட்டம் எது?
3. அந்தராசி குறிப்பு என்ன?
4. சான் ஸ்டெபனோ உடன்படிக்கை என்ன?

## 5.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்க் கேள்விகள் பதில்கள்

1. இரண்டாம் அலெக்சாண்டர் அடிமைகளின் விடுதலைக்காக பணியாற்றியதால், அவர் முத்திரை குத்தப்பட்டார்.

ஜார்-விடுதலையாளர். விடுதலை ஆணை இருபது மில்லியன் அடிமைகளை விடுவித்தது ஏறக்குறைய முப்பது மில்லியன் மாநில விவசாயிகள், இது ரஷ்யர்களில் சுமார் 8 சதவீதம் மக்கள் தொகை

2. பிப்ரவரி 19, 1861 இன் அறிக்கை மற்றும் "விவசாயிகள் மீதான சட்டம் உருவாகிறது வேலையாட்களை சார்ந்திருப்பதில் இருந்து" விவசாயிகளுக்கு தனிப்பட்ட சுதந்திரம் வழங்கப்பட்டது நில உரிமையாளர்கள் இனி அவற்றை வாங்கவோ விற்கவோ முடியாது.

3. ஆஸ்திரியா, பெர்லின் மற்றும் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் ஆகியவை பற்றி ஒரு கூட்டு புரிந்துணர்வை எட்டியது

பல்கேரிய கிளர்ச்சி, மற்றும் அவர்களின் கருத்துக்கள் என அறியப்பட்டவற்றில் பொதிந்துள்ளன ஆண்ட்ரஸி குறிப்பு.

4. 1877 ருஸ்ஸோ-துருக்கியப் போரில் ரஷ்யர்களுக்கு எதிராக சரணடைந்த பிறகு, துருக்கியர்கள் சான் ஸ்டெபனோ உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதில் கூறியபடி உடன்படிக்கையின்படி, செர்பியா மற்றும் மாண்டினீக்ரோவின் சுதந்திரத்தை சுல்தான் அங்கீகரித்தார்.

## 5.7 சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

### குறுகிய பதில் கேள்விகள்

1. ரஷ்யாவில் அடிமைகளின் விடுதலை பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதுங்கள்.
2. பேர்லின் உடன்படிக்கையின் விதிமுறைகள் என்ன?

### நீண்ட பதில் கேள்விகள்

1. ரஷ்யாவை நவீனமயமாக்குவதில் இரண்டாம் அலெக்சாண்டரின் பங்கைப் பற்றி விவாதிக்கவும். என்ன இருந்தன தற்போதுள்ள அமைப்பில் மாற்றங்களை கொண்டு வந்த பல்வேறு சீர்திருத்தங்கள்?
2. இரண்டாம் அலெக்சாண்டரின் வெளியுறவுக் கொள்கை பற்றிய கருத்து.

## 5.8. கூடுதல் வாசிப்புகள்

Kamenskii, A. and D. Griffiths. 2015. *The Russian Empire in the Eighteenth Century: Tradition and Modernization.* United Kingdom: Taylor & Francis.

Bushkovitch, P. 2011. *A Concise History of Russia*. United States: Cambridge University Press.

Dukes, P. 1998. *A History of Russia: Medieval, Modern, Contemporary, C.882-1996*. United States: Duke University Press.

Boterbloem, K. 2013. *A History of Russia and Its Empire: From Mikhail Romanov to Vladimir Putin*. United States: Rowman & Littlefield Publishers.

Ziegler, C. E. 1999. *The History of Russia. United Kingdom*: Greenwood Press.

# அலகு 6

## ஜார் அலெக்சாண்டர் III

பாட அமைப்பு

6.0 அறிமுகம்

6.1 நோக்கங்கள்

6.2 அலெக்சாண்டர் III (1881-94)

6.2.1. மூன்றாம் அலெக்சாந்தர் (1881 - 1894)

6.2.2. மூன்றாம் அலெக்சாந்தரின் கொள்கைகள்

6.3. உள்நாட்டுக் கொள்கை :

6.3.1. புதிய சட்டங்கள்

6.3.2. பிற்போக்குவாதக் கொள்கைகள்

6.3.3. பத்திரிகைகள் மீது கட்டுப்பாடு:

6.3.4. பிரபுக்களுக்குச் சலுகைகள்

6.3.5. நீதித்துறை மீது கட்டுப்பாடு

6.3.6. விவசாயிகள் மீது கட்டுப்பாடு

6.3.7. கல்வித்துறை மீது கட்டுப்பாடு

6.3.8. உயர்குடியினருக்கு உயர் பதவிகள்

6.3.9. உள்ளாட்சித் துறையில் கட்டுப்பாடுகள்

6.3.10. குறுகிய சமயக்கொள்கை

குறிப்பு

6.4. பொருளாதாரச் சீர்திருத்தங்கள்:
6.4.1. இருப்புப்பாதை :
6.4.2. தொழில் வளர்ச்சி :
6.5. தொழில்துறைச் சீர்திருத்தங்கள் :
6.5.1. பல்கேரியா பிரச்சனை:
6.5.2. ஜெர்மனியுடன் மறுகாப்புறுதி உடன்படிக்கை
6.5.3. பிரான்சுடன் உறவு
6.5.4. ரஷ்ய ஜெர்மானிய உறவின் முறிவு
6.5.5. மத்திய ஆசியா :
6.5.6. தூர கிழக்கு நாடுகள்
6.6. இரண்டாம் நிக்கோலஸ் 1894-1917
6.6.1. உள்நாட்டுக் கொள்கை
6.6.2. கல்விக் கட்டுப்பாட்டுக் கொள்கை :
6.6.3. செய்தித்தாள் தணிக்கை :
6.6.4. சிறுபான்மை சமயத்தவர் ஒடுக்கப்படுதல்:
6.6.5. தொழில் வளர்ச்சி :
6.6.6. பாதுகாப்புச் சட்டங்கள் :
6.6.7. பொருளாதார வளர்ச்சி :
6.6.8. பொருளாதாரமந்தம்:
6.7. வெளிநாட்டுக் கொள்கை :
6.7.1. ஹேக் மாநாடுகள் :
6.7.2. ரஷ்யாவும், தூரக்கிழக்கு ஆசியாவும் :
6.7.3. ரஷ்யாவும் இங்கிலாந்தும் :
6.7.4. ரஷ்யாவும் பிரான்சும்:
6.8. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
6.9. கூடுதல் வாசிப்புகள்

## 6.0 அறிமுகம்

மூன்றாம் அலெக்சாண்டரின் ஆட்சியானது அவரது “விடுதலை“ யுடன் தொடர்ந்து சமப்படுத்தப்படும்.

தந்தை, அலெக்சாண்டர் II, அல்லது அவரது துரதிருஷ்டவசமான மகன், நிக்கோலஸ் ஐஐ. பார்க்க எளிதாக இருந்தாலும் அலெக்சாண்டர்

III அவரது தந்தையின் அடக்குமுறை மாறுபாடாக அல்லது அவரது மகனின் உறுதியான கொடுங்கோலன் அலெக்சாண்டர் III இன் மதிப்பை அவரது சொந்த உரிமையில் மதிப்பிடுவது குறிப்பிடத்தக்கது. அவரது தந்தை மற்றும் தாத்தா போலல்லாமல், நிக்கோலஸ் II தனிப்பட்ட திறன்களைக் கொண்டிருக்கவில்லை ஒரு திறமையான ஆட்சியாளராக இருக்க வேண்டிய கட்டாயம். அவனது ஆட்சிக்கு விரோதம் பலமடங்கு பெருகியது தீவிரவாதிகள் மற்றும் கேடெட்ஸ் போன்ற தாராளவாதிகள் மற்றும் அக்டோபிரிஸ்டுகள். சமூக ஜனநாயகவாதிகளின் ஒரு பிரிவான போல்ஷிவிக்குகள் கைப்பற்ற சென்றனர் தற்காலிக அரசாங்கத்திடமிருந்து அதிகாரம் மற்றும் நிக்கோலஸ் மற்றும் அவரது குடும்பத்தை கொலை செய்ய. வளர்ந்து வரும் பொருளாதார பிரச்சனைகளில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்ப, நிக்கோலஸ் ஜப்பானுடன் ஒரு பேரிடர் போரில் ஈடுபட்டார் (1904-5). இதன் விளைவுகள் தூண்டப்பட்டன 1905 புரட்சி என்று அழைக்கப்பட்டது. நிக்கோலஸ் ரஷ்யாவை முதல் போரில் கட்டாயப்படுத்தினார் உலகப் போர், முதலில் இது பெரும்பகுதி மக்களால் வரவேற்கப்பட்டது. எனினும், இது முன்வைத்த பாரிய சவால்களை அவர் ஒருபோதும் பிடிக்கவில்லை. பின்னோக்கிப் பார்த்தால், ஆயுதப்படைகளின் தனிப்பட்ட கட்டுப்பாட்டை எடுத்துக்கொள்வதற்கான அவரது விருப்பம், இதனால் அவரது மனைவியை விட்டு வெளியேறினார் (மற்றும் ரஸ்புடின்) உள்நாட்டு விவகாரங்களுக்குப் பொறுப்பானவர், ஒரு பெரிய தவறு. 1917 இல், அவர் பதவி விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, மேலும் அவரது ஆட்சி தற்காலிகமாக மாற்றப்பட்டது அரசாங்கம். இன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகள் பற்றி இந்த அலகில் படிப்போம் அலெக்சாண்டர் III மற்றும் நிக்கோலஸ் II.

## 6.1 நோக்கங்கள்

அலகு வழியாகச் சென்ற பிறகு, உங்களால் முடியும்:

- அலெக்சாண்டர் III மற்றும் நிக்கோலஸ் II இன் கீழ் ரஷ்யாவின் நிலைமையை விவரிக்கவும்

• அலெக்சாண்டரின் உள்நாட்டுக் கொள்கைகள் மற்றும் வெளியுறவுக் கொள்கைகளை பகுப்பாய்வு செய்து விளக்கவும்

• நிக்கோலஸ் II இன் உள்நாட்டுக் கொள்கைகள் மற்றும் வெளியுறவுக் கொள்கைகளை விளக்கவும்

குறிப்பு

## 6.2 அலெக்சாண்டர் III (1881-94)

### 6.2.1. மூன்றாம் அலெக்சாந்தர் (1881 - 1894)

இரண்டாம் அலெக்சாந்தரின் கொலைக்குப் பின் அவரது மகன் மூன்றாம் அலெக்சாந்தர் புதியமன்னரானார். 1845-ல் பிறந்த அவர் மனவலிமையும், உடல் வலிமையும் நிரம்பப் பெற்றவர். வரலாற்றாசிரிய ரான சோலவ்யோவின் மாணவராக இருந்திருந்தாலும் வல்லாட்சிக் கொள்கையில் அவர் கொண்டிருந்த நாட்டத்தில் ஒரு சிறுபகுதி கூட மக்கள் நலனில் இல்லாது போய்விட்டது. 13-ஆண்டுகாலம் ஆட்சி செய்த இவர் ஒரு எதேசச் சதிகாரி. இவரது செயல்களிலிருந்து இவர் ஒரு அதிகார வெறிபிடித்தவர். மக்கள் உரிமைகளை மதிக்காதவர் என்று அறிந்து கொள்ளலாம். இவரது காலம் முழுவதும் ரஷ்யாவின் பிற்போக்குவாத அரசாங்கமே நடைபெற்றது.

### 6.2.2. மூன்றாம் அலெக்சாந்தரின் கொள்கைகள் :

அரசியல் மற்றும் சமுதாய அமைப்பில், பெரும் மாற்றங்களைப் புகுத்திடக்காலம் கனியவில்லை என்றே கருதினார். முன்னைய மன்னர் காலத்தில் அரை மனதுடனாவது செயல்படுத்தப் பட்டிருந்த சில சீர்திருத்தங்களைக்கூட நடைமுறையிலிருந்து நீக்கியதோடு, நாட்டை ந வீனப்படுத்தும் முயற்சியும் கூட நிறுத்தி வைக்கப்பட்டது. பழைமையாளர்களின் உயிர்ப் பிரதிநிதிகளாக விளங்கிய “ஹோலிசினாட்“ திருச்சபைத் தலைவர் போபதனோ சேவ்), மாஸ்கோ வரலாறு என்னும் பத்திரிகையின் ஆசிரியரான காட்கோவ் ஆகியோரின் அரசியல் கொள்கைகளே அரசின் கொள்கையாயிற்று.

உள்நாட்டுக் கொள்கையில் பேரரசின் பிற் போக்குத் தன்மையும், வெளிநாட்டுக் கொள்கையில் ஜெர்மனியுடன் நிலவிய உறவு சீர்குலைந்ததைத் தொடர்ந்து பிரான்சுடன் நெருங்கிய உறவு கொள்ள

நேரிட்டதும், இத்தனைக்குமிடையே ஏற்பட்ட பெரும் தொழில் வளர்ச்சியுமே அவரது ஆட்சியின் சிறப்புச் செயல்களாயின. அரச பதவியை மூன்றாம் அலெக்சாந்தர் அடைந்ததும் முதலாவதாக, புரட்சி இயக்கத்தலைவர்களான செலியபோவ், சோபியாபெரோவ்ஸ்கயா, கிபல்சிக் ஆகியோரைத்தூக்கிலிட்டார்.

முன்னைய மன்னரின் மரணத்திற்கு முன்பே நாட்டில் தலைவிரித்தாடிய பயங்கர நடவடிக்கைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்காக ரஷ்ய - துருக்கியப்போரில் புகழ் பெற்றிருந்த தளபதி மெலிகோவ் ஒரு சர்வாதிகாரியாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டிருந்தார். தாராளக் கோட் பாட்டுக்கொள்கையின் ஆதரவு இதழான "குரல்" கூட அவரது பதவியேற்பை வரவேற்று "அவரது சர்வாதிகாரம் இதயமும் அறிவும் இணைந்ததோர் சர்வாதிகாரம்" என எழுதியது. ஆனால் புரட்சிவாதிகளோ அவரது கொள்கைகளை "தெருவையே தனது உறைவிடமாகக் கொண்டுள்ள ஏழையின் கழுத்தில் பழைய ஆட்சியின் நுகத்தடியைப் பக்குவமாகப் பொருத்தும் நடவடிக்கையே" எனக்கருதினர். புதிய மன்னரின் வரவைத் தொடர்ந்து மெலிகோவின் இதயமும் அறிவும் இணைந்த சர்வாதிகாரம்" ஒரு முடிவுக்கு வந்தது. அவரது பதவிக் காலத்தில் புகழ்பெற்ற மூன்றாம் பிரிவான உளவுத்துறை முற்றிலும் நீக்கப்பட்டு அதன் அதிகாரங்கள் அனைத்தும் உள்துறை அமைச்சகத்தைச் சேர்ந்த காவல்துறைக்கு மாற்றப்பட்டன.

## 6.3. உள்நாட்டுக் கொள்கை :

### 6.3.1. புதிய சட்டங்கள்

மெலிகோவ் தன் பதவியைத் துறந்ததும், சான்ஸ்டீபனோ உடன்பாடு ஏற்படக் காரணமாயிருந்தவரும், கான்ஸ்டாண்டி நோபிளில் தூதராக இருந்து புகழ்பெற்றவருமான இக்னட்யேவ் புதிய உள்துறை அமைச்சரானார். பதவியேற்றதும் 1881ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அவர் வெளியிட்ட சட்டம் அரசுக்குப் பல அதிகாரங்களை அளித்தது.

அதன்படி எவரையும் முன்கூட்டியே கைது செய்யலாம். நிர்வாக அலுவலர்களே வழக்குகளை விசாரிக்கலாம் வழக்குகளை ராணுவ விசாரணைக்கும் உட்படுத்தலாம். அவசர நிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ள பகுதிகளில் புரட்சி இயக்கங்களின் நடவடிக்கைகள்

குறிப்பு

குறையாதபோது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தவறியமைக்காக உள்துறை அமைச்சக ஊழியர்களும், நிர்வாகத்தின் அனைத்து நிலை ஊழியர்களும் கூடக் கடும் தண்டனைக்கு உள்ளாவர். மூன்றாண்டு காலத்திற்கு மட்டுமே இவ்வகையான அவசரகால அதிகாரங்கள் அரசின் கையிலிருக்கும் என்ற அறிவிப்போடு வெளியிடப்பட்ட இச்சட்டம் உண்மையில் அக்டோபர் புரட்சி வரை இருந்தது. இது “ட்ராகோ“ சட்டங்களை விடக் கொடூரமானவையாகும்.

விவசாயிகள் சம்பந்தமான நடவடிக்கைகள் சிலவும் 1881-ல் மேற் கொள்ளப்பட்டன. சில நிபந்தனைகளுடன் தற்காலிகப் பிணைப்பு“ என்றும் பெயரில் நிலப்பிரபுக்களின் பிடியில் தொடர்ந்து சிக்கித் தவித்துக் கொண்டிருந்தோரை உடனடியாக எல்லாப் பிணைப்புகளிலிருந்தும் விடுதலை செய்ய வகை செய்யப்பட்டது. தங்கள் விடுதலைக்காக கட்ட வேண்டியிருந்த பணத்தில் கூட ஒரு ரூபிளைக் குறைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.

1887 முதல் தலைவரிகட்ட வேண்டிய அவசியமேதும் இருக்காது என 1882ஆம் ஆண்டுச் சட்டமொன்று கூறியது. விவசாயிகளுக்குச் சுலபமாகக் கடன் கிடைக்கச் செய்யவென்று ஒரு விவசாயிகள் வங்கி“யும் ஏற்படுத்தப்பட்டது. நிலம் வாங்கவும், நிலத்தைச் சீர்திருத்தவும் 6மூ சதவீத வட்டிக்கு விவசாயக் கடன் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது.

### 6.3.2. பிற்போக்குவாதக் கொள்கைகள்

இதே காலத்தில் தான் புரட்சி இயக்கங்களை ஒடுக்குவதற்கும் மக்களை அடக்கி ஆளவும் அரசு பல பிறபோக்குவாத நடவடிக்கைகளை மேற் கொண்டது.

1) நாட்டின் பல பகுதிகளிலும் “யூதர்“ எதிர்ப்புக் கொள்கைகளையும், செயல்களையும் காவல்துறையினரே துவக்கி வைத்தனர். இரண்டாம் அலெக்சாந்தரின் கொலையில் யூதர்களுக்குப் பெரும் பங்கு உண்டு என்ற ஐயத்தில் யூதர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட எல்லா வகையான செயல்களையும், சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளையும் கூட அரசு ஆதரித்தது.

2) புரட்சி இயக்கங்களின் செயல்களைக் குறைத்திட அரசின் அனுமதியோடு “தூய்மையாளர் குழுமம்“ என்ற இரகசியமான புரட்சி எதிர்ப்பு இயக்கமொன்று ஏற்படுத்தப்பட்டு வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டது. விவசாயச் சட்டங்கள் சம்பந்தமாக ஆலோசனை கூறுவதற்கென இரு வல்லுனர் குழுக்களும் நிறுவப்பட்டன. அனைத்து ரஷ்யாவின் ஊராட்சி மன்றப் பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் உயரமைப்பை உருவாக்க இவைவழிகோலின.

3) மக்கள் மனவிருப்புக்கேற்ப ஒரு சிறு சலுகை அளிக்கப்பட்டாலே அதுவே ரஷ்யாவின் அழிவு என்ற கொள்கையைக் கொண்ட திருச்சபைத் தலைவர் போபதனாசேவ் அரசரை அணுகி இக்னட்யேவைப்பதவியிலிருந்து அகற்றுமாறு ஆலோசனை கூறினார். அவர் பதவி இறக்கம் செய்யப்பட்டு, 1882 மே மாதம் பழைய கல்வி அமைச்சரான திமித்ரி டால்ஸ்டாப் புதிய உள்துறை அமைச்சராக்கப் பட்டார்.

### 6.3.3. பத்திரிகைகள் மீது கட்டுப்பாடு:

காவல்துறையினர் மேற்கொண்ட புதிய கடுமையான நடவடிக்கைகளால் புரட்சி இயக்கங்கள் ஓரளவு செயலிழந்து போயின. அரசியலில் தாராளக் கோட்பாடு என்பது தீண்டத்தகாததாயிற்று. விசுவாசம் மிக்க பிரபுக்களின் உள்ளார்ந்த பிற்போக்குக் கொள்கைகளையே அரசும் ஆதரித்தது. புதிய உள்துறை அமைச்சர் பத்திரிகை சம்பந்தமாகச் சில தற்காலிக விதிகளை வெளியிட்டார். அரசுக்கும் ஆட்சிக்கும் எதிரான செயல்களை வெளியிட்ட மைக்காக மும்முறை எச்சரிக்கைக்குள்ளான எல்லா வெளியீட்டாளர்களும் இனித் தங்கள் வெளியீடுகளை வெளியிடு முன் தணிக்கை பெற வேண்டும் என்பதே அவ்விதியாகும். 1884-ல் “தந்தையர் நாட்டின் வரலாற்று நிகழ்ச்சிகள்“ என்னும் தீவிரவாதிகளின் பத்திரிக்கைதடைக்குள்ளாயிற்று.

### 6.3.4. பிரபுக்களுக்குச் சலுகைகள்

பிரபுக்களின் உயர்நிலையை உயர்தரமானதாகச் செய்ய வேண்டி “பிரபுக்கள் வங்கி“ ஒன்று 1885-ல் ஏற்படுத்தப்பட்டது. விவசாயிகள் வங்கி ஏழை விவசாயிகளுக்கு 6.5சதவீத வட்டி விகிதத்தில் கடன் கொடுத்த

போது, பிரபுக்கள் வங்கியோ உயர்குடி மக்களுக்கு 4.5 சதவீத வட்டிக்குக் கடன் கொடுத்தது.

### 6.3.5. நீதித்துறை மீது கட்டுப்பாடு

குறிப்பு

நீதித்துறையின் அதிகாரங்கள் மேலும் குறைக்கப்பட்டன. நீதிபதிகளின் மீது நீதித்துறை அமைச்சருக்கு அதிகக் கட்டுப்பாடு இருக்கும் வகையில் 1885-ல் சட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டன. அரசின் மதிப்பும், மரியாதையும் உள்ளடக்கிய விவகாரமாயிருந்தால் அத்தகைய வழக்கு விவரங்களை மற்றவர்களுக்கு ஏதும் தெரியாமல் தனி அறையில் நீதித்துறை அமைச்சரே ரகசியமாக விசாரிக்கலாம். நீதிபதிகளின் துணையாளர்களான “ஜூரி“ களுக்குரிய பதவிகள் செல்வந்தர்களுக்கே அளிக்கப்பட்டன. அரசு அதிகாரிகளுக் கெதிரான வழக்குகளை ஜூரிகளின்றியே விசாரிக்கலாம். சட்டத் துறையிலும், நீதித்துறையிலும் யூதர் எவரும் எப்பதவியும் வகிக்க முடியாது.

### 6.3.6. விவசாயிகள் மீது கட்டுப்பாடு

1886 ஆம் ஆண்டுச் சட்டமொன்று நிலப்பிரபுக்களோடு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறிய விவசாயிகளைக் கைது செய்து கொடூரமான குற்ற விசாரணைக்குட்படுத்த வழிவகுத்தது. ஒரு விவசாயியின் உடைமையை ஒரு குடும்பத்துப் பிள்ளைகள் பிரிவினை செய்து கொள்வதற்குக் கூடத் தந்தையின் அனுமதியோடு, விவசாயக் கூட்டமைப் பான “கம்யூனின்“ உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கினரின் ஒப்புதலும் அத்தியாவசியத் தேவையாயிற்று.

### 6.3.7. கல்வித்துறை மீது கட்டுப்பாடு

அரசின் அதீதப் பார்வையிலிருந்து கல்வித்துறையும் தப்பவில்லை . உயர்நிலைப் பள்ளிகளில் ஏழை, எளியோரின் - அதிகார வர்க்கத்தினரால் “சமையற்காரரின் பிள்ளைகள்“ எனப்பட்ட வறுமை வயப்பட்ட பிள்ளைகள் உயர் கல்வி பெற்றுவிடக் கூடாதே என்பதற்காக புதிய சட்டதிட்டங்கள் புகுத்தப்பட்டன. பல்கலைக் கழகங்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டது. பல்கலைக் கழகத்தின் உயர் பதவிக் குரியோரைக் கல்வி அமைச்சரே நியமித்தார். ஆட்சியினரின் ஆதரவு

பெற்றோரே பல்கலைக் கழகத்திற்குள் நுழைய முடியும். பல்கலைக் கழகப்படிப்புப் பெற முன்னை விட இப்போது ஐந்து மடங்கு அதிகக் கட்டணம் செலுத்தியாக வேண்டும். ஆனால் யூதர்கள் அவர்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீட்டு முறையில் தான் உயர் கல்வி பெற முடியும். தென்மேற்கு ரஷ்யாவிலும், உக்ரெயின் பகுதியிலும் மொத்த மாணவர்களில் பத்து சதவீதமாகவும், மாஸ்கோ , பீட்டர்ஸ்பர்க் நகரங்களில் மூன்று சத வீதமாகவும் அவர்களுக்கென இயங்கிய ஒரே ஒரு மருத்துவப்பள்ளியும் 1882-ல் மூடப்பட்டது. -1886ஆம் ஆண்டுச் சட்டமொன்று பல்கலைக் கழகப் படிப்பே பெண்களுக்கு இல்லையென்று ஆக்கியது. கல்வி ஆய்வாளர்களின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன. மாணவர் இயக்கங்களும் கழகங்களும் தடை செய்யப்பட்டன. பல இழிவுகளையும் பொறுத்துக் கொள்ள வேண்டியிருந்த யூதர்கள் தங்கள் இருப்பிடங்களிலிருந்து வெளியேறவும் கூடாது மது வகைகளை விற்கவோ, வாங்கவோகூடாது பண்ணைகளையும் நிர்வகிக்கக் கூடாது அரசு ஊழியத்தில் அமரக் கூடாது என ஆணையிடப் பட்டனர். இத்தகைய இனவிரோதக் கொள்கைகளால் பெரிதும் இழிவுக் குள்ளான யூதர்கள் காலம் கனிந்து வந்த போது மன்னர் பரம்பரையினரின் மாபெரும் விரோதிகளாயினர்.

### 6.3.8. உயர்குடியினருக்கு உயர் பதவிகள்

விடுதலைச் சட்டம் வெளிவருவதற்கு முன் பிரபுக்கள் வகித்திருந்த உயர்நிலையை மீட்டுத் தருவதற்கான நடவடிக்கை களும் எடுக்கப்பட்டன. 1889 ஆம் ஆண்டுச் சட்டமொன்று “நிலத் தலைவர்கள்“ என்போரை உள்துறை அமைச்சர் நியமிக்கத்துணை செய்தது.

பரம்பரை பிரபுக்களின் குடும்பங்களிலிருந்து நியமிக்கப் பட்ட இவ்வூர்ப்புற மேற்பார்வையாளர்கள் (நிலத் தலைவர்கள்) விவசாய வட்டாரங்களின் மீது நீதி, நிர்வாக அதிகாரங்களைச் செலுத்த அதிகாரம் பெற்றனர். எனவே விவசாயத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கவும், விவசாயிகளின் வழக்கு மன்ற உறுப்பினர்களைக் கண்காணிக்கவும், விவசாயக் கூட்டமைப்பு மன்றங்களின் நடவடிக்கைகளைக் கவனிக்கவும், கைது செய்து, விசாரித்துத் தண்டனையளிக்கவும் முழு அதிகாரமும் பெற்றிருந்ததால் விவசாயிகளின் வாழ்க்கையே இவர்களிடம் ஒப்படைக்கப் பட்டதாயிற்று.

**குறிப்பு**

அமைதிகாக்கும் நீதிபதிகளாகவும் தங்களை மாற்றிக் கொண்ட இவர்கள், பிரபுக்களின் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கோட்டக் கழகத்தினிடம் மட்டுமே தங்கள் செயலுக்கான விளக்கத்தைத் தெரிவித்தால் போதும், உள்துறை அமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இவர்கள் இருக்க வேண்டியவர்களானாலும், தங்கள் விருப்பப்படி செயலாற்றவும் முடியும். இதனால் விடுதலைச் சட்டமளித்த சிறுஅளவு சுதந்திரம் கூட இப்போது நாட்டில் இல்லாது போயிற்று.

அரசு ஆட்சி இயந்திரம் தனது பிடியை கிராமப் புறங்களில் மேலும் இறுக்கியது. 1893ஆம் ஆண்டுச் சட்டம் ஏழை விவசாயிகளின் நிலையை மேலும் படுமோசமாக்கியது. விவசாயக் கூட்டமைப்பிலுள்ள ஓர் உறுப்பினர், கூட்டமைப்பாளர்களில் மூன்றில் இரு பங்கினர் ஒப்புதல் எவரும் தாங்கள் விரும்பும் போது வெளியேறுவது என்பது நடைமுறையில் சாத்தியமில்லாத தொன்றாயிற்று. கூட்டமைப்பு நிலத்தினை அடமானமும் வைக்க முடியாது. ஓர் உறுப்பினர் தனது பங்கு நிலத்தினை கூட்டமைப்புக்கு மட்டுமே விற்கமுடியுமே தவிர வெளியாருக்கு விற்பனை செய்ய முடியாது. கூட்டமைப்பிலிருந்து வெளியேறும் உரிமையை அவ்வமைப்பு ஏற்றுக் கொண்டாலொழிய அதற்குரிய அனுமதிச் சீட்டு எவருக்கும் அளிக்கப்பட மாட்டாது.

### 6.3.9. உள்ளாட்சித் துறையில் கட்டுப்பாடுகள்

அடுத்து வந்த சட்டங்கள் ஊராட்சி மன்ற, நகராட்சி மன்றங்களின் - சுயாட்சி அதிகாரங்களைக் கட்டுப்படுத்தின. ஆளுநரால் நியமிக்கப்பட்ட அரசு அதிகாரிகளே ஊராட்சி மன்றங்களின் நிர்வாக உறுப்பினர்களாயினர். ஊராட்சி மன்றங்களின் தீர்மானங்களையும், நலத்திட்டங்களையும் செல்லாததாக்கிவிடும் தனி அதிகாரம் உள்துறை அமைச்சருக்கும், மாநில ஆளுநர்களுக்கும் அளிக்கப்பட்டது. நிர்வாக உறுப்பினர்களைக் கண்டிக்கவும், தண்டிக்கவும் முடியும்.

விவசாயத் தேர்வாளர்கள் சமர்ப்பிக்கும் பட்டியலிலிருந்தே விவசாயப் பிரதிநிதிகள் சிலரை ஊராட்சி மன்ற உறுப்பினர்களாக ஆளுநர் நியமிப்பார். இதனால் விவசாயிகளின் உறுப்பினர் எண்ணிக்கை குறைந்ததோடு, ஊராட்சி மன்றங்களின் தலைவர்களாக பிரபுக்களே இருக்க முடியும் என்ற நிலை உருவானதால், பயிரிடுவோரின் நிலை பரிதாபத்திற்குள்ளாயிற்று. நகராட்சி மன்றங்களிலும் கூட சீமான்களும்,

செல்வந்தர்களுமே ஆளும் அதிகாரத்தைப் பெற்றனர். வணிகர்களும், கைவினைஞர்களும் தங்கள் உரிமைகளையெல்லாம் இழந்தனர்.

குறிப்பு

### 6.3.10. குறுகிய சமயக்கொள்கை

சமயக்கொள்கைகள் கூடப் பரந்த மனப்பான்மையற்றதாகவும், குறுகிய நோக்கம் கொண்டதாகவுமே இருந்தது. ரஷ்யாவின் ஒரு பகுதியாயிருந்த போல மக்களின் ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களுக்கெதிராகவும், பால்டிக் பகுதி மக்களின் புரட்டஸ்டெண்ட் சமயக் கோட்பாடுகளுக் கெதிராகவும் அரசு நிர்வாக இயந்திரம் செயல்பட்டது. வைதீகத் திருச்சபை கோட்பாடுகளை கொண்டிராத துகோபார்கள் ககோப்சியர்கள் சுதண்டிஸ்டுகள் போன்றோரிடம் சமய எதிர்ப்புக் கொள்கையே கடைப்பிடிக்கப்பட்டது. போலந்து, பின்லாந்து ஆகிய பகுதிகளில் மக்களின் கலாச்சார, பண்பாட்டு, சமூக அமைப்பின் எல்லா நலன்களையும் பாதிக்கத் தக்கவாறு ரஷ்யமயமாக்கும் கொள்கையே தொடர்ந்து உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டது. பெரும் ரஷ்ய தேசீயத் தத்துவத்தின் அடிப்படையிலேயே இச் சமயக்கோட்பாடுகள் வரையறுக்கப் பட்டுச் செயல்படுத்தப்பட்டன.

## 6.4. பொருளாதாரச் சீர்திருத்தங்கள்:

மூன்றாம் அலெக்சாந்தர் ஆட்சி பொறுப்பேற்ற சிறிது காலத்திற்குள் பொருளாதார மந்தம் ஏற்பட்டுத் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. உற்பத்தி கணிசமான அளவு குறைந்தது. நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்த மன்னர் தொழில் துறையில் தமது கவனம் உடனடித் தேவை எனக் கருதினார். தொழில் நலிவுறப் போதிய போக்குவரத்து வசதியின்மையே காரணம் என உணர்ந்தார். அவர் போக்குவரத்தை மேன்மைப்படுத்த இருப்புப் பாதையை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்.

### 6.4.1. இருப்புப்பாதை :

ரஷ்யாவில் இருப்புப்பாதை அமைக்க 1857-ல் ரஷ்ய இருப்புப்பாதை பொதுக் கம்பெனி ஒன்று நிறுவப்பட்டது. இதனால் நாட்டின் பொருளாதார, இராணுவத் தேவைகளுக்கு ஏற்ப இருப்புப்

பாதைகள் அமைக்க இயல வில்லை . 24 ஆண்டுகளுக்குப் பின் 1880-ல் இந்நிறுவனத்தால் தனியார் முதலீட்டின் மூலம் 13500 மைல் நீள இருப்புப்பாதைகள் மட்டுமே அமைக்க முடிந்தது. எனவே அரசாங்கமே அப்பணியை மேற்கொண்டு இருப்புப் பாதைகள் அமைக்கும் பணியினைத் தீவிரப்படுத்தியது. விளைவாகப் பல புதிய இருப்புப்பாதைகள் தோன்றின. 1. உக்கிரேன் நிலக்கரி சுரங்கங் களையும் கிளிவோல் ரோக் இரும்புக்கனிச் சுரங்கங்களையும் இணைக்கும் இருப்புப்பாதை 2. பாகு டாடும் விளாடி வாஸ்டாக் எண்ணெய்ச் சுரங்கங்களையும் இணைக்கும் இருப்புப்பாதை 3. சாமர்கண்டிலிருந்து டாஸ்ஙகாண்ட்வரைச் செல்லும் டிரான்ஸ் காஸ்பியன் இருப்புப்பாதை 4. பீட்டர்ஸ்பர்க்கையும் விளாடி வாஸ்டாக்கையும் இணைக்கும் மிகப்பெரிய டிரான்ஸ் சைபீரியன் இருப்புப்பாதை 5. மத்தியாசிய இருப்புப்பாதை போன்றவை குறிப்பிடத்தக்கவை.

## 6.4.2. தொழில் வளர்ச்சி :

ரஷ்யாவைத் தொழில்மயமான நாடாக மாற்ற வேண்டுமெனச் சார் மூன்றாம் அலெக்சாந்தர் கருதினார். 1892-ல் செர்ஜியஸ்டீ என்பவரை நிதியமைச்சராக நியமித்தார். இவரும் உற்சாகத்துடன் பணியாற்றி தொழிற் துறையில் முன்னேற்றங்கள் பலவற்றைக் கொண்டு வந்தார். இதற்குப் பெருவாரியாக மூலதனம் தேவைப்பட்டது. எனவே வெளிநாடுகளிலிருந்து தேவையான மூலதனத்தை திரட்ட முயற்சித்தார். மேலும் சிக்கன நடவடிக்கைகளைக் கையாண்டு தொழில்வளம் பெருகத்தக்க ஏற்பாடு களைச் செய்தார். தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப் பொருட்களை உள்நாட்டிலிருந்தே பெறத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ரஷ்ய நிலக்கரி உற்பத்தியில் உலக நாடுகளுள் 5-வது இடத்தையும், எண்ணெய் உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும், எ∴கு உற்பத்தியில் ஐந்தாவது இடத்தையும் சர்க்கரை உற்பத்தியில் ஐரோப்பாவில் முதல் இடத்தையும் வகித்தது. விளைவாக இறக்குமதிப் பொருட்களின் எண்ணிக்கை குறைந்தது. இறக்குமதிப் பொருட்களின் மீது காப்பு வரிகள் விதிக்கப்பட்டன. இதனால் உள்நாட்டுப் பொருட்களுக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டது. தொழில் துறையில் ஏற்பட்டிருந்த மந்தநிலை படிப்படியாகக் குறையத்துவங்கியது.

## 6.5. தொழில்துறைச் சீர்திருத்தங்கள் :

தொழில் வளர்ச்சியைப் பின்தொடர்ந்து பல புதிய நகரங்கள் உருவாயின. தொழிற் கூடங்களின் எண்ணிக்கையும், தொழிலாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தன. எனவே தொழிலாளர்கள் சார்பான பிரச்சனைகள் எழுந்தன. நிதித்துறைக்கெனத் தனியாக அமைக்கப்பட்ட நிக்கோலஸ் பாங்கே என்பவர் அவற்றில் மலிந்து கிடந்த முறைகேடுகளைக் களைய முற்பட்டார்.

அதன் விளைவாக 12 வயதிற்குக் குறைந்த குழந்தைகளை ஆலைகளில் பணியில் அமர்த்தும் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. 12 வயதிலிருந்து 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு 8 மணிநேரம் வேலை என வரையறை செய்யப்பட்டது. ஆலைகளில் பெண்கள் இரவு நேரங்களில் வேலை செய்வது அனுமதிக்கப்படவில்லை. தொழிற்கூடங்களில் பணியாற்றும் சிறுவர்கள் கல்வி பயில அனுமதிக்கப்பட்டனர். வேலை நிறுத்தம் செய்வது சட்டப்பூர்வமாகத் தடைசெய்யப்பட்டது. வேலை நிறுத்தம் செய்யத் தூண்டுவதும் குற்றமாகும்.

சட்டங்களை இயற்றுவது எளிது ஆனால் அவற்றைத் திறமையாக அமுல்படுத்துவதற்குப் போதிய கவனம் தேவை. இதனை உணர்ந்த மன்னர் ஆலைகளுக்கென ஆய்வாளர்களை நியமித்தார். நிதி அமைச்சருக்குப் பொறுப்புடைய இவர்கள் ஆலை விதிகள் மீறப்படாமல் பார்த்துக் கொண்டனர். ஆனால் இவை அனைத்தையும் திறனாய்வு செய்த பேராசியர் மெல்வின் சி.ரென். ""சீர்திருத்தங்கள் மனிதாபிமான அடிப்படையில் செய்யப்பட்டவை அல்ல. மாறாகத் தொழிலாளி தனக்கு ஏற்படும் ஏமாற்றத்தால அரசியல் குழப்பங்களை விளைவிக்கக்கூடாது என்னும் நோக்கத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டவையே எனக் குறிப்பிடுகிறார். இச்சீர்திருத்தங்களின் உள்நோக்கம் எதுவாயினும் திணறிக் கொண்டிருந்த தொழிலாளர் வர்க்கத்தினருக்கு சற்று இதமானக் காற்றை சுவாசிக்க வாய்ப்பு ஏற்பட்டது. வெளிநாட்டுக் கொள்கை

### 6.5.1. பல்கேரியா பிரச்சனை:

மூன்றாம் அலெக்சாந்தர் புதிய மன்னரானதைத் தொடர்ந்து 1881ஆம் ஆண்டில் ரஷ்யா, ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய

நாடுகளிடையே ஏற்பட்ட முக்கூட்டு ஒப்பந்தத்தால் ஐரோப்பாவில் ரஷ்யாவின் செல்வாக்கு ஓரளவு அதிகரிக்க ஆரம்பித்தது. இதன்படி பிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் போர் மூளுமானால் ரஷ்யா நடுநிலை வகிக்கும் பால்கன் பகுதியின் ஆட்சி முறையிலும் அரசியல் அமைப்பிலும் எவ்வித மாறுதலும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளும் எனத் தெரியவந்தது.

ரஷ்ய - துருக்கியப் போரின் விளைவாக பல்கேரிய விடுதலை கிடைத்தாலும் அது நல்லதோர் நட்பு நாடாக இல்லாமல் போய்விட்டது. 1879-ல் இரண்டாம் அலெக்சாந்தர் அளித்திருந்த அரசியல் சட்ட அடிப்படையில் பாட்டன்பர்க்கைச் சேர்ந்த இளவரசர் அலெக்சாந்தர் பல்கேரிய மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். விரைவிலேயே அரசியல் சட்ட அமைப்புப்படி நிர்வாகத்தைச் செலுத்த இயலாத நிலையிலும் பெரும் சங்கடத்துக்குள்ளானார். 1881-ல் எல்லாப் பிணைப்புகளிலிருந்தும் தங்களை விடுவித்துக் கொண்ட அவர் ஒரு சர்வாதிகாரியானார்.

பல்கேரியப் பழமை விரும்பிகளும், ரஷ்ய ராணுவ அதிகாரிகளும் ஒருமனப்பட்டு அவரை ஆதரித்திருந்தால் அவரது சர்வாதிகார ஆட்சி நீடித்திருக்கக்கூடும். அத்தகைய தோர் இணைப்பு நிலை இல்லாமல் போகவே, பல்கேரிய ஆட்சிக்குழு உறுப்பினர்கள் மன்னரின் போக்கை எதிர்த்துத் தங்கள் பதவியைத் துறக்கவே 1883-ல் மீண்டும் மன்னரே அரசியல் சட்ட ஆட்சிக்கு உடன்பட வேண்டியதாயிற்று.

ரஷ்யாவின் விருப்பத்திற்கெதிரான இம்முடிவு கண்டு பீட்டர்ஸ் பர்க் மிக வெறுப்புக் கொண்டது. 1885ஆம் ஆண்டு பெர்லின் மாநாட்டு விதிகளுக்கு முரணாக கிழக்கு ருமேனியாவை பல்கேரியா விழுங்கிக் கொள்ளவே, அலெக்சாந்தருக்குத் தான் அளித்து வந்த ராணுவ ஆதரவை ரஷ்யா நிறுத்திக் கொண்டது. பல்கேரியாவின் அப்பட்டமான ஆக்கிரமிப்பை செர்பியா எதிர்த்த போது பல்கேரியப்படை செர்பியாவைத் தோற்கடித்துப் பெரும் வெற்றி பெற்றது. 1886-ல் அலெக்சாந்தர் பதவி துறக்கவே, சாக்ஸ் - கோபர்க்கைச் சேர்ந்த பெர்டினான்டு பல்கேரிய மன்னராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இம்மாற்றத்தினால் ரஷ்யச் செல்வாக்கு அந்நாட்டில் அதிகரித்து விடவில்லை .

**குறிப்பு**

### 6.5.2. ஜெர்மனியுடன் மறுகாப்புறுதி உடன்படிக்கை

1885-ல் ஆப்கானிய எல்லை விவகாரத்தில் ரஷ்யாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே கடும் மனவேற்றுமை ஏற்பட்டது. ஆப்கானிஸ் தானில் ரஷ்யச் செல்வாக்கு ஏற்படுமானால் அது தனது இந்தியக் குடியேற்ற நாட்டுக் கொள்கைக்கு ஆபத்தை ஏற்படுத்தி விடும் என அஞ்சிய இங்கிலாந்து ரஷ்யாவை எதிர்க்கவே, இறுதியில் எல்லைத் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள இருநாட்டுப் பிரதிநிதிகளைக் கொண்ட எல்லை நிர்ணயக் குழுவொன்று அமைக்கப்பட்டது. இச்சிக்கல் குறித்து இருநாடுகளுக்கு மிடையே போர் எதுவும் ஏற்படுமானால் கருங்கடல் பகுதி நீர்ப்பாதைகள் அனைத்தையும் அடைத்து விட வேண்டுமென பிஸ்மார்க் வலியுறுத்தினார். இதனால் ரஷ்யாவுக்கு ஜெர்மனியின் மீது பெரு மதிப்பு ஏற்பட்டது.

ஆனால் பல்கேரியாவின் மன்னர் பதவியை பெர்டினான்டு ஏற்றதிலிருந்து அந்நாடு ஆஸ்திரியா நோக்கி மெல்ல மெல்லச் சாயலாயிற்று. இந்நிலையில் முக்கூட்டு உடன்பாட்டினை மீண்டும் புதுப்பிப்பதில் பயனேதுமில்லை எனக் கண்ட ரஷ்யா 1887, ஜூன், 18-ல் ஜெர்மனியுடன் தனியாகவே “மறுகாப்புறுதி உடன்பாடு“ ஒன்றினை ரகசியமாகச் செய்து கொண்டது. பிரான்சு ஜெர்மனியைத் தாக்குமானால் ஆஸ்திரியா நடுநிலை வகிக்குமென்ற காப்புறுதியை 1879-ம் ஆண்டின் உடன்பாட்டின் மூலம் பெற்றிருந்தார் பிஸ்மார்க். இப்போதைய உடன்பாட்டின் மூலம் ரஷ்யப் பகுதியிலிருந்தும் ஆபத்து ஏதும் எழாதவாறு மறுகாப்புறுதி செய்து கொள்ள முடிந்தது. மறுகாப்புறுதி உடன்பாட்டின்படி ,

(1) இருநாடுகளில் ஒன்று மூன்றாம் நாடு ஒன்றுடன் போரிட நேரிட்டால் மற்றநாடு நடுநிலை வகிக்க வேண்டும். ஆனால் இவ்விரு நாடுகளில் ஒன்று ஆஸ்திரியாவுடனோ, பிரான்சுடனோ போரிட நேரிட்டால் மற்ற நாடு நடுநிலை வகிக்கவேண்டுமென்ற நிபந்தனை பொருந்தாது.

(2) பால்கன் பகுதியில் இருந்த ரஷ்ய நலன்களை ஜெர்மனி அங்கீகரிக்கும். பல்கேரியாவிலும், கிழக்கு ருமேனியாவிலும் ரஷ்யாவுக்குக இருந்த சட்டபூர்வமான செல்வாக்கினை ஜெர்மனி ஏற்றுக் கொள்ளும்,

(3) பாஸ்போரஸ், டார்டானெல்லஸ் நீரிணைப்புகளை அயல்நாட்டுப் போர்க் கப்பல்கள் நுழையாதவாறு மூடிவிடும்படி துருக்கிய சுல்தானைக் கட்டாயப்படுத்த இருநாடுகளும் இணைந்து செயலாற்ற வேண்டும்.

(4) பால்கன் தீபகற்பப் பகுதியின் அரசியல் நிலை மாறாது நிலைத்திருக்க இருநாடுகளும் ஒத்துழைக்க வேண்டும்.

(5) ரஷ்ய நலன்களைக் கருத்தில் கொண்டு கருங்கடல் திறவுகோலை காக்க ரஷ்யாமுற்பட்டால் அதனை ஜெர்மனி ஆதரிக்கும்.

(6) இருநாடுகளும் ஏற்றுக்கொண்ட மறுகாப்புறுதி உடன்பாடு மூன்று ஆண்டுகளுக்குச் செயல்படும்.

இவ்வுடன்பாடு ரஷ்யாவுக்குப் பல சலுகைகளை அளித்தாலும், துருக்கிய விவகாரத்தில் ரஷ்யாவின் செல்வாக்கு அதிகரித்து விடாதபடி இங்கிலாந்து தடுத்து விடும் என்ற நம்பிக்கை பிஸ்மார்க்குக்கு இருந்தது.

### 6.5.3. பிரான்சுடன் உறவு

1888-ல் இரண்டாம் கெய்சர் வில்லிய ம்ஜெர்மானிய மன்னரானதும், அவருக்கும், பிஸ்மார்க்குக்கும் ஏற்பட்ட தீர்க்கமுடியாத கொள்கை வேறுபாடுகளின் காரணமாக, இரண்டுகளுக்குப் பின் ஜெர்மனியின் உயரதிகாரப் பொறுப்பிலிருந்து பிஸ்மார்க் விலகிக் கொண்டதைத் தொடர்ந்து ரஷ்யாவும், ஜெர்மனியும் செய்து கொண்டிருந்த உடன்பாடும் துண்டிக்கப்பட்டது.

ஐரோப்பிய அதிகார அரசியலில் பெரும் முக்கியத்துவத்தைப் பெற்றிருந்த இவ்வுடன்பாடு காலாவதியானதைத் தொடர்ந்து, தனக்கெனத் தனியொரு நட்பு நாட்டைத் தேடிக் கொண்டிருந்த ரஷ்யா, 1870ஆம் ஆண்டில் பிரான் கோ- பிரஷ்யப் போரின் விளைவாகப் பெரும் இழப்புக் குள்ளாகியிருந்த பிரான்சை நோக்கித் தனது நட்புக் கரத்தை நீட்டியது. ஜெர்மனியின் பகை உணர்வால் உந்தப்பட்ட நிலையில் பிரான்சும் ரஷ்யாவுக்குத் தேவையான பொருளாதார உதவிகளையும், படைக்கல உதவிகளையும் அளித்ததோடு, பொதுக் கடன்கள் எழுப்பிக் கொள்ளவும் வசதியையும், வாய்ப்பினையும் அளித்தது. நெருங்கத் தொடங்கியிருந்த உறவுகளை இன்னமும் நெருக்கமாக்கிக் கொள்ளும் நோக்கோடு

குறிப்பு

பிரெஞ்சுக் கடற்படையொன்று 1891-ல் ரஷ்யத்துறைமுகமான "கிரான்ஸ்டட்" நகருக்கு அனுப்பப்பட்டது.

1893- டிசம்பர் - 31ல் இருநாடுகளும் ஓர் "ராணுவ உடன் படிக்கை " செய்து கொண்டன.

1) அதன்படி "கூட்டு" நாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி ஆகியவை தங்கள் படைபலத்தைப் பெருக்கிப் போருக்கான ஏற்பாடுகளில் முனைந்தால், ரஷ்யாவும், பிரான்சும் உடனடியாக ஒரே காலத்தில் தங்களது படைகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

2) இருநாடுகளையும் சேர்ந்த ராணுவ அதிகாரிகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வுடன்பாட்டினை முடிமன்னரின் வல்லாட்சியைக் கொண்டிருந்த ரஷ்யாவும், குடிமக்களின் நல்லாட்சியைக் கொண்டிருந்த பிரான்சும் 1894-ல் முறைப்படி அங்கீகரித்தன. மூன்றாம் அலெக்சாந்தரின் காலத்தில் மட்டுமே எந்த ஒரு பெரும் போரினையும் ரஷ்ய நாடு சந்திக்க வில்லை . அவர் காலத்திலே தான் நாட்டு நலன் கருதிச் செய்யப்பட்ட மிக முக்கிய நடவடிக்கையாக, பிரான்சுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடு கருதப்பட்டது.

### 6.5.4. ரஷ்ய ஜெர்மானிய உறவின் முறிவு :

இராஜதந்திர ரீதியாக ரஷ்யாவையும் பிரான்சையும் ஒன்றுசேர விடக்கூடாது என்ற முயற்சியில் பிஸ்மார்க் 1887 வரை தொடர்ந்து வெற்றி பெற்று வந்தார். ஆனால் பல்கேரியப் பிரச்சனை எழுந்த போது பிஸ்மார்க் ஆஸ்திரியாவிற்குச் சாதகமாகச் செயல்பட்டதால் அவரது இரட்டை வேடத்தை ரஷ்யா புரிந்து கொண்டது. ஆனால் அச்சிக்கலின் போது பிரான்சு ரஷ்யாவிற்கு பல்கேரியாவிலுள்ள சிறப்புரிமைகளைச் சுட்டிக்காட்டிப் பல்கேரியர்களை ரஷ்யாவுடன் ஓர் உடன்பாடு கொள்ளுமாறு அறிவுரை வழங்கியது. மேலும் ரஷ்யா பொருளாதார நெருக்கடியினால் அவதிப்பட்ட போது (1888-ம் 1889-ம் ஆண்டுகளில்) கடன்களைத் திரட்டி உதவியது. பின்னர் ரஷ்யப் படைவீரர்களுக்குப் படைக்கலன்கள் தேவைப்பட்ட போது ஐந்து இலட்சம் நவீனரகத் துப்பாக்கிகளைத் தயாரித்துக் கொடுத்தது. இத்தகைய உதவிகளினால்

இருநாடுகளுக்குமிடையே இருந்து வந்த பகைமை உணர்வு மாய்ந்து நட்புறவு மலர்ந்தது. இத்துடன் இரு நாடுகளையும் இணையவிடாமல் தடுத்து வந்த ஐரோப்பிய இராஜதந்திரி பதவி விலகினார். எனவே இருநாடுகளும் ஒன்றோடு ஒன்று நெருங்கி வரவும் உடன்பாடு காணவும் வழி ஏற்பட்டது. இது ரஷ்ய - ஜெர்மானிய உறவு முறிவுக்கு ஏதுவாயிற்று.

**குறிப்பு**

### 6.5.5. மத்திய ஆசியா :

மத்திய ஆசியாவில் தன் தந்தையார் கடைப்பிடித்து வந்த அதே ஆதிக்க விரிவாக்கக் கொள்கையைக் கடைப்பிடித்தார். இதனால் போர் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். இங்கிலாந்து தனது இந்தியப் பேரரசுக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என அஞ்சியது. 1884-ல் பாரசீகப் பகுதியான மெர்வ்வை ரஷ்யப் படைகள் கைப்பற்றின. இவ்வெற்றிக்குப் பின் பாரசீகம், செராக் என்னும் பகுதியை ரஷ்யாவிற்குக் கொடுத்தது. இதனால் ரஷ்யப் படைகள் இந்தியப் பேரரசின் வடமேற்கு எல்லைப் பகுதிக்கு அருகாமையில் வந்தன. ஆனால் ரஷ்யாவுக்கும் இங்கிலாந்திற்குமிடையே அச்சமும், வெறுப்புணர்வும் எழுந்தன. இதன் விளைவால் 1885-ல் பஞ்டே சிக்கல் எழுந்தது. இருநாடுகளுக்குமிடையே போர்மூளும் நிலை ஏற்பட்டது. ஆனால் இங்கிலாந்து பஞ்டே பகுதியை ரஷ்யாவிற்கு விட்டுக்கொடுக்க முன்வந்ததால் போர் அபாயம் தவிர்க்கப்பட்டது.

### 6.5.6. தூர கிழக்கு நாடுகள்

கொரியாவை மையமாகக் கொண்டு ஜப்பானுக்கும் ரஷ்யாவிற்கும் இடையே மனப்பூசல் இருந்து வந்தது. இந்நிலையில் 1884-ல் ரஷ்யா கொரியாவுடன் நட்புறவு உடன்படிக்கை ஒன்றினைச் செய்து கொண்டது. இதனால் ஜப்பான் ஆத்திரமடைந்தது. இதன் விளைவாக 1905-ல் ரஷ்ய ஜப்பானியப் போர் ஏற்பட்டது.

மத்தியக்கிழக்கில் ஆதிக்கப் பரவலாக்கக் கொள்கையை கடைப்பிடித்த சார் பிறநாடுகளுடன் மோதலைத் தவிர்த்து நட்புறவுடனும், அமைதியுடனும் செயல்பட்டு வந்தார். எனவே இவரது காலம் வரலாற்றில்

அமைதியின் காலம் என வர்ணிக்கப்படுகிறது. 1894 அக்டோபர் மாதம் மூன்றாம் அலெக்சாந்தர் இந்த உலக வாழ்வை நீத்தார்.

குறிப்பு

## 6.6. இரண்டாம் நிக்கோலஸ் 1894-1917

ரஷ்யாவின் புதிய சாராக இரண்டாம் நிக்கோலஸ் 1894-ல் தனது 26-வது வயதில் பொறுப்பேற்றார். இவர் உண்மையிலேயே ஒரு நல்ல மனிதர். ஆனால் நிர்வாகத் திறமையற்றவர். இவர் வல்லாட்சியின் மீது நம்பிக்கை கொண்டார். இரக்கமனப்பான்மையும் எவரையும் நம்பிச் செயல்படும் குணமும் கொண்டவர். எனவே நிக்கோலசைச் சூழ்ந்திருந்தவர்கள் அவரது குணத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு தங்கள் வசப்படுத்தினர். திருமணத்திற்குப் பிறகு மனைவியின் கட்டுப்பாட்டுக்குள் வந்தார். விளையாட்டிலும், இசையிலும், நடனத்திலும் நாட்டம் கொண்ட இவர் நாட்டில் காணப்பட்ட சூழ்நிலையை மறந்தார்.

இரண்டாம் நிக்கோலஸ் ஆட்சிக்காலத்தில் பல வரலாற்றுச்சிறப்பு மிக்க நிகழ்ச்சிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடைபெற்றன. ரஷ்ய ஜப்பானிய போர், 1905-ம் வருடப்புரட்சி முதல் உலகப்போர் முதலியவை இவர்காலத்தில் தான் நடைபெற்றன. இறுதியாக நடைபெற்ற ரஷ்யப் புரட்சி இவரது ஆட்சியை அடித்துச் சென்றதோடு மட்டுமன்றி அவரது பரம்பரையையே ஆட்சி பீடத்திலிருந்து அகற்றிவிட்டது.

### 6.6.1. உள்நாட்டுக் கொள்கை :

இரண்டாம் நிக்கோலஸ் அரியணை ஏறியதும் தங்கள் வாழ்க்கையில் புதிய திருப்புமுனை ஏற்படும் என்று மக்கள் நினைத்தார்கள். ரஷ்யா புதிய சகாப்தத்தைக் காணப்போகிறது என்று கனவு கண்டனர். ஆனால் எல்லாம் பகல் கனவாகிவிட்டது. இரண்டாம் நிக்கோலஸ் தனது தந்தையின் கொள்கைகளைப் பின்பற்றி அதனைச் செயல்படுத்த முற்பட்டார். தனது தந்தை காலத்தில் அவையில் இடம் பெற்ற அமைச்சர்களும், உயர் அதிகாரிகளும் பெரும்பாலும் நிக்கோலஸ் அமைச்சரவையில் இடம் பெற்றனர்.

### 6.6.2. கல்விக் கட்டுப்பாட்டுக் கொள்கை :

இவர் தனது தந்தை கடைப்பிடித்த கட்டுப்பாட்டுக் கல்வி முறையையே பின்பற்றினார். இதனால் மாணவர்களிடையே அமைதியின்மை ஏற்பட்டது. கோசக்ஸ் உதவியுடன் பெரும் கிளர்ச்சி நடைபெற்றது. ஆனால் அது நசுக்கப் பட்டது. 1899ல் மாஸ்கோ மற்றும் பீட்டர்ஸ்பர்க் பல்கலைக்கழக மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அந்தக் கிளர்ச்சியும் அடக்கப்பட்டது. ஆத்திரமடைந்த மாணவர்கள் 1901-ல் கல்வி அமைச்சரைக் கொலை செய்தனர்.

### 6.6.3. செய்தித்தாள் தணிக்கை :

செய்தித்தாள் தணிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. மக்களின் சுதந்திர எண்ணங்களைக் கட்டுப்படுத்தவும், கிளர்ச்சிகளைத் தவிர்க்கவும், அரசுக்கு எதிராக எழுதப்படும் செய்திகள் தணிக்கை செய்யப்பட்டன.

### 6.6.4. சிறுபான்மை சமயத்தவர் ஒடுக்கப்படுதல்:

இரண்டாம் நிக்கோலஸ் ஆட்சிக்காலத்தில் சிறுபான்மை மொழி பேசுவோர், சிறுபான்மை சமயத்தவர் ஒடுக்கப்பட்டனர். தனி உரிமை பெற்று விளங்கிய பின்லாந்து ரஷ்யாவின் ஒரு மாநிலமாக சேர்த்துக் கொள்ளப் பட்டது. பின்லாந்து அனைத்து உரிமைகளையும் இழந்தது. அது கவர்னர் ஜெனரலின் கீழ் ஆட்சி புரியப்பட்டது. பின்னர் பின்லாந்திலிருந்த அனைத்து நிறுவனங்களிலும் ரஷ்ய அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். ரஷ்ய மொழி ஆட்சி மொழியாக பின்லாந்தில் திணிக்கப்பட்டது. இதனை எதிர்த்து ஏற்பட்ட கிளர்ச்சி நசுக்கப்பட்டது. 1904-ல் பின்லாந்திலிருந்த ரஷ்ய கவர்னர் ஜெனரல் கொல்லப்பட்டார். புரட்சித்தீ எங்கும் பரவியது.

### 6.6.5. தொழில் வளர்ச்சி :

இரண்டாம் நிக்கோலஸ் காலத்தில் விவசாயத்திலும் தொழில் வளர்ச்சியிலும் ரஷ்ய அதிவேக வளர்ச்சி கண்டது. ஒவ்வொரு துறையிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டது. 1895 முதல் 1905 வரை 25000 கி.மீ தூரத்திற்கு ரயில் பாதைகள் போடப்பட்டன. ரஷ்ய டிரான்ஸ் சைபீரியன் இருப்புப் பாதை பால்டிக் பகுதியை பசிபிக்குடன் இணைந்தது.

மத்திய ஆசியப் பாதை தாஷ்கண்டை பிற ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்தது. அனைத்து ரஷ்ய அரசாலும், தனியார்களாலும், சில வெளிநாட்டவர்களாலும் முதலீடு செய்யப்பட்டு இவை போடப்பட்டன.

வெளிநாட்டவர் ரஷ்யாவில் முதலீடு செய்வது ஊக்குவிக்கப்பட்டது. பிரான்ஸ், பெல்ஜியம், பிரிட்டன் போன்ற நாடுகளிலிருந்து அதிக முதலீடு செய்யப்பட்டன. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுபது சதவீதம் தொழிற்சாலைகளிலும், நாற்பது சதவீதம் உலோக உற்பத்தியிலும் முதலீடு செய்யப்பட்டன.

### 6.6.6. பாதுகாப்புச் சட்டங்கள் :

தொழிற்சாலைகள் ஒரே இடத்தில் அதிகரிக்கத் தொடங்கியதால் மாஸ்கோ பீட்டர்ஸ்பர்க் போன்ற இடங்களில் பொருளாதார அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. மேலும் அரசு பல சட்டங்களின் மூலமாகவும் தொழிலாளர்களின் நலனில் அக்கரை செலுத்தியது. தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இந்த சட்டங்களின்படி ஒருநாளைக்கு 11மூ மணிநேர வேலை நேரம் ஒன்பது மணிக்கு மேலாக இருக்கக்கூடாது போன்றவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்தச் சட்டங்கள் கண்காணிப்பாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### 6.6.7. பொருளாதார வளர்ச்சி :

ரஷ்யாவில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் இறக்குமதி செய்யப் பட்டால் அவற்றின் மீது அதிக காப்பு வரி விதிக்கப்பட்டது. அதே. சமயம் ரஷ்யா உற்பத்தி செய்ய முடியாத பொருள்களின் மீது மிகக் குறைந்த அளவு வரி விதிக்கப்பட்டது. உதாரணமாக இயந்திரங்கள் விவசாயப் பொருள்கள் மீது குறைவான வரியே விதிக்கப்பட்டது. ரஷ்யா அதிக அளவிற்கு கச்சாப் பொருள்களை ஏற்றுமதி செய்தது.

### 6.6.8. பொருளாதாரமந்தம்:

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட பெரும் பொருளாதாரமந்தம் ரஷ்யாவையும் பாதித்தது. உற்பத்திகள் குறைந்தன. பொருள் தேங்கின. அதனால் நலிவடைந்த

குறிப்பு

சிறுதொழிற்சாலைகள் பல மூடப்பட்டன. தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. அதனால் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க சங்கங்கள் அமைத்துக் கொண்டனர். வேலை நிறுத்தம் தம் செய்யும் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு முன் வந்தது.

## 6.7. வெளிநாட்டுக் கொள்கை :

### 6.7.1. ஹேக் மாநாடுகள் :

இரண்டாம் நிக்கோலஸ் அமைதியை விரும்பினார். ஆனால் 19-ம் நூற்றாண்டின் இறுதியில் வல்லரசுகள் அதிலும் குறிப்பாக ஜெர்மனி ஆஸ்திரியா ஆகிய நாடுகள் படைப் பெருக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டன. இதனால் ஐரோப்பாவில் பதட்ட நிலை உருவானது. எனவே பதட்ட நிலையை குறைத்து அமைதியை நிலைநாட்டும் பொருட்டு 1899ல் திஹேக் நகரில் மாநாடு ஒன்றைக் கூட்டினார் இரண்டாம் நிக்கோலஸ். இதில் 26 நாடுகள் கலந்து கொண்டன.

இந்த மாநாட்டில் ஆயுதக் குறைப்பதற்கு நிரந்தரமான தீர்வு எதுவும் ஏற்படவில்லை. ஆனால் பன்னாட்டு சட்டதொகுப்பு ஒன்று ஏற்பட வழிவகை செய்யப்பட்டது. மேலும் திஹேக் நகரில் நிரந்தர நடுவர் நீதி மன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. உலக நாடுகளுக்கிடையே ஏற்படும் தகராறுகள் இந்த நடுவர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு விட வேண்டும் என்ற வலியுறுத்தியது.

இதுவே பன்னாட்டளவில் ஆயுதக் குறைப்பு உலக அமைதி ஆகியவற்றிற்காக கூட்டப்பட்ட முதல் மாநாடு ஆகும். இதைப் பின் தொடர்ந்து இன்றளவும் இத்தகைய பல மாநாடுகள் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1907-ல் திஹேக் நகரில் இரண்டாவது மாநாடு கூட்டப்பட்டது. ஆனால் இந்த மாநாடும் ஆயுதக்குறைப்பு நடுவர் நீதிமன்றம் மூலம் பிரச்சனை களுக்குக் காணுதல் போன்றவை பற்றி எந்த முடிவும் எடுக்க முடியவில்லை. எனவே திஹேக் மாநாடுகள் தோல்வியில் முடிவடைந்தன. என்றாலும் இது இரண்டாம் நிக்கோலஸ் உலக அமைதியை விரும்புபவர் என்பதை வெளிப் படுத்தியது.

குறிப்பு

### 6.7.2. ரஷ்யாவும், தூரக்கிழக்கு ஆசியாவும் :

நிக்கோலஸ் ஆசியப் பகுதிகளுக்குப் பயணம் செய்தார். டிரான்ஸ் சைபீரியன் இருப்புப் பாதைத் திட்டத்தை செயல்படுத்தினார். 1895ல் சீனாவை ஜப்பான தோற்கடித்து மஞ்சூரியாவின் ஒரு பகுதியையும், லியோடங் தீபகர்ப்பத்தையும் ஷிமனோ சேகி உடன்பாட்டின்படி ஜப்பான் பெற்றது. ரஷ்யாவும் பிரான்சும் சேர்ந்து 40 கோடி பிராங்க் பணத்தை சீனாவுக்கு கொடுத்து உதவி போர் நஷ்ட ஈடாக ஜப்பானுக்கு அளிக்க உதவின. சீனாவுடன் ரஷ்யா ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி மஞ்சூரியாவில் இருப்புப்பாதை அமைக்க சீனாவிடமிருந்து ரஷ்யா அனுமதி பெற்றது.

### 6.7.3. ரஷ்யாவும் இங்கிலாந்தும் :

நிக்கோலஸ் காலத்தில் ரஷ்யா இங்கிலாந்துடன் நல்உறவு வைத்துக் கொண்டது. இதற்கு முக்கிய காரணம் ஜெர்மனி, ஆஸ்திரியா ஹங்கேரி ஆகிய நாடுகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளேயாகும். 1907-ல் ரஷ்யாவும் இங்கிலாந்தும் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டன. அதன்படி பாரசீகத்தின் வட பகுதியை ரஷ்யாவும், தென்பகுதியை இங்கிலாந்தும் கூட்டுப்படுத்திக் கொண்டன. திபெத்தின் மீதான தொடர்பை இருநாடுகளும் விட்டு விடவேண்டும். ஆப்கானிஸ்தான் மீது இங்கிலாந்துக்கு முழு உரிமை தரப்பட்டது. ஆப்கானிஸ்தானுடன் ரஷ்யா தொடர்பு கொள்ள விரும்பினால் இங்கிலாந்தின் அனுமதி தேவை.

### 6.7.4. ரஷ்யாவும் பிரான்சும்:

மூன்றாம் அலெக்சாந்தர் பிரான்சுடன் செய்து கொண்ட நல்லுறவு நிக்கோலஸ் காலத்திலும் நீடித்தது. ஜெர்மனியுடன் தொடர்பு வைத்துக் கொள்வதைத் தவிர்க்க அதிக அளவு பொருளாதார உதவியை ரஷ்யாவுக்கு பிரான்ஸ் அளித்தது. அதுபோல இங்கிலாந்தும் ரஷ்யாவும் நல்லுறவு கொள்ள பிரான்ஸ் பெரும் முயற்சி எடுத்தது. 5. ரஷ்யாவும் ஜெர்மனியும் :

ரஷ்யாவும் ஜெர்மனியும் ஆரம்ப காலத்தில் இருந்து கொண்டிருந்த நல்லுறவு பிஸ்மார்க்கின் மறைவுக்குப் பிறகு மறைந்துவிட்டது. ரஷ்யாவின் தூரக்கிழக்கு உறவுக்கு ஜெர்மனி விரும்பிய போதிலும்,

குறிப்பு

ஆட்டோமான் பேரரசின் மீது ஜெர்மனி கொண்டிருந்த பேராசையும், ஆஸ்திரியா - ஹங்கேரி மீது ஜெர்மனி கொண்டிருந்த உறவையும் ரஷ்யா வெறுத்தது. போஸ்னியா ஹெர்சிகோவினாவை ஆஸ்திரியா இணைத்துக் கொள்ள ஜெர்மனி ஊக்கமளித்தது. இதனால் ரஷ்யா அதிர்ச்சியடைந்தது.

பால்கன் பகுதியில் ரஷ்யாவும் ஆஸ்திரியாவும் சமநிலையைக் கடைப் பிடிக்க உறுதி செய்திருந்தன. ஆனால் இதனை மீறிய ஆஸ்திரியா போஸ்னியா ஹெர்சி ஹோவினாவை இணைத்தது. இதன் தொடர்ச்சியாக நடைபெற்ற சம்பவங்களால் முதல் உலகப்போரில் ரஷ்யா பங்கு கொண்டது.

இவை தவிர நிக்கோலஸ் ஆட்சிக்காலத்தில் ரஷ்ய ஜப்பானியப் போர், 1905-ம் வருடப் புரட்சி, அக்டோபர் அறிக்கை , அரசியலமைப்பு பரிசோதனை, ஆங்கில ரஷ்ய உடன்பாடு, 1917-ம் வருட ரஷ்யப்புரட்சி போன்ற முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## 6.8. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய பதில் கேள்வி**

1. 1882 மே சட்டங்கள் என்ன?
2. மூன்றாம் அலெக்சாண்டரின் வெளியுறவு விவகாரங்களில் கிர்ஸின் பங்கு என்ன?
3. இரத்தக்களரி ஞாயிறு என்றால் என்ன?
4. நிக்கோலஸ் II இன் உள்நாட்டுக் கொள்கையின் பொருளாதார அம்சத்தைக் குறிப்பிடவும்.

**நீண்ட பதில் கேள்வி**

1. உள்துறை அமைச்சகம் எப்படி மோதலின் கழுத்தை நெரிக்கும் இடமாக மாறியது?
2. “மூன்றாம் அலெக்சாண்டரின் ஆட்சியை ரஷ்யர்களின் நிகழ்வு நிறைந்த காலமாகக் கருத முடியாது வரலாறு ஆனால் அவரது கடுமையான ஆட்சியில் நாடு கணிசமான முன்னேற்றம் அடைந்தது. விளக்க.
3. ஜாரினா அலெக்ஸாண்ட்ராவின் மீது ரஸ்புடினின் செல்வாக்கின் தாக்கத்தை விவரிக்கவும்

குறிப்பு

நிக்கோலஸ் II இன் நிர்வாகம்.

4. நிக்கோலஸ் II இன் வெளியுறவுக் கொள்கையைப் பற்றி விவாதிக்கவும்.

## 6.9. கூடுதல் வாசிப்புகள்

Kamenskii, A. and D. Griffiths. 2015. *The Russian Empire in the Eighteenth Century: Tradition and Modernization.* United Kingdom: Taylor & Francis.

Bushkovitch, P. 2011. *A Concise History of Russia*. United States: Cambridge University Press.

Dukes, P. 1998. *A History of Russia: Medieval, Modern, Contemporary, C.882-1996*. United States: Duke University Press.

Boterbloem, K. 2013. *A History of Russia and Its Empire: From Mikhail Romanov to Vladimir Putin*. United States: Rowman & Littlefield Publishers.

Ziegler, C. E. 1999. *The History of Russia. United Kingdom*: Greenwood Press.

# தொகுதி III

## 1905 & 1917 இன் புரட்சிகள்

குறிப்பு

## அலகு 7

## ஜார் நிக்கோலஸ் II

பாட அமைப்பு

7.0 அறிமுகம்
7.1 நோக்கங்கள்
7.2. நிக்கோலஸ் II
7.2.1. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கை
7.2.2. சமூக மற்றும் பொருளாதார பின்தங்கிய நிலை
7.2.3. புரட்சிகர சிந்தனைகளின் வளர்ச்சி
7.3. ரஷ்ய-ஜப்பானியப் போர்
7.4. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்க கேள்விகள் பதில்கள்
7.5. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
7.6. கூடுதல் வாசிப்புகள்

### 7.0 அறிமுகம்

நிக்கோலஸ் II (1868-1918) கடைசி ரஷ்ய பேரரசர். சிலரால் வகைப்படுத்தப்படும் கூச்ச சுபாவமுள்ள, பலவீனமான, ஊசலாடும், மற்றும் முடிவெடுக்க முடியாதவராக இருந்தாலும், அவர் ஒரு பிடிவாதமான ஆதரவாளராக இருந்தார். சீர்திருத்தத்திற்கான அதிகரித்து வரும் அழுத்தத்தின் கீழ் இறையாண்மையின் உரிமை. இல் அதிருப்தி வீடு, மற்றும் பிரதேச இழப்புகள் மற்றும் இரண்டு போர்களில் பாரிய உயிரிழப்புகள், துரிதப்படுத்தியது பிப்ரவரி புரட்சி மார்ச் 12, 1917. நிக்கோலஸ் II மார்ச் 15 அன்று பதவி விலகினார். 1917. ஏப்ரல் 1918 இல், போல்ஷிவிக் அரசாங்கம் அவரையும் ஏகாதிபத்திய குடும்பத்தையும்

மாற்றியது யூரல்களில் உள்ள வெகாடெரின்பர்க்கிற்கு, அவர்கள் ஜூலை 17, 1918 அன்று தூக்கிலிடப்பட்டனர். போல்ஷிவிக் எதிர்ப்புப் படைகள் நகரை நெருங்கின. என்பது பற்றி இந்த அலகில் படிப்போம் ரஷ்ய-ஜப்பானியப் போருடன் நிக்கோலஸ் II இன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகள் மற்றும் 1905 புரட்சி.

## 7.1 நோக்கங்கள்

இந்த அலகுக்குச் சென்ற பிறகு, உங்களால் முடியும்:

- நிக்கோலஸ் II இன் உள்நாட்டு மற்றும் வெளியுறவுக் கொள்கையை விவரிக்கவும்
- ரஷ்ய-ஜப்பானியப் போரின் தாக்கத்தைப் பற்றி விவாதிக்கவும்
- 1905 புரட்சிக்கான காரணங்களை விளக்குங்கள்

## 7.2. நிக்கோலஸ் II

### 7.2.1. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கை

நிக்கோலஸ் II இன் உள்நாட்டு மற்றும் வெளியுறவுக் கொள்கை பற்றி நாங்கள் ஏற்கனவே படித்துள்ளோம் முந்தைய அலகு. அவற்றை மீண்டும் இங்கே சுருக்கமாக விவாதிப்போம். மூல காரணங்கள் ரஷ்யப் புரட்சி ரஷ்யனின் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் யதார்த்தங்களில் அமைந்திருந்தது சமூகம். 19 ஆம் நூற்றாண்டில் ரஷ்யாவின் கருத்துக்களால் முற்றிலும் தீண்டப்படாததாகத் தோன்றியது அந்த நேரத்தில் மேற்கு ஐரோப்பாவைத் தாக்கிய அறிவொளி. ஆரம்ப காலத்தில் 19 ஆம் நூற்றாண்டில், ரஷ்யா முந்தையதைப் போலவே தொடர்ந்து ஆளப்பட்டது மூன்று நூற்றாண்டுகள் - ரோமானோவ் வம்சத்தின் எதேச்சதிகார ஆட்சியின் கீழ். ரோமானோவின் தனித்து ஆட்சியமைத்தார் மற்றும் அவர்களுக்கு எந்த எதிர்ப்பையும் அனுமதிக்கவில்லை. உண்மையானவை எதுவும் இல்லை மக்களுக்கான பிரதிநிதித்துவ அமைப்புகள், கருத்து சுதந்திரம் குறைவாக இருந்தது, பத்திரிகை இலவசம் இல்லை, புத்தகங்கள் அடிக்கடி தணிக்கை

செய்யப்பட்டன, எதிர்க்கட்சித் தலைவர்களும் இருந்தனர் தூக்கிலிடப்பட்டார் அல்லது சைபீரியாவிற்கு நாடு கடத்தப்பட்டார்.

**குறிப்பு**

அவர் விரும்பும் போதெல்லாம் ஜார் புறக்கணிக்கப்பட்டார். இந்த காரணிகள் அனைத்தும் வழிவகுத்தன ரஷ்யாவின் மக்கள் ரோமானோவ் வம்சத்தால் முற்றிலும் விரக்தியடைந்துள்ளனர். இந்த ஏமாற்றம் ஜார் ஆட்சிக்கு எதிராக பல ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வேலைநிறுத்தங்களில் தன்னை வெளிப்படுத்தினார், அவற்றில் பல ஜார் மூலம் கொடூரமாக அடக்கப்பட்டன. ஒரு குறிப்பிடத்தக்க உதாரணம் நிராயுதபாணியான அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் கொடூரமான முறையில் நடத்தப்பட்ட “இரத்த ஞாயிறு“ நிகழ்வுகள் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் அவர்கள் அணிவகுத்துச் சென்றபோது ஏகாதிபத்திய காவலரால் படுகொலை செய்யப்பட்டனர் ஜார் நிக்கோலஸ் ஐஐ க்கு ஒரு மனுவை வழங்கவும். எங்காவது 1,000 முதல் 4,000 பேர் வரை துப்பாக்கிச் சூட்டின் போது காவலர்களால் கொல்லப்பட்டனர். பல வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி, “இரத்தம் ஞாயிறு“ என்பது ஜாரிஸ்ட் ஆட்சி மற்றும் குறிப்பாக முக்கிய காரணங்களில் ஒன்றாகும் ஜார் நிக்கோலஸ் II, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முற்றிலும் மாறினார் ரஷ்ய மக்களின் பார்வையில் மதிப்பிழந்தவர்.

### 7.2.2. சமூக மற்றும் பொருளாதார பின்தங்கிய நிலை

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரஷ்யா ஒரு நியாயமற்ற மற்றும் சமத்துவமற்ற சமூகம். ஐரோப்பாவைத் தாக்கிய தொழில் புரட்சி 19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் நகர்ப்புற தொழில்துறையில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டது ரஷ்யாவில் தொழிலாள வர்க்க மக்கள். இருப்பினும், தொழில்மயமாக்கலின் வளர்ச்சி ஏற்பட்டது ரஷ்யாவில் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவில்லை. தொழில்துறை உழைக்கும் வர்க்கங்கள் வாழ்ந்தன நெருக்கடியான நகர்ப்புற குடியிருப்புகளில், குறைந்த ஊதியம் வழங்கப்பட்டது, எந்த வகையான உரிமைகளும் மறுக்கப்பட்டன பணியிடத்தில், முதலியன. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில், பல்வேறு காரணங்களால், இந்த தொழில்துறை நகர்ப்புற

**குறிப்பு**

தொழிலாள வர்க்கம் தங்களின் உரிமைகள் குறித்து மிகுந்த உணர்வுடன் இருந்தது.

அநீதியான கொள்கைகளுக்கு எதிராக அவர்கள் பல வேலை நிறுத்தங்களையும் போராட்டங்களையும் மேற்கொண்டனர் ஆட்சி மற்றும் அவர்களின் வாழ்க்கையில் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றம் கோரியது. அது தொழில்துறை தொழிலாளர்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு இருந்தது என்று கூறலாம் புரட்சிக்கு வழிவகுத்த காரணிகள்.

ரஷ்ய விவசாயிகளின் நிலை திருப்திகரமாக இல்லை. திருப்பத்தின் மூலம் இந்த நூற்றாண்டில், ரஷ்யாவின் மக்கள் தொகையில் சுமார் 70 சதவீதம் பேர் இருந்தனர் விவசாயிகள். 1861 இல் அடிமைகள் விடுவிக்கப்பட்டாலும், அவர்களின் நிபந்தனைகள் இல்லை கணிசமாக மேம்பட்டது. அவர்களின் சுதந்திரத்திற்கு ஈடாக, அடிமைகள் அரசுக்கு செலுத்த வேண்டியிருந்தது பணம் தொகை, இது பல அடிமை குடும்பங்களை கடனில் தள்ளியது. மேலும், பல வேலையாட்களுக்கு அவர்கள் வாழ்வதற்குத் தேவையானதை விட குறைவான நிலம் வழங்கப்பட்டது, மற்றவர்களுக்கு வழங்கப்படவில்லை எந்த நிலமும். ரஷ்யாவில் விவசாயத்தின் நிலை மிகவும் மோசமாக இருந்தது ஜார் ஆட்சி அதை மேம்படுத்த எந்த முயற்சியும் எடுக்கவில்லை. பழமையான நுட்பங்கள் விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்டது, இது மோசமான விளைச்சலுக்கு வழிவகுத்தது. பெரும்பான்மையான விவசாயிகள் இருந்தனர் படிப்பறிவில்லாதவர்கள், இதனால் மாற்று வேலைக்கான ஆதாரங்களைக் கண்டறியும் நிலையில் இல்லை.

ஜாரிசக் கொள்கைகள் ரஷ்யாவில் நிலம் மிகவும் சமமாக விநியோகிக்கப்படவில்லை. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், ரஷ்ய மக்கள் தொகையில் சுமார் 1.5 பேர் 25% பங்குகளை வைத்திருந்தனர். நிலத்தின். பெரும் நில உரிமையாளர்களின் இந்தப் பிரிவினர் முதலாளித்துவ விவசாயிகளாக மாறினர் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களை இரக்கமின்றி சுரண்டினார். இந்த காரணிகள் அனைத்தும் 19 ஆம் ஆண்டின் பிற்பகுதி முழுவதும் விவசாயிகள் எழுச்சிகளில் மிகப்பெரிய அதிகரிப்பு நூற்றாண்டு. ரஷ்ய விவசாயிகள் ரஷ்யர்களில் பெரும்பான்மையானவர்கள் என்பதால் மக்கள்தொகை,

அவர்களின் அதிருப்தி புரட்சிக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக மாறியது.

குறிப்பு

மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்திய மற்றொரு முக்கியமான சமூகக் காரணி "ரஸ்ஸி.ஃபிகேஷன்" கொள்கை. ரஷ்யப் பேரரசு உலகின் மிகப்பெரிய பேரரசுகளில் ஒன்றாகும் மற்றும் பல நாடுகளை உள்ளடக்கியது. ரஸ்ஸி.ஃபிகேஷன் கொள்கை, அதாவது அடக்குதல் ரஷ்யரல்லாத தேசிய இனங்களின் மொழிகள், இலக்கியம் மற்றும் கலாச்சாரம் அறிமுகப்படுத்தப்பட்டது சமூகத்தில் ஒருவித சீரான தன்மையை உருவாக்கும் முயற்சியில் ரோமானோவ்ஸ் மூலம் அவர்களின் நிர்வாகப் பணியை எளிதாக்குகிறது. இடையே எப்போதும் பதற்றம் நிலவியது ரஷ்ய பேரரசின் ஐரோப்பிய மற்றும் ஆசிய குடியிருப்பாளர்கள், அடிக்கடி மோதல்களுடன் வெடிக்கிறது. ரஸ்ஸி.ஃபிகேஷன் கொள்கை விஷயங்களை மோசமாக்கியது. மேலும், உறவு சிறுபான்மையினருக்கும் பெரும்பான்மையான "வெள்ளை" ரஷ்யர்களுக்கும் இடையில் கிட்டத்தட்ட காலனித்துவ ஆட்சி இருந்தது இயற்கை. காகசியா, கஜகஸ்தான், ரஷ்ய போலந்து மற்றும் பிற பகுதிகள் அவற்றின் மூலப்பொருளுக்காக சுரண்டப்பட்டது, ஆனால் வளர்ச்சிக்கு சமமான கவனம் செலுத்தப்படவில்லை இந்த பிராந்தியங்களில். இதனால் அப்பகுதி மக்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர் ரோமானோவ்ஸ் மீது கோபம். சிறுபான்மையினரின் இந்த வெறுப்பும் கோபமும் விளையாடியது 1917 இல் நிகழவிருந்த புரட்சியில் முக்கிய பங்கு வகித்தது ரஷ்யாவின் பல்வேறு சிறுபான்மை யினரிடமிருந்து புரட்சியாளர்கள் தோன்றினர், உதாரணமாக லியோ ட்ரொட்ஸ்கி.

### 7.2.3. புரட்சிகர சிந்தனைகளின் வளர்ச்சி

19 ஆம் நூற்றாண்டில் ரஷ்யாவில் இருந்த தீவிர சமத்துவமின்மை மற்றும் ஒடுக்குமுறை நிரூபிக்கப்பட்டது புரட்சிகர சிந்தனைகளுக்கு வளமான நிலம். 19 ஆம் நூற்றாண்டில், ரஷ்யா என்றாலும் மாற்றத்தை எதிர்க்கும் ஒரு பின்தங்கிய அரசியல் அமைப்பை தொடர்ந்து கொண்டிருந்தது படித்த அரசியல் உணர்வுள்ள மக்கள்-எழுத்தாளர்கள் வர்க்கமும் உருவானது, தத்துவவாதிகள், ஆர்வலர்கள்- அவர்களின் தீவிர கருத்துக்கள் ரஷ்ய முழுவதும் முளைத்தன

பேரரசு. 19 ஆம் நூற்றாண்டில் ரஷ்யாவில் தோன்றிய எழுத்தாளர்களின் வர்க்கம் - எழுத்தாளர்கள் புஷ்கின், கோகோல், டால்ஸ்டாய், துர்கனேவ், தஸ்தயேவ்ஸ்கி மற்றும் செகோவ் போன்றவர்கள் இன்னும் இருக்கிறார்கள். உலகின் மிகப் பெரிய தலைமுறை எழுத்தாளர்கள் என்று பலரால் கருதப்படுகிறது பார்த்தேன். அவர்களின் புத்தகங்கள் பரவலாக வாசிக்கப்பட்டன மற்றும் ரஷ்ய மக்களை ஆழமாக பாதித்தன. மேலும், சர்வாதிகார ஜாரிச ஆட்சி பல புரட்சியாளர்களை உருவாக்கியது ரஷ்யாவில் இயக்கங்கள். இந்த இயக்கங்கள், நீலிசம், அராஜகம் மற்றும் ஜனரஞ்சகவாதம் போன்றவை 1860 களில் தொடங்கியது மற்றும் ரஷ்யாவின் மக்கள்தொகையை தீவிரமயமாக்குவதில் பெரும் பங்கு வகித்தது. இந்த இயக்கங்களைச் சேர்ந்த பல தீவிரவாதிகளும் பல வன்முறைச் செயல்களில் பங்கேற்றனர் 1881 இல் இரண்டாம் அலெக்சாண்டர் ஜார் படுகொலை உட்பட, அரசுக்கு எதிராக. கார்ல் மார்க்சின் தத்துவம் மக்களிடையே பிரபலமடைந்தது மாணவர்கள் மற்றும் நாட்டின் இளம் மக்கள். இறுதியாக, ஒரு கூட இருந்தது இரண்டு அரசியல் கட்சிகளின் தோற்றம் மிக முக்கிய பங்கு வகிக்க வேண்டும்

**புரட்சியின் போது. இந்த இரண்டு கட்சிகளும்**:

• சமூக ஜனநாயகக் கட்சி (SD): இது 1898 இல் உருவாக்கப்பட்ட கட்சி பல்வேறு புரட்சிகர இயக்கங்களை ஒரே பதாகையின் கீழ் இணைக்க வேண்டும்

• சோசலிஸ்ட் புரட்சியாளர்கள் (SR): இது ஒரு கட்சி அதன் சித்தாந்தம் 1860களின் ஜனரஞ்சக இயக்கங்களிலிருந்து பெருமளவில் பெறப்பட்டது

1903 இல், சோசலிஸ்ட் ஜனநாயகக் கட்சி இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தது, அதாவது போல்ஷிவிக்குகள் மற்றும் மென்ஷிவிக்குகள். கருத்தியல் வேறுபாடுகள் இருந்தபோதிலும், இருவரும் சமூக ஜனநாயகவாதிகளும் சமூகப் புரட்சியாளர்களும் தங்கள் வெறுப்பால் ஒன்றுபட்டனர் ஜார் ஆட்சி. புரட்சிகர இயக்கங்கள் நீலிசம் மற்றும் ஜனரஞ்சகத்தை விரும்பினாலும் மக்களின் உணர்வை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகித்தது வரவிருந்த புரட்சி, அது சமூக ஜனநாயகக் கட்சி மற்றும் சோசலிஸ்ட் ஆகும் ரஷ்ய மக்களை புரட்சியை நோக்கி வழிநடத்த இருந்த புரட்சியாளர்கள்.

## 7.3. ரஷ்ய-ஜப்பானியப் போர்

குறிப்பு

ஒரு முக்கிய நிகழ்வு நிகழ்ந்தது மற்றும் ஜாரிஸ்ட்டுக்கு ஒரு திருப்புமுனையாக நிரூபிக்கப்பட்டது

ஆட்சி 1904-1905 இல் ரஷ்ய-ஜப்பானியப் போர். போர் மிகவும் அதிகமாக இருந்தது ரஷ்யர்களிடையே செல்வாக்கற்றது மற்றும் திறமையின்மை மற்றும் திறமையின்மையை எடுத்துக்காட்டுகிறது ஜார் நிக்கோலஸ் ஐஐ தலைமையிலான ரஷ்ய அரசாங்கம். இராணுவ பேரழிவு மற்றும் ஒருமுறை சிறிய ஆசிய நாடான ஜப்பானின் கைகளில் ரஷ்யா சந்தித்த அவமானம் ரஷ்ய ஆட்சியின் அழுகலை மீண்டும் ரஷ்ய மக்களுக்கு நிரூபித்தது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட கோபம் மற்றும் வெறுப்பு அமைச்சர் படுகொலைக்கு வழிவகுத்தது உள்துறை ஜப்பானுக்கு எதிரான தோல்விக்குப் பிறகு, கிளர்ச்சிகள் மற்றும் உள்நாட்டுக் கலவரங்கள் கையை விட்டுப் போய்விடும் என்று அரசாங்கம் அஞ்சுகிறது. பல்வேறு புரட்சிகர குழுக்களிடம் கோரிக்கைகளின் பட்டியலை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டது. ஒரு பதினொரு புள்ளி குடிமக்களின் அடிப்படை உரிமைகளை உள்ளடக்கிய சாசனம் நிக்கோலஸ் II க்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த பதினொரு புள்ளிகள் மூலம், 200 ஆண்டுகால முழுமைவாதிக்கு ஒரு பள்ளம் ஏற்பட்டது ரோமானோவ் ஆட்சி.

## 7.4. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்க கேள்விகள் பதில்கள்

1. ரஸ்ஸி.ஃ.பிகேஷன் கொள்கை, அதாவது, மொழிகள், இலக்கியம், மற்றும் ரஷ்யரல்லாத தேசிய இனங்களின் கலாச்சாரம் ரோமானோவ்ஸால் அறிமுகப்படுத்தப்பட்டது சமுதாயத்தில் ஒருவித சீரான தன்மையை உருவாக்கும் முயற்சியில், அதனால் அவர்களின் நிர்வாகப் பணி எளிதாகும்.
2. சர்வாதிகார ஜாரிச ஆட்சி பல புரட்சிகர இயக்கங்களுக்கு வழிவகுத்தது ரஷ்யாவில் நீலிசம், அராஜகம் மற்றும் ஜனரஞ்சகவாதம் போன்றவை.

3. “அக்டோபர் மானி∴பெஸ்டோ“ உரிமையை உள்ளடக்கிய மிகப்பெரிய சீர்திருத்தங்களை உறுதியளித்தது

பேச்சு சுதந்திரம், சங்கம், கூட்டம் மற்றும் பத்திரிகை சுதந்திரம்.

## 7.5. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய பதில் கேள்விகள்**

1. எந்த காரணிகளால் ரஷ்யாவின் மக்கள் முற்றிலும் விரக்தியடைந்தனர் ரோமானோவ் வம்சம்?

2. ரஷ்ய விவசாயிகளின் நிலை எப்படி இருந்தது?

3. எந்த இரண்டு அரசியல் கட்சிகள் மிக முக்கிய பங்கு வகித்தன புரட்சியா?

**நீண்ட பதில் கேள்விகள்**

1. நிக்கோலஸ் காலத்தில் ரஷ்யாவில் சமூக மற்றும் பொருளாதார பின்தங்கிய நிலையை விவரிக்கவும் இரண்டாம் ஆட்சி.

2. 1905 புரட்சிக்கு வழிவகுத்த காரணங்களை விளக்குங்கள்.

## 7.6. கூடுதல் வாசிப்புகள்

Kamenskii, A. and D. Griffiths. 2015. *The Russian Empire in the Eighteenth Century: Tradition and Modernization.* United Kingdom: Taylor & Francis.

Bushkovitch, P. 2011. *A Concise History of Russia*. United States: Cambridge University Press.

Dukes, P. 1998. *A History of Russia: Medieval, Modern, Contemporary, C.882-1996*. United States: Duke University Press.

Boterbloem, K. 2013. *A History of Russia and Its Empire: From Mikhail Romanov to Vladimir Putin*. United States: Rowman & Littlefield Publishers.

Ziegler, C. E. 1999. *The History of Russia. United Kingdom*: Greenwood Press.

# அலகு-8



## 1917 ஆம் ஆண்டு ரஷ்ய புரட்சி

பாட அமைப்பு

8.0 அறிமுகம்
8.1 நோக்கங்கள்
8.2 ரஷ்யப் புரட்சி: காரணங்கள்,
8.2.1. சார்மன்னர்களின் ஏதேச்சதிகாரம்:
8.2.2. முதல் உலகப்போரில் ரஷ்யாவில் பங்கு:
8.2.3. லெனினின் பிரச்சாரம்:
8.3. பிப்ரவரிப் புரட்சியின் போக்கு :
8.4. புதிய அரசு :
8.5. அக்டோபர் புரட்சி
8.6. ரஷ்யப்புரட்சியின் விளைவுகள்:
8.7. லெனினும் ரஷ்யப்புரட்சியும்
8.8. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்
8.9. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
8.10. கூடுதல் வாசிப்புகள்

## 8.0 அறிமுகம்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற வரலாற்று நிகழ்ச்சி களில் முதன்மையானது 1917-ம் ஆண்டில் நடைபெற்ற ரஷ்யப் புரட்சியாகும். இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியைக் காட்டிலும், பிரான்சு நாட்டில் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சியைக் காட்டிலும், அவைகளின் தன்மையிலும் தாக்கத்திலும் அதிக அளவு மாறுதல்களை ஏற்படுத்தியது ரஷ்யப் புரட்சியாகும். இது மனக்குறைவுற்ற ஏழை மக்களின் புரட்சி. பண்பாடற்ற சார்மன்னர் களின் அரசியல் போலித்தனத்திற்கும், பழமைவாதிகளின் குருட்டு நம்பிக்கைகளுக்கும் சமாதி கட்டிய புரட்சி தான் ரஷ்யப் புரட்சி. இது பொதுவுடைமைக் கோட்பாட்டிற்குக் கிடைத்த முதலாவது வெற்றி. இது ரஷ்யாவில் பழைய நாகரிகத்தை ஒழித்து புதிய சமுதாயத்தை

குறிப்பு

ஏற்படுத்தியது. ரஷ்யாவில் மட்டுமல்லாது உலக அரசியலில், பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியது. இந்த பிரிவில், காரணங்கள், பாடநெறி மற்றும் முடிவுகள் பற்றி விவாதிப்போம்

## 8.1 நோக்கங்கள்

இந்த அலகுக்குச் சென்ற பிறகு, உங்களால் முடியும்:

- 1917 ரஷ்யப் புரட்சிக்கான காரணங்களைப் பற்றி விவாதிக்கவும்
- 1917 ரஷ்யப் புரட்சியின் போக்கை விவரிக்கவும்
- 1917 ரஷ்யப் புரட்சியின் முடிவுகளை பகுப்பாய்வு செய்யுங்கள்

## 8.2 ரஷ்யப் புரட்சி: காரணங்கள்,

### 8.2.1. சார்மன்னர்களின் ஏதேச்சதிகாரம்:

ரஷ்ய நாட்டு சார் மன்னர்கள் ஆட்சி வல்லாட்சியாகவேயிருந்தது. இரண்டாம் அலெக்சாந்தர் (1855-1881), முதல் இரண்டாம் நிக்கோலஸ் (18941917) வரை அனைவரது ஆட்சியும் எதேச்சதிகாரத்துக்கும், கொடுங்கோன்மைக்கும் பெயர் பெற்றது. மன்னர்களே அரசியல் தலைவராகவும், சமயத்தலைவராகவும் விளங்கினர். ஏழ்மை யினாலும், நோயினாலும் வாடும் மக்களைப் பற்றிக் கவலை கொள்ள வில்லை. உதட்டளவில் வெளியிடப்பட்டு, பெயரளவில் செயல் படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் மக்களுக்கு எவ்வகையிலும் பலனளிக்க வில்லை. புரட்சிக் கருத்துக்களையும், புதுமை இயக்கங்களையும் இரும்புக்கரம் கொண்டு நசுக்கினார்கள் இந்த சார் மன்னர்கள். அடிக்கடி போர்களில் ஈடுபட்டு அதில் தோல்வியும் அடைந்து நாட்டிற்கு அவமானத்தை ஏற்படுத்தினார்கள். எனவே சார் மன்னர்களின் எதேச் சதிகார ஆட்சி தான் ரஷ்யப் செர்பியத் துறவியின் ஆலோசனைப் படியே ஆட்சி புரிந்தனர். ரஸ்புதின் ஹிப்னாடிச முறையில் நோய்களைக் குணப்படுத்தும் வல்லமை கொண்டவர். இவர் நிக்கோலஸின் மகனை நோயிலிருந்து குணப்படுத்தியதால் அரச குடும்பத்தின் மதிப்புமிக்க நண்பரானார்.

ரஸ்புதின் பொறுப்பும் திறமையும் வாய்ந்த அதிகாரிகளையும் தளபதிகளையும் பதவி நீக்கம் செய்து தனக்குச் சாதகமானவர்களை

அப்பதவியில் அமர்த்தினார். தனக்கு எதிராக எழுந்த எதிர்ப்புகள் அனைத்தையும் ஈவு இரக்கமின்றி நசுக்கினார். ரஷ்ய முடியாட்சியின் சீர்கேட்டிற்கு இந்த “கிறுக்குத்துறவியே“ காரணம் என்று உயர்குடியினர் நம்பினர். எனவே ரஸ்புதினை ஒழித்துக் கட்டத்திட்டம் தீட்டினர். பல கொலை முயற்சிகட்குத் தப்பிய ரஸ்புதீன் 1916 டிசம்பர் 17-ல் படுகொலை செய்யப்பட்டார். இதனால் கோபமடைந்த நிக்கோலஸ் மககளைக் கொடுமைப்படுத்தினார். எனவே மக்கள் அரசுக்கெதிராகப் புரட்சியில் ஈடுபட்ட னர்.

### 8.2.2. முதல் உலகப்போரில் ரஷ்யாவில் பங்கு:

முதல் உலகப்போரில் ரஷ்யா நேச நாடுகளின் ஆதரவில் ஜெர்மனியை எதிர்த்துப் போரிட்டது. ஆனால் போரில் ரஷ்யா ஈடுபட்டதின் விளைவுகளை மக்கள் நேரடியாக அனுபவிக்க வேண்டியதாயிற்ற. சண்டையிட்ட ரஷ்யப்படைகள் பல இடங்களில் தோல்வியடைந்தது. இது சார் ஆட்சியின் பலவீனத்தை வெளிப் படுத்தியது. அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏறியது. பயிரிடுவோரே போர்க்களமும் செல்லவேண்டியதிருந்ததால் உணவுப் பொருட்களின் உற்பத்தி குறைந்தது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததால் தொழில்துறை உற்பத்தியும் சரிந்தது. படையில் பணி புரிய பலர் மறுத்தனர். படை வீரர்களின் மனவலிமையும், உடல் வலிமையும் குன்றியது. எனவே அவர்கள் புரட்சியாளர்களோடு சேர்ந்து கொண்டு மன்னரை எதிர்த்தார்கள். புரட்சி ஆரம்பமானது.

### 8.2.3. லெனினின் பிரச்சாரம்:

கார்ல் மார்க்ஸின் கொள்கைகளைப் பின்பற்றிய ரஷ்ய புரட்சியாளர் லெனின் ஆவார். இளமையிலேயே அறிவுக் கூர்மையும் நீல்லொழுக்கமும் நிரம்பப் பெற்றவர். மார்க்சிய சிந்தனைகளை ஆழ்ந்து படித்த லெனின் “சார் மன்னர்களின் கொடுங்கோன்மையிலிருந்து ரஷ்ய நாட்டை விடுவிக்க வேண்டுமானால் பாட்டாளி மக்களை ஒன்று திரட்டி ஒரு சோசலிசப் புரட்சியை நடத்துவதின் மூலமே முடியும்““ என்ற முடிவுக்கு வந்தார். தூங்கிக் கிடந்த ரஷ்ய சமுதாயத்தை தனது புரட்சிக் கருத்துக்கள் மூலம் தட்டி எழுப்பினார். பொதுவுடமை சமுதாயத்தை ரஷ்யாவில் ஏற்படுத்த அயராது உழைத்தார். இவரது புரட்சிக்

குறிப்பு

கருத்துக்களை விரும்பாத அரசாங்கம் லெனினை நாடு கடத்தியது. வெளிநாடுகளில் இருந்து கொண்டே ரஷ்ய

ரஷ்யப் புரட்சி மக்களைப் புரட்சிக்கு ஆயத்தப்படுத்தினார். முதல் உலகப் போர் நடந்து கொண்டிருந்த சமயத்தில், நாட்டில் அதிர்ப்தி மேலோங்கி இருந்த சமயம் பார்த்து சிங்கம் போல ரஷ்யாவினுள் நுழைந்து புரட்சியை ஏற்படுத்தினார். போர்வீரர்கள் போர் செய்ய மறுத்தனர். தொழிலாளர் வேலை செய்ய மறுத்தார்கள். புரட்சி வெடித்தது.

## 8.3. பிப்ரவரிப் புரட்சியின் போக்கு :

ரஷ்யப் புரட்சி இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. முதல் புரட்சி 1917 பிப்ரவரி மாதம் 23-ம் தேதி தொடங்கியது. அப்போது 6,70,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். கலகங்கள், தெருக் கிளர்ச்சிகள், விவசாயிகளின் போராட்டங்கள், ஊர்வலங்கள் என சங்கிலித் தொடராக நடைபெற்றன. பெட்ரோகிரேட் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். பிப்ரவரி 27-ம் தேதி பெட்ரோகிரேட் தொழிலாளர்களுடன் மன்னரின் படைகள் சேர்ந்து கொண்டன. புரட்சிப் படையினர் தங்கள் துப்பாக்கிகளை மன்னராட்சி மீது திருப்பினர். பிப்ரவரி 28-ல் பெட்ரோகிரேட் நகர் முழுவதும் புரட்சியாளர் கட்டுப்பாட்டில் வந்தது. ஒரு தற்காலிக சட்டமன்ற ஆட்சிக்குழு அமைக்கப்பட்டது. அதில் மென்சிவிக்குகளும், சமதர்மப் புரட்சியாளர்களும் பெரும்பான்மையினராக இருந்தனர்.

சட்டமன்றப் பிரதிநிதிகள் இரண்டு பேர் நிக்கோலஸைச் சந்தித்து பதவி துறக்குமாறு வற்புறுத்தினர். 1917 மார்ச் 2-ம் தேதி மாலை தனது சகோதரர் மைக்கேலை அரசராக நியமித்து விட்டு முடிதுறப்புப் பத்திரத்தில் கையெழுத்திட்டார். அப்பத்திரத்தைக் கொண்டு வந்த பிரதிநிதி தலைநகர் திரும்பியபோது “மன்னர் மைக்கேல் நீடுழி வாழ்க“ என்றார். இதைப்பற்றி ட்ராட்ஸ்கி குறிப்பிட்ட போது, ”முடியாட்சியை வெகுவேகமாக நாடு வாந்தி எடுத்து விட்டது. அது மீண்டும் மக்கள் பதவியை ஏற்க மறுத்துவிட்டார். இவ்வாறு முதல் புரட்சியில் ரஷ்யாவில் மன்னர்களின் பரம்பரை ஆட்சி முடிவுற்றது. மார்க்ஸிய கருத்துக்களும்

ஜனநாயகக் கருத்துக்கட்கு மிடையிலான ஒரு மிதவாக கருத்துக் கொண்ட அரசு ஏற்படுத்தப்பட்டது.

குறிப்பு

## 8.4. புதிய அரசு :

1917, மார்ச் 3-ம் தேதி ஜார்ஜ் லிவாவ் தலைமையில் தற்காலிக அரசு ஒன்று பதவி ஏற்றது. மில்யு கோவ் வெளிநாட்டு அமைச்சராகவும், குக்கோவ் போர்த்துறை அமைச்சராகவும் தரஸ்செங்கோ நிதியமைச்சராகவும், நெக்ரசோவ் செய்தித்துறை அமைச்சகராகவும், பெட்ரோகிரேட் சோவியத்தின் துணைத் தலைவரான கெரன்ஸ்கி நீதித்துறை அமைச்சராகவும் பதவி ஏற்றனர். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி போன்ற நட்பு நாடுகள் இந்த அரசாங்கத்தை அங்கீகரித்தன.

ஆனால் இந்த அரசு பெட்ரோகிரேட் சோவியத்துடன் இணைந்தே செயல்பட வேண்டும் என்று கூறப்பட்டது. நாடெங்கிலும் “சோவியத்“ என்ற அமைப்புகள் உருவாயின. அரசின் ஆணைகளை நடை முறையில் செயல்படுத்தும் அதிகாரம் இந்த சோவியத்களிடமே இருந்தது. ஆட்சி பீடத்தில் அமர்ந்த தாரளத் தன்மைக் கொண்ட புதிய அரசு எதையும் செயலாற்றிடும் வகையின்றி இருந்தது. சமுதாயத்தைக் கட்டுபாட்டில் வைக்கத் தவறியது. படையினரின் ஒழுங்கும் கட்டுப் பாடும் சீர்குலைந்து போயிற்று. இச்சூழ்நிலையில் மில்யுகோவ், குக்கோவ் ஆகியோர் ராஜினாமா செய்துவிட்டனர். அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்ட போது ஆறு பேர் இடம் பெற்றனர். அதில் கெரன்ஸ்கி, தரஸ் செங்கோ , நெக்ரசோவ் ஆகியோரேவலிமை பெற்றிருந்தனர்.

புதிய போர்த்துறை அமைச்சரான கெரன்ஸ்கி சிறந்த சொற்பொழிவாளர், நல்ல வழக்கறிஞர். தனது மின்காந்தச் சொற்பொழிவுகள் மூலம் மக்களைக் கவர்வதில் வல்லவர். ஆட்சியில் அமர்ந்தவர்களிடையே வேற்றுமையும், குழப்பமும் காணப்பட்ட போது கெரன்ஸ்கி பிரபலமானார். பிரதமர் ஜார்ஜ் லிவாவ் பதவி விலகிய பின் கெரன்ஸ்கி புதிய பிரதமரானார். அக்டோபர் புரட்சியின் போது ரஷ்ய பிரதமராக இருந்தவர்கெரன்ஸ்கி ஆவார்.

## 8.5. அக்டோபர் புரட்சி :

குறிப்பு

ரஷ்யாவில் இரண்டாவது புரட்சி 1917 அக்டோபரில் ஏற்பட்டது. இதுதான் அக்டோபர் புரட்சி என்றும், கம்யூனிசப் புரட்சி என்றும் அழைக்கப்படுகிறது. ஆட்சி பீடத்தில் அமர்ந்த தாராளத் தன்மை கொண்ட புதிய மிதவாத அரசு எளிதில் செயலாற்றிடும் வகையின்றி இருந்தது. சுவிட்சர்லாந்திலிருந்த லெனின் 1917, மார்ச் 27-ல் புறப்பட்டு ஏப்ரல் 3-ம் தேதி பெட்ரோகிரேட் வந்து சேர்ந்தார். “சமதர்மப்புரட்சி வாழ்க“ என்ற முழக்கத்துடன் உரை நிகழ்த்தினார்.

புதிய அரசாங்கத்தில் மக்கள் அதிக நம்பிக்கை வைக்கவில்லை . முதல் உலகப்போரைத் தொடர்ந்து நடத்தியது புதிய அரசு, போர் வீரர்கள் சலிப்படைந்தனர். போர் நீடித்ததின் காரணமாக மீண்டும் உணவுப் பஞ்சமும் உற்பத்தித் தடையும் ஏற்பட்டன. அரசாங்கத்தின் மிகுந்த வெறுப்பை லெனின் தலைமையிலான இடது சாரி அமைப்பான போல் சிவிக்குகள் பயன்படுத்திக் கொண்டனர். மக்களுக்கு சமாதானம், உணவு, நிலம் (ீநயஉந, டீசநயன யனெ டுயனெ) ஆகியவற்றை வழங்குவதாக வாக்குறுதி அளித்தனர். தொழிலாளர் களின் அரசை அமைப்பதாகக் கூறினார் லெனின். ”மிதவாதிகளின் ஜனநாயகமும், பாராளுமன்றமும், குடியரசும் நமக்குத் தேவை யில்லை. நமக்கு வேண்டிய அரசாங்கம் விவசாயிகளாலும் தொழிலாளர்களாலும் தான் அமைக்கப்பட வேண்டும்““ என்றார்.

டிராட்ஸ்கி என்பவர் பெட்ரோகிரேட் சோவியத்தின் தலைவர், இவர் லெனின் கொள்கைகளின் தீவிர ஆதரவாளராக மாறினார். கெரன்ஸ்கியின் ஆட்சியைக் கடுமையாக சாடினார். பெட்ரோகிரேடில் அமைக்கப்பட்ட ராணுவப்புரட்சிக் குழுவுக்கு அவர் தலைவரானார். புதிய புரட்சிக்கான ஏற்பாடுகளை டிராட்ஸ்கியே விரைந்து செயலாற்றினார்.

அக்டோபர் 2-ம் தேதி பெட்ரோகிரேட் வந்த லெனின் புரட்சியை உடனடியாகத் துவக்கினார். அக்டோபர் 24-ம் தேதி ஆயுதம் தாங்கிய 25,000 போல்சிவிக் கட்சியினர் புரட்சியில் கலந்து கொண்டனர். புரட்சியின் மையமான குளிர்கால மாளிகை தாக்கப்பட்டது. அரசாங்க படைகள் புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டன. கெரன்ஸ்கி தப்பி ஓடினார். மாளிகை வீழ்ந்தது. இதுவே அக்டோபர் புரட்சியாகும். தொழிலாளர்களின் சர்வாதிகார அரசு“ ஒன்று லெனின் தலைமையில்

அமைக்கப் பட்டது. இவ்வாறு உலகத்தின் முதல் கம்யூனிச அரசாங்கம் தோன்றியது.

**குறிப்பு**

## 8.6. ரஷ்யப்புரட்சியின் விளைவுகள்:

1. ரஷ்யாவில் பரம்பரை மன்னராட்சி ஒழிக்கப்பட்டது. 1918ஜூலை 16ம் தேதி கடைசி மன்னரான இரண்டாம் நிக்கோலசும் அவரது குடும்பத்தினரும் கொலை செய்யப்பட்டனர்.
2. இதுவரை கொள்கையளவிலேயே இருந்து வந்த “பொது உடமைத் தத்துவம்“ முதல் முதலாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. கார்ல்மார்க்ஸின் தத்துவங்களின் அடிப்படையில் ரஷ்யாவில் அரசியல் பொருளாதார மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.
3. ரஷ்யாவில் தொழிலாளர்களின் நிலை உயர்ந்தது. அவர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெற்றார்கள். கூட்டுப் பண்ணை விவசாயம் மூலம் உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட்டது.
4. எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று உலக அளவில் ரஷ்யா மாபெரும் வல்லரசாக விளங்குவதற்கு ரஷ்யப்புரட்சிவழி வகுத்தது.
5. கம்யூனிசக் கருத்துக்களை உலகம் முழுவதும் பரப்புவதற்கு ரஷ்யா பல வழிகளைக் கையாண்டது. அதன் விளைவாக உலக நாடுகள் கம்யூனிச நாடுகள் என்றும் முதலாளித்துவ நாடுகள் என்றும் இரு அணியாகப் பிரிந்தது.
6. பொதுவுடைமை இயக்கத்திற்கு எதிராக பல இயக்கங்கள் தோன்றின. இத்தாலியில் பாசிசமும், ஜெர்மனியில் நாசிசமும் கம்யூனிசத்தை எதிர்த்துத் தோன்றின.
7. இறுதியாக ரஷ்யப்புரட்சியின் விளைவாக ரஷ்யாவில் அறியாமை ஒழிக்கப்பட்டு புதிய சமுதாயம் அமைக்கப்பட்டது. விஞ்ஞானம் மற்றும் கலைத்துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது.

## 8.7. லெனினும் ரஷ்யப்புரட்சியும்:

லெனின் தன்னுடைய கருத்துக்களைப் பரப்ப பத்திரிக்கை ஒன்று ஆரம்பிக்க நினைத்தார். அதன் விளைவாக “இஸ்க்ரா “ சாரியா ஆகிய பத்திரிக்கைகள் முறையே 1900, 1909 ஆகிய ஆண்டுகளில்

வெளிவந்தது. அதில் மார்க்ஸிய கருத்துக்களை வெளியிட்டு வந்தார். 1917பிப்ரவரியில் ரஷ்யாவில் மென்ஸ்விக் புரட்சி ஏற்பட்ட போது லெனின் சுவிட்சர்லாந்தில் இருந்தார். ஜெர்மனியின் ஆதரவுடன் 1917 ஏப்ரல் 16-ம் தேதி பெட்ரோகிரேட் வந்து சேர்ந்தார். மறுநாள் போல்சிவிக் கட்சியினருக்கு ஒரு புதிய திட்டத்தை வெளியிட்டார். அதற்கு ““ஏப்ரல் குறிப்புகள்““ என்று பெயர். அதில் கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

““முதலாளித்துவம் சார்ந்த மாகாண அரசுகளுக்கு அதிகாரம் அளித்தல் கூடாது எல்லா அதிகாரங்களும் சோவியத்துகள் கையில் கொடுக்கப்படவேண்டும். போரில் ரஷ்யா தோல்வியடைந்ததால் போரிலிருந்து விலகவேண்டும். நிலச்சுவான்தார்களின் நிலங்கள் எடுக்கப்பட்டு நிலமற்ற விவசாயிகட்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு தொழிற்சாலை நிர்வாகங்களில் பங்களிக்க வேண்டும். ரஷ்யாவில் வாழும்பல தரப்பட்ட இனத்தவர் களுக்கு சுய நிர்ணய உரிமை கொடுக்கப்படவேண்டும்.““

இந்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்ட வேண்டுமானால் புரட்சியின் மூலம் அரசியல் அதிகாரங்கள் அனைத்தும் போல்சிவிக்குகள் கைக்குக் கிடைக்கவேண்டும் என்றார் லெனின். இவருடைய தலைமையில் 1917 அக்டோபர் 25-ல் கெரன்ஸ்கி தலைமையிலான மிதவாத அரசு தூக்கி எறியப்பட்டது. புதிய அரசாங்கம் லெனின் தலைமையில் அமைக்கப் பட்டது. ட்ராட்ஸ்கி வெளியுறவு கமிஷனராகவும், லெனினின் சீடரும், பிராவ்தா பத்திரிக்கையின் முதல் எடிட்டருமான ஸ்டாலின் தேசிய இனங்களின் தலைவராகவும் புதிய அரசில் பங்கேற்றனர். இவ்வாறு உலகத்தின் முதல் கம்யூனிச அரசு நிறுவப்பட்டது.

## 8.8. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1. ரஷ்யப் புரட்சிக்கான உடனடி காரணம் என்ன?
2. டுமாவின் தலைவர்கள் எப்போது அரியணையைத் துறக்க இரண்டாம் நிக்கோலஸ் ஜாருக்கு நோட்டீஸ் அனுப்பினார்கள்?
3. ‘ஜூலை நாட்கள்’ என்றால் என்ன?
4. போல்ஷிவிக் புரட்சியின் விளைவுகள் என்ன?

## 8.9. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

குறிப்பு

**குறுகிய பதில் கேள்விகள்**

1. அக்டோபர் 1917 போல்ஷிவிக் புரட்சிக்கு வழிவகுத்த நிகழ்வுகள் பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதுங்கள்.
2. ரஷ்யப் புரட்சியின் முக்கியத்துவம் என்ன?

**நீண்ட பதில் கேள்விகள்**

1. 1917 பிப்ரவரி புரட்சியில் விளைந்த முதல் உலகப் போர் ரஷ்யாவில் ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றி விவாதிக்கவும்.
2. ஜார் நிக்கோலஸ் II அகற்றப்பட்ட பிறகு, அரசின் அதிகாரம் இப்போது இரட்டைக் கைகளில் இருந்தது. விவாதிக்கவும்.

## 8.10. கூடுதல் வாசிப்புகள்

Kamenskii, A. and D. Griffiths. 2015. *The Russian Empire in the Eighteenth Century: Tradition and Modernization.* United Kingdom: Taylor & Francis.

Bushkovitch, P. 2011. *A Concise History of Russia*. United States: Cambridge University Press.

Dukes, P. 1998. *A History of Russia: Medieval, Modern, Contemporary, C.882-1996*. United States: Duke University Press.

Boterbloem, K. 2013. *A History of Russia and Its Empire: From Mikhail Romanov to Vladimir Putin*. United States: Rowman & Littlefield Publishers.

Ziegler, C. E. 1999. *The History of Russia. United Kingdom*: Greenwood Press.

# அலகு 9

குறிப்பு

# லெனின் கீழ் ரஷ்யா

பாட அமைப்பு

9.0 அறிமுகம்
9.1 நோக்கங்கள்
9.2. நிக்கோலாய் லெனின்
9.2.1.வாழ்க்கைக் குறிப்பு:
9.2.2. லெனினும் ரஷ்யப்புரட்சியும்:
9.3. லெனினின் உள்நாட்டுக் கொள்கை
9.3.1. புதிய ஆணைகள்
9.3.2. உயர்குடியினரின் உரிமை ஒழிக்கப்பட்டது:
9.3.3. லெனினும் உள்நாட்டுப் போரும்:
9.3.4. போர் பொதுவுடைமை :
9.3.5. லெனின் புதிய பொருளாதாரக் கொள்கை :
9.4. லெனினின் வெளிநாட்டுக் கொள்கை :
9.4.1. பிரஸ்ட்-லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை 1918 :
9.4.2. ரஷ்யாவில் தலையிட்ட அந்நியப்படைகளுடன் போர்:
9.4.3. இங்கிலாந்து ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் உடன்படிக்கை :1921
9.4.4. ரப்பெல்லோ உடன்படிக்கை 1922
9.4.5. அண்டை நாடுகளுடன் சமாதான உறவு
9.5. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்
9.6 சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
9.7. கூடுதல் வாசிப்புகள்

## 9.0 அறிமுகம்

ரஷ்ய கம்யூனிஸ்ட் புரட்சியாளர் விளாடிமிர் லெனின் காலத்தில், போல்ஷிவிக் கட்சி அக்டோபர் புரட்சி என்று அழைக்கப்படும் சதி மூலம் ரஷ்ய குடியரசில் ஆட்சியைக் கைப்பற்றியது. ஏற்கனவே இருந்த

தற்காலிக அரசாங்கத்தை தூக்கியெறிந்த பிறகு, போல்ஷிவிக்குகள் ஒரு புதிய நிர்வாகத்தை நிறுவினர். லெனினை அதன் ஆளும் தலைவராக கொண்ட மக்கள் ஆணையர்கள். லெனின் பல சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார், அதாவது ரஷ்யா அல்லாத நாடுகளுக்கு இடையே மறுபங்கீடு செய்வதற்காக நிலத்தை பறிமுதல் செய்தல், தங்களை சுதந்திரமாக அறிவிக்க, தொழிலாளர் உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் கல்விக்கான அணுகலை அதிகரித்தல். இந்த பிரிவில், உள்நாட்டுப் போர், போர் பற்றி விவாதிப்போம் கம்யூனிசம், மற்றும் லெனினின் புதிய பொருளாதாரக் கொள்கை.

## 9.1 நோக்கங்கள்

இந்த அலகுக்குச் சென்ற பிறகு, உங்களால் முடியும்:

- ♦ லெனினின் கீழ் உள்நாட்டுப் போரைப் பற்றி விவாதிக்கவும்
- ♦ லெனினின் கீழ் போர் கம்யூனிசத்தின் கருத்தை விவரிக்கவும்
- ♦ லெனினின் புதிய பொருளாதாரக் கொள்கையை பகுப்பாய்வு செய்தல்

## 9.2. நிக்கோலாய் லெனின்

### 9.2.1.வாழ்க்கைக் குறிப்பு:

ரஷ்யப் புரட்சியின் சிற்பியான லெனின் 1870, ஏப்ரல் மாதம் 10-ம் தேதி ரஷ்யாவிலுள்ள வோல்கா நதியருகிலுள்ள “சிம்பிரிஸ்க்“ என்ற ஊரில் பிறந்தார். இவரது இயற்பெயர் “விளாடிமிர் இலியச்யூலியனோவ்“ ஆகும். மிகவும் சாதாரணக் குடும்பத்தில் பிறந்த லெனினுக்கு இரண்டு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உண்டு. இவரது சகோதரர் அலெக்சாந்தர் என்பவர் சார் இரண்டாம் நிக்கோலசைக் கொல்லச் சதி செய்ததாகக் கூறி 1887-மார்ச்சில் தூக்கிலிடப்பட்டார். இந்த நிகழ்ச்சி லெனின் மனதில் ஆறாத புண்ணாகி விட்ட து.

”தனிப்பட்ட மனிதர்களின் பயங்கரவாதத்தின் மூலம் சமுதாயத்தில் எந்த மாற்றத்தையும் கொண்டுவர முடியாது““ என்ற கருத்து அவரது மனதில் ஆழமாகப் பதிந்தது. ஒரு அமைப்பு அல்லது நிறுவனத்தை ஏற்படுத்தி அதன் மூலம் அதிகாரத்தைப் பெற்று சமுதாய மாற்றத்தைக் கொண்டுவர முடியும்““ என்று உணர்ந்தார்.

தனது சகோதரன் இறந்த ஆறு மாதம் கழித்து ஹாசன் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயில 1887-ல் சேர்ந்தார். ஆனால் மாணவர்களுடன் சேர்ந்து கொண்டு போராட்டத்திலும், ராக்கிங்கிலும் பங்கு கொண்டார் என்று கூறி வெளியேற்றப்பட்டார். எனவே 1890-ல் பீட்டர்ஸ்பர்க் பல்கலைக்கழகத்தில் ஒரு வெளி மாணவராகச் சேர்ந்து படித்து 1881-ல் பட்டம் பெற்றார். ஆனால் சட்டப்பயிற்சியில் ஈடுபடாமல் மார்க்ஸியக் கருத்துக்களை ஆழமாகக் கற்றார். “தொழிலாளர்களின் வர்க்கப்போராட்டம்“ பற்றி படித்துணர்ந்தார்.

லெனினின் மனைவியின் பெயர் “நடேஷ்டா கான்ஸ்டான்டிநோவா கிருப்ஸ கயா என்பதாகும். இவர் எழுதிய “ஆநஅழசைள“ என்ற புத்தகத்திலிருந்து லெனினைப் பற்றிய பல உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம். 1895-ல் பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தார் லெனின். அந்த நாடுகளில் தொழிலாளர் விடுதலைக்கான போராட்ட சங்கம்“ ஒன்றை அமைத்தார். எனவே கைது செய்யப்பட்டார். 1897-ல் சைபீரியாவுக்கு மூன்று ஆண்டு நாடு கடத்தப்பட்டார். 1900 ஜனவரியில் லெனின் நாடு திரும்பினார். அப்போது அவருக்கு வயது முப்பது ஆகும். தனது இயற்பெயரை விட்டு விட்டு 1900, பிப்ரவரியில் தான் “நிக்கோலாய் லெனின்“ என்று பெயரை மாற்றிக் கொண்டார். 1900-ம் ஆண்டு முதல் 1917 வரை ஸ்விட்சர்லாந்தை தலைமையிடமாக வைத்துக் கொண்டு ரஷ்யாவில் மார்க்ஸிய கருத்துக்களைப் பரப்பி வந்தார். 1917-ஏப்ரல் மாதம் ரஷ்யாவுக்குத் திரும்பி வந்து புரட்சிக்கு தலைமை வகித்தார்.

இவரது முயற்சியின் காரணமாகவே ரஷ்யாவில் மன்னர் ஆட்சி தூக்கி எறியப்பட்டு பாட்டாளி மக்களின் அரசாங்கம் நிறுவப்பட்டது. இவரது தலைமையில் பதவி ஏற்ற கம்யூனிச அரசாங்கம் ரஷ்யாவில் பல மாற்றங்களை ஏற்படுத்தி ரஷ்யாவை ஓர் உலக வல்லரசாக்கியது.

### 9.2.2. லெனினும் ரஷ்யப்புரட்சியும்:

லெனின் தன்னுடைய கருத்துக்களைப் பரப்ப பத்திரிக்கை ஒன்று ஆரம்பிக்க நினைத்தார். அதன் விளைவாக “இஸ்க்ரா “ சாரியா) ஆகிய பத்திரிக்கைகள் முறையே 1900, 1909 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்தது. அதில் மார்க்ஸிய கருத்துக்களை வெளியிட்டு வந்தார். 1917பிப்ரவரியில் ரஷ்யாவில் மென்ஸ்விக் புரட்சி ஏற்பட்ட போது லெனின்

சுவிட்சர்லாந்தில் இருந்தார். ஜெர்மனியின் ஆதரவுடன் 1917 ஏப்ரல் 16-ம் தேதி பெட்ரோகிரேட் வந்து சேர்ந்தார். மறுநாள் போல்சிவிக் கட்சியினருக்கு ஒரு புதிய திட்டத்தை வெளியிட்டார். அதற்கு “ஏப்ரல் குறிப்புகள்““ என்று பெயர். அதில் கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

““முதலாளித்துவம் சார்ந்த மாகாண அரசுகளுக்கு அதிகாரம் அளித்தல் கூடாது எல்லா அதிகாரங்களும் சோவியத்துகள் கையில் கொடுக்கப்படவேண்டும். போரில் ரஷ்யா தோல்வியடைந்ததால் போரிலிருந்து விலகவேண்டும். நிலச்சுவான்தார்களின் நிலங்கள் எடுக்கப்பட்டு நிலமற்ற விவசாயிகட்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு தொழிற்சாலை நிர்வாகங்களில் பங்களிக்க வேண்டும். ரஷ்யாவில் வாழும்பல தரப்பட்ட இனத்தவர் களுக்கு சுய நிர்ணய உரிமை கொடுக்கப்படவேண்டும்.““

இந்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்ட வேண்டுமானால் புரட்சியின் மூலம் அரசியல் அதிகாரங்கள் அனைத்தும் போல்சிவிக்குகள் கைக்குக் கிடைக்கவேண்டும் என்றார் லெனின். இவருடைய தலைமையில் 1917 அக்டோபர் 25-ல் கெரன்ஸ்கி தலைமையிலான மிதவாத அரசு தூக்கி எறியப்பட்டது. புதிய அரசாங்கம் லெனின் தலைமையில் அமைக்கப் பட்டது. ட்ராட்ஸ்கி வெளியுறவு கமிஷனராகவும், லெனினின் சீடரும், பிராவ்தா பத்திரிக்கையின் முதல் எடிட்டருமான ஸ்டாலின் தேசிய இனங்களின் தலைவராகவும் புதிய அரசில் பங்கேற்றனர். இவ்வாறு உலகத்தின் முதல் கம்யூனிச அரசு நிறுவப்பட்டது.

## 9.3. லெனினின் உள்நாட்டுக் கொள்கை :

(லெனின் ரஷ்யாவுக்கு ஆற்றிய பணிகள் )

புரட்சியின் போது லெனின் தான் அளித்த வாக்குறுதியைச் செயலாக்கும் வண்ணம் புதிய திட்டங்களை அறிவித்தார். தனது கொள்கை கோட்பாடுகளை இடையூறின்றிச் செயல்படுத்தினார்.

### 9.3.1. புதிய ஆணைகள் :

முதலாவதாக, வரிசையாகப் பல ஆணைகள் வெளியிடப்பட்டது. அவைகளின்படி தனியாரின் பண்ணைகள், மன்னரின் குடும்பப்

பண்ணைகள், திருச்சபை நிலங்கள் நாட்டுடமை ஆக்கப்பட்டது. நிலமனைத்தும் மறு பங்கீட்டுக்கு உட்படுத்தப்பட்டு சமத்துவ முறையில் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டது. அனைத்துத் தொழிற்சாலைகளிலும் எட்டு மணி நேர வேலை, அனைவருக்கும் இலவசக்கல்வி ஆகியவை பற்றி ஆணை வெளியிடப் பட்டது. சமுதாயத்தில் நிலவிய ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட்டன. வங்கிகளும், பங்கு மாற்றுக்களங்களும் நாட்டுடமையாக்கப்பட்டன. ஆண்களைப் போலவே பெண்களும் சம உரிமைகள் பெற்றனர்.

### 9.3.2. உயர்குடியினரின் உரிமை ஒழிக்கப்பட்டது:

லெனின் உயர் குடியினர் அனுபவித்து வந்த தனி உரிமைகளை அறவே வெறுத்தவர். எனவே அவர்களை அறவே ஒழிக்க நினைத்து "செக்கா" (Cheka) என்ற அமைப்பின் மூலம் வன்முறையை அவர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்டார். எண்ணற்ற உயர்குடியினர் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் ஆதிக்கம் அறவே ஒழிக்கப்பட்டது. 1922-ம் வருடத்தில் மட்டும் சுமார் 50,000 பேர் செக்கா அமைப்பினால் கொல்லப்பட்டனர். அடுத்த வருடமே இந்த செக்கா அமைப்பு கலைக்கப்பட்டு அதற்குப் பதிலாக ஒக்பு (முபீரு) என்ற புதிய அமைப்பு உருவாக்கப்பட்டது. இதில் 45,000உளவு ஏஜெண்டுகள் பணியாற்றினர்.

### 9.3.3. லெனினும் உள்நாட்டுப் போரும்:

ட்ராஸ்கியின் முயற்சியால் விவசாயிகளையும் தொழிலாளர்களையும் கொண்ட செஞ்சேனை ஒன்று அமைக்கப்பட்டது. லெனின் தனது அடக்குமுறையின் மூலம் தனது அதிகாரத்தை நிலை நாட்டினார். ஒடுக்கப்பட்ட ராணுவத் தலைவர்களும், உயர் குடியினரும் ஒன்று சேர்ந்து புதிய புரட்சி அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள். அவர்களுக்கு, ரஷ்யாவில் புதிய கம்யூனிச அரசு வளர்வதை விரும்பாத மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகள் உதவி செய்தன. எதிர் புரட்சியாளர்களின் தலைவரான அலக்சயேவ், பழைய மன்னர்களின் படை அதிகாரிகளையும் வீரர்களையும் கொண்ட வலிமையானதோர் படையை உருவாக்கினார். அதற்கு "வெண்சேனை" என்று பெயர். ஆனால் ட்ராட்ஸ்கியினால் உருவாக்கப்பட்ட "செஞ்சேனை" இந்த எதிர்ப்புகளை

உறுதியாக ஒடுக்கியது. வெண்சேனை தோற்கடிக்கப்பட்டது. எதிர்ப்புரட்சி அடக்கப்பட்டது.

குறிப்பு

### 9.3.4. போர் பொதுவுடைமை :

உள்நாட்டுக் குழப்பங்களை முடிவுக்குக் கொண்டு வரவும், நாட்டின் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், லெனின் பின்பற்றிய தீவிர நடவடிக்கைகள் “போர் பொதுவுடைமை“ எனப்பட்டது. இதன் விளைவாக ரஷ்யா ஒரு ராணுவக் கூடாரமாக மாறியது. போர்ப் பொதுவுடைமையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

ரஷ்யாவில் புதிய விவசாயச் செல்வந்தர்கள் “குலக்குகள்“ (முரடயமளசஉைா ீநயளயவெள) என்றழைக்கப்பட்டனர். அவர்கள் தங்களிடம் மீதியிருந்த உணவுப் பொருட்களை விற்க மறுத்ததன் மூலம் அரசை நெருக்கடிக்குத் தள்ளினர். குலக்குகளின் தான்தோன்றித் தனமான போக்கை எதிர்க்கவும் அவர்களின் சுரண்டலிருந்து ஏழை விவசாயி களைக் காக்கவும், தடையின்றி உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்யவும், ஆயிரக்கணக்கான தொண்டர்கள் தொலைதூரக் கிராமங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

சிறுதொழில்கள், கைத்தொழில்கள் தேசிய உடைமையாக்கப் பட்டன. மக்கள் அனைவரும் தங்கள் தேவைக்கு அதிகப்படியான உற்பத்திப் பொருட்களை அரசாங்கத்தினால் நிர்ணயிக்கும் விலைக்கு அரசிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படிக் கொடுக்காதவர்கள் புரட்சியின் எதிரிகளாகக் கருதப்பட்டனர்.

ரஷ்யாவில் சுதந்திரமான அமைதியான தனி வியாபாரம் தடை செய்யப்பட்டது. உற்பத்தி, பகிர்வு ஆகிய அனைத்திலும் தேசிய உடைமை புகுத்தப்பட்டது. தொழிலாளர்கட்குச் சமத்துவ அடிப்படையில் கூலி வழங்கப்பட்டது. கூலி பொருட்களாகக் கொடுக்கப்பட்டது. உழைக்காத வர்களுக்கு உணவு இல்லை என்பதே போர்ப் பொதுவுடமைக் காலத்தின் முக்கியக் குறிக்கோளாக விளங்கியது. தொழிற்சங்கங்களின் உரிமைகள் நசுக்கப்பட்டன. மக்களின் அரசாங்கம் என்று கருதப்பட்டதால் வேலை நிறுத்தம் சட்ட விரோதம் என்று கூறப்பட்டது! போர்ப் பொதுவுடமைக் கருத்துக்கள் மூலம் ரஷ்யாவில் தொழிலாளர்களின் சர்வாதிகார அரசு நிறுவப்பட்டது.

## 9.3.5. லெனின் புதிய பொருளாதாரக் கொள்கை :

லெனின் எதிர்பார்த்த அளவு போர்ப்பொதுவுடைமைக் கொள்கை வெற்றியடையவில்லை. ரஷ்ய ரூபிளின் மதிப்பு குறைந்தது. விலைவாசி உயர்ந்தது. தொழிலாளர்களிடம் அதிருப்தி ஏற்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் இறந்தனர். எனவே போர்ப் பொதுவுடைமைக் கொள்கையை விலக்கி, "புதிய பொருளாதாரக் கொள்கை" யை அறிவித்தார் லெனின்.

அதன்படி விவசாயிகளிடம் கட்டாயக் கொள்முதல் நிறுத்தப் பட்டது. வெளிச்சந்தையில் தங்கள் உபரி தானியங்களை விற்க உரிமை கொடுக்கப்பட்டது. விவசாயிகள் தங்கள் நிலத்தைப் பிறருக்குக் குத்தகைக்கு விடலாம். விவசாயத் தொழிலாளர்களைக் கூலியாட் களாகவும் அமர்த்திக் கொள்ளலாம். ஏழை விவசாயிகட்கு வரிச் சலுகைகளும் அளிக்கப்பட்டன. இச்சலுகையெல்லாம் தனியுடமைக் கொள்கையின் பிரதிபலிப்பாக இருந்தாலும், நாட்டின் எதிர்கால நலனில் லெனின் கொண்டிருந்த நம்பிக்கையே இது காட்டியது.

தொழில்துறை நிர்வாகிகள் தங்கள் தொழிற்சாலை உற்பத்தி பொருட்களின் விற்பனையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்ள சலுகைகள் அளிக்கப்பட்டன. சிறு தொழில்கள் சில தனியார் துறையில் செயல்பட அனுமதிக்கப்பட்டது. அதன் விற்பனையும் தனியார் துறையைச் சேர்ந்த வணிகர்களே மேற்கொள்ளலாம். இதன் மூலம் தொழில்துறை நிலைமை ஓரளவு சீரடைந்தது புதிய பொருளாதாரக் கொள்கை நுகர்வோர் கூட்டுறவு களின் இயங்கும் தன்மையையும் மாற்றியமைத்தது. போர்ப் பொதுவுடைமை காலத்தில் அவை உணவு அமைச்சகத்தின் கட்டுப் பாட்டில் இயங்கின. இப்போது அவை நேரடியாக அனைத்து உற்பத்திப் பொருட்களை வாங்கவும், நகர, கிராமப்புறங்களில் விற்பனை செய்யவும் அனுமதிக்கப்பட்டது.

சீர்திருத்தப்பட்ட நாட்டு நாணயம் நிலை நிறுத்தப்பட்டதால் ரூபிளின் வாங்கும் சக்தி உயர்ந்தது. அரசு வங்கியும், கடன்முறையும், தடையற்ற பொருளாதார நடமாட்டமும் மீண்டும் உயிர் பெற்றன. தனியார் துறையிலும், அரசுத் துறையிலும் இயங்கிய நிறுவனங்களின் போட்டியைத்தவிர்க்கவும், உற்பத்தியை அதிகரிக்கவும், அனைத்து

நிறுவனங்களின் இணைப்புச் செயல்களின் மூலம் பொருளாதாரக் கட்டுக் கோப்பினைக் காக்கவும் புதிய "தேசீயத்திட்டக்குழு" ஒன்று அமைக்கப்பட்டது. இதுவே வரலாற்றில் புகழ்பெற்ற "காஸ்பிளான்"" (புழளியைெ) என்பதாகும். லெனின் இந்த நடவடிக்கைகள் மூலம் ரஷ்யப் பொருளாதாரம் சீர்திருத்தி விரைவிலேயே சுயபலத்தில் செயலாற்றும் வலிமையைப் பெற்றது.

## 9.4. லெனினின் வெளிநாட்டுக் கொள்கை :

### 9.4.1. பிரஸ்ட்-லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கை 1918 :

லெனின் பதவியேற்றதும் எடுத்த முக்கியமான நடவடிக்கை முதல் உலகப்போரில் ரஷ்யாவை ஈடுபடாமல் விலக்கிக் கொண்டதேயாகும். புரட்சியின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதியை இவ்வாறு நிறைவேற்றினார். 1917, அக்டோபர் 26-ம் தேதி அரசாங்க ஆணை ஒற்றை வெளியிட்டு ஜெர்மனியுடன் போர் நிறுத்த உடன்பாட்டை செய்தார். பின்னர் பல எதிர்ப்புகளையும் மீறி ஜெர்மனியுடன் 1918, மார்ச் 3-ம் தேதி "பிரஸ்ட்லிட்டோவ்ஸ்க்"" உடன்படிக்கையை தனது நம்பிக்கைக்குரிய ட்ராட்ஸ்கி மூலம் செய்து கொண்டார். இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் மிகக் கடுமையானதாக இருந்தாலும் நாட்டின் நலன் கருதி ஏற்றுக்கொண்டார்.

இந்த உடன்படிக்கைப்படி ரஷ்யா, போலந்து, பின்லாந்து, லிதுவேனியா, எஸ்தோனியா, பெஸ்ஸரோபியா, பைலோரஷ்யா ஆகிய பகுதிகளை இழந்தது. பின்லாந்து, உக்ரெய்ன் பகுதிகளின் விடுதலையை அங்கீகரித்தது. 300 மில்லியன் தங்க ரூபிள் நாணயம் ஜெர்மனிக்கு இழப்பீடாக கொடுக்க சம்மதித்தது. இவ்வாறு இந்த உடன்படிக்கையின் மூலம் 13 லட்சம் சதுர மைல் நிலப்பரப்பை ரஷ்யா இழந்தது. நாட்டின் 34 சதவீத மக்கள் தொகையையும் 90 சதவீத நிலக்கரி வளங்களையும், 32 சதவீத விவசாய நிலங்களையும் இழந்தது. ஆனாலும் பின்னர் உலகப்போரில் ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டதால் இந்த உடன்படிக்கை நடைமுறைப் படுத்தப்படவில்லை .

### 9.4.2. ரஷ்யாவில் தலையிட்ட அந்நியப்படைகளுடன் போர்:

பிரஸ்ட்-லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கையை விரும்பாத மேலை நாடுகள் ரஷ்யா மீது கோபம் கொண்டன. மேலும் ரஷ்யாவில் வளர்ந்து வரும் கம்யூனிசக் கொள்கைகளை நசுக்க விரும்பின. எனவே அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் நாடுகளின் கூட்டுப் படைகள் ரஷ்யாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 1918 மார்ச் மாதம் இந்தக் கூட்டுப் படைகள் ஆர்க் ஏஞ்சல் துறைமுகத்தைக் கைப்பற்றி ரஷ்யாவுக்குள் புகுந்தது. ஜப்பானியப்

படை ஒன்று விளாடி வாஸ்டாக் நகரைத் தாக்கியது. இவ்வாறு ரஷ்யாவின் நட்பு நாடுகளே ரஷ்யா மீது போர் தொடுத்தது. ஆனால் தேசப்பற்று மிகுந்த "செஞ்சேனை" (சுநன யசஅல) நேசப்படைகளை எதிர்த்து பெரும் வெற்றி பெற்றது.1920-க்குள் ரஷ்யா மீது போர் தொடுத்த அனைத்துப் படைகளையும் தோற்கடித்துப் பின்வாங்கச் செய்தார். லெனின், செஞ்சேனை வென்றது. இது லெனினின் மாபெரும் சாதனையாகும்.

### 9.4.3. இங்கிலாந்து ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் உடன்படிக்கை :1921

1921 -ல் லெனின் இங்கிலாந்துடன் வியாபார உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டார். அதன்படி இங்கிலாந்து ரஷ்யாவை அங்கீகரித்தது. அதே ஆண்டு ஜெர்மனியுடனும் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி ஒருவருக்கொருவர் போர் தொடுப்பதில்லை என்றும், பழைய உடன்படிக்கைகள் செல்லத்தக்கவையல்ல என்றும் முடிவு எடுத்தனர்.

### 9.4.4. ரப்பெல்லோ உடன்படிக்கை 1922

இந்த உடன்படிக்கை ரஷ்யாவுக்கும் ஜெர்மனிக்குமிடையே ஏற்பட்டதாகும். இதன்படி முதல் உலகப்போரின் விளைவாக ஒருவருக்கொருவர் போர் இழப்பீடு கேட்பதில்லையென்றும், தங்கள் நாடுகளுக்கிடையே ராஜதந்திர உறவை ஏற்படுத்திக் கொள்வது என்றும் முடிவு எடுத்தன. இந்த உடன்படிக்கை உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தது.

குறிப்பு

### 9.4.5. அண்டை நாடுகளுடன் சமாதான உறவு

லெனினின் தலைமையிலான ரஷ்யா, அண்டை நாடுகளுடன் சமாதான உறவை ஏற்படுத்தியது. 1921-ல் தனது அண்டை நாடுகளான பின்லாந்து, லிதுவேனியா, எஸ்தோனியா ஆகிய நாடுகளின் சுதந்திரத்தை அங்கீகரித்தார் லெனின். போலந்துடனும் சமாதான உறவை ஏற்படுத்தினார் லெனின். பல கிழக்கத்திய நாடுகளுடனும் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். 1921 பிப்ரவரியில் பெர்சியாவுடனும், ஆப்கானிஸ்தானுடனும், மார்ச் மாதம் துருக்கி நாட்டுடனும் உடன்படிக்கை செய்து கொண்டார். இவருடைய வெளிநாட்டுக் கொள்கையின் விளைவாக பல நாடுகள் ரஷ்யாவை அங்கீகரித்தன. உலக அரங்கில் ரஷ்யாவின் செல்வாக்கு பெருகியது.

**லெனின் பற்றிய மதிப்பீடு**

நாட்டுப் பணியே உயிர்மூச்சென வாழ்ந்த லெனினின் உடல் நலம் பாதித்தது. வாத நோய் அவரைத் தாக்கியது. சிறிது சிறிதாக உடல் நிலைமோசமாகி 1924 ஜனவரி 21-ம் தேதி தன்து 53-ம் வயதில் லெனின் உயிர் நீத்தார். அவரது நினைவாக பெட்ரோகிரேடு நகருக்கு லெனின்கிரேடு என்று பெயர் சூட்டப்பட்டது. அவரது உடல் பதப்படுத்தப்பட்டு செஞ்சதுக்கத்திலுள்ளமியுசியத்தில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

கம்யூனிசப் புரட்சியை வெற்றிகரமாக நடத்தியவர் லெனின். சோவியத் யூனியன் என்ற கூட்டு அரசை நிறுவினார். புதிய பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றி நாட்டின் உற்பத்தியைப் பெருக்கினார். புரட்சிக்குப் பின் ஏற்பட்ட நெருக்கடியான நிலையை வெற்றிகரமாகச் சமாளித்து 1918 முதல் 1924 வரை நிலையான ஆட்சியை அமைத்தார். உலக அரங்கில் ரஷ்யாவுக்கு உன்னதமான நிலையைப் பெற்றுத் தந்தார். இவரது வெற்றிக்குக் காரணமாக இருந்தவை “வலிமை மற்றும் ஒழுக்கம் நிறைந்த கம்யூனிசக் கட்சி, திறமை வாய்ந்த ரகசியக் காவல் துறை, தேசப்பற்று மிகுந்த செஞ்சேனை ஆகியவையாகும்.

## 9.5. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1. லெனினின் கீழ் அரசாங்கத்தின் அடிப்படை அலகு எது?

2. சேகாவின் நோக்கம் என்ன?

குறிப்பு

## 9.6 சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய பதில் கேள்விகள்**

1. போர் கம்யூனிசம் என்ற வார்த்தையின் மூலம் நீங்கள் என்ன புரிந்துகொள்கிறீர்கள்?
2. லெனின் ஆட்சியின் போது செய்யப்பட்ட மாற்றங்கள் என்ன?

**நீண்ட பதில் கேள்விகள்**

1. லெனினின் புதிய பொருளாதாரக் கொள்கை (N.E.P) பற்றி விவாதிக்கவும்.
2. லெனின் காலத்தில் உள்நாட்டுப் போரின் நோக்கம் மற்றும் காரணங்களை விவரிக்கவும்.

## 9.7. கூடுதல் வாசிப்புகள்

Kamenskii, A. and D. Griffiths. 2015. *The Russian Empire in the Eighteenth Century: Tradition and Modernization.* United Kingdom: Taylor & Francis.

Bushkovitch, P. 2011. *A Concise History of Russia*. United States: Cambridge University Press.

Dukes, P. 1998. *A History of Russia: Medieval, Modern, Contemporary, C.882-1996*. United States: Duke University Press.

Boterbloem, K. 2013. *A History of Russia and Its Empire: From Mikhail Romanov to Vladimir Putin*. United States: Rowman & Littlefield Publishers.

Ziegler, C. E. 1999. *The History of Russia. United Kingdom*: Greenwood Press.

# பிளாக் - IV

# ஐந்தாண்டு திட்டங்கள் மற்றும் USSR

## அலகு -10

## ஸ்டாலின்

குறிப்பு

பாட அமைப்பு

10.0 அறிமுகம்
10.1 நோக்கங்கள்
10.2. ஸ்டாலினின் கீழ் ரஷ்யா
10.2.1. வாழ்க்கைக் குறிப்பு
10.3. பதவிப் போட்டி
10.3.1. லெனினின் ஒரே நாட்டில் சமதர்மம்
10.3.2. டிராட்ஸ்கியின் உலகப்புரட்சி :
10.3.3. மாபெரும் களையெடுப்பு
10.3.4. தனித்தலைவர் வழிபாட்டுக் கொள்கை
10.4. ஐந்தாண்டுத்திட்டங்கள் : (1928 - 41)
10.4.1. ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கம்
10.4.2. தொழில் மயமாக்கப்படுதலின் அவசியம் :
10.4.3. கூட்டுப்பண்ணை வேளாண்மையின் அவசியம் :
10.5. முதல் ஐந்தாண்டுத் திட்டம் : (1928 அக் - 1932 டிசம்பர்)
10.5.1. குறிக்கோள்கள் :
10.5.2. கூட்டுப்பண்ணை செயல்முறை :
10.6. இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் (1933 - 1937)
10.6.1. நோக்கங்கள் :
10.6.2. சாதனைகள்
10.7. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1938 - 1941)
10.7.1. இதன் சாதனைகள் :
10.8. 1918-ம் ஆண்டு அரசியலமைப்பு
10.9. 1924-ம் ஆண்டு அரசியலமைப்பு

10.10. 1936-ம் ஆண்டு அரசியலமைப்பு
10.10.1. 1936-ம் ஆண்டு அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்:
10.10.2. கூட்டாட்சி இயல்புகள்
10.10.3. பாராளுமன்றம்
10.10.4. அமைச்சரவை
10.10.5. தலைமைச் செயற்குழு
10.10.6. தேர்தல் முறை
10.10.7. நீதித்துறை
10.10.8. மக்களின் அடிப்படை உரிமைகளும் கடமைகளும்
10.10.9. ஒரு கட்சி முறை
10.11. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்
10.12. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
10.13. கூடுதல் வாசிப்புகள்

## 10.0 அறிமுகம்

1920களின் இரண்டாம் பாதியில், கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருக்கும் எதிர்க்கட்சிக் கூறுகளுக்கு எதிராக பொலிஸ் அடக்குமுறையைப் பயன்படுத்துவதன் மூலம் ஜோசப் ஸ்டாலின் முழுமையான அதிகாரத்தைப் பெறுவதற்கான களத்தை அமைத்தார். வற்புறுத்தல் இயந்திரம் முன்பு போல்ஷிவிசத்தின் எதிர்ப்பாளர்களுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்தப்பட்டது, கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக அல்ல. முதலில் பாதிக்கப்பட்டவர்கள் பொலிட்பீரோ உறுப்பினர்களான லியோன் ட்ரொட்ஸ்கி, கிரிகோரி ஜினோவ்வ் மற்றும் லெவ் கமெனேவ் ஆகியோர் 1927 இன் இறுதியில் தோற்கடிக்கப்பட்டு கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டனர். பின்னர் ஸ்டாலின் நிகோலாய் புகாரினுக்கு எதிராக திரும்பினார். செலவில் கட்டாய கூட்டு மற்றும் விரைவான தொழில்மயமாக்கல் கொள்கை

விவசாயிகள். 1934 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஸ்டாலின் தனது தலைமைக்கு சாத்தியமான அனைத்து எதிர்ப்பையும் அகற்றினார் மற்றும் கட்சி மற்றும் மாநில இரண்டிற்கும் சவாலற்ற தலைவராக இருந்தார். ஆயினும்கூட, அவர் கட்சி தரவரிசை மற்றும் கோப்புகளை தூய்மைப்படுத்தவும், பரவலான கைதுகள் மற்றும் மரணதண்டனைகள்

மூலம் முழு நாட்டையும் பயமுறுத்தவும் செய்தார். 1936-1938 இல் ஸ்டாலினின் முன்னாள் போல்ஷிவிக் எதிர்ப்பாளர்களின் மோசமான நிகழ்ச்சி சோதனைகள் மற்றும் 1937 மற்றும் 1938 இல் அதன் உச்சத்தை எட்டிய பெரும் பயங்கரவாதத்தின் போது, மில்லியன் கணக்கான அப்பாவி சோவியத் குடிமக்கள் தொழிலாளர் முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர் அல்லது சிறையில் கொல்லப்பட்டனர். 1939-ல் பயங்கரவாதம் தணிந்த நேரத்தில், ஸ்டாலின் தனது ஆட்சிக்கு முற்றிலும் அடிபணியும் நிலைக்கு கட்சியையும் பொதுமக்களையும் கொண்டு வர முடிந்தது. சோவியத் சமுதாயம் அணுவாயுதமாக இருந்தது மற்றும் மக்கள் பழிவாங்கும் பயத்தில் வெகுஜன கைதுகள் தேவையில்லை. இரண்டாம் உலகப் போர் முழுவதும் சோவியத் யூனியனின் முழுமையான சர்வாதிகாரியாக ஸ்டாலின் ஆட்சி செய்தார், மார்ச் 1953 இல் அவர் இறக்கும் வரை. இந்த பிரிவில், இலக்குகள் மற்றும் சாதனைகள் பற்றி படிப்போம். ஸ்டாலினின் ஐந்தாண்டு திட்டங்கள் மற்றும் 1936 அரசியலமைப்பு.

## 10.1 நோக்கங்கள்

இந்த அலகுக்குச் சென்ற பிறகு, உங்களால் முடியும்:

- ஸ்டாலின் காலத்தில் விவசாயம் மற்றும் தொழில்துறையில் செய்த சாதனைகளை பட்டியலிடுங்கள்
- ஸ்டாலினின் முதல் மற்றும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை விவாதிக்கவும்
- 1936 அரசியலமைப்பில் வரைவு செய்யப்பட்ட முக்கிய புள்ளிகளை விவரிக்கவும்

## 10.2. ஸ்டாலினின் கீழ் ரஷ்யா

லெனின் இறந்த பிறகு நாட்டையார் ஆட்சி செய்வது என்ற ஆதிக்கப் போட்டி கட்சித்தலைவர்களிடையே ஏற்பட்டது. இந்தப் பதவிப் போட்டியில் விவேகத்துடன் செயல்பட்டு வெற்றி பெற்றார் ஜோசப் ஸ்டாலின். ஆட்சிப் பொறுப்பேற்ற ஸ்டாலின் தொழிலாளர்களின் சர்வாதிகார ஆட்சியை ஆரம்பித்தார். புதிய திட்டங்கள் பல

உருவெடுத்தன. சாதாரண நிலையிலிருந்த ஒரு விவசாய நாடான சோவியத் ரஷ்யாவை தொழில் மயமான நாடாக்கி உலக வல்லரசாக மாற்றினார். எனவேதான் இவர் நவீன ரஷ்யாவின் சிற்பி என்று போற்றப்படுகிறார்.

**10.2.1. வாழ்க்கைக் குறிப்பு:**

ஜோசப் ஸ்டாலின் ஜார்ஜியா மாநிலத்தில் திப்லிஸ் அருகிலுள்ள கோரி என்ற இடத்தில் 1879 டிசம்பர் 21-ல் பிறந்தார். இளமையில் திப்லிஸில் உள்ள சமயப் பள்ளியில் பயின்றார். 1898-ல் சமூக ஜனநாயகக் கட்சியில் சேர்ந்து பணியாற்றிய போது 1902-ல் இர்குட்சுக்கு நாடு கடத்தப்பட்டார். 1904-ல் சிறையிலிருந்து தப்பியவர் தலைமறைவாகவே அரசியல் பணிகள் ஆற்றினார்.

1905-ல் லெனினைச் சந்தித்த பின் அவரது உற்ற தோழர்களில் ஒருவரானார். 1905-ல் நடைபெற்ற புரட்சியின் போது அதில் தீவிரமாகப் பங்கு கொள்ளவில்லை யென்றாலும் புரட்சியாளர்களுக்கு பணம் திரட்டி உதவி செய்தார். 1907-ல் லண்டனில் நடைபெற்ற மாநாட்டில் கட்சியின் சார்பாக கலந்து கொண்டார். கம்யூனிசக் கட்சியின் அதிகாரப்பூர்வ செய்தித் தாள் பிராவ்டாவின் முதல் பதிப்பாளர் ஆனார்.

1913-ல் கிராகோவில் கூடிய போல்ஸ்விக் மத்தியக்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட போது லெனின் ஆலோசனைவின்படி" மார்க்சியமும் தேசிய இனக்கேள்வியும்" என்ற சிறிய நூலை எழுதினார். 1913-லிருந்து மூன்றாண்டு வரைசைபீரியாவில் சிறைவாழ்வு கிடைத்தது. 1917- மார்ச் மாதம் பெட்ரோகிரேட் திரும்பிய போது கட்சிப் பணிகளை கவனிக்கக் கூடிய மூத்த தலைவராக பணிகளை கவனிக்கக் கூடிய மூத்தத்தலைவராக விளங்கினார். ஏப்ரல் 3-ம் தேதி லெனின் ரஷ்யா வந்து சேரும் வரை அவரது தலைமையிலேயே கட்சிப்பணிகள் நடைபெற்றன.

1917 அக்டோபர் புரட்சிக்குப் பிறகு லெனின் தலைமையில் அமைக்கப்பட்ட அரசில் தேசிய இனங்களின் அமைச்சராக நியமிக்கப் பட்டார். லெனின் தலைமையில் கட்சித் திட்டங்களை திறமையுடனும்இ நேர்மையுடனும் செயல்படுத்தினார். 1918இ 1924-ம் ஆண்டுகளில் அரசியல் அமைப்புகள் உருவாக்கப்படஸ்டாலின் பெரிதும் காரணமானார்.

குறிப்பு

ரஷ்யாவில் உள்நாட்டுப் போர் ஏற்பட்ட போது லெனினின் போர்த்துறை பொறுப்பாளர்களுள் ஒருவராகப் பணியாற்றினார். சாரிட்சின் என்ற நகரில் நடைபெற்ற போரில் செஞ்சேனையை உற்சாகப்படுத்தி வெண் சேனையை தோற்கடித்தார். இந்த சாதனையைப் பாராட்டி 1923-ல் அந்த நகருக்கு ஸ்டாலின் கிராடு என்று பெயர்சூட்டப்பட்டது.

1922-ல் நடைபெற்ற 11-வது கட்சி மாநாட்டில் ஸ்டாலின் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். இதுவே அவரது வாழ்வின் திருப்பு முனையாக அமைந்தது. பொதுச் செயலாளரான பிறகு ஒரு வருடத்திற்குள் கட்சியை தனது நேரடி கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தார்.

பெரும்பாலான போல்ஸ்வில் தலைவர்களைப் போலல்லாமல் ஸ்டாலின் குறைந்த அளவு கல்வியே பெற்றிருந்தார். திறமையாக கட்சிப் பணியாற்றியதால் லெனின் நம்பிக்கைக்குரியவரானார். புரட்சிக்காக தன்னையே அர்ப்பணித்தார் என்றாலும்இ அதிகாரத்தை அடையும் வழியும் அதனைத் தொடர்ந்து தன்னிடமே தக்கவைத்துக் கொள்ளும் திறனும் படைத்தவர்.

பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களில் ஸ்டாலின் ஒருவர் மட்டுமே மத்தியக் குழுஉறுப்பினராகவும்இ கட்சி நிறுவனப்பிரிவு உறுப்பின ராகவும்இ தலைமைச் செயலக உறுப்பினராகவும்இ அமைச்சராகவும்இ பொதுச் செயலாளராகவும் இருந்தவர். நாட்டின் வளர்ச்சியிலும் முழுப்பங்கு பெற்றிருந்த ஸ்டாலின் இரும்பு மனிதர் என்று அழைக்கப்பட்டார்.

## 10.3. பதவிப் போட்டி:

1924 ஜனவரி 21-ல் லெனின் மறைந்த பிறகு கட்சியில் ஆதிக்கம் செலுத்த விரும்பிய டிராட்ஸ்கிஇ சினோவ்யேவ்இ காமனேவ் ஆகியோருக் கிடையே கடும் போட்டி ஏற்பட்டது. இதில் டிராட்ஸ்கியும்இ ஸ்டாலினும் கொள்கை அளவில் இருதுருவங்களாக இருந்தனர்.

### 10.3.1. லெனினின் ஒரே நாட்டில் சமதர்மம் :

லெனினும் அவரது ஆதரவாளர்களும் “ஒரே நாட்டில் சமதர்மம்“ என்ற கொள்கையை முன் வைத்தனர். அதாவது ரஷ்யாவில்

நடத்தப்பட்ட சோசலிச பரிசோதனை வெற்றி பெற வேண்டுமென்றால் முதலில் அதிக மக்கள் தொகையையும்இ இயற்கை வளத்தையும்இ நிலப்பரப்பையும் கொண்ட ரஷ்யாவில் கம்யூனிசம் நிலைநாட்டப்பட வேண்டும் என்றார். மேலும் தொழிற்துறை நல்ல முறையில் வளர வேண்டுமானால் விவசாயிகளின் நல்வாழ்வு அவசியம் என்றார்.

### 10.3.2. டிராட்ஸ்கியின் உலகப்புரட்சி :

ஆனால் டிராட்ஸ்கி மாறுபட்ட கருத்துக் கொண்டவராக காணப்பட்டார். ரஷ்யாவில் சமதர்மம் நிலைத்து நிற்க வேண்டுமானால் உலகத் தொழிலாளர் களின் ஒன்றுபட்ட புரட்சி அவசியம் என்றார். உலகப் புரட்சி ஏற்படாவிட்டால் ரஷ்யாவில் கம்யூனிச ஆட்சி அழிந்து விடும் என்றார். மேலும் புதிய பொருளாதாரக் கொள்கையின்படி அமைக்கப்பட்ட சுதந்திரச் சந்தைகளுக்குப் பதிலாக தொழிற்துறை பெரும் பங்கு பெறும் படியான திட்டமிட்ட பொருளாதார அமைப்பை உருவாக்க வேண்டு மென்றும் கூறினார்.

சர்ச்சைக்குரிய இந்த இரு கருத்துக்களையும் கட்சியின் முடிவுக்கு விடப்பட்டது. கட்சி ஸ்டாலின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டது. கட்சியின் இந்த முடிவால் டிராட்ஸ்கி வலிமையிழந்தார்.

இதன் பிறகு ஸ்டாலின் தனது எதிரியான டிராட்ஸ்கியை வீழ்த்தும் முயற்சியில் ஈடுபட்டார். 1925-ல் போர்த்துறை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். 1926-ல் பொலிட்பீரோ உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். 1928-ல் நாடு கடத்தப்பட்டார். இறுதியில் 1940-ல் ரஷ்ய உளவாளி ஒருவனால் மெக்சிகோவில் கொல்லப்பட்டார் டிராட்ஸ்கி.

டிராட்ஸ்கியை ஒழித்துக்கூடிய அதே சமயம் தனது ஆதரவாளர்களாக இருந்து இப்போது எதிர்ப்பாளர்களாக மாறிவிட்ட சினோவ்யேவ்இ காமனேவ் ஆகியோரையும் ஒழித்துக் கூட்டத் துணிந்தார். பொலிட் பீரோவின் உயர் உறுப்பினர் பொறுப்பிலிருந்து காமனேவ் பதவி இறக்கம் செய்யப்பட்டார். லெனின் கிரேடு கட்சி அமைப்பின் முக்கியப் பொறுப்பிலிருநது சினோவ்யேவ் நீக்கப்பட்டார். 1927-ல் இந்த இருவரும் மத்தியக் குழுவினருந்தும் நீக்கப்பட்டனர்.

**குறிப்பு**

எல்லா எதிர்ப்பாளர்களையும் களை எடுத்த பிறகு எவரும் ஏனென்று கேட்க முடியாத நிலைக்கு உயர்ந்து விட்ட ஸ்டாலின்இ அதிகார வர்க்கத்தின் ஆதரவோடும்இ கட்சி உறுப்பினர்களின் துணையுடனும் தொழிலாளர்களின் சர்வாதிக்கார ஆட்சியைத் தொடங்கினார்.

### 10.3.3. மாபெரும் களையெடுப்பு :

1930-ம் ஆண்டுகளில் ஸ்டாலின் தனது அரசியல் பகைவர்கள் எல்லோரையும் தீர்த்துக் கட்டிவிட ஒரு திட்டத்தைத் தீட்டினார். தனது ஆட்சியையும்இ கொள்கைகளையும் எதிர்ப்பவர்கள் எவராயினும் சரி அவர்களைப் பூண்டோடு அழித்து விடுவதே அதன் நோக்கமாகும். இதனைத் தான் மாபெரும் களையெடுப்பு என்று குறிப்பிடுகின்றனர். களையெடுப்பு படலம் 1934-ல் ஆரம்பமானாலும் அவரது நெருங்கிய நண்பரும் லெனின் சிராகுவின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான ஜெர்ஜி கொலை செய்யப்பட்ட பின்னரே தீவிரமடைந்தது. அவர் கொலை செய்யப்பட்டதைக் கேள்விப்பட்டு ஆத்திரமடைந்த அவரது இடது வலது சாரிகளான சந்தேகத்துக்குரிய ஆயிரம் முன்னாள் சார் மன்னரின் அதிகாரிகளைச் சுட்டுக் கொன்றார்.

அதன் பின்னர் விசாரணை என்ற நாடகத்தை நான்கு ஆண்டுகள் திறமையாக அரங்கேற்றி தனது எதிரிகள் என்று சந்தேகப் படும் அனைவரையும் கூண்டிலேற்றி சதி செய்ததாகவும்இ கொலை செய்ததாகவும்இ சேதம் விளைவித்ததாகவும்இ புரட்சிக் கொள்கைகளுக்கெதிராக செயல்பட்ட தாகவும் கூறி தண்டிக்கப்பட்டனர்.

இந்த மாபெரும் களையெடுப்பின் போது பல ராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் கட்டாயத் தொழில் முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். இந்த களையெடுப்பு படலம் 1939-ல் ஒரு முடிவுக்கு வந்தது. இக்களையெடுப்பிற்குப் பிறகு ரஷ்யாவில் எஞ்சியிருந்தது கம்யூனிஸ்ட் கட்சி அல்லஇ மாறாக ஸ்டாலின்கட்சியே ஆகும்.

### 10.3.4. தனித்தலைவர் வழிபாட்டுக் கொள்கை :

ஸ்டாலின் அரசையும் கட்சியையும்இ ஒரே சமயத்தில் கட்டுப்படுத்த விரும்பினார். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்த

குறிப்பு

போதே தனது விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டார். பின்னர் தான் பிற்காலத்தில் தன்னிகரில்லாத் தலைவனாக தான் மதிப்பிடவேண்டும் என்று விரும்பினார். எனவே மக்களின் வெற்றியை தனது வெற்றியாக மாற்ற முயன்றார் ஸ்டாலின்.

1934-ல் கம்யூனிஸ்ட் கட்சியின் 17-வது மாநாடு கூடிய போது தனித் தலைவரின் வழிபாட்டுக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. நாட்டுக்கும் கட்சிக்கும் திட்டங்களின் வெற்றிக்கும் அவர் ஆற்றிய தொண்டு மட்டுமே வானளாவப் புகழப்பட்டது. லெனின் வகுத்த வழியிலிருந்தும் வழுவிய அவர் கட்சியின் கூட்டுத் தலைமையைக் கட்டிக் காப்பதற்குப் பதிலாக தன் பதவியைப் பயன்படுத்தி தனது நிலையை மட்டுமே நன்கு நிலை நாட்டிக் கொள்ள முனைந்தார். அவரது குணவியல்புகளான முரட்டுத்தனம்இ கட்சித் தொண்டர்களை மதியாமைஇ குறை கூறுவோரை இழிவுபடுத்துதல் தனது சொல்லே சட்டம் என்ற எண்ணம் ஆகிய எல்லாமே பல வழிகளிலும் வெளிப்பட்டது.

மாபெரும் களையெடுப்பிற்குப் பிறகு கட்சிப் பணிகளில் நியமிக்கப் பட்ட இளைஞர்கள் உட்கட்சி ஜனநாயக முறையை அறியாதவர்களாக் இருந்தனர். அனைத்து இளைஞர்களுக்கும் ஸ்டாலின் சர்வ வல்லமை படைத்தவர்இ அறிவாற்றல் மிக்கவர்இ அனைத்தையும் அறிந்தவர் அவரது முடிவுகள் தவறுவதில்லை என்று போதிக்கப்பட்டன. பத்திரிக்கைகள் அவரது அறிவாற்றலையும் திறமையையும்இ அவரது விஞ்ஞான அறிவையும் புகழ்ந்துரைத்தன.

அனைத்து அதிகாரங்களையும் பெற்ற ஸ்டாலின் மக்களால் வழிபட ஆரம்பித்தார். ஸ்டாலினைப் புகழ்ந்ததைப் போல எந்த ஒரு தலைவரையும் சோவியத் ரஷ்யாவில் புகழப்படவில்லை. உலகில் தோன்றிய மாபெரும் மேதைஇ தலைசிறந்த கம்யூனிச சிற்பிஇ மகத்தான வெற்றிகளின் தூண் என்றெல்லாம் புகழப்பட்டார். அரசு அலுவலகங்களிலும்இ பொதுக் கட்டிடங்களிலும் ஸ்டாலின் படங்கள் மாட்டப்பட்டன. ரஷ்யாவிலிருந்த பல நகரங்களுக்கு ஸ்டாலின் பெயர் சூட்டப்பட்டது. இவ்வாறு ஸ்டாலின் வழிபாடு ரஷ்யாவில் மிக வேகமாக பரவியது.

இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு இறைவனைப் போன்ற வீரம் உடையவராக கம்யூனிச உலகம் அவரை ஏற்றுக் கொண்டது. இத்தகைய தனி நபர் வழிபாடு பின்னர் அகில கம்யூனிச உலகிலும்

பரவியது. ஆனால் ஸ்டாலின் 1953-ல் மரணமடைந்த பிறகு தனிநபர் வழிபாடு மறைந்தது. கட்சியின் மையக் குழு ஸ்டாலின் கொள்கைகளை மாற்றியமைத்தது. குருச்சேவ் ஆட்சிக் காலத்தில் ஸ்டாலின் கொள்கைகள் அனைத்துமே மாற்றியமைக்கப்பட்டன.

## 10.4. ஐந்தாண்டுத்திட்டங்கள் : (1928 - 41)

எத்தகையப் பின்தங்கிய நாடாயினும் திட்டமிட்டு முன்னேற்ற மடையச் செய்து விடலாம் என்னும் தத்துவத்தை உலகிற்கு நிரூபித்துக் காட்டியவர் ஸ்டாலின் ஆவார். உண்மையிலேயே 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரஷியா ஓர் பின்தங்கிய நாடாகவே இருந்தது. பிற ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும் போது அது 50 அல்லது 100 ஆண்டுகள் பின் தங்கிய நிலையிலிருந்தது. இந்நிலையில் பதவிக்கு வந்த ஸ்டாலின்இ லெனினால் புகுத்தப்பட்ட முதலாளித்துவ சோஷலிச கலப்பு பொருளாதாரத் திட்டமென அழைக்கப்பட்ட புதியப் பொருளாதாரத் திட்டத்தை விலக்கிக் கொண்டார். லெனின் பொருளாதாரக் கொள்கை உண்மையிலேயே விவசாயத் துறையில் பெரும் மாறுதல்களைப் புகுத்தியது. இதனால் விவசாயப் பொருட்களின் உற்பத்திப் பெருகியது. ஆனால் அது தொழில்துறையில் எத்தகைய முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

எனவே இரு துறைகளிலும் மாறுதல்களும்இ உற்பத்திப் பெருக்கமும் ஏற்படுமளவில் லெனின் ஐந்தாண்டு திட்டங்களைக் கொண்டு வந்தார். குறிப்பிட்ட மூலதனத்தைக் கொண்டுஇ குறிப்பிட்டக் காலத்திற்கென திட்டங்களைத் தீட்டி முறையாகச் செயல் பட்டால் ரஷ்யாவின் பின்தங்கிய நிலையை பத்து ஆண்டுகள் காலத்திற்குள்ளாகவே சரிசெய்து விடாலாமென அவர் கணித்தார். முற்றிலுமாக விவசாய நாடாகயிருந்த ரஷ்யாவை ஐந்தாண்டு திட்டங்களின் வாயிலாக உலகில் தொழில்வளமிக்க நாடுகளும் ஒன்றாக மாற்றிக் காட்டிய போது அவரது கணிப்பு உண்மையாயிற்று.

ரஷ்யாவில் வியத்தகு மாறுதல்களை ஏற்படுத்தி அதனை உலக வல்லரசாக நிகழச்செய்ய ஸ்டாலின் மூன்று ஐந்தாண்டு (1928-1941) திட்டங் களைக் கொண்டுவந்தார். 1928-ல் முதல் ஐந்தாண்டுத்திட்டம் அமுல் படுத்தப்பட்ட போது அதனை எதிர்த்தவர்கள் அனைவரையும்

குறிப்பு

கட்சியிலிருந்து வெளியேற்றினார். எனவே எத்தகைய எதிர்ப்புமின்றி தனது திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள அவருக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

### 10.4.1. ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கம் :

சோவியத் ரஷ்யாவை விரைவில் தொழில்மயமான நாடாக மாற்றி உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றும்இ சோஷலிசக் கொள்கைகளை தேசியப் பொருளாதாரத்திலும் புகுத்த வேண்டுமென்றும்இ தொழில் துறையிலும்இ பொருளாதாரத்திலும் அதனை ஏனைய தொழில் வளர்ச்சி யடைந்த நாடுகளைவிட முன்னேற்றமடையச் செய்துஇ முதலாளித்துவக் கொள்கையைவிட சோஷலிசக் கொள்கையே உயர்ந்தது என்பதனை நிலை நாட்டவேண்டுமென்பதாகும். இத்தகைய நோக்கங்களை நடைமுறைப் படுத்திக்காட்ட இரு லட்சிய நோக்கங்களை வகுத்துக் கொண்டார். அவை பின்வருவன : 1. ரஷியாவை தொழில்மயமான நாடாக மாற்றுவது 2. கூட்டுமுறைப்பண்ணையை வேளாண்மையில் புகுத்துவது

### 10.4.2. தொழில் மயமாக்கப்படுதலின் அவசியம் :

சோஷலிசம் என்னும் சொல் முழுக்க முழுக்க தொழில் வளமிக்க சமுதாயத்தைக் குறிப்பதாகும். ஆனால் போல்ஷ்விக்குகள்இ குறிப்பாக லெனின்இ ஸ்டாலின் போன்ற தலைவர்கள் ஆரம்பத்தில் ரஷ்யாவை தொழில் மயமாக்குவதில் நம்பிக்கைக் கொண்டிருக்கவில்லை. எனவே தான் லெனின் அறிவித்தப் புதியப் பொருளாதாரக் கொள்கையின் மூலம் தொழில்துறையில் பெரும்மாறுதல்கள் ஏற்படவில்லை. ஆனால் டிராட்ஸ்கி ரஷ்யாவை தொழில்மயமான நாடாக மாற்றுவதில் மிகுந்த அக்கரை காட்டினார். எனவே அவரை மாபெரும் தொழில் மயமாக்குபவர் என ஸ்டாலின் குறை கூறினார். ஆனால் பிற்காலத்தில் நாட்டில் நிலவிய வேலையில்லாத் திண்டாட்டம்இ நுகர்வோர் பொருட்களின் பற்றாக்குறைஇ மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட தாழ்வு போன்றவைகள் ஸ்டாலின் எண்ணத்தை மாற்றியமைத்தது. அது மட்டுமன்றி ரஷ்யாவை தொழில் மயமான நாடாக மாற்றியமைப்பதன் மூலமே அதனை உலக

குறிப்பு

அரசியலில் உயர்வான நிலையினை அடையச் செய்ய முடியும் என்னும் முடிவுக்கு வந்தார்.

### 10.4.3. கூட்டுப்பண்ணை வேளாண்மையின் அவசியம் :

ரஷ்யாவில் கூட்டுப்பண்ணை வேளாண்மைதுறை அறிமுகப் படுத்துவதற்கு முன்னால் விவசாயிகள் சிறு சிறு துண்டுகளாகக் கிடந்த நிலங்களைப் பயிரிட்டு வந்தனர். மேலும் பழங்கால விவசாயப் பொருட்களின் விலையும் உயர்ந்தது. இதனால் நகரங்களில் தொழில் கூடங்களில் வேலை செய்த தொழிலாளர்கள் உணவுப் பண்டங்கள் கிடைக்காததாலும்இ அதிகவிலை கொடுத்து அவற்றை வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதாலும் அதிருப்தி அடைந்து காணப்பட்டனர். எனவே இவை அனைத்திற்கும் தீர்வு காணும் பொருட்டு கூட்டுப் பண்ணை முறை அமுல்படுத்தப்பட்டது. இம்முறையால் தனியார் நில உடமை அகற்றப்பட்டது. விவசாயத்திற்கு நவீன இயந்திரங்களும்இ விஞ்ஞான முறைகளும் கடைப்பிடிக்கப்பட்டன. அதனால்

1) தனியார் நில உரிமை முறை மறைந்து கூட்டுப்பண்ணைகள் உதயமாயின. இதனால் தனிநபர் உற்பத்திஇ தனிநபர் நில உரிமை ஆகியவைகள் மறைந்தன. போன்றவைகள் தோன்றின. 3) தானிய உற்பத்திப் பெருக்கமும் ஏற்பட்டன. எனவே தான் ஸ்டாலின் ரஷ்யாவை தொழில் மயமான நாடாக மாற்றியமைத்து பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் கூட்டுப் பண்ணை முறையை அமுல்படுத்தி விவசாய உற்பத்தியில் பெரும் மாறுதல்களை கொண்டு வரவும்இ உலக வல்லரசாக ரஷ்யாவை மாற்றிய மைக்கவும் ஐந்தாண்டு திட்டங்களை அறிமுகப்படுத்தினார்.

### 10.5. முதல் ஐந்தாண்டுத் திட்டம் : (1928 அக் - 1932 டிசம்பர்)

1921-ல் நிறுவப்பட்ட “காஸ்பீளான்“ என்ற நாட்டுத் திட்டக்குழுவிடம் நாடு முழுவதும் ஏற்றுக் கொள்ளக்கூடியதொரு பொருளாதாரத் திட்டத்தை வகுக்க கேட்டுக் கொள்ளப்பட்டது. நாட்டின் மூலப்பொருட்கள்இ உற்பத்தியின் இலக்கு ஆகியவற்றைப் பற்றிய சரியான தகவல்களை சேகரித்த பின்னர் ஐந்தாண்டு திட்டங்களை உருவாக்கியது. உடனடியாக அரசு அதனை ஏற்று அமுல்படுத்தியது.

பின்னர் ஏப்ரல் திங்கள் 1929-இல் நடைபெற்ற 16வது கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டின் போது பரிசீலனைக்கு வைக்கப்பட்டது. சில எதிர்ப்புகளுக்குப்பின்னர்கட்சி அதனை ஏற்றுக் கொண்டது.

### 10.5.1. குறிக்கோள்கள் :

பொருளாதாரத்தில் ஏனையத் தொழில்துறையில் வளர்ச்சியடைந்த நாடுகளைவிட ரஷ்யாவை முன்னேற்றமடையச் செய்துஇ முதலாளித்துவக் கொள்கையை விடசோஷலிசக் கொள்கையே உயர்வானது என்பதனை நிலை நாட்ட வேண்டுமென்பதே இதன் முக்கியக் குறிக்கோள். இதனை மனதிற் கொண்டு பின்வரும் சாதனைகளை நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டுமென முடிவு செய்தது. அவையாவன.

1. ஐந்தாண்டு காலத்திற்குள் தொழில் உற்பத்தியை இருமடங்காகப் பெருக்க வேண்டும். 2. மின்சார உற்பத்தியை ஐந்துமடங்காகப் பெருக்கவேண்டும்.

3. நிலக்கரிஇ இரும்புஇ எ∴கு போன்றவற்றின் உற்பத்தியை இரண்டு மடங்காக உயர்த்த வேண்டும்.

4. நுகர்வோர் பண்டங்களான காலனிஇ பட்டுஇ பருத்திஇ துணி வகைகள்இ சீனி போன்றவற்றின் உற்பத்தியையும் பெருக்க வேண்டுமெனவும் உறுதி பூண்ட னர்.

**திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் அரசிற்கு இருந்த சிரமங்கள் :**

மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்திக் காட்டு வதில் அரசிற்கு இருபெரும் பிரச்சனைகள் இருந்தன.

முதலில் திட்டங்களை நிறைவேற்ற பெருமளவில் மூலதனம் தேவைப் பட்டது. வெளிநாட்டவர்கள் முதலீடு செய்ய பல நிபந்தனைகளை விதித்தனர். எனவே வெளிநாட்டு மூலதனத்தைப் பெறுவது என்பது சிரமமாயிற்று. எனவே லெனின் உள்நாட்டில் பல கட்டுப்பாடுகளை புகுத்தினார்.

இரண்டாவதாக ரஷ்யாவில் போதிய பயிற்சி பெற்ற தொழில் வல்லுனர்கள் காணப்படவில்லை. இதனால் உற்பத்தியின் அளவு பாதிக்கப்படாவிட்டாலும் அதன் தன்மை பாதித்தது.

குறிப்பு

### 10.5.2. கூட்டுப்பண்ணை செயல்முறை :

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் போது "கோல்கோஸ்" எனப்பட்ட கூட்டுப் பண்ணை முறை உருவாக்கப்பட்டது. இதில் 88 முதல் 100 குடும்பங்கள் வரை இடம்பெற்றன. அக்குடும்பங்களுக்குச் சொந்தமான நிலங்களை இணைத்து பண்ணைகளாக மாற்றினர். அவர்களுக்குச் சொந்த மாயிருந்த நிலம்இ விவசாயத்தளவாடங்கள் அனைத்தும் சமூகப் பொது உடமையாக ஆக்கினர். குடியானவர்கள் தங்கள் நிலத்தின் மீதிருந்த உரிமை யினை இழந்தனர். நிலத்தை அவர்கள் சாகுபடி செய்தாலும் அதில் அவர்கள் உரிமை கொண்டாடமுடியாது.

மொத்த விளைச்சலில் ஒவ்வொரு கூட்டுப் பண்ணையும் ஒரு குறிப்பிட்ட அளவு தானியத்தை அரசு நிர்ணயம் செய்யும் விலைக்கு கொடுக்க வேண்டும். எஞ்சிய தானியத்தை வெளியில் விற்கலாம். மாறாக லாபத்தில் அவர்களுக்கு பங்கு கொடுக்கப்பட்டது. விவசாயத்திற்கு தேவையான அனைத்துப் பொருட்களையும் அருகாமை யிலுள்ள அரசு கோல்கோஸ் என்னும் கூட்டுப்பண்ணைகளைத் தவிர "சோவ்க்கோஸ்" என்னும் அரசு பண்ணைகளும் காணப்பட்டன. அங்கு பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டன. சாதனைகள் :

முதல் ஐந்தாண்டுத்திட்டம் அதற்கெனக் குறிப்பிடப்பட்டிருந்த கால கட்டத்திற்குள்ளாகவே முடிவடைந்து விட்டது. மேலும் அது நான்காண்டுகளும் மூன்று மாதங்களும் மட்டுமே நீடித்தன. அதுமட்டுமன்றி அது பல அபாரசாதனைகளையும் நிகழ்த்திக்காட்டியுள்ளது.

1. முதல் ஐந்தாண்டுத் திட்டம் தனது கனரக தொழில் கூடங்களை நாட்டில் நிறுவவேண்டுமென்னும் குறிக்கோளை பூர்த்தி செய்தது. புதிய பல அறிக்கையின்படி கனரக தொழில் வளர்ச்சி 103 சதவிகிதம் அதிகரித்தது என்றும்இ நுகர்வோர் பண்டங்களின் உற்பத்தி 84.9 சதவிகிதம் அதிகரித்தது எனவும்இ எண்ணெய் மற்றும் மின்சார

உற்பத்தியும் கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதும் உண்மையே.

குறிப்பு

2. அடர்ந்த காட்டுப் பகுதிகள் தொழில் கூடங்கள் நிறைந்த பகுதிகளாக மாற்றப்பட்டன. 1500 புதிய தொழில் கூடங்கள் நாட்டில் தோன்றின. அதே போன்று 86இ000 கூட்டுப்பண்ணைகளும் தோன்றின. ஆனால் அரசு வெளியிட்ட புள்ளிவிவரங்கள் முற்றிலும் சரியானவைகள் என ஏற்றுக்கொள்ள முடியாது. எனினும் ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் ரஷ்யாவில் வியத்தகு மாறுதல்கள் ஏற்பட்டன என்பது உண்மை ஆகும்.

அதேவேளையில் முதல் ஐந்தாண்டு திட்டம் சாதனையுடன் சில வேதனைகளையும் உண்டு பண்ணியது. கூட்டுப்பண்ணைகள் அமைக்கப்படுவதை எதிர்த்து விவசாயிகள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். எனவே அரசாங்கம் வன்முறைகளில் ஈடுபட்டவர்களை கட்டுப்படுத்த காவல் துறையின் உதவியை நாடியது. மேலும் குடியானவர்களை கூட்டுப் பண்ணை முறையில் சேர வலுக்கட்டாயப்படுத்தினர். இதனால் சுமார் 5 மில்லியன் மக்கள் நாட்புறப் பகுதிகளிலிருந்து வெளியேறினர். மேலும் விவசாயிகள் தங்களது ஆடு மாடுகளை கோல்கோஸிடம் ஒப்படைப்பதற்கு பதிலாக அவற்றை ஆத்திரத்தால் கொன்று குவித்தனர்.

விவசாயத்திற்கு நவீன இயந்திரக் கலப்பைகள் போன்றவை பயன்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டப்பட்டது. அதே வேளையில் பயிருக்கு தேவையான உரம்இ மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் விநியோகம் செய்ய எத்தகைய நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே பயிர்கள் பெருவாரியாக சேதமடைந்தன.

இத்தகைய முயற்சிகளுக்கு பின்னரும் 1932-33க்கும் இடைப்பட்ட காலத்தில் நாட்டில் கடும்பஞ்சம் நிலவியது. லட்சக்கணக்கான மக்கள் செத்து மடிந்தனர். உற்பத்திப் பெருக்கம் நாட்டில் ஏற்பட்டதே தவிர உற்பத்தியின் தரம் உயரவில்லை . இத்தகைய குறைபாடுகளுக் கிடையிலும் ரஷ்யாவில் ஏற்பட்ட பெரும் முன்னேற்றத்தை ஐரோப்பிய நாட்டவர்களும் அமெரிக்கர்களும் வெகுவாகப் புகழ்ந்தனர். தேசியம் என்னும் அமெரிக்க மாத வெளியீடு “ஐந்தாண்டு கால திட்டத்தை நான்காண்டுகளில் முடிந்து பல சாதனைகளை நிகழ்த்திக் காட்டியுள்ளது““ என புகழ்ந்தது.

குறிப்பு

## 10.6. இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் (1933 - 1937)

முதல் ஐந்தாண்டுத் திட்டம் இட்ட வலுவான அடிப்படையின் மேல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் எழுப்பப்பட்டது. எனினும் அதில் காணப்பட்ட தவறுகள்இ சாதனைகள் மற்றும் தோல்விகள் ஆகியவைகள் மனதிற்கொள்ளப்பட்டன.

மேலும் அவைகள் அனைத்துமே திட்டத்தை உருவாக்கியவர்களின் வழிகாட்டியாகவும் இருந்தன. மேலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உயர்வான அரசியல்இ பொருளாதார நோக்கங்களின் அடிப்படையில் தீட்டப்பட்டது.

### 10.6.1. நோக்கங்கள் :

(i) நாட்டில் எஞ்சியுள்ள முதலாளித்துவ தன்மைகளை அகற்றி முற்றிலுமாக சோஷலிச அடிப்படையிலான உற்பத்தி முறையினை நிலை நாட்டுவது பொருளாதாரக் கொள்கையில் பெரும் மாறுதல்களைக் கொண்டு வந்து அதனை புதிய தொழில் நுட்ப அடிப்படையில் மாற்றியமைத்து ஆக்கத்திறனை அதிகரித்தல். (ii) கூட்டு விவசாயப் பண்ணைமுறையை மேலும் வலுவடையச் செய்தல். (iii) நாட்டின் பாதுகாப்பிற்கான தேவைகளை அதிகரிக்கச் செய்தல் (iv) தொழில் உற்பத்தித் திறனை 100சதவீதம் அதிகரிக்கச் செய்தல் (v) கனரக தொழில் கூடங்களின் எண்ணிக்கையை உயர்த்துதல் (எை) ரசாயன தொழிற்சாலைகளை வளர்ச்சியுறச்செய்தல் ’ (எைை) போக்குவரத்துச் சாதனங்களை குறிப்பாக ரயில்வே போக்குவரத்தில் பெரும் மாறுதல்களை புகுத்துதல் போன்றவைகளாகும்.

### 10.6.2. சாதனைகள் :

இத்திட்ட காலத்தில் கனரகத் தொழில்கள்இ இயந்திர உற்பத்தி உட்பட வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டது. ரயில் போக்குவரத்துத் துறையில் புதிய சக்தி வாய்ந்த ரயில் எஞ்சின்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அது மட்டுமின்றி செய்தித் தொடர்புஇ குறியிடுதல் ஆகியவற்றிலும் பெரும் மாறுதல்கள் எழுந்தன. மின் உற்பத்தியின் அளவு இரண்டு மடங்காக உயர்ந்தது.

1913-ல் ரஷ்யாவின் மின் உற்பத்தி 2000ஆக இருந்த போது 1935-இல் 26இ000 மில்லியன் உயர்ந்தது என்றால் உண்மையிலேயே அது ஓர் வியத்தகு சாதனையாகும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தொழில் துறையிலும் பெரும் முன்னேற்றங்கள் தோன்றின. மாபெரும் தொழிற்கூடங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உருவெடுத்தன. மேலும் தேசியப் பொருளாதாரத்தை புதிய தொழில் நுட்ப அடிப்படையில் மாற்றியமைப்பதற்கான மாபெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தொழில் உற்பத்தி 1932-ல் இருந்த நிலையோடு ஒப்பிடும் போது 100 சதவிகிதத்திற்கு மேல் அதிகரித்தது. ஆனால் 1913-ஆம் ஆண்டு உற்பத்தியோடு ஒப்பிடும் போது அதன் அளவு 500 சதவிகிதமாக இருந்தது. எனவே இரண்டாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் உண்மையிலேயே அதிசயிக்கத்தக்கவைகளாகும்.

அதே வேளையில் வேளாண்மைத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் அளவு தொழில் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தோடு ஒப்பிடும் போது மிகக்குறைவாகவே இருந்தது. எனினும் அனேகமாக நிலங்கள் வேளாண்மைத் துறையின் கூட்டுப் பண்ணைகளாக மாற்றப்பட்டன. 25 மில்லியன் தனிநபர் பண்ணைகள் ஒன்றிணைக்கப்பட்டு இரண்டரை லட்சம் "கோல்க்கோஸ்"" (கூட்டுப் பண்ணைகளாக) மாற்றப்பட்டன. விவசாயத் துறையிலும் பலபுதிய விவசாயக் கருவிகள் பயன்படுத்தப்பட்டது. ஆனால் விவசாயிகள் தங்கள் சொந்தப் பண்ணைகளில் உற்பத்தி செய்த போது காட்டிய ஆர்வத்தினை கூட்டுப் பண்ணைகளில் காட்டவில்லை. எனவே விவசாய உற்பத்தியில் பெரும் முன்னேற்றங்கள் எழவில்லை.

எவ்வாறெனினும் தொழிலாளர்களின் நிலை பொதுவாக உயர்ந்தது. ஆனால் ரஷ்ய மக்களின் வாழ்க்கைத்தரம் ஏனைய ஐரோப்பிய நாட்டவர்கள் மற்றும் அமெரிக்கர்களின் வாழ்க்கைத் தரத்தோடு ஒப்பிடும் போது மிகக் குறைவாகவே இருந்தது. ரஷ்யாவிலுள்ள தனிநபர் ஒருவருக்கான உணவு, உடை மற்றும் நுகர்வோர் பொருட்களின் அளவு இங்கிலாந்துஇ ஜெர்மனி மற்றும் அமெரிக்கா போன்ற நாட்டிலுள்ளவர்களோடு ஒப்பிடும் போது குறைவாகக் காணப்பட்டது. இத்தகைய பல குறைபாடுகளுக்கிடையேயும் பொதுவாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் சாதனை படைத்த ஒன்றாகப் போற்றப்படுகிறது.

## 10.7. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1938 - 1941)

குறிப்பு

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது போர் ஏற்பட்டதால் அது முற்றிலுமாகப் போர் திட்டமாக மாற்றப்பட்டது. ஆனால் இது உருவாக்கப்பட்ட போது தொழில்இ விவசாயத்துறைகளில் பல முன்னேற்றங்களைப் பொதுவாகக் கொண்டு வரவேண்டுமெனக் கருதிய போது மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த விரும்பியது. அதே வேளையில் இதுவரை தொழில் மயமானப்பகுதியாக மாற்றப்படாத கிழக்கு ரஷ்யப் பகுதிகளான யூரல்ஸ்இ வோல்காப் பகுதிஇ சைபீரியாஇ மத்திய ஆசியா போன்றப் பகுதிகளைத் தொழில் மயமானப் பகுதிகளாக்க விரும்பியது. அதற்கென அங்குக் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு பல புதியத்தொழில் கூடங்கள் நிறுவப்பட்டன. மேலும் இத்திட்டம் கனரகத் தொழில்கள் துவக்கப்படுவதற்குப் பதிலாகப் பல சிறிய தொழில்களைத் துவக்க முயற்சித்தது. இவை அனைத்தும் போரினால் எழுந்த மாற்றங்களேயாகும்.

### 10.7.1. இதன் சாதனைகள் :

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் தொழில் உற்பத்தி 14 சதவிகிதம் உயர்ந்தது. அதே வேளையில் கனரகத் தொழில் உற்பத்தி 50 சதவிகிதத்தை எட்டியது. மொத்த தேசிய வருமானம் 30 சதவிகித அளவிற்கு உயர்ந்தது. ஐந்தாண்டுத் திட்டங்கள் பற்றிய மதிப்பீடு:

ஐரோப்பாவிலேயே பின்தங்கிய நாடாகக் கருதப்பட்ட சோவியத் ரஷியா மூன்று ஐந்தாண்டு திட்டங்களுக்குப் பின் உலக வல்லரசுகளுள் ஒன்றாக மாறியது. நாட்டில் தொழில்துறையிலும்இ வேளாண்மைத் துறையிலும் வியத்தகு மாறுதல்கள் எழுந்தன. தேங்கிக் கிடந்த மூலப்பொருட்கள் வெளிக் கொணரப்பட்டு முறையாகப் பயன்படுத்தப்பட்டன. தொழில் வளர்ச்சியின் காரணமாக மனித சக்தி முற்றிலுமாகப் பயன்படுத்தப்பட்டது. இதனால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்தது.

**குறிப்பு**

விவசாயத்தில் கூட்டுப்பண்ணை அமைப்பு முறை புகுத்தப்பட்டன. இது புதிய இயந்திரக் கருவிகள் வேளாண்மைக்கு பயன்படுத்தப்படுவதற்கும்இ புதிய யுக்திகள் கையாளப்படுவதற்கும் வழிவகை செய்தது. இதனால் வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தி பெருகியது. அதே வேளையில் தன்னுரிமை பெற்று வேளாண்மையில் ஈடுபட்டு வந்த மக்களுக்கு தங்களது நிலம் பிடுங்கப்பட்டு கூட்டு விவசாயப் பண்ணைகளாக்கப்பட்ட போது மனம் வெதும்பினர். தங்களால் இயன்றவரை வெகுகாலம் தொடர்ந்து அதனை எதிர்த்து வந்தனர். ஆனால் இறுதியில் அரசின் கடுமையான அடக்கு முறைகளுக்கு இலக்காகியதால் தங்களது குறைபாடுகளை வெளிக் கொணர இயலாத நிலையில் உற்சாகம் குன்றியவர்களாகக் காணப்பட்டனர்.

அறியாமை அறவே அகற்றப்பட்டது. அனைவருக்கும் கல்வியறிவு புகட்டப்பட்டது. ரஷ்ய மக்களுக்கு வேலை உத்திரவாதம் கிடைத்தது. நோய் வாய்ப்பட்டாலோஇ வயது முதிர்ச்சியடைந்து விட்டாலோ கவலைப்பட வேண்டியதில்லை என்னும் நலை ஏற்பட்டது. அரசியல் குற்றங்களைத் தவிர ஏனைய குற்றங்களுக்கானத் தண்டனைகள் மனிதாபிமானத் தன்மைப் படைத்தவைகளாகவே இருந்தன. சுகாதாரத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இதனால் மக்களின் இறப்பு விகிதம் குறைந்தது. ஆண் பெண் இருபாலரும் சமுதாயத்தில் சம உரிமைகளைப் பெற்று விளங்கினர். சாதாரண மக்களின் நிலை உயர்த்தப்பட்டது. கம்யூனிஸ்ட் தலைவர்கள் அதற்கென அதிக அக்கறை காட்டினர். மக்களின் வாழ்வில் ஒளி வீசியது. தங்களது எதிர்காலத்தில் நம்பிக்கைக் கொண்டு விளங்கினர். அதுமட்டு மல்லாமல் ரஷ்யா உலக வல்லரசு நாடாக அமெரிக்காவிற்கு அடுத்தாற் போல் உயர்வடைந்தது.

## 10.8. 1918-ம் ஆண்டு அரசியலமைப்பு

ரஷ்ய புரட்சிக்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்ற லெனின் தான் எதிர்பார்த்தது போல் சோசலிச ஆட்சியை உடனே அமுல்படுத்த முடியாததால் அப்போதைய சூழ்நிலைக்கேற்ப நிலைமையை சமாளிக்க 1918-ல் அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கினார். இதுரஷ்யாவின் முதல் அரசியலமைப்பு ஆகும். இவ்வமைப்பு நாட்டின் முறைமையை ஐக்கிய சோவியத்தின் அனைத்துப் பிரதிநிதிகளின் குழுவிடம் ஒப்படைத்தது.

குறிப்பு

ஆரம்ப காலத்தில் இது ஆண்டிற்கு ஒரு முறையும் பின்னர் ஆண்டிற்கு இரண்டு முறையும் கூடியது. அரசியல் சட்டத்தை மாற்றும் முழு உரிமையை இக்குழு பெற்றிருந்தது. மத்திய செயற்குழு அல்லது மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர்களை இது தெரிவு செய்தது.

திடீரென ரஷ்யாவில் ஏற்பட்ட அரசியல்இ பொருளாதார மாற்றங் களுக்கேற்ப இவ்வமைப்பை முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லை. எனவே ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைத் தலைவர்கள் உணர்ந்தனர்.

## 10.9. 1924-ம் ஆண்டு அரசியலமைப்பு

புதிய அரசியலமைப்பு உருவாக்கும் நோக்கத்தோடு 1924-ம் ஆண்டு ஜனவரியில் சோவியத்துக்களின் மாநாடு கூடியது. 2000 பேரைக் கொண்ட இக்குழு புதிய அரசியலமைப்பிற்கு ஒப்புதலளித்தது. இப்புதிய அமைப்பு இருசபைகளைக் கொண்ட சட்டமன்றத்திற்கு வழி செய்தது. இவை முறையே ஐக்கிய அவை இ தேசீய இனங்களின் அவை என அழைக்கப்பட்டன. முதல் அவையில் நாடு முழுவதிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருந்தனர். ஆனால் இரண்டாவது அவைக்கு ஒவ்வொரு குடியரசிலிருந்து ஐந்து உறுப்பினர்கள் வீதமும்இ தன்னாட்சி பெற்ற குடியரசிலிருந்து ஐந்து

1936-ம் வருட அரசியலமைப்பு உறுப்பினர் வீதமும் தெரிவு செய்யப்பட்டனர். தேர்தலுக்கு முக்கியத்துவம் அளித்ததாலும் முதல் அவையின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர் களையும் இரண்டாவது அவையின் பாதிக்கு மேற்பட்ட உறுப்பினர்களையும் அரசே நியமனம் செய்து வந்தது.

இந்த இரண்டு அவைகளும் ஆண்டிற்கு மூன்று முறை கூடி நாட்டின் நிலைமையை ஆராய்ந்தன. இந்த இரண்டு அவைகளும் கூட்டாகச் சேர்ந்து 27 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நிரந்தர ஆட்சி மன்றத்தை ஏற்படுத்தின. இதற்குப் பிரிசீடியம் என்று பெயர். அவைகள் கூடாத போது மத்திய செயற் குழுவின் அதிகாரங்களை இது அமுல்படுத்தி வந்தது. இவ்வரசியலமைப்பு ஒரு அமைச்சரவைக்கும் இடமளித்தது. இதற்கு சோவ்நார்காம் எனப்பெயர். இது அரசின் அரசியல் மன்ற அதிகாரங்களை செயல்படுத்தி வந்தது. ஆனால் நாளடைவில் நாடு

அரசியல் பொருளாதார ரீதியில் அதிக வளர்ச்சியடையவே அரசியலமைப்பிலும் மாற்றம் தேவைப்பட்டது.

குறிப்பு

## 10.10. 1936-ம் ஆண்டு அரசியலமைப்பு

மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப நிர்வாகத்தில் மாற்றத்தைக் கொண்டு வர எண்ணிய ஜோசப் ஸ்டாலின் 1935-ல் புதிய அரசியலமைப்பை உருவாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். இதற்கென 31 பேர் கொண்ட குழு ஒன்று மைக்கப்பட்டது. இக்குழுவால் வடிவமைக்கப் பட்ட அரசியலமைப்பு மக்கள் கருத்தறிய வெளியிடப்பட்டது. சுமார் 5000 மக்கள் கூட்டங்கள் நாடெங்கிலும் கூட்டப்பட்டன. இதில் 36 மில்லியன் மக்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை வெளியிட்டனர். இதனடிப் படையில் 1இ54இ000 திருத்தங்கள் வழிமொழியப்பட்டன. இறுதியில் 1936-ம் ஆண்டு புதிய அரசியலமைப்பைப் பற்றி முடிவெடுக்க சோவியத்துக்களின் ஒரு தனி காங்கிரஸ் மாஸ்கோவில் கூட்டப்பட்டது. இந்த காங்கிரஸ் ஸ்டாலினின் அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டது. இது 1937-ல் இருந்து நடைமுறைக்கு வந்தது. இவ்வரசியலமைப்பு பிற நாட்டு அரசியலமைப்பு களில் காணப்படாத சில சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது.

### 10.10.1. 1936-ம் ஆண்டு அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்:

### 10.10.2. கூட்டாட்சி இயல்புகள்

1937-ல் அமலுக்கு வந்த இவ்வரசியலமைப்பு ஒரு கூட்டாட்சி பண்புடையதாகும். இது தானாக முன்வந்து ஒருங்கிணைந்த பதினொன்று குடியரசுகளைக் கொண்டது. இவ்வரசியலமைப்பு நெகிழாதன்மையுடைய தாகும். இவ்வமைப்பு முக்கியமான அதிகாரங்களை மைய அரசிற்கும் எஞ்சிய அதிகாரங்களை மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்கிறது. மேலும் மாநிலங்கள் சுயமாக இயங்கவும்இ வெளிநாட்டுடன் தொடர்பு வைத்துக் கொள்ளவும்இ தாமாக கூட்டமைப்பிலிருந்து பிரிந்து செல்லவும் உரிமைகள் வழங்கப்பட்டது. ஆனால் இவை நடைமுறையில் பின்பற்றப்படு வதில்லை. மாநிலங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. சுருங்கக் கூறினால் ரஷ்ய அரசியலமைப்பு

கூட்டாட்சி பண்புகளை அதிகமாகக் குறிப்பிட்டாலும் நடைமுறையில் ஒரு முக இயல்புகள் மிகுந்து காணப்படுகிறது.

குறிப்பு

### 10.10.3. பாராளுமன்றம்

இவ்வரசியலமைப்பு இருசபைகளைக் கொண்ட ஒரு பாராளு மன்றத்திற்கு வழிவகுத்துள்ளது. இதன் முதல் செபொன்றிய சோவியத் ஆகும். இது பாராளுமன்றத்தின் கீழ்சபை ஆகும். இதன் உறுப்பினர்கள் மூன்று இலட்சம் வாக்காளர்களுக்கு ஒருவர் என்னும் விகிதத்தில் தெரிவு செய்யப் படுகின்றனர். இதன் இரண்டாவது சபை தேசிய இனங்களின் சோவியத் எனப்படுகிறது. இது பாராளுமன்றத்தின் மேல் சபையாகும். ஒவ்வொரு குடியரசும் 25 நபர்களை இச்சபைக்கு தெரிவு செய்து அனுப்புகின்றது.

இவ்விரு சபைகளும் அனைத்துச் செயல்களிலும் சமமான அதிகாரத்தைப் பெற்றுள்ளன. சிலப்பணிகளை இருசபைகளும் இணைந்தும் சிலவற்றைத் தனித்தனியாகவும் செய்தன. இருசபைகளும் ஆண்டிற்கு இரண்டு முறை கூடுகின்றன. இதன் கூட்டத்தொடர் ஏழு நாட்களுக்கு மேல் நீடிப்பதில்லை. எனவே இச்சபையால் தெரிவு செய்யப்பட்டுள்ள தலைமை நிர்வாகக்குழு இச்சபையின் அனைத்து செயல்களையும் அது கூட்டத் தொடரில் இல்லாத பொழுது செய்கிறது. பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட குடிமகள் அனைவரும் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் உரிமைப் பெற்றனர். இதன் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளாகும்.

### 10.10.4. அமைச்சரவை

லெனினின் இவ்வரசியலமைப்பு நாட்டின் நிர்வாக அதிகாரத்தை மக்கள் பொறுப்பாளர்கள் குழுவிடம் ஒப்படைத்துள்ளது. இதில் 50 முதல் 60 உறுப்பினர்கள் இடம் பெற்றனர். இவர்கள் செயற்குழுவால் முன் மொழியப்பட்டுஇ சுப்ரீம் சோவியத்தால் தேர்வு செய்யப்படுகின்றனர். எனவே இதன் உறுப்பினர்கள் சுப்ரீம் சோவியத்திற்கும் அது கூட்டத் தொடரில் இல்லாத போது தலைமை செயற்குழுவிற்கும் பொறுப்புடைய வர்களாகச் செயல்படுகின்றனர். இக்குழுவின் தலைவர் பிரதமராவார். இவருக்கு இக்குழு உறுப்பினர்களைப் பதவி நீக்கம் செய்யவோஇ புதிய

உறுப்பினர்களை சேர்த்துக் கொள்ளவோ முழு அதிகாரம் உண்டு. இந்த மக்கள் பொறுப்பாளர்கள் குழு பின்னர் ““அமைச்சரவை“ என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது நாட்டின் வரவுச் செலவுத் திட்டம்இ அமைதிஇ வெளிநாட்டு விவகாரம் பாதுகாப்பு ஆகிய முக்கிய பணிகளைக் கவனித்து வந்தது.

### 10.10.5. தலைமைச் செயற்குழு

சோவியத் அரசியலமைப்பு தலைமைச் செயற்குழு என்ற அமைப்பிற்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. இதற்கு பிரிசீடியம் என் பெயர். இது பாராளுமன்றம் கூட்டத்தொடரில் இல்லாத போது அனைத்து காரியங் களையும் செய்கிறது. இதன் உறுப்பினர்கள் சுப்ரீம் சோவியத்தால் தெரிவு செய்யப்பட்டார்கள். இது சுப்ரீம் சோவியத்தை கலைப்பதுஇ மசோதாக் களைப் பொதுவாக்கெடுப்பிற்கு அனுப்புவது. தேர்தலுக்கான ஆணை களைப் பிறப்பிப்பது போன்ற அதிகாரங்களைப் பெற்றுள்ளது. இது கட்சியையும்இ அரசையும் இணைக்கும் பாலமாகச் செயல்பட்டது.

### 10.10.6. தேர்தல் முறை

ரஷ்யாவின் அரசியலமைப்பு பதினெட்டு வயது நிரம்பிய ஆண் பெண் ஆகிய இருபாலருக்கும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை அளித்தது. உலகில் முதல் முதலில் 18 வயது நிரம்பியவர்களுக்கு வாக்குரிமையளித்த பெருமை ரஷ்யாவைச் சாரும். தேர்தலில் நிற்க 23 வயது நிரம்பியவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ரகசிய நேர்முக தேர்தல் முறைக்கு இந்த அரசியலமைப்பு வழி செய்தது. மக்களின் வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் தங்களது கடமைகளைச் சரிவர செய்யா விட்டால் திருப்பி அழைத்துக் கொள்ளும் உரிமை மக்களுக்கு அளிக்கப் பட்டுள்ளது. இது அரசியலமைப்பு மக்களுக்கு அளித்துள்ள ஒரு சிறப்பு உரிமையாகும்.

### 10.10.7. நீதித்துறை

ரஷ்யாவின் நீதித்துறை அமைப்பு பிரமிட் போன்றது. அடித்தளத்தில் மக்கள் நீதிமன்றங்கள் உள்ளன. இவற்றின் நீதிபதிகளை மக்கள் தேர்ந் தெடுக்கின்றனர். இதன் பதவிக்காலம் மூன்று

குறிப்பு

ஆண்டுகளாகும். இந்நீதி மன்றங்களுக்கு மேல் வட்டார நீதிமன்றங்கள்இ தன்னாட்சி குடியரசு நீதிமன்றங்கள்இ கூட்டாட்சி குடியரசு நீதிமன்றங்கள் ஆகியவை படிநிலை யாக அமைந்துள்ளன. இவற்றின் நீதிபதிகளை அந்தந்தப் பகுதிகளின் தலைமை சோவியத்துக்கள் தெரிவு செய்கின்றன. இவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். பிரமிட் போன்ற இவ்வமைப்பின் முகட்டில் தலைமை நீதிமன்றம் அமைந்துள்ளது.

நீதிபதிகள் சட்டத்திற்கு மட்டும் கட்டுப்பட்டு சுதந்திரமாகச் செயலாற்றுபவர்கள் என அரசியலமைப்பு குறிப்பிட்டாலும் உண்மையில் அவர்களை கட்சி கட்டுப்படுத்துகிறது. எனவே மாண்ட்ஸ்கியூவின் அதிகாரப் பிரிவினை என்ற கோட்பாடு ரஷ்யாவில் முழுமையாகக் கடைபிடிக்கப்பட வில்லை என்றே கூற வேண்டும்.

### 10.10.8. மக்களின் அடிப்படை உரிமைகளும் கடமைகளும்

ரஷ்ய அரசியலமைப்பு குடிகளுக்கு அடிப்படை உரிமைகளை வழங்குவது மட்டுமல்லாமல் சில கடமைகளையும் வகுத்துள்ளது. இவ்வாறு கடமைகளையும் உரிமைகளுடன் இணைத்திருப்பது ரஷ்ய அரசியலமைப்பின் தனிச்சிறப்பியல்பாகும். மேலும்இ இந்த அரசியலமைப்பு உரிமைகளைக் குறிப்பிடுவது மட்டுமல்லாமல்இ அவற்றை நடைமுறையில் எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்ற முறைகளையும் தீட்டியுள்ளது. இது ரஷ்ய அரசியலமைப்பில் காணப்படும் மற்றோர் சிறப்பு அம்சம் ஆகும். அரசியலமைப்பின் 10-வது பிரிவு மக்களின் அடிப்படை உரிமைகளைக் கொண்ட நீண்டதொரு பட்டியலைக் கொண்டுள்ளது. ஆனால் நடை முறையில் அவை பிற மக்கள் ஆட்சிகளில் நிகழ்வது போல் செயல்படுத்தப் படுவதில்லை. வன்முறைப் புரட்சியின் விளைவாகத் தொன்றிய அரசாக இருப்பதாலும் ஒரே கட்சியின் ஆட்சி நடைபெறுவதாலும் ரஷ்யாவில் அடிப்படை உரிமைகள் சிலவரையறைக்குட்பட்டவையாக இருக்கின்றன.

### 10.10.9. ஒரு கட்சி முறை

1935-ம் வருட ரஷ்ய அரசியலமைப்பு ஒரு கட்சி முறைக்கு இடம் அளித்துள்ளது. இது முக்கியத்துவம் அளித்துள்ள கட்சி கம்யூனிஸ்ட் கட்சியாகும். இக்கட்சி அரசாங்கத்தின் கொள்கைகளையும்

திட்டங்களையும் வகுப்பதில் பெரும் பங்கு வகித்துள்ளது. பொதுவுடைமைக் கட்சியின். அமைப்பு பிரமிட் வடிவத்தில் அமைந்துள்ளது. கட்சியின் கீழ்மட்டத்தில் செல் எனப்படும் மைய நிலையங்கள் உள்ளன. அதற்கு மேல் நகர் மாவட்ட மாநாடுகள்இ குடியரசு காங்கிரஸ்இ அனைத்து ஒன்றிய காங்கிரஸ்இ மையக்குழு போலிட்பீரோ போன்ற அமைப்புகள் உள்ளன. போலிட்பீரோ மிகச்சக்தி வாய்ந்த மேல்மட்ட கட்சி அமைப்பாகும். இதை ஆட்சித் துறையின் திறவுகோல் என்பர். இதில் 11 உறுப்பனிர்களின் உள்ளனர். இது நிர்வாகத்தின் அனைத்து நிலைகளையும் கட்டுப்படுத்துகிறது.

பிரமிட் போன்ற இந்த அமைப்பைத் தவிரஇ பிற அமைப்புகளையும் பொதுவுடைமைக் கட்சி நிறுவியுள்ளது. கட்சியில் தனிப்பயிற்சிப்பெற உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காகச் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கு மெனப் பல அமைப்புகள் நாடெங்கும் நிறுவப்பட்டன. 9 முதல் 11 வயது வரையுள்ள சிறுவர்கள் சேருவதற்கென ““அக்டோபிரிஸ்ட்““ என்றும் நிறுவனம் அமைக்கப்பட்டது. 11 வயது முதல் 14 வயது வரையிலுள்ளவர் களுக்கென இளம் முன்னோடிகள் என்ற அமைப்பு காணப்பட்டது. 14 முதல் 26 வயது வரையுள்ளவர்களுக்கு கோம்சோமால் என்னும் அமைப்பு இருந்தது.

இதில் காணப்படும் தொண்டர்களில் திறமையும் கட்சி பற்றும் உடையவர்கள் கம்யூனிசக் கட்சி உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படு கின்றனர். இக்கட்சி நிர்வாகத்தின் அனைத்துத் துறைகளிலும் தலையீடு செய்கிறது. குறிப்பாக அரசை இயக்கும் சக்தி கட்சியிடம் அமைந்துள்ளது. 1936-ம் வருட அரசியலமைப்பு மக்களாட்சி கோட்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பது போன்று காணப்பட்டாலும் உண்மையில் கட்சியாட்சி முறைக்கே வழிவகுத்துக் கொடுத்தது.

## 10.11. உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்கவும்

1. ஸ்டாலினின் கூற்றுப்படி உலகில் கம்யூனிசத்தைப் பரப்புவதற்கான சிறந்த வழிமுறை எது?
2. கூட்டுப் பண்ணை என்றால் என்ன?

3. ஸ்டாலினின் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் என்ன இலக்குகள் அமைக்கப்பட்டன?

4. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்குகள் ஏன் குறைக்கப்பட்டன?

5. கோஸ்ப்ளான் என்றால் என்ன?

6. 1936 அரசியலமைப்புக்கு 'ஸ்டாலின் அரசியலமைப்பு' என்ற பெயர் ஏன் வழங்கப்பட்டது?

## 10.12. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய பதில் கேள்விகள்**

1. ஸ்டாலின் தலைமைக்கு பிறகு விவசாயத்துறை என்ன முன்னேற்றம் கண்டது?

2. ஸ்டாலினின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனைகளை பட்டியலிடுங்கள்.

3. ஸ்டாலினின் கேரட் மற்றும் குச்சி கொள்கை என்ன?

4. அலெக்ஸி ஸ்டாகானோவ் யார்? ஸ்டாகானோவைட் இயக்கம் என்றால் என்ன?

**நீண்ட பதில் கேள்விகள்**

1. ஸ்டாலினின் ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல்திறனைப் பகுப்பாய்வு செய்யுங்கள்.

2. 'ஐந்தாண்டுத் திட்டங்கள் ஒரு 'கட்டளைப் பொருளாதாரத்திற்கு' ஒரு உதாரணம்.' விளக்கவும்.

3. விவசாயத்தை ஒருங்கிணைக்க ஸ்டாலினின் காரணங்களைப் பற்றி விவாதிக்கவும்.

4. சிறை தொழிலாளர் முகாம்களின் சோவியத் அமைப்பை விவரிக்கவும்.

## 10.13. கூடுதல் வாசிப்புகள்

Kamenskii, A. and D. Griffiths. 2015. *The Russian Empire in the Eighteenth Century: Tradition and Modernization.* United Kingdom: Taylor & Francis.

Bushkovitch, P. 2011. *A Concise History of Russia*. United States: Cambridge University Press.

Dukes, P. 1998. *A History of Russia: Medieval, Modern, Contemporary, C.882-1996*. United States: Duke University Press.

Boterbloem, K. 2013. *A History of Russia and Its Empire: From Mikhail Romanov to Vladimir Putin*. United States: Rowman & Littlefield Publishers.

Ziegler, C. E. 1999. *The History of Russia. United Kingdom*: Greenwood Press.

# அலகு 11

## சோவியத் ஒன்றியம் மற்றும் இரண்டாவது உலக போர்

பாட அமைப்பு

11.0 அறிமுகம்
11.1 நோக்கங்கள்
11.2. போரின் ஆரம்பம்:
11.2.1.ரஷ்யா மீது ஜெர்மனியின் தாக்குதல்:
11.2.3. ரஷ்யாவின் தொடர் தோல்விகள்:
11.2.4. ரஷ்யாவின் போர்க் கொள்கை :
11.2.5. ஜெர்மனி எதிர்ப்புக் கூட்டணி உருவாதல்
11.2.6. நாசிகளின் வெற்றி
11.2.7. மாஸ்கோ நோக்கி போர்:
11.2.8. போர் நிலையில் மாற்றம் :
11.2.9. வால்கா பகுதியில் போர்:
11.2.10. ரஷ்யாவின் வெற்றிகள்:
11.3. இரண்டாம் உலகப்போரில் ரஷ்யா
11.3.1. இறுதி வெற்றியை நோக்கி ரஷ்யா :
11.3.2. வடபகுதிப் போர் :
11.3.3. இறுதிப்போரும் பெர்லின் வீழ்ச்சியும் :
11.4. கெடுபிடிப்போர் பனிப்போர்

குறிப்பு

11.4.1. ஜெர்மானிய பிரச்சனை :
11.4.2. பெர்லின் சிக்கல் :
11.4.3. ரியோ உடன்படிக்கை
11.4.4. வட அட்லாண்டிக் ஒப்பந்தம் :1949
11.4.5. ஆன்சுஸ் ஒப்பந்தம் (1951)
11.4.6. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உடன்படிக்கை :
11.4.7. பாக்தாத் உடன்படிக்கை : 1955
11.4.8. வார்சா உடன்படிக்கை :1955
11.4.9. கொரியாப் போர்: 1950
11.4.10. வியட்நாம் போர் : 1964
11.4.11. மத்திய கிழக்கில் கெடுப்பிடிப்போர்:
11.4.12. யு-2 நிகழ்ச்சி
11.5. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்
11.6. கூடுதல் வாசிப்புகள்

## 11.0 அறிமுகம்

இரண்டாம் உலகப் போர் மனித வரலாற்றில் மிக மோசமான போர். வரலாற்றாசிரியர் ஜான் கீகன் எழுதுகிறார், “இரண்டாம் உலகப் போர் முதலாம் உலகப் போரின் தொடர்ச்சி“, மேலும் முந்தைய போரின் நிச்சயமற்ற தன்மைகளைத் தவிர, உண்மையில் இரண்டாம் உலகப் போர் புரிந்துகொள்ள முடியாதது. சோவியத் யூனியன் வேறு எந்த நாட்டையும் விட அதிக மனித இழப்புகளை ஏற்படுத்தியது, போரின் போது முப்பது மில்லியனுக்கும் அதிகமான வீரர்கள் மற்றும் பொதுமக்களை இழந்தது. நாஜி ஜேர்மனியின் மீதான வெற்றியின் பாரிய விலை இரண்டாம் உலகப் போரை சோவியத் யூனியனுக்கும் அதிலிருந்து எழுந்த இறையாண்மை அரசுகளுக்கும், குறிப்பாக ரஷ்யாவிற்கு வரலாற்றில் ஒரு முக்கியமான தருணமாக மாற்றியது. ரஷ்யர்களால் பெரும் தேசபக்தி போர் என்று அறியப்படுகிறது, இது மகத்தான பெருமையின் ஆதாரமாக உள்ளது மற்றும் பிராந்தியத்தில் தேசிய அடையாளத்தின் குறிப்பிடத்தக்க அங்கமாகும். சோவியத் யூனியன் ஜெர்மனியை தூர கிழக்கிற்கு அனுமதித்தது. 1939- 1940 வரை

பின்லாந்துடன் ”குளிர்காலப் போரை” நடத்தியது, 1940 இல், எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியாவை ஆக்கிரமித்தது. இருப்பினும், சோவியத் யூனியன் ஜெர்மனியிடம் இருந்து அதிக அறிவியல் உதவியை எதிர்பார்த்தது. ஹிட்லர்

நாட்டின் இயற்கை வளங்களை கைப்பற்றுவதற்கு ஒரு பகுதியாக, நாட்டை இணைக்க முடிவு செய்யப்பட்டது. இரண்டாவது போர் சோவியத் யூனியனை உள்ளடக்கியதாக இல்லை மற்றும் மத்தியதரைக் கடலின் கட்டுப்பாட்டைப் பற்றியது. ஜெர்மனியின் தோல்விக்குப் பிறகு, சோவியத் யூனியன் பசிபிக் போரில் நுழைந்தது, இது டிசம்பர் 7, 1941 அன்று பேர்ல் துறைமுகத்தின் மீதான ஜப்பானிய தாக்குதலுடன் தொடங்கியது.

ஆகஸ்ட் 9, 1945 சோவியத் யூனியன் மஞ்சூரியாவில் ஜப்பானிய இராணுவத்தைத் தாக்கியது, அது எட்டு நாட்களுக்குப் பிறகு சரணடைந்தது. சோவியத் முயற்சி, மற்றும் முக்கியமாக 1942 மற்றும் 1943 இல் நிகழ்ந்த அதிர்ஷ்டத்தின் வியத்தகு தலைகீழ் மாற்றமானது, ஒரு புதிய பொருளாதார மற்றும் அரசியல் அமைப்புடன் விசாரணை செய்யும் ”பரியா அரசை” அதை வெற்றிகரமான ஆதரவாளராக மாற்றியது,

மற்றும் அதன் ஏகாதிபத்திய கடந்த காலத்தின் புத்துயிர் பெற்ற பொறிகளுடன் விண்வெளியில் பிணைக்கப்பட்ட வல்லரசாக. உதாரணமாக, சோவியத் அணுசக்தித் திட்டம் 1942 இல் தொடங்கியது. ஒட்டுமொத்த நேச நாடுகளின் வெற்றிக்கு அதன் ஆயுதப் படைகளின் முக்கிய பங்களிப்பு பனிப்போரின் போது மேற்கு நாடுகளில் குறைத்து மதிப்பிடப்பட்டது. எவ்வாறாயினும், 1980 களில் தொடங்கிய தீர்மான செயல்முறை மற்றும் 1991 இன் இறுதியில் சோவியத் ஒன்றியத்தின் உடைவு அதை மாற்றியது.

இந்த பிரிவில், இரண்டாம் உலகப் போரில் சோவியத் ஒன்றியத்தின் பங்கு மற்றும் 1945 மற்றும் 1953 க்கு இடையில் அதன் வெளியுறவுக் கொள்கை பற்றி படிப்போம்.

## 11.1 நோக்கங்கள்

இந்த அலகுக்குச் சென்ற பிறகு, உங்களால் முடியும்:

♦ இரண்டாம் உலகப் போரின் போது சோவியத் ஒன்றியத்தின் நிலைமையை விவரிக்கவும்

♦ 1945 மற்றும் 1953 க்கு இடையில் சோவியத் ஒன்றியத்தின் வெளியுறவுக் கொள்கையைப் பற்றி விவாதிக்கவும்

## 11.2. போரின் ஆரம்பம்:

மேற்கு ஐரோப்பாவில் தொடங்கிய இரண்டாவது உலகப்போர் சோவியத் நாட்டின் எல்லையை அபாயகரமாக அணுகியது. அதற்கெனவே 1941-ஆம் ஆண்டின் வசந்த காலத்திலேயே ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, பின்லாந்து ஆகிய நாடுகளுடன் ராணுவ ஒப்பந்தங்களைச் செய்து கொண்டிருந்த ஜெர்மனி, துருக்கியுடன் நட்புறவு ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண்டது. மேற்கு அரங்கில் அளவிடற்கரிய வெற்றிகளை அள்ளி குவித்துக் கொண்ட ஹிட்லர் கிழக்கு நோக்கி கவனத்தைத் திருப்பவிருப்பதை அமெரிக்காவும் இங்கிலாந்தும் குறிப்பாக உணர்த்தவே செய்தன.

போருக்கான ஆயத்த வேலைகளை சோவியத் அரசும் மேற் கொண்டது. தொழிற்சாலைகள் போர்க் கருவிகளை உற்பத்தி செய்யலாயின. படை வீரர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கப்பட்ட தோடு அவர்களுக்கு நவீன ஆயுதங்களும் அளிக்கப்பட்டன. ஜெர்மனியின் ராணுவத் தலைமை சோவியத் நாட்டின் மீது “பார்பரோசா“ எனப்படும் மின்னல் தாக்குதல் ஒன்றைத் தொடுத்து 1941ஆம் ஆண்டில் இறுதிக் குள்ளாகவே அதனை அடிபணிய வைக்கும் திட்டத்தை தீட்டியது. சோவியத்தின் அரசியல் முறையை ஆதரிக்காத அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளும் தனது ரஷ்யப் படையெடுப்பிற்கு ஆதரவு அளிக்காது போனாலும் தடையாக நில்லாதென்றே ஜெர்மனி நம்பியது.

### 11.2.1.ரஷ்யா மீது ஜெர்மனியின் தாக்குதல்:

ஜெர்மனியின் நவீனப் படையணிகளில் 153 அணிகளும், அதன் கூட்டணி நாடுகளில் 37 படைப்பிரிவுகளும் சோவியத் நாட்டில் எல்லைகளை நோக்கிப் பாய்ந்தன. 1941 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை முறையான போர் அறிவிப்பேதுமின்றி ஜெர்மனியின் படைகள் ரஷ்ய மண்ணுக்குள் புகுந்தன. இரண்டாம் உலகப்போரில்,

கிழக்கு அரங்கில் தொடங்கிய அப்பெரும்போர் ரஷ்ய மக்களைப் பொறுத்தமட்டில் தாயகத்தின் தன்மானப்போராக விடுதலைப் போராக மாறியது.

போரின் தொடக்கமே பெரும் சோதனையாக அமைந்தது. ஜெர்மனியின் படையணிகள் மாஸ்கோ, லெனின்கிராடு, கீவ் நகரங்களைக் கைப்பற்றுவதையே முதல் நோக்கமாகக் கொண்டு முன்னேறின. பிரான்சின் மீது தனது புதிய மின்னல் தாக்குதலைத் தொடுத்து வெற்றி கண்ட ஜெர்மானியத் தளபதி வான்லீப் வடக்குப்போர் முனையிலும், தளபதி மோக் மையப்போர் முனையிலும், தளபதி ரண்டஸ்டட் தெற்குப் போர் முனையிலும் பணியாற்றினர். வடக்குப் படையணி லெனின் கிராடு நோக்கியும், மையப்படையணி மாஸ்கோ, சுமோலன்ஸ்க், மின்ஸ்க் நகர்களை நோக்கியும் தெற்குப் படையணிகீவ் நோக்கியும் முன்னேறின.

### 11.2.3. ரஷ்யாவின் தொடர் தோல்விகள்:

போர் தொடங்கிய சிலமணி நேரங்களுக்குள்ளாகவே நாட்டின் 66 விமான நிலையங்கள், 1200 விமானங்கள் நாசமாக்கப்பட்டன. வான மண்டலமே நாஜிகளின் ஆதிக்கத்தில் நிலைத்தது. மேற்குப்போர் முனையில் ரஷ்யப்படைகளிடமிருந்த 3000 டாங்குகளும், 2000துப்பாக்கிகளும் எதிரியின் வசமாயின. சிதறடிக்கப்பட்ட நிலையில் போரிட்ட செஞ்சேனை படைத் துறை தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளவியலாது தோல்விகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று. வடக்குப் போர் முனையில் விரைந்து முன்னேறிய நாஜிப்படை பால்டிக் நாடுகளில் நிலை கொண்டிருந்த செஞ்சேனையை முற்றிலும் துண்டித்து அழித்து விட முயன்றது. செஞ்சேனைத் தளபதியாக செயலாற்றிய குஸ்னத்சோவ் பெரிதும் முயன்றும் எதிரியின் முன்னேற்றத்தைத் தடுக்கவியலாது போயிற்று. சோவியத் நாட்டின் பால்டிக் குடியரசுகள் ஜூலை 10க்குள் எதிரியின் கைகளில் சிக்குண்டன ரஷ்யாவின் பால்டிக் கடற்படை லெனின் கிராடை அடைந்து அழிவிலிருந்து தப்பியது.

மையப்போர் முனையில் தளபதி பாவ்லோவ் தலைமையில் மூன்று படையணிகள் எதிரியின் தாக்குதலை எதிர் நோக்கின. முதல் படைப் பிரிவு முற்றிலும் முறியடிக்கப்படவே, மூன்றாவது படைப்பிரிவு எதிரியின் வளையத்துக்குள்ளிருந்து தப்பவேண்டி கிராத்னோ நகருக்குப் பின்

**குறிப்பு**

நகர்ந்தது. ஜூன் 28 ஆம் நாள் இரு பக்கங்களிலுமாகப் பாய்ந்து வந்த எதிரியின் படைகள் பீன்ஸ்க் நகர்ப்பகுதியில் இணைந்தன. இந்நிலையில் ரஷ்யா மையப்போர் முனையில் விட்டப்ஸ்க், ஆர்சா, மோகில்யோவ், சிலோபின் நகர்களை இழந்தது. இப்பகுதி படையமைப்பை மாற்றிமைக்க விரும்பிய சோவியத் அரசு அதனைத்தளபதி திமசெங்கோவிடம் ஒப்படைத்தது.

தெற்குப் போர் முனையின் தென்மேற்கு எல்லையில் தளபதி கிர்போன்சும், தெற்கெல்லையில் தளபதி தியுலனேவும் ஆறுபடைப்பிரிவு களுக்குத் தலைமை தாங்கினார். நொவோசிராடு, ஒலின்ஸ்கி, சிதோமியா நகர்களை நோக்கிப் பாய்ந்த ஜெர்மானியர்கள் ரஷ்யப்படையணிகளை ஊடுருவிச் சுற்றி வளைக்கலாயினர். ரஷ்யப் படைகள் பின்வாங்கி நிலை கொண்டன. எனினும் 1941 ஜூலைக்குள்ளாக லிதுவேனியா, வாட்வியா மேற்கு பைலோரஷ்யா, உக்ரெயின் போன்ற பகுதிகளை ரஷ்யா இழந்தது.

### 11.2.4. ரஷ்யாவின் போர்க் கொள்கை :

தொடங்கிய போர் தடங்கலின்றி விரைந்து முடியாது என்ற நிலையில் ரஷ்யா தனது படை வலிமையைப் பெருக்கலாயிற்று. நாட்டு அரசின் நல்ல கட்சியின் வேண்டுகோளுக்கிணங்க பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும், இளம் பெண்களும் படையில் சேர்ந்து பயிற்சி பெற்றனர். உடல் வலிமையும், உள்ள வீரமும் கொண்ட 35 புதிய மக்கள் படைப் பிரிவுகள் மாஸ்கோ , லெனின் கிராடு, கீவ், ஸ்டாலின் கிராடு போன்ற பெருநகரங்களில் உருவாக்கப்பட்டன. “எல்லாமே போர்முனைக்கு எல்லாமே வெற்றிக்காக! என்பதே ஒன்றுப்பட்ட மக்களின் ஒருமித்த குரலாயிற்று. 23 வயதுக்கு மேற்பட்டோர் கட்டாயப் படைப்பணிக்கு அழைக்கப்பட்டனர். தேசிய பாதுகாப்புக் குழுவொன்றும் ஸ்டாலின் தலைமையில் நிறுவப்பட்டது. மக்களும், மக்களின் உடமைகளும் எதிரிகளிடம் சிக்காது காப்பாற்றி வெளியேற்ற வேண்டி வெளியேற்றக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. போர் நிலையை உடனுக்குடன் உணர்த்தவென தகவல் தொடர்பு அலுவலகம் ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டது.

மக்களின் வாழ்க்கைத் தேவைகளுக்கான பொருட்களை உற்பத்தி செய்து கொண்டிருந்த தொழிற்சாலைகள் அனைத்தும் ஆயுதங்களையே உற்பத்தி செய்யலாயின. இயந்திரக் கப்பல்களை உற்பத்தி செய்த தொழிற்சாலை டாங்குகளை உற்பத்தி செய்தன. இரும்பு எஃகுத் தொழிற் கூடங்கள் கவசமோட்டார்களைத் தயாரித்தன. தொழிற்சாலைகள் பலவும் தூரக்கிழக்குப் பகுதிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டன. உக்ரெயின் பைலோ ரஷ்யா, பால்டிக் குடியரசுகளில் இருந்த தொழிற்சாலைகள் யூரல், சைபீரியா, மத்திய ஆசியா பகுதிகளுக்கு இடம் மாறின. ஏறத்தாழ 1523 தொழில் நிறுவனங்கள் இவ்வகையில் இடம் பெயர்ந்தன. அப்படியும் தொழிற்சாலைகள் பல எதிரிகளிடம் சிக்கின. சரிந்து கொண்டிருந்த நாட்டின் பொருளாதார நிலை இமாலய முயற்சிகளுக்குப்பின் மீண்டும் தன்னிலை பெற்றுச்சீரடைந்தது.

### 11.2.5. ஜெர்மனி எதிர்ப்புக் கூட்டணி உருவாதல் :

நாஜிகளுக்கெதிரான சோவியத் மக்களின் உயிர்ப் போராட்டத் திற்குத் தங்களால் இயன்ற அனைத்து உதவிகளும், அளிப்போம் என இங்கிலாந்தின் பிரதமர் சர்ச்சில் 1941-ஆம் ஆண்டு ஜூன் 22 ஆம் நாள் அறிவித்தார். இரு நாட்களுக்குப்பின் அதே போன்றதோர் அறிவிப்பை அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட்டும் வெளியிட்டார். ஜெர்மனிக் கெதிரான போர் நடவடிக்கைகளை உருவாக்க மூன்று நாடுகளின் பேராளர்களும் செப்டம்பர் 29 முதல் அக்டோபர் முதல் நாள் வரை மாஸ்கோவில் கூடிப்பேசினார். அதன் விளைவாக அமெரிக்காவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் அதிக அளவில் ஆயுதங்களும், உணவுப் பொருட்களும் இறக்குமதியாயின.

டிசம்பர் 7இல் பேர்ல் ஹார்பரில் (ீநயசட ர்யசடிழரச) இருந்த அமெரிக்கக் கப்பல்களை ஜப்பானியக் கடற்படை திடீரெனத் தாக்கி அழித்ததைத் தொடர்ந்து அச்சு நாடுகளுக்கெதிராக அமெரிக்காவும் போரில் குதித்தது. நாசிகளுக்கெதிரான மக்கள் கருத்துக்கேற்ப ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு போன்ற பல நாடுகளும் ஜெர்மனிக்கெதிரான கூட்டணியை உருவாக்கின. 1942ஆம் ஆண்டு பிறந்த போது விடுதலை விரும்பிகளான மக்களின் கூட்டணியை அச்சுநாடுகள் எதிர் நோக்க வேண்டியதாயிற்று.

குறிப்பு

### 11.2.6. நாசிகளின் வெற்றி

1941-ல் வடமேற்குப் போர்முனையிலிருந்து செஞ்சேனை பின் வாங்கியதைத் தொடர்ந்து நாசிப் படையினர் லெனின்கிராடு நகரின் வாயிலை அணுகி முற்றுகையிடலாயினர். இரவும் பகலுமாக எதிர்படையினர் தொடர்ந்து குண்டுமாரி பொழிந்தனர். பல கட்டடங்கள் இடிந்து விழுந்தன. ஆனால் எதிர்படையினரை நகருக்குள் நுழைய விடாது நகரைகாக்கவென உருவாக்கப்பட்ட படையும் பால்டிக், கடற்படைபிரிவும், நகர மக்களும் ஒரு வலிமையான கோட்டையாகவே மாற்றிக் கட்டிக் காத்தனர்.

மாஸ்கோ நோக்கிப் பாய்ந்த நாசிப்படை சுமோலன்ஸ்க், உக்ரெயின் ஒடிசா நகரங்களைக் கைப்பற்றியபின் கீவ் நகரைக் கைப்பற்ற 83 நாட்கள் தொடர்ந்து போர் நடைபெற்றது. இறுதியில் செப்டம்பர் 19இல் அந்நகரும் வீழ்ந்தது. ரஷ்யப்படை செவாஸ்டபோலுக்குப் பின்வாங்கியது. அந்நகரின் முற்றுகையும் நவம்பர் 3இல் தொடங்கியது.

### 11.2.7. மாஸ்கோ நோக்கி போர்:

மாஸ்கோவை மட்டுமே முக்கிய இலக்காகக் கொண்டு, ஏறத்தாழ எண்பது படைப்பிரிவுகள் எல்லா வகையான படைக்கலத் துணையுடன் மாஸ்கோ நோக்கி முன்னேறின. தலைநகரை இடப்புறமும், வலப்புற முமாகத் தாக்கித்துண்டித்தபின் மையப் படைப்பிரிவினர் நேரடியாகத் தாக்கி

இரண்டாம் உலகப்போரில் ரஷ்யா நகரைக் கைப்பற்றத் திட்டம் தீட்டப்பட்டது. மாபெரும் போர் செப்டம்பர் 30இல் துவங்கியது. பெரும் எண்ணிக்கையிலான எதிர்ப்படையினர் ரஷ்ய பாதுகாப்பணியை ஊடுருவிப் பிளந்து காலினின், பிரியன்ஸ்க், ஓரல், வியாஸ்மா ஆகிய நகரங்களை நசுக்கியபின் மாஸ்கோ வட்டத்திற்குள் புகுந்தனர். மக்கள் மாஸ்கோவை ஒரு கோட்டையாக மாற்றினர். தெருக்களில் தடுப்பரண்கள் எழுப்பப்பட்டன. தெருப்போருக்கும் மக்கள் தயாராயினர். ஜெர்மனி தனது படை வலிமையனைத்தையும் பயன்படுத்திப் போரை நடத்தியது.

இதுவரை நடந்த போரில் பெரும் நிலப்பகுதியை ரஷ்யா இழந்து விட்டிருந்தது. நிலக்கரி வயல்களில் 63 சதவீதமும், தேனிருப்புத் தொழிற்

சாலைகளில் 68 சதவீதமும், எ∴குத் தொழிற்சாலைகளில் 58 சதவீதமும் அலுமினிய உற்பத்தியில் 60 சதவீதமும், விளைநிலங்களில் 38 சதவீதமும் சர்க்கரை உற்பத்திப் பகுதிகளில் 85 சதவீதமும் ஜெர்மனியிடம் சிக்கின. வெற்றி கொண்ட பகுதிகளெல்லாம் நாசிகள் பெரும் நாசவேலைகளில் ஈடுபட்டனர். கிராமங்களும், நகரங்களும் கொள்ளையடிக்கப்பட்டன. கையில் அகப்பட்ட மக்களனைவரும் சித்திரவதைக்குள்ளாயினர். பட்டினியால் பலர்பலியாயினர். நச்சுக்காற்றுக்கும் பலர்மாண்டனர்.

### 11.2.8. போர் நிலையில் மாற்றம் :

மாஸ்கோவை காப்பதற்கென மூன்று புதிய படைப்பிரிவுகள் உடனே உருவாக்கப்பட்டன. தென்முனைப்பகுதியில் ராஸ்டோவ் ஆன்டான் பகுதியிலும், திக்வின் முனையிலும் செஞ்சேனையினர் தங்கள் தாக்குதலை தொடுத்தனர். ராஸ்டோவ் திரும்பக் கைப்பற்றப்பட்டதும் நாசிப்படை பின் வாங்கியது நவம்பரில் மற்றுமொரு தாக்குதல் மாஸ்கோ மீது தொடங்கியது. நகரிலிருந்து 30 கிலோமீட்டர் தொலைவுவரை நெருங்கிவிட்ட நாசிப் படையினர் பின் தங்களின் முன்னேற்றத்தை மட்டுப்படுத்திக் கொண்டனர்.

டிசம்பர் 5 இல் செஞ்சேனை தனது எதிர்த்தாக்குதலைத் தொடுத்து மேற்கு, தென்மேற்குப் போர்முனைத் தளபதிகளான சுகோவ், திமசெங்கோ ஆகியோர் திட்டமிட்ட தாக்குதலை தகுந்த நேரத்தில் தொடங்கினர். குளிர் காலத்தில் தொடங்கிய இத்தாக்குதல் வெற்றிகளை குவிக்கத் தொடங்கியது. காலினின், கலுகா போன்ற நகரங்களையும் நூற்றுக்கணக்கான சிற்றூர் களையும் கைப்பற்றினர். 1942-இல் ஹிட்லருக்கெதிராக 26 நாடுகளைக் கொண்ட வலிமையான கூட்டணி உருவாயிற்று. ஏறத்தாழ 266 படைப் பிரிவுகள் ரஷ்யமண்ணில் நிலை கொண்டன. லெனின் கிராடு முற்றுகையும் சிறிதும் தளர்த்தப்படவில்லை .

1942-மே மாதத்தில் கெர்ச் தீபகற்பபகுதியை ஜெர்மனி கைப்பற்றியது. ஜூலையில் செவாஸ்டபோல் துறைமுக நகரை ரஷ்யா இழந்தது. பின்னர் ஜெர்மனி எண்ணெய்க் கிணறு பகுதியான காகசைக் கைப்பற்ற தாக்குதலைத் தொடங்கியது. ஜூன் 28 முதல் ஜூலை 24ஆம் நாளுக்குள்ளாக 400 கிலோமீட்டர் வரை முன்னேறி காகசை நெருங்கியது. முக்கிய நகரமான ஸ்டாலின் கிராடுக்காகப் பெரும்போர்

தொடங்கியது. செப்டம்பரில் வால்காவை அடைந்த ஜெர்மானியர் ஸ்டாலின் கிராடின் வெளிப்புறத்தில் போரிடலாயினர்.

குறிப்பு

### 11.2.9. வால்கா பகுதியில் போர்:

வால்காவிலும் காகசஸ் பகுதியிலும் போர் வலுவடைந்தது. அந்நகரைக் காக்கும் படைக்குழுவில் குருச்சேவும் ஒருவரானார். ஆகஸ்டு 25இல் நகரம், முற்றுகைக்குள்ளானது. செப்டம்பர் 13இல் தெருப்போரே தொடங்கியது. நவம்பர் மத்தியில் நாசிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலைக்குள்ளாயினர். வால்காவைக் காப்பாற்றுவதிலிருந்து வெற்றி ரஷ்யாவின் பக்கம் திரும்பியது. ரஷ்யாவின் முன்னேற்றத் தாக்குதல் தொடங்கியது. அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து ஆயுதங்கள் இறக்குமதியாயின. வால்கா, டான் ஆகிய இரு நதிகளுக்கிடையே ரஷ்யா எதிர்த்தாக்குதலைத் தொடங்கி, நான்கு நாட்கள் போருக்குப்பின் ஸ்டாலின்கிராடு நகரிலிருந்த நாசிப் படையைச் சுற்றி வளைத்துக் கொண்டன. 1943ஆம் ஆண்டு பிப்ரவரி 2 இல் போர் முடிவுற்ற போது 1,47,000 போர் வீரர்களின் உடல்கள் தெருக்களில் கிடந்தன. இரண்டாம் உலகப் போரின் போக்கிலும் திருப்பம் ஏற்பட்டது.

### 11.2.10. ரஷ்யாவின் வெற்றிகள்:

1943 ஜனவரியில் லெனின்கிராடுக்கு ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலை ஓரளவு தளர்ந்தது. ஜனவரி 12இல் தளபதி கோவரோவும் தளபதி மெரட்ஸ்கோவும் லடோகா ஏரிக்குத்தெற்கே தங்கள் எதிர்த்தாக்குதலைத் துவக்கினர். வால்கா, காகசஸ் பகுதிகளிலிருந்து ஏறத்தாழ 700 கிலோ மீட்டர் வரை நாசிப்படையினர் பின்வாங்கினர். ஜூலை 5-இல் ஜெர்மனி புதிய படையோடும் “டைகர் ““பாந்தர்“ போன்ற புதுவகை டாங்குகளோடும், தானியங்கித் துப்பாக்கிகளுடனும் தாக்கியது. ஓரல், குர்ஸ்க், பெல்கோராடு நகர்களைக் கைப்பற்றினர். ஜூலை 12இல் ரஷ்யா எதிர்த்தாக்குதலைத் தொடங்கி ஆகஸ்டு 5இல் ஓரலும் பெல்கோராடும் திரும்பப் பெற்றனர்.

ஜூலையில் ஆங்கில அமெரிக்கப்படைகள் சிசிலியிலும், இத்தாலிய தீபகற்பத்திலும் இறங்கின. இத்தாலி முற்றிலும் முறியடிக்கப்பட்டதை யடுத்து ஜூலை 25 முசோலினி பதவியிலிருந்து

விரட்டப்பட்டு பதோக்லியோவின் தலைமையில் புதிய அரசு பதவியேற்றது. அக்டோபர் 13இல் இத்தாலி ஜெர்மனியின் மீது போர் அறிவிப்பு செய்தது. அக்டோபர் 10 முதல் 30 வரை ரஷ்யா, அமெரிக்க, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர் மாஸ்கோவில் கூடி விவாதித்து, இறுதி வெற்றி வரைப் போர் எனமுடிவு செய்தனர்.

## 11.3. இரண்டாம் உலகப்போரில் ரஷ்யா

249 நவம்பர்.28 முதல் டிசம்பர் முதல் நாள் வரை நட்பு நாடுகளின் அரசுத் தலைவர்கள் மாநாடு டெஹ்ரானில் நடைபெற்றது. சர்ச்சில், ஸ்டாலின், ரூஸ்வெல்ட் ஆகியோர் மாநாட்டில் பங்கு பெற்று, போர் நடவடிக்கைகள் சம்பந்தமாக ஒரு முடிவினை மேற்கொண்டனர். அதன்படி ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை ஒன்று உருவாயிற்று. ஜனவரி 20 இல் லெனின் கிராடு பகுதியில் எதிரியின் படையணி உடைக்கப்பட்டு நோவோகிராடும் கைப்பற்றப்பட்டது.

### 11.3.1. இறுதி வெற்றியை நோக்கி ரஷ்யா :

1944-ஆம் ஆண்டின் குளிர்காலப் போரில் ரஷ்யா வெற்றிகளை குவித்துக் கொண்டது. கிழக்கில் முழுக்கவனத்தையும் ஜெர்மனி செலுத்தியதால் நட்புநாடுகள் பிரான்சில் போர்முனை தொடங்க வசதியேற்பட்டது. ஜூன் 6இல் ஆங்கில அமெரிக்கப்படையொன்று நார்மண்டியில் இறங்கியது. வடமேற்குப் பிரான்சில் நட்புநாடுகளின் படைகள் வெகுவேகமாக முன்னேறலாயின. ஆகஸ்டு 20இல் ஜெர்மனி 22 படைப்பிரிவினர் கிசினேவ் பகுதியில் சுற்றி வளைத்துக் கொள்ளப்பட்டனர். வெற்றியை ஈட்டிய ரஷ்யப் படை ருமேனியாவுக்குள் நுழைந்தது. ஆகஸ்டு 31-இல் ருமேனியாவின் தலைநகர் புடாபெஸ்டை பிடித்தனர். பின்னர் ரஷ்யப்படையின் வேகம் அதிகரித்தது. செக்கோஸ்லோகியா, ஹங்கேரி, யூகோஸ்லோவேகியா ஆகிய நாடுகளைக் கைப்பற்றினர். விடுதலை பெற்ற அந்நாடுகளும் ஜெர்மனியின் மீது போர்தொடுத்தன.

குறிப்பு

### 11.3.2. வடபகுதிப் போர் :

வடக்குப்போர் முனையில் ஜெர்மனியின் எதிர்ப்பைத் தாக்க ரஷ்யப் படை கிழக்குப் பிரஷ்யாவை அணுகியது. செப்டம்பர் 14இல் ரீகா நோக்கி அப்படை முன்னேறியது. பால்டிக் பகுதியிலிருந்த நாசிப்படைகள் ஒரு மாத காலப்போரில் தோல்வியுற்றன. நவம்பர் முதல் நாள் நார்வே நாட்டுக் குள்ளும் ரஷ்யப் படைகள் நுழைந்தன. இப்பெரும் வெற்றிகளால் லாத்வியாவைத் தவிர்த்த ரஷ்ய நிலப்பகுதிகள் அனைத்தும் விடுவிக்கப் பட்டன.

### 11.3.3. இறுதிப்போரும் பெர்லின் வீழ்ச்சியும் :

பெர்லினை நோக்கி ரஷ்யப்படைகள் புறப்பட்ட போது, ஜெர்மனியை சரணடையச் செய்ய வேண்டிய நிபந்தனைகளையும் விதிகளையும் வகுக்க வேண்டியதாயிற்று. எனவே 1945, பிப்ரவரியில் கிரீமியாவிலிருந்த யால்டா என்னுமிடத்தில் மூன்று வல்லரசுத் தலைவர்களும் கூடிப்பேசினர். போர் இழப்பீடுகள், சோவியத் போலந்து எல்லைச் சிக்கல்கள் சம்பந்தமாகவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. உலக அமைதியை நிலை நாட்ட ஐக்கிய நாடுகள் சபை நிறுவவும் திட்டம் தீட்டப்பட்டது. ஜப்பானுக்கெதிரான போருக்குப்பின் சகலின், குரில் தீவுகளை ரஷ்யாவுக்கு அளிக்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஜெர்மனியை இறுதியாக முறியடிக்க வேண்டிய திட்டத்தைத் தீட்டினர்.

ஏப்ரலில் போரின் இறுதிக் கட்டமும் நெருங்கியது. பெர்லினைப் பாதுகாக்கப் பத்து இலட்சம் பேர் கொண்ட பெரும்படை எல்லாவகையான நவீன ஆயுதங்களுடன் ஆயத்த நிலையில் இருந்தது. செஞ்சேனைப் பிரிவிலும் 40,000 துப்பாக்கிகளும், 6,300 டாங்குகளும் 7,300 விமானங்களும் ஈடுபடுத்தப்பட்டன. ஏப்ரல் 16இல் தொடங்கிய பெர்லினுக்கான இறுதிப் போர் மே 2 வரையில் நீடித்தது. நாசிப்படையினர் சரணடைய மறுத்ததைத் தொடர்ந்து செஞ்சேனை தனது தாக்குதலை வலுப்படுத்தியது. 10 நாட்களாக இரவும் பகலுமாக பெர்லின் நகரத்தெருக்களில் பயங்கரப் போர் நடைபெற்றது. இறுதியாக ஏப்ரல் 30 ஆம் நாள் பெர்லின் நாடாளுமன்றக் கட்டிடத்தில் சோவியத் படையினர் தங்கள் வெற்றிக் கொடியை ஏற்றிப் பறக்கவிட்டனர். அடால்ஃப் ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார். அவரது நெருங்கிய நண்பரான

கோயபல்ஸ் தன் மனைவி மக்களைக் கொன்ற பின்தன்னையும் மாய்த்துக் கொண்டார்.

மே 8ஆம் நாள் ஜெர்மனியின் உயர்படை அதிகாரிகள் பெர்லினுக்கு வெளியே கார்ல்சார்ஸ்ட் என்னுமிடத்தில் நிபந்தனையின்றிச் சரணடைய ஒப்புக்கொண்டனர். வலிமை வாய்ந்த செஞ்சேனையும் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, செக்கோஸ்லோவேகியா, யூகோஸ்லோவேகியா, போலந்து, ருமேனியா, பல்கேரியா, அல்பேனியா, ஹங்கேரி ஆகிய நாடுகளைச் சேர்ந்த படைகளும் இறுதி வெற்றியை அடைந்தனர். ஐரோப்பியப் போர் அரங்கில் இரண்டாவது உலகப்போரும் முடிவுற்றது. ஜப்பானின் வீழ்ச்சி :

ஐரோப்பிய அரங்கில் போர் முடிவுற்றாலும், சோவியத்தின் எல்லையருகே பசிபிக் கடற்பகுதியில் ஜப்பானின் போர் நடவடிக்கைகள் நீடிக்கவே செய்தன. ஆகஸ்டு மாதம் ஜப்பான் மீது ரஷ்யா போர் தொடுத்தது. சீனாவும் இதற்கு துணை நின்றது. ஆமூர், டிரான்ஸ்பைகல் பகுதிகளில் போர் முனைகள் தொடங்கப்பட்டன. விரைவிலேயே ரஷ்ய சீனப்படைகள் மஞ்சூரியா போர்ட் ஆர்தர், வடகொரியா, தென்சகலின், குரில் தீவுகள் போன்ற பகுதிகளை விடுவித்தன. ஜப்பானை விரைவில் பணிய வைக்க . விரும்பிய அமெரிக்கா, ஆகஸ்ட் 6 ஆம் நாள் ஹிரோசிமா நகர் மீதும் ஆகஸ்ட் 9இல் நாகசாகி நகர் மீதும் இரு அணுகுண்டுகளை வீசியது. இதனால் பயங்கர அழிவுகளைச் சந்தித்த ஜப்பானும் சரணடையச் சம்மதித்து செப்டம்பர் 2இல் சரணடையும் சாசனத்தில் கையெழுத்திட்டது. ஆறாண்டுக் காலமாக உலகை ஆட்டுவித்த இரண்டாம் உலகப்போரும் முடிவுற்றது. நாசிகளை நசுக்கியப் பெருமை செஞ்சேனைக்குக் கிடைத்ததால் உலக அரங்கில் ரஷ்யாவின் புகழ் உயர்ந்தது.

## 11.4. கெடுபிடிப்போர் பனிப்போர்

இரண்டாவது உலகப்போருக்குப் பின்னர் அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் வலிமை மிக்க வல்லரசு நாடுகளாக விளங்கின. கொள்கை அளவில் வேறுபட்ட அமெரிக்காவும் ரஷ்யாவும் ஜெர்மனியைத் தோற்கடிப்பதற்காகத் தங்கள் வேறுபாடுகளை மறந்து இரண்டாம் உலகப்போரில் ஒன்றுபட்டுச் செயல்பட்டன. ஆனால் போர் முடிவடைந்த

**குறிப்பு**

பின்னர் இரண்டு நாடுகளுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் மீண்டும் ஏற்பட்டு வேற்றுமைகள் அதிகமாயின. அமெரிக்கா மக்களின் அடிப்படை உரிமைகட்கும், ஜனநாயக அரசாங்கத்திற்கும் முக்கியத்துவம் அளித்தது. ஆனால் ரஷ்யாகம்யூனிசக் கொள்கைகளை உலகம் முழுவதும் பரப்ப முயற்சி எடுத்தது. இதன் விளைவாக உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிந்தது.

மேற்கத்திய முதலாளித்துவ நாடுகள் அமெரிக்காவின் தலைமையிலும், கிழக்கத்தியக் கம்யூனிச நாடுகள் ரஷ்யாவின் தலைமையிலும் ஒன்று சேர்ந்தன. இதன் மூலம் அமெரிக்காவிற்கும், ரஷ்யாவிற்குமிடையே பொறாமையும், பகைமையும் அதிகரித்தன. ஒன்றையொன்று அழிப்பதற்கு முயன்றன. இதனால் உலகில் பதட்ட நிலை ஏற்பட்டது. நேரடியாக இரு நாடுகளும் போரில் ஈடுபடா விட்டாலும், எப்போது மூன்றாம் உலகப்போர் ஏற்படுமோ என்ற பீதி நிலவியது. இதுவே கெடுபிடிப்போர் அல்லது பனிப்போர் என்று கூறப்படுகின்றது. ஊழடன றுயச என்ற வார்த்தையை இதற்கு முதன் முதலில் உபயோகித்தவர் வால்டர்லிப்மேன் என்பவராவார். இப்போர் 1947 முதல் 1965 வரை உச்சக் கட்டத்திலிருந்தது. 1991-ல் சோவியத் யூனியன் உடைந்து சிதறி விட்டதால் பனிப்போர் இப்போது முடிவடைந்து விட்டது. கெடுபிடிப் போருக்கான காரணங்கள்:

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ரஷ்யா உலகம் முழுவதும் கம்யூனிசத்தைப் பரப்ப முயற்சி எடுத்தது. கம்யூனிசம் பரவினால் ரஷ்யாவின் வலிமை நாளுக்கு நாள் அதிகரிக்கும் என்று அமெரிக்கா கருதியது.

இத்திட்டத்தை முதலில் பிரான்சும், இங்கிலாந்தும் ஏற்றுக் கொண்டன. அதன்பின் 14 ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக் கொண்டன. அமெரிக்காவின் ஆலோசனையின் பேரில் இந்த நாடுகள் தங்களுக்கு வழங்கப்படும் நிதியை பங்கிட்டுக் கொள்ள "ஐரோப்பிய பொருளாதாரக் கூட்ட மைப்பை ஏற்படுத்திக் கொண்டன. இந்த அமைப்பிற்கு 1948, ஏப்ரல் மாதம் அமெரிக்கா 53 மில்லியன் டாலர் நிதி உதவி வழங்கியது. இதன் விளைவாக அங்கு பொருளாதார நிலை சீரடைந்து மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. இதனால் கம்யூனிசம் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் செல்வாக்கு இழந்தது.

குறிப்பு

### 11.4.1. ஜெர்மானிய பிரச்சனை :

ஜெர்மானிய பிரச்சனையால், கெடுபிடிப்போரில் புதிய திருப்பம் ஏற்பட்டது. ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டு மோதல் அதிகரித்தது. போட்ஸ்டேம் மாநாட்டின் முடிவின்படி, தோற்கடிக்கப்பட்ட ஜெர்மனி நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டது. கிழக்குப் பகுதியில் ரஷ்யாவும், எஞ்சிய மூன்று பகுதிகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடு களும் ஆதிக்கம் கொண்டன. மேலும் போட்ஸ்டேம் மாநாட்டின் முடிவின்படி, தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் நாசிக் கோட்பாடுகளையும் நிறுவனங்களையும் ஒழித்துக் கட்டிவிட்டு, சுதந்திரமான தேர்தல் நடத்தி மக்களாட்சி நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டும். அதன்பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு வல்லரசு நாடுகள் வெளியேறிவிட வேண்டும்.

ஆனால் வல்லரசுகளுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் தேர்தல் நடத்துவதில் தாமதம் ஏற்பட்டது. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகியவை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளை ஒருங்கிணைத்து “ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு“ என்று பெயரிட்டன இதுவே மேற்கு ஜெர்மனியானது. ரஷ்யா தனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதியை “ஜெர்மானிய ஜனநாயகக் குடியரசு“ என்ற தனி நாடாக்கியது. இதுவே கிழக்கு ஜெர்மனியானது. மேற்கு ஜெர்மனியில் ஜனநாயக அரசும் கிழக்கு ஜெர்மனியில் கம்யூனிச அரசும் நிறுவப்பட்டது. இவ்வாறு கெடு பிடிப்போரின் விளைவாக ஜெர்மனி நிரந்தரமாக இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது.

### 11.4.2. பெர்லின் சிக்கல் :

கெடு பிடிப்போரின் மூர்க்கத்தனத்தை பெர்லின் சிக்கலில் நாம் காணலாம். ஜெர்மனி இரண்டாகப் பிரிக்கப்பட்டது போல பெர்லினும் வல்லரசுகளால் பிரிக்கப்பட்டது. கிழக்கு பெர்லினில் சோவியத் ரஷ்யாவின் ஆதிக்கமும், மேற்கு பெர்லினில் மற்ற மேற்கத்திய வல்லரசுகளின் கூட்டு ஆதிக்கமும் அமைக்கப்பட்டது. இதில், முக்கிய பிரச்சனை என்னவென்றால் மேற்கு பெர்லினுக்கும், மேற்கு ஜெர்மனிக்குமிடையிலான போக்குவரத்துத் தொடர்புகள் எல்லாம்

ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலுள்ள கிழக்கு ஜெர்மனி வழியாகவே அமைந்திருந்தன. இதனைப் பயன்படுத்திக் கொண்டு மேற்கு பெர்லினிலுள்ள மேற்கத்திய வல்லரசுகளை வெளியேற்ற ரஷ்யா திட்டமிட்டது.

எனவே 1948, ஜுன் 23-ம் தேதி இரவு திடீரென மேற்கு ஜெர்மனிக்கும், மேற்கு பெர்சலின்குமிடையிலான நில, நீர் மார்க்கங்களை ரஷ்யா அடைத்து விட்டது. இதனால் பெர்லினில் வாழ்ந்த 22 லட்சம் மக்களுக்கு உணவுப் பொருள் கிடைக்காமல் போய்விட்டது. ரஷ்யாவின் இந்த சவாலை உறுதியுடன் சமாளிக்க அமெரிக்கா முடிவு செய்தது. அப்போது மேற்கு பெர்லினிலிருந்த அமெரிக்க தளபதி லூசியஸ்டிகிளே என்பவரின் தலைமையில் என்ற பெயருடன் சோவியத் யூனியனுக்கெதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தனது விமானப் படை பலத்தைப் பயன்படுத்தி 1948 ஜுன் 26 முதல் 1949 மே 12-ம் தேதி வரை, மேற்கு பெர்லின் மக்களுக்கு எல்லாப் பொருட்களையும் ஆகாயவழி மூலம் அமெரிக்கா அனுப்பியது. இவ்வாறு ரஷ்யாவின் பெர்லின் முற்றுகையை அமெரிக்கா வெற்றியுடன் சமாளித்தது. இதனால் பதட்ட நிலை நீடித்தாலும், அமெரிக்காவின் உறுதியான நடவடிக்கையால் ரஷ்யா, பெர்லின் முற்றுகையை விலக்கிக் கொண்டது. ஆனால் 1961-ல் மேற்கு பெர்லினையும் கிழக்கு பெர்லினையும் பிரிக்கும் 62கி.மீ நீளமுள்ள பெர்லின் சுவரைக் கட்டியது ரஷ்யா. இது கெடுபிடிப் போரை மேலும் தீவிரப் படுத்தியது (1989-ல் இந்த பெர்லின் சுவர் இடிக்கப்பட்டது தெரிந்ததே!)

### 11.4.3. ரியோ உடன்படிக்கை

பிராந்தியக் கூட்டுப்பாதுகாப்பு முறையில் செய்து கொள்ளப்பட்ட முதல் உடன்படிக்கை ரியோ உடன்படிக்கையாகும். அமெரிக்க நாடுகளின் பாதுகாப்பிற்கான மாநாடு ஒன்று 1947. ஆகஸ்ட் 15-ல் ரியோடி ஜெனிரோ நகரில் உள்ள பெட்ரோ போலீஸ் என்ற இடத்தில் கூட்டப்பட்டது. வட அமெரிக்கா, தென் அமெரிக்க நாடுகள் அனைத்தும் பங்கு கொண்டன. மாநாட்டின் இறுதியில் ரியோ உடன்படிக்கை கையெழுத்தானது. இந்த உடன்படிக்கையின்படி “அகில அமெரிக்க நாடுகளின் சங்கம்“ ஒன்று அமைக்கப்பட்டது. 25 ஷரத்துக்களைக் கொண்ட ரியோ உடன்படிக்கை அமெரிக்க பகுதியில் அமைதியை நிலை

குறிப்பு

நிறுத்தவும் ஆக்கிரமிப்புப் போர்களைத் தடுப்பதற்கும், ஆக்கிரமிப்பு செய்யும் நாடுகள் மீது நடவடிக்கை எடுக்கவும் வழி செய்தது. இது அமெரிக்காவின் புதிய வெளிநாட்டுக் கொள்கையை வெளிப்படுத்தியது.

### 11.4.4. வட அட்லாண்டிக் ஒப்பந்தம் :1949

மேற்கு ஐரோப்பாவில் கம்யூனிசம் பரவவிடாமல் தடுப்பதற்காக ஏற்பட்ட ராணுவ ஒப்பந்தமே வட அட்லாண்டிக் ஒப்பந்தமாகும். அட்லாண்டிக் கடல் பகுதியிலுள்ள நாடுகளான, பெல்ஜியம் கனடா, டென்மார்க், பிரான்ஸ் ஐஸ்லாந்து, இத்தாலி , லக்சம்பர்க், நெதர்லாந்து, நார்வே, போர்ச்சுக்கல், இங்கிலாந்து ஆகியவை அமெரிக்காவுடன் சேர்ந்து வாஷிங்டனில் 1949-ஏப்ரல் 4-ம் தேதி ஒரு 25 வருட ராணுவ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அதற்கு வட அட்லாண்டிக் ஒப்பந்தம் என்று பெயர். 1952-ல் கிரீசும் துருக்கியும், 1955-ல் மேற்கு ஜெர்மனியும் நேட்டோ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதன் தலைமையிடம் பாரிசில் அமைக்கப்பட்டது. நேட்டோ நாடுகளின் கூட்டுப்படைகள் உருவாக்கப் பட்டன. ”நேட்டோ நாடுகளுள் ஏதேனும் ஒரு நாட்டின் மீதான தாக்குதல் அனைத்து நாடுகளின் மீதான தாக்குதலாகக் கருதப்பட வேண்டுமென்பது இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாகும். வடஅட்லாண்டிக் ஒப்பந்தத்தின் விளைவாக, உலகில் பயமும், போர் பீதியும் பதட்ட நிலையுமே ஏற்பட்டது. ரஷ்யாவும், அமெரிக்காவும் மேலும் படைபலப் பெருக்கத்தில் ஈடுபட்டன. தற்சமயம் நேட்டோவில் 16 நாடுகள் உறுப்பினராக உள்ளன.

### 11.4.5. ஆன்சுஸ் ஒப்பந்தம் (1951)

1951, செப்டம்பர் 1-ம் தேதி, ஆஸ்திரேலியா, நியுசிலாந்து அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து “பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம்“ ஒன்றில் அமெரிக்காவிலுள்ள சான்பிரான்சிஸ்கோ நகரில் கையெழுத்திட்டன. இந்த பாசிபிக் வட்டார நாடுகளின் ஒப்பந்தத்திற்கு “ஆன்சுஸ் ஒப்பந்தம்“ என்று பெயர் (யு. ஆஸ்திரேலியா, ணே-நியுசிலாந்து, ருளுஅமெரிக்கா) இந்த ஒப்பந்தத்தின்படி உடன்படிக்கை நாடுகளின் ஒரு நாட்டின் மீது ராணுவத்தாக்குதல் ஏற்பட்டால் மற்ற நாடுகள் உதவி செய்து அந்த ராணுவத்தாக்குதல்களை முறியடிக்க

வேண்டுமென்று முடிவு செய்யப் பட்டது. இதுவும் கெடுபிடிப்போரின் விளைவாக ஏற்பட்ட ராணுவ ஒப்பந்தமாகும்.

குறிப்பு

### 11.4.6. தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உடன்படிக்கை :

தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் கம்யூனிசம் பரவி விடுமோ என்ற பயம் அமெரிக்காவிற்கு ஏற்பட்டது. எனவே அப்பகுதியின் பாதுகாப்பிற்காக உடன்படிக்கை செய்யப்படவேண்டிய அவசியத்தை அமெரிக்கா உணர்ந்தது. எனவே அமெரிக்காவின் முயற்சியின் விளைவாக இங்கிலாந்து, பிரான்சு, ஆஸ்திரியா, நியுசிலாந்து பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், தாய்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் கூடி 1954 செப்டம்பர் 8-ம் தேதி உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டனர். இதற்கு “மணிலா உடன்படிக்கை“ என்றும் பெயர். உடன்படிக்கை நாடுகள் தங்கள் பகுதி நாடுகள் மீது ஆக்கிரமிப்பு நிகழ்ந்தால் அதனை முறியடிக்க ஒன்றுபட்டு கூட்டாக செயலாற்றி அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டுவது என்று முடிவு செய்தனர். ஆனால் இந்த உடன்படிக்கை ஆரம்பத்திலிருந்தே நல்ல முறையில் செயல்பட வில்லை . கம்யூனிசம் பரவுவதை தடுத்து நிறுத்து வதற்கு மட்டுமே இந்த உடன்படிக்கை என்று அமெரிக்கா அறிவித்தது. இங்கிலாந்தும் இந்த உடன்படிக்கையின் செயல்பாடுகளில் அதிக அக்கறை காட்டவில்லை . 1962-63-ல் பாகிஸ்தான் சீனாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கை சீட்டோ உடன்படிக்கையின் நோக்கத்தையே சிதறடித்தது. பின்னர் இந்த உடன்படிக்கையிலிருந்து பாகிஸ்தான் விலகிவிட்டது.

### 11.4.7. பாக்தாத் உடன்படிக்கை : 1955

மத்தியக்கிழக்குப் பகுதியில் கம்யூனிசம் பரவவிடாமல் தடுத்து நிறுத்துவதற்காகவே சென்டோ அல்லது பாக்தாத் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இது ரஷ்யாவிற்கு எதிரான ஓர் உடன்படிக்கையே ஆகும். 1955 பிப்ரவரியில் பரஸ்பர பாதுகாப்பு கருதி துருக்கியும் ஈராக்கும் உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டன. அதன் பின்னர் நவம்பர் 22-ல் இங்கிலாந்து, ஈரான், ஈராக், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இந்த பாக்தாத் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. ஆனால் இந்த பாக்தாத் உடன்படிக்கை வலிமையற்று காணப்பட்டதால் பின்னர் இதில்

குறிப்பு

அமெரிக்காவும் சேர்ந்து கொண்டது. இந்த பாக்தாத் உடன்படிக்கை நாடுகளுடன் ரஷ்யா நட்புறவை ஏற்படுத்திக் கொண்டதால் நாளடைவில் பாக்தாத் உடன்படிக்கை அதன் முக்கியத்துவத்தை இழந்தது.

### 11.4.8. வார்சா உடன்படிக்கை :1955

சோவியத் யூனியனுக்கு எதிராக அமெரிக்கா பல ராணுவ உடன்படிக்கை களைச் செய்து கொண்டதால், ரஷ்யாவிற்கும், கிழக்கு ஐரோப்பிய கம்யூனிச நாடுகளுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக சோவியத் யூனியன் கருதியது. எனவே பதிலடியாக, தனது நட்பு நாடுகளுடன் ராணுவ ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள ரஷ்யா முடிவு செய்தது. அதன் விளைவாக, 1954 டிசம்பரில் அல்பேனியா, பல்கேரியா, ஹங்கேரி, கிழக்கு ஜெர்மனி, போலந்து, ருமேனியா செக்கோஸ்லோவேகியா, ரஷ்யா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் மாஸ்கோவில் கூடினர். ராணுவப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர். பின்னர் மீண்டும் இந்த நாடுகள் 1955-மே மாதம் வார்சாவில் கூடி ஓர் உடன்படிக்கையில் கையெழுத் திட்ட னர்.

நேட்டோ ஒப்பந்த நாடுகளுக்கெதிராகத் தங்களைப் பலப்படுத்திக் கொள்வதே இவ்வுடன்படிக்கையின் நோக்கமாகும். வார்சா ஒப்பந்த நாடுகளின் தலைமையிடம் மாஸ்கோவில் அமைக்கப்பட்டது. கூட்டு ராணுவப்படை ஒன்றும் உருவாக்கப்பட்டது. ஆனால் சோவியத் யூனியனின் சிதறலுக்குப் பிறகு 1991 ஜுலை 1-ல் பிரேக் நகரில் வார்சா ஒப்பந்த நாடுகள் கூடின. அதில் வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இவ்விதம் அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒன்றுக்கொன்று எதிராகப் பல பிராந்திய ராணுவ ஒப்பந்தங்களைச் செய்து கொண்டன. இந்த ஒப்பந்த நாடுகள் அனைத்தும் படைப்பெருக்கத்தில் ஈடுபட்டன. ஐரோப்பா இரண்டு ராணுவ முகாம்களாகப் பிரிக்கப்பட்டது. எனவே பதட்ட நிலை அதிகரித்தது. கெடுபிடிப்போர் மேலும் வளர்ந்தது.

### 11.4.9. கொரியாப் போர்: 1950

அமெரிக்காவும், ரஷ்யாவும் கெடுப்பிடிப்போர் காலத்தில் கொரியாவில் நேரடியாகவே தலையிட்டன. கொரியாப்போர் இதனாலேயே

குறிப்பு

ஏற்பட்டது. இரண்டாவது உலகப்போருக்குப் பின் கொரியா இரண்டாகப் பிரிக்கப்பட்டு, வடபகுதியில் ரஷ்ய ஆதிக்கமும் தென்பகுதியில் அமெரிக்க ஆதிக்கமும் ஏற்பட்டது. கெடுபிடிப் போரின் தாக்கம் இங்கு அதிகமாகவே காணப்பட்டது. 1950 ஜூன் 25-ல் வடகொரியா கம்யூனிசப் படைகள் ரஷ்ய டாங்குகளின் உதவியுடன் தென்கொரியா மீது படையெடுத்தது. இப்பிரச்சனையில் ஐ.நா. சபை தலையிட்டு, வடகொரிய ஆக்கிரமிப்புப் படைகளை விரட்டி, ஐ.நா. படையை அமைத்தது. வடகொரியா தோற்கடிக்கப்பட்டு, விரட்டியடிக்கப்பட்டது. கொரியப் போர் நின்றாலும் கொரியா இரண்டாகப் பிரிந்தே உள்ளது. இதுவும் கெடுபிடிப்போரை அதிகப் படுத்தியது.

## 11.4.10. வியட்நாம் போர் : 1964

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு வியட்நாம் பிரான்சு நாட்டின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டது. ஆனால் வியட்நாமிலிருந்த தேசிய வாதிகள் பிரெஞ்சுக்காரர்களின் மேலதிகாரத்தை கடுமையாக எதிர்த்தனர். தேசியவாதிகளின் தலைவராக விளங்கியவர் ஹோசிமின் என்பவராவார். இவர் வியட்நாமின் வடபகுதியில் ஒரு மாகாண அரசாங்கத்தை நிறுவினார். தேசியவாதிகளை பிரான்ஸால் முறியடிக்க முடியவில்லை . எனவே 1954-ல் ஜெனிவாவில் மாநாடு கூட்டப்பட்டு வியட்நாம் இரண்டாகப் பிரிக்கப் பட்டது. பதினேழாவது அட்சரேகை எல்லைக்கோடாக வரையறுக்கப் பட்டது. வட வியட்நாமில் ஹோசிமின் தலைமையில் ஒரு கம்யூனிச அரசும், தென் வியட்நாமில் பாவோடாய் என்பவர் தலைமையில் ஒரு சுதந்திர அரசும் நிறுவப்பட்டது. இங்கு கெடுபிடிப் போரின் தாக்கம் காணப்பட்டது.

வட வியட்நாமிய கம்யூனிச அரசு ரஷ்ய ஆதரவுடன் தென் வியட்நாமில் கம்யூனிசத்தைப் பரப்புவதற்கு ““வியட்காங்““ என்ற புரட்சி இயக்கத்தை உருவாக்கி அனுப்பியது. உலகம் முழுவதும் கம்யூனிசம் பரவுவதைத் தடுப்பதையே நோக்கமாகக் கொண்ட அமெரிக்கா தென் வியட்நாமிற்கு பண உதவியும் படை உதவியும் அளித்து நேரடியாகத் தலையிட்டது. சுமார் ஐந்து லட்சம் அமெரிக்க வீரர்கள் அனுப்பப்பட்டனர். 1964-65 ஆண்டுகளில் வியட்நாம் போர் நடைபெற்றது. வட வியட்நாம் மீது அமெரிக்க விமானங்கள் தாக்குதல் தொடுத்தன. ஆனால் இப்போரில் சுமார் ஒரு லட்சம் அமெரிக்கா வீரர்கள் கொல்லப்பட்டனர். 1968-ல் போர்

முடிவடைந்தது. 1973-ல் பாரிசு அமைதிப்பேச்சுவார்த்தைக்குப் பின்னர் அமெரிக்கப்படைகள் வியட்நாமிலிருந்து வாபஸ் பெறப்பட்டன.



### 11.4.11. மத்திய கிழக்கில் கெடுப்பிடிப்போர்:

மத்திய கிழக்கில் பாலஸ்தீனியர்கட்கும், இஸ்ரேலுக்குமிடையே தீராத பகை ஏற்பட்டு அதன் விளைவாக நான்கு அராபிய இஸ்ரேலியப் போர்கள் ஏற்பட்டன. இந்தப் போர்களில் அமெரிக்கா முழுமையாக இஸ்ரேலை ஆதரித்தது. அரபு நாடுகளுக்கும், பாலஸ் தீனியர்கட்கும் ரஷ்யா ஆதரவு அளித்தது. ஆனால் தற்போது அங்கு கெடுபிடிப் போரின் தன்மை குறைந்து, பாலஸ்தீனியர்கட்கும் இஸ்ரேலுக்கு மிடையே சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

### 11.4.12. யு-2 நிகழ்ச்சி :

வல்லரசு நாடுகளுக்கிடையே உள்ள கெடுபிடி போரை முடிவிற்கு கொண்டு வரவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் ரஷ்ய பிரதமர் குருஷேவ் 1959-ல் அமெரிக்காவிற்கு வரலாற்றுச் சிறப்பு மிக்க வருகை புரிந்தார். சர்வதேச சிக்கல்களைத் தீர்ப்பதற்கு 1960, மே மாதம் உச்சநிலை மாநாடு கூட்ட முடிவு செய்யப்பட்டது. பாரிசு உச்சி மாநாடு, கூட்ட முடிவு செய்யப்பட்டது. பாரிசு உச்சிமாநாடு, நடைபெறுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக நடைபெற்ற யு-2 நிகழ்ச்சியினால் சமாதான முயற்சிகள் பலனற்றுப் போயின.

லாக்ஹீட் யு-2 என்ற அமெரிக்க வேவு விமானம் ரஷ்யா மீது பறந்த போது கட்டு வீழ்த்தப்பட்டது. அதன் விமானி பிரான்சிஸ் பவர்ஸ் உயிருடன் பிடிக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சியினால் பாரிசு உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள குருஷேவ் மறுத்துவிட்டார். அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் ரஷ்யா மீது வேவுபார்க்கும் விமானம் அனுப்பப் பட்டதை ஒத்துக் கொண்டார். அமெரிக்காவுக்கு பெருத்த அவமானம்.

குறிப்பு

## 11.5. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்

**குறுகிய பதில் கேள்விகள்**

1. சோவியத் யூனியனைக் கைப்பற்றுவதன் மூலம் ஹிட்லர் எதை அடைய நினைத்தார்? ஏன் படையெடுப்பு இறுதியில் தோல்வியடைந்தது?
2. பெர்லின் முற்றுகை என்றால் என்ன?

**நீண்ட பதில் கேள்விகள்**

1. 'இரண்டாம் உலகப் போரில் சோவியத் வெற்றியின் விலை மகத்தானது.' விளக்கவும்.
2. சோவியத் மற்றும் சோவியத்துக்கு பிந்தைய வரலாற்றின் போக்கை போர் எவ்வாறு பாதித்தது என்று விவாதிக்கவும். சோவியத் யூனியனை எப்படி மாற்றியது?
3. சில முன்னாள் சோவியத் குடியரசுகள் வெற்றி தினத்தை மற்ற நினைவுச் சின்னங்களுடன் மாற்றுவதற்கு ஏன் தேர்வு செய்தன? மற்ற முந்தைய கம்யூனிஸ்ட் நாடுகளில் இரண்டாம் உலகப் போரின் மரபு என்ன?

## 11.6. கூடுதல் வாசிப்புகள்

Kamenskii, A. and D. Griffiths. 2015. *The Russian Empire in the Eighteenth Century: Tradition and Modernization.* United Kingdom: Taylor & Francis.

Bushkovitch, P. 2011. *A Concise History of Russia*. United States: Cambridge University Press.

Dukes, P. 1998. *A History of Russia: Medieval, Modern, Contemporary, C.882-1996*. United States: Duke University Press.

Boterbloem, K. 2013. *A History of Russia and Its Empire: From Mikhail Romanov to Vladimir Putin*. United States: Rowman & Littlefield Publishers.

Ziegler, C. E. 1999. *The History of Russia. United Kingdom*: Greenwood Press.

# அலகு - 12

குறிப்பு

## 1953-1991 வரையிலான ரஷ்யக் கொள்கை

பாட அமைப்பு

12.0 அறிமுகம்

12.1 நோக்கங்கள்

12.2. ரஷ்யாவின் உள்நாட்டுக் கொள்கை 1953-1991 வரை

12.2.1. குருச்சேவ்

12.2.2. குருச்சேவ் இளமைப்பருவம்

12.2.3. கட்சியில் ஈடுபாடு

12.2.4. பிரதமராதல்

12.2.5. ஸ்டாலினிசத்திற்கு எதிரான நடவடிக்கைகள்

12.3. உள்நாட்டுக் கொள்கை

12.4. வெளிநாட்டுக் கொள்கை

12.4.1. ஜெர்மனி சிக்கல்

12.4.2. பாரிஸ் மாநாடு (1960)

12.4.3. குருச்சேவ் - கென்னடி சந்திப்பு

12.4.4. கியூபா சிக்கல் (1962)

12.4.5. மார்ஷல் டிட்டோவுடன் நல்லுறவை ஏற்படுத்துதல்

12.4.6. நடுநிலைமை கொள்கையை ஆதரித்தல்

12.4.7. பொருளாதார உதவி

12.4.8. பதவியிழத்தல்

12.5. பிரெஷ்னேவ்

12.5.1. குருச்சேவுடன் விரிசல்

12.5.2. உள்நாட்டுக் கொள்கை

12.5.3. வெளிநாட்டுக் கொள்கை

12.6. ஆந்தரப்போவ் (1983 - 1984)

12.6.1. இளமைப்பருவம்

12.6.2. அரசியல் ஈடுபாடு

12.6.3. ஆந்தரப்போவின் ஆட்சி

12.7. மிகெய்ல் கோர்பசேவ் 1985 - 1991

**குறிப்பு**

**12.7.1. வாழ்க்கைக் குறிப்பு:**
**12.7.2. கோர்பசேவின் குண இயல்புகள்:**
**12.7.3. கோர்பசேவின் சாதனைகள் :**
**12.7.4. கோர்பசேவின் உள்நாட்டுக் கொள்கை : (பெரஸ்த்ரோய்க்கா)**
**12.7.5. கோர்பசேவின் வெளிநாட்டுக் கொள்கை :**
**12.7.6. கோர்பசேவுக்கு எதிரான கவிழ்ப்பு முயற்சி :**
**12.8. சோவியத் யூனியனின் கலைப்பு**
**12.9. சுய மதிப்பீட்டு கேள்விகள் மற்றும் பயிற்சிகள்**
**12.10. கூடுதல் வாசிப்புகள்**

## 12.0 அறிமுகம்

வெளியுறவுக் கொள்கை பொதுவாக தேசிய நலனைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் வெளிப்படுத்தப்பட்டாலும், சோவியத் யூனியனில் கருத்தியல் காரணிகளிலும் அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டது. வரலாற்று மற்றும் பாரம்பரிய கொள்கைகள், புவியியல் சிந்தனைகள், உள் அரசியல் பிரச்சினைகள் மற்றும் இராஜதந்திர தலைவர்களின் கீழ் நாட்டின் ஒட்டுமொத்த நிலைமை ஆகியவை சோவியத் உள்நாட்டு மற்றும் வெளியுறவுக் கொள்கையை பாதித்த காரணிகள். ஐந்தாண்டுத் திட்டத்தின் அறிமுகத்துடன் யு.எஸ்.எஸ்.ஆர் ஒரு விவசாய மற்றும் பலவீனமான நாட்டிலிருந்து முதலாளித்துவ நாடுகளின் விருப்பங்களைச் சார்ந்து, தொழில்துறை மற்றும் செல்வாக்குமிக்க நாடாக, உலக முதலாளித்துவத்தின் கேப்ரிசிஸை முழுமையாகச் சுதந்திரமாகவும், சுயமாக ஒழுங்குபடுத்தும் நாடாகவும் மாற்றப்பட்டது. இந்த பிரிவில், ரஷ்யாவில் 1953 -1991 வரை ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகளைப் படிப்போம். மாலென்கோவின் கொள்கையிலும் கவனம் செலுத்துவோம்.

## 12.1 நோக்கங்கள்

இந்த அலகுக்குச் சென்ற பிறகு, உங்களால் முடியும்:

♦ ரஷ்யாவில் 1953 -1991 வரை ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகளைப் பற்றி விவாதிக்கவும்

♦ ரஷ்யாவில் 1953-1991 வரை ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகளை பகுப்பாய்வு செய்தல்

♦ மாலென்கோவின் கொள்கையை விவரிக்கவும்

## 12.2. ரஷ்யாவின் உள்நாட்டுக் கொள்கை 1953-1991 வரை

இந்த பிரிவில், 1953-1991 வரை வெவ்வேறு தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ரஷ்யாவின் உள்நாட்டுக் கொள்கையைப் பற்றி விவாதிப்போம்.

### 12.2.1. குருச்சேவ்

### 12.2.2. குருச்சேவ் இளமைப்பருவம்

ஸ்டாலினுக்குப்பின் ரஷ்யாவின் ஆட்சிப் பொறுப்பேற்ற குருச்சேவ் கி.பி. 1894-ம் ஆண்டு குர்ஸக் பகுதியைச் சேர்ந்த காலிநோவ்கா என்னுமிடத்தில் ஒரு ஏழைச் சுரங்கத் தொழிலாளிக்கு மகனாகப் பிறந்தார். இவரது முழுப்பெயர் நிகடாசெர்ஜியேவிக் குருச்சேவ் என்பதாகும். உயர்கல்வி பயில வசதியற்ற இவர் தனது இளமைப்பருவத்திலிருந்தே பல்வேறு தொழில்களில் ஈடுபட்டார். ஆடு மேய்க்கும் தொழிலில் தனது வாழ்க்கையை ஆரம்பித்த குருச்சேவ் படிப்படியாகப் பல்வேறு தொழில் களைக் கற்று பிட்டராகவும், சுரங்கத் தொழிலாளியாகவும் பணிபுரிந்தார். இவ்வேளையில் தொழிலாளர்களுக்கானப் பள்ளியில் சேர்ந்து கல்வி பயின்று பல்வேறு நூல்களைக் கற்று தனது அறிவை வளர்த்துக் கொண்டார்.

### 12.2.3. கட்சியில் ஈடுபாடு

சுமார் இருபத்தி நான்கு ஆண்டுகள் பல்வேறு தொழில்கள் புரிந்து வந்த குருச்சேவ் 1918-ம் ஆண்டு போல்சிவிக் கட்சியின் உறுப்பினரானார். கட்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட குருச்சேவ் உள்நாட்டுப் போர்க்காலத்தில் செஞ்சேனையில் சேர்ந்தார். கட்சியில் அவருக்கிருந்த அதிக ஆர்வத்தின் காரணமாக 1925-ம் ஆண்டு

ஸ்டாலினோ நகரின் கட்சி செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அதன் பின் மாஸ்கோவிலும் சிறிது காலம் இப்பணிபுரிந்தார். மாஸ்கோவில் பணிபுரிந்த பொழுது பல்வேறு கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது இவரது கடின உழைப்பாலும், நேர்மையாலும் அனைத்து தலைவர்களின் நன்மதிப்பைப் பெற்ற இவர் கி.பி. 1936-ம் ஆண்டு மாஸ்கோ கட்சி அமைப்பின் செயலாளராக பதவி உயர்வு பெற்றார். அதன்பின் 1938-ம் ஆண்டு உக்கிரேனிய கம்யூனிஸ்ட் கட்சியின் மையக்குழு செயலாளரானார். அனைவரின் நன்மதிப்பையும் பெற்ற இவர்

குருச்சேவ் 1939-ம் ஆண்டு பொலிட் பீரோ உறுப்பினர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். பொலிட்பீரோ உறுப்பினராக இருந்த காலத்தில் 1944-ம் ஆண்டு உகிகரேன் அமைச்சரவையின் தலைவர் பதவியையும் 1949-ம் ஆண்டு மாஸ்கோ மையக்குழு செயலர் பதவியையும் வகித்து வந்தார். தனது பதவி காலத்தில் பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி பெயரையும் புகழையும் ஈட்டிய குருச்சேவ் ஸ்டாலின் காலத்திற்குப் பின் ரஷ்யாவின் பிரதமரானார்.

## 12.2.4. பிரதமராதல்

தற்கால் ரஷ்யாவின் சிற்பி ஸ்டாலின் 1953-ம் ஆண்டு மார்ச்திங்கள் 5ம் நாள் காலமாகவே உடனடியாக கட்சியின் உயர்மட்ட நிர்வாகக் குழுவாகிய பீரிசீடியம் கூட்டப்பட்டது. இது மாலன்கோவை அடுத்த பிரதமராகத் தேர்வு செய்தது. மேலும் ஸ்டாலின் காலத்தில் நடைபெற்றது போன்று தனிநபர் ஆதிக்கமும் வழிபாடும் இனிமேலும் ஏற்படா வண்ணம் கூட்டுத் தலைமை முறையை அமுல்படுத்த எண்ணி பெரியா, மாலடோ ஆகியோரை அப்பதவியில் அமர்த்தினார். பிரதமர் பொறுப்பும் கட்சியின் தலைமை பொறுப்பும் மாலன்கோவிடம் இருப்பதை அக்கட்சி விரும்பவில்லை. இதனால் எழுந்த எதிர்ப்பின் காரணமாக கட்சியின் தலைமைப் பொறுப்பும் குருச்சேவ்க்கு கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. கட்சியின் தலைமைப் பொறுப்பும் வகித்து வந்த காலத்தில் நாட்டின் அரசியல் சூழ்நிலை குருச்சேவ்க்கு சாதகமாக மாறிக்கொண்டே வந்தது. பெரியா தனது பதவிக்காலத்தில் சரியாகச் செயல்படாததால் கைது செய்யப்பட்ட ரகசிய விசாரணைக்குப் பின் சுட்டுக் கொல்லப்பட்டார்

அதன்பின் கொள்கை ரீதியில் மாலன் கோவிற்கும் குருச்சேவிற்குமிடையே தகராறு எழுந்தது. மாலன்கோ நுகர்வோர் பொருட்களை அதிகமாக உற்பத்திச் செய்யும் நோக்குடன் சிறுதொழில்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க எண்ணினார். இதை வன்மையாக எதிர்த்த குருச்சேவ் கனரகத் தொழிலுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு முற்றவேகட்சியின் துணை கொண்டு புதிய சாகுபடித் திட்டம் ஒன்றைக் குருச்சேவ் வெளியிட்டார். குருச்சேவின் திட்டத்தை ரஷ்ய பத்திரிகைகள் புகழ்ந்து பாராட்டினர் மேலும் இவர் லெனினின் நினைவு நாள் மாற்றம் சம்பந்தமான ஆணை ஒன்றை 1955ம் ஆண்டு தன்னிச்சையாக வெளியிட்டார். இதனால் ஆத்திரமடைந்த மாலன்கோ தனது பதவியை ராஜினாமா செய்யவே பல்கா அப்பதவியில் அமர்த்தப்பட்டார். இவர் குருச்சேவின் கைப்பாவையாக செயல்பட்டதால் இவரது ஆட்சியைக் கவிழ்க்க சதித்திட்டம் ஒன்று தீட்டப்பட்டது. இவ்வேளையில் பின்லாந்தில் பயணம் மேற்கொண்டிருந்த குருச்சேவ் உடனடியாக நாடு திரும்பி நாட்டில் அமைதியை ஏற்படுத்தி பல்காவின் நிலைமையை உறுதிப்படுத்தினார். ஆனால் பதவி ஆசை கொண்ட குருச்சேவ் சிறிது காலத்திற்குள் பல்காவை பதவி இறக்கம் செய்துவிட்டு ரஷ்யாவின் பிரதமரானார். தனக்கு எதிராகச் யெல்பட்டவர்களைக் கடுமையாக ஒடுக்கி தனக்கு வேண்டியவர்களை உயர்பதவிக்கு அமர்த்தி தனது நிலைமையை மிகக்குறுகிய காலத்திற்குள் உறுதிப்படுத்திக் கொண்டார். பிரதமர் பதவியையும் கட்சியின் பொறுப்பையும் வகித்த குருச்சேவ் தன்னிகரில்லாதலைவராக விளங்கினார்.

### 12.2.5. ஸ்டாலினிசத்திற்கு எதிரான நடவடிக்கைகள்

ஸ்டாலினின் ஆட்சி காலத்தில் அவரை வானளாவ புகழ்ந்து வந்த குருச்சேவ் அவரது மறைவிற்குப் பின்னர் அவரது கொள்கைகளை மிகக் கடுமையாக விமர்சித்ததோடு மட்டுமல்லாமல் அதற்கெதிராகச் செயல்படவும் தொடங்கினார். மார்க்சிய - லெனினிசக் கோட்பாடுகளுக்கு எதிராக மாமேதை, இரும்பு மனிதன், இவ்வுலக இறைவன் என்றெல்லாம் ஸ்டாலினைப் புகழ்ந்தவர்கள் அவரது இறப்பிற்குப் பின்னர் அவரை

குறிப்பு

அதற்கு மேலாக இகழ்ந்து பேசியது மட்டுமல்லாமல் அவரது தவறுகளை பட்டியலிட்டு மக்களிடம் சமர்ப்பித்து அவர்களை ஸ்டாலின் கொள்கைக் கெதிராக ஏவிவிட்டனர்.

இதன் விளைவால் காரல் மார்க்ஸ், லெனின் ஆகியோர் வரிசையில் வைத்து மதிக்கப்பட வேண்டிய மாமேதை ஸ்டாலின் பெருமளவில் புறக்கணிக்கப்பட்டார். இவரது செயல்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு ஸ்டாலின் எதிர்ப்புத் திட்டம் என்று பெயர். இவ்வித நடவடிக்கைகள் ஸ்டாலினுக்குப் பின் அமைக்கப் பட்ட கூட்டுத் தலைமை காலத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் குருச்சேவ் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர்தான் தீவிரமாக அமல்படுத்தப்பட்டது.

1. ஸ்டாலின் இறந்தபொழுது வாய்விட்டு அழுத குருச்சேவ் அவர் ஒரு சிறந்த அரசியல்வாதி என புகழாரம் சூட்டினார். ஆனால் அதே குருச்சேவ் 1956-ல் நடைப்பெற்ற இருபதாவது கட்சி மாநாட்டில் மார்க்சிய - லெனினிச கோட்பாட்டில் இடம் பெறாத ஸ்டாலினசத்தை உடனடியாக நாட்டைவிட்டு அகற்ற வேண்டும் என வலியுறுத்தினார். ஸ்டாலினின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென திட்டமிட்டு செயலாற்றிய குருச்சேவ் ஸ்டாலின் தனது ஆட்சி காலத்தில் அமுல்படுத்திய திட்டங்களில் காணப்பட்ட குறைகளை அவ்வப்போது மக்களிடையே வெளிப்படுத்தி வந்தார்.

2. ஸ்டாலினைப் பற்றிய பல அரசியல் ரகசியங்களை மக்களிடையே வெளிப்படுத்தி அவர்களின் ஆதரவைப் பெற குருச்சேவ் முனைந்தார். ஸ்டாலின் அளவுக்கு மீறிய கொடூரமானவர். எதையும் ஆராயாமல் செய்யும் குணமுடையவர் என லெனின் இவரைப்பற்றிக் குறிப்பிட்டிருந்த ரகசியத்தை மக்களிடையே வெளிப்படுத்தி மக்களை அவரின் கொள்கை களுக்கெதிராக திசை திருப்பிவிட்டார். ஸ்டாலினுக்கு எதிராகச் செயல் படாத மக்களும், தலைவர்களும் கொடுமைப்படுத்தப்பட்டனர். ஏராளம் தலைவர்கள் தேசத்துரோகிகள் எனக் குற்றம் சாட்டப்பட்டு தீர்த்துக் கட்டப் பட்டனர். ஸ்டாலின் கொள்கையை ஆதரித்த அனைத்துத் துறையைச் சார்ந்த மக்களும் தேடிக்கண்டுபிடிக்கப்பட்டு கடுமையாக சித்திரவதை செய்யப் பட்டனர். அரசியல்வாதிகள் மட்டுமின்றி ஆசிரியர்கள், மாணவர்கள், மருத்துவர்கள் போன்றோரும்

பழிவாங்கப்பட்டனர். இத்தகைய பழிவாங்கும் படலம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருந்தது.

3. ஸ்டாலினின் வெளிநாட்டுக் கொள்கையை மிக வன்மையாக விமர்சித்த குருச்சேவ், இரண்டாவது உலகப்போரின் போது ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்கும் என பல ஐரோப்பிய நாடுகளும், அரசியல் வல்லுநர் களும் தெரிவித்த பிறகும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாது இறுதிக் கட்டத்தில் மிகத்தீவிரமாகச் செயல்பட்டதால் மிகுந்த ஆள்சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டது எனக் குறிப்பிட்டார். மேலும் போர்க் காலங்களில் ஸ்டாலின் தளபதிகளின் முடிவுக் கட்டுப்படாமல் தன்னிச்சை யாகச் செயல்பட்டதாகவும், இதனால் மக்கள் பெருமளவில் பாதிக்கப் பட்டார்கள் என சுட்டிக்காட்டினார். தான் ஒரு மாமேதை என பிறர்தன்னைப் புகழ இவர் தன்னிச்சையாக செயல்பட்டார் என்றும், அவ்வாறு செயல்பட்ட போது வெற்றி கிடைத்தது என்றால் தன்னால் வந்தது என்றும் தோல்வி ஏற்பட்டால் பிறரால் வந்தது எனவும் கூறி வந்ததாக குருச்சேவ் மக்களிடையே வதந்திகளைப் பரப்பி வந்தார். இதற்கு மக்களிடையே பேராதரவும் கிடைத்தது.

4. மேலும் ஸ்டாலின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கப் பணித்திட்டங்களையும் குருச்சேவ் மிகக் கடுமையாக விமர்சித்தார். அவரது ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட சாலைகள், தெருக்கள், கல்வி நிறுவனங்கள், தொழிற்கூடங்கள் போன்றவற்றிற்கு தனது பெயரைச் சூட்டி தனக்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்ததாகவும் குறை கூறினார். மேலும் நோபல்பரிசுக்கு இணையாக ஸ்டாலின் பரிசு என்ற ஒன்றை உருவாக்கினார் எனவும் சுட்டிக் காட்டினார். குருச்சேவின் இச்செயல்களால் ஸ்டாலினின் புகழ் நாளடைவில் மங்கத் தொடங்கியது.

5. ஸ்டாலினிச எதிர்ப்பு கொள்கையின் விளைவால் அவரது பெயர்கள் சூட்டப்பட்டிருந்த தெருக்கள், பட்டணங்கள், ஆறுகள், மலைகள், கல்வி நிறுவனங்கள், தொழிற்கூடங்கள் ஆகியவற்றின் பெயர் களும் மாற்றப் பட்டன. குறிப்பாக ஸ்டாலின் கிரெடு என்ற பட்டணத்தின் பெயர் வால்கா கிராடு என மாற்றப்பட்டது. அரசு நிறுவனங்களில் காணப் பட்ட ஸ்டாலினின் உருவப்படங்கள் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிறுத்தப்பட்டிருந்த ஸ்டாலினின் சிலைகள் நிர்மூலமாக்கப்பட்டன. ஸ்டாலின் இறந்த பின் அவரது உடல் அடக்கம் பண்ணப்படாமல் செஞ்சதுக்கத்தில் லெனினின் உடலுக்கு அருகாமையில்

**குறிப்பு**

கண்ணாடி பேழையில் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆனால் ஸ்டாலினிச எதிர்ப்புக் கொள்கையின் விளைவாக அவரது பூதவுடல் எவ்வித முன்னறி விப்பு மின்றி 1961-ம் ஆண்டு கிரம்ளினில் உள்ள ஒரு பகுதியில் அடக்கம் செய்யப்பட்டது. இதற்கு மக்களில் ஒரு பிரிவினர் எதிர்ப்பு தெரிவித்தாலும் அது முழுமையாக ஒடுக்கப்பட்டது. இவ்வாறு குருச்சேவ் தனது ஆட்சி காலத்தில் ஸ்டாலினுக்கு எதிராகத் தீவிரமாகச் செயல்பட்டார்.

## 12.3. உள்நாட்டுக் கொள்கை

ஸ்டாலினின் கொள்கைகளைக் குருச்சேவ் தீவிரமாக எதிர்த்தாலும் உள்நாட்டு வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களையும் அமல்படுத்தினார். நாட்டில் அறிவியல், தொழில்துறை வளர்ச்சியைப் பெருக்கி உற்பத்தியின் அளவை உயர்த்த எண்ணிய குருச்சேவ் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை தீட்டினார். உண்மையான பொதுவுடைமை சமுதாயத்தை உருவாக்க எண்ணிய இவர் ஸ்டாலினின் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பதிலாக ஏழாண்டுத் திட்டம் ஒன்றை தீட்டினார். 1958-ம் ஆண்டு நடைமுறை படுத்தப்பட்ட இத்திட்டம் பொருளாதார வளர்ச்சி, தொழில் உற்பத்தி, அறிவியல் வளர்ச்சி ஆகியவற்றை அடிப்படையாக கொண்டிருந்தது. ஏழாண்டு திட்டத்தை திறம்படச் செயல்படுத்தி, நாட்டில் நிலையான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த எண்ணிய இவர் இதுவரை செயல்பட்டு வந்த தேசியத் திட்டக் குழுவுக்குப் பதிலாக தேசிய பொருளாதாரசபை என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தினார்.
மேலும் நாட்டை ஏழு பொருளாதாரப் பகுதிகளாக அல்லது வட்டங்களாகப் பிரித்தார். விவசாயம், தொழில் ஆகியவற்றின் வளர்ச்சியை கவனிக்க பலக் கட்சி குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்களில் தொழிற்சாலை இயக்குநர்களும், தொழிலாளர்களும் பங்கு பெற்றனர். இவற்றிற்கெல்லாம் மேலாக நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பார்வையிட குருச்சேவ் தேசியப் பொருளாதாரத் தலைமைச்சபை ஒன்றை 1963-ம் ஆண்டு ஏற்படுத்தினார். இதன் விளைவாக நாட்டின் உற்பத்தி பன்மடங்கு பெருகியது.

ஏழாண்டுத் திட்டம் செவ்வனே நிறைவேற்றப்பட்டதால் 1965-ம் ஆண்டு நாட்டின் உற்பத்தி 89 சதவீதமாக உயர்ந்தது. அணுமின்

நிலையங்கள் பல அமைக்கப்பட்டதால் நாட்டின் மின்சார உற்பத்தி முன்பு இருந்ததைவிட இரண்டு மடங்கு அதிகரித்தது. விவசாய உற்பத்தி எழுபது சதவீதம் அதிகரித்தது. இதன் விளைவால் தொழில்துறையைச் சார்ந்தோர், அலுவலக ஊழியர், கூட்டுப்பண்ணை விவசாயிகள் ஆகியோர் நாற்பது சதவீதம் கூடுதல் வருமானம் பெற்றனர்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் காரணமாக அரசு பல மக்கள் நலத்திட்டங்களை அறிவித்தது. மக்கள் செலுத்திய வரி கணிசமான அளவு குறைக்கப்பட்டது. மக்களுக்கு அளிக்கப்பட்டு வந்த ஓய்வூதியத் தொகை அதிகரிக்கப்பட்டது. வீடு இல்லாத மக்களுக்கு வீடு அளிக்கும் திட்டத்தின் கீழ் நகர்புறங்களில் பதினேழு மில்லியன் வீடுகளும், கிராமப் புறங்களில் ஏழுமில்லியன் வீடுகளும் கட்டப்பட்டன.

இத்திட்டத்தில் விவசாயத்துறையில் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டன. நாடெங்கிலும் கூட்டுப்பண்ணைகள் நவீன விவசாயக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. விவசாயத்திற்குத் தேவையான இயந்திரக் கலப்பைகள் விவசாயத்திற்குப் பயன்படும் லாரிகள், அறுவடை இயந்திரங்கள் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, அவை குறைந்த விலைக்கு விவசாயப் பண்ணைகளுக்கு வழங்கப்பட்டன. இதன் விளைவாக 1960-ம் ஆண்டு அரசு கூட்டுப் பண்ணைகளில் 25 இலட்சம் இயந்திரக் கலப்பைகளும், 66000 லாரிகளும், 55000 அறுவடை இயந்திரங் களும் பயன்படுத்தப்பட்டன.

இந்த ஏழாண்டுத்திட்டம் கல்வித்துறையிலும் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. 1958-ம் ஆண்டு அரசு ஏழாண்டுகால கட்டாயக் கல்வித் திட்டம் ஒன்றை அறிவித்தது. இதன் விளைவாக கற்றவர்களின் எண்ணிக்கை கோடிக்கணக்கில் உயர்ந்தது.

இத்திட்டம் அறிவியல் துறையிலும் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தியது. நாட்டின் பாதுகாப்பைக் கருதி அணுகுண்டுகள், நீர்வாயுக் குண்டுகள் ஆகியவை அதிக அளவில் தயாரிக்கப்பட்டன. இவைகள் அழிவுக்கு மட்டுமின்றி ஆக்க வேலைக்கும் பயன்படுத்தப்பட்டன. ஏவுகணைகள் விண்வெளி ஆராய்ச்சியில் பயன்படுத்தப்பட்டன. ஏவுகணை விண் ஆராய்ச்சியில் மக்கள் அனைவரையும் அதிசயத்தில் ஆழ்த்தும் சாதனையாக 1957-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் ஸ்புட்னிக்-1 என்ற செயற்கை கோள் விண்வெளியில் மிதிக்கவிடப்பட்டது. 1961-ம் ஆண்டு ஏப்ரல் 12-ம் நாள் ரஷ்யாவின் விண்வெளிக் கப்பலில் யூரிக்காரின்

என்பவர் அனுப்பப்பட்டார். விண்வெளியைச் சுற்றி வந்த முதல் மனிதர் இவர் ஆவார். இதே போன்று 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் நாள் வாலண்டினா தெரஸ்கோவா விண்வெளிக்கு அனுப்பப்பட்டாள். விண்வெளிக்குச் சென்று வந்த முதல் பெண்மணி என்ற சிறப்பை இவள் பெற்றாள். இவ்வாறு விண்வெளி ஆராய்ச்சிக்கு இத்திட்டம் அதிக முக்கியத்துவம் அளித்தது.

வளர்ச்சியடைந்த ரஷ்யா, பின் தங்கிய நாடுகளின் மேம்பாட்டிற் காகவும் பாடுபட்டது. அயல்நாடுகளுக்குக் குறைந்த வட்டிக்கு கடனுதவி அளித்து வந்தது. மேலும் எகிப்து , இந்தியா, இந்தோனேஷியா, கியூபா, ஆகிய நாடுகளின் வளர்ச்சிக்காகப் பொருளாதார, தொழில்நுட்ப உதவியையும் அளித்து வந்தது. இந்தியாவில் சிறப்புற்று விளங்கும் பிலாய், பொக்காரோ ஆகிய இரும்பு தொழிற்சாலைகள் ரஷ்யாவின் உதவியால் நிறுவப் பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு குருச்சேவ் தனது உள்நாட்டுக் கொள்கையின் மூலம் பொருளாதாரத்தில் மேம்பாட்டைந்த தோடு தொழில் விவசாயத்துறையில் தன்னிறவை ஏற்படுத்தினார்.

## 12.4. வெளிநாட்டுக் கொள்கை

இரண்டாவது உலகப்போருக்குப்பின்னர் ரஷ்யாவின் வெளிநாட்டுக் கொள்கையில் வியத்தக மாற்றங்கள் நிகழ்ந்தன. ஸ்டாலின் தனது ஆட்சிக் காலத்தில் தன் ஆதிக்கத்தின் கீழ் செயல்பட்டு வந்த நாடுகளை ஒன்றாக இணைத்து அவற்றைக் கம்யூனிஸ்ட் நாடுகளாக மாற்றினார். இந்த அணி அமெரிக்காவுக்கு எதிராகச் செயல்பட்டு வந்தது. எனவே உலகில் பதட்டம் நிலவிவந்தது. குறிப்பாக இரண்டாம் உலகப்போருக்குப் பின் எழுந்த பெர்லின் விவகாரம் இரு அணிகளுக்குமிடையே தீர்க்கப்படாத ஒரு பிரச்சனையாக இருந்து வந்தது. ஆனால் குருச்சேவ் தனது அணுகுமுறையின் காரணமாக ஐரோப்பிய அரசுகளுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தி உலக அமைதிக்கான வழிமுறைகளைமேற்கொண்டார்.

**குறிப்பு**

### 12.4.1. ஜெர்மனி சிக்கல்

இரண்டாம் உலகப்போருக்குப்பின் நேச நாடுகளின் பிடியில் சிக்கிய ஜெர்மனி இரு பகுதிகளாக கூறுவைக்கப்பட்டது. ரஷ்யாவின் ஆதிக்கத்தில் கீழ் கொண்டுவரப்பட்ட கிழக்கு ஜெர்மனி ஒரு கம்யூனிஷ்ட நாடாக மாற்றப் பட்டது. ஜெர்மன் குடியரசாகத் திகழ்ந்த மேற்கு ஜெர்மனிக்கு அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஆதரவு அளித்து அதன் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டன. இதைரஷ்யா விரும்பவில்லை . எனவே 1958-ம் ஆண்டு ரஷ்ய பிரதமரான குருசேவ் இப்பிரச்சனைக்குத் தீர்வு காண பிரான்ஸ் அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு அழைப்பு ஒன்றை விடுத்தார். இவ்வழைப்பை ஏற்று இங்கிலாந்தின் பிரதமரான மெக்மில்லனும், அமெரிக்க துணை ஜனாதிபதி நிக்சனும் மாஸ்கோ சென்றனர். பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படாத நிலையில் இப்பிரச்சனைக்கு இறுதி முடிவு எடுக்க நிக்சனின் அழைப்பை ஏற்று குருசேவ் அமெரிக்கா சென்றனர். அமெரிக்கா தலைவரான ஐசனொவரும் குருச்சேவும் சந்தித்துப் பேசியும் பெர்லின் பிரச்சனைக்குத் தீர்வு ஏற்படவில்லை. எனவே பாரிஸ் மாநாட்டைக் கூட்ட இருதலைவர்களும் முடிவெடுத்தனர்.

### 12.4.2. பாரிஸ் மாநாடு (1960)

மேற்குறிப்பிட்ட முடிவின்படி, ரஷ்ய பிரதமரான குருச்சேவும் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனோவரும், பிரெஞ்சு குடியரசுத் தலைவரான டிகாலும், இங்கிலாந்து நாட்டுப் பிரதமரான மாக்மில்லனும்

குருச்சேவ் பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸில் 1900ம் ஆண்டு மே மாதம் தீர்மானித்து அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டன. இம்மாநாடு கூடவிருந்த சில நாட்களுக்கு முன் ரஷ்ய மே தினவிழா கொண்டாடியது. அப்பொழுது அமெரிக்க உளவு விமானம் ஒன்று ரஷ்யப் பகுதியில் பறந்து கொண்டிருந்தது. இதை ரஷ்யா சுட்டு வீழ்த்தியது. உயிர் தப்பிய விமர்னி கைது செய்யப்பட்டு பத்தாண்டுச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. உச்சி மாநாட்டில் இது பெரும் விவாதத்தை ஏற்படுத்தியது. எனவே உச்சி மாநாட்டில் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை .

**குறிப்பு**

### 12.4.3. குருச்சேவ் - கென்னடி சந்திப்பு

பெர்லின் பிரச்சனைக்குத் தீர்வுக்காண அமெரிக்க ஜனாதிபதி கென்னடியும், ரஷ்ய பிரதமர் குருச்சேவும் 1961-ம் ஆண்டு மீண்டும் சந்தித்து பேசினர். இப்பேச்சு வார்த்தையும் தோல்வியில் முடிவுற்றது. இச்சூழ்நிலையில் மேற்கு ஜெர்மனியில் அமெரிக்கா தனது படைபலத்தை பெருக்கியதால் போர் மூழும் அபாயம் ஏற்பட்டது. பேச்சுவார்த்தை மூலம் எவ்வித பயனும் ஏற்படாது என எண்ணிய குருச்சேவ் 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் “13-ம் நாள் கிழக்கு ஜெர்மனிக்கும் மேற்கு ஜெர்மனிக்குமிடையே சுவர் ஒன்றை எழுப்பி பிரச்சனைக்குத் தீர்வு கண்டார்.

### 12.4.4. கியூபா சிக்கல் (1962)

1962- ம் ஆண்டு கியூபாவில் எழுந்த சிக்கலின் விளைவால் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அமெரிக்காவின் அண்டை நாடான கியூபாவில் ரஷ்யா ஏவுகணைத்தளம் ஒன்றை அமைக்க திட்டமிட்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. இச்செயல் அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு குந்தகத்தை ஏற்படுத்தும் என கென்னடி கருதியதால் இத்திட்டத்தைக் கைவிடுமாறு ரஷ்யாவை வேண்டினார். உலக அமைதிக்கு இதனால் பங்கம் ஏற்படக்கூடாது என எண்ணிய குருச்சேவ் இத்திட்டத்தைக் கைவிட்டார்.

### 12.4.5. மார்ஷல் டிட்டோவுடன் நல்லுறவை ஏற்படுத்துதல்

யூக்கோஸ்லாவாக்கியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே நீண்ட நாட்களாக கருத்து வேறுபாடு நிலவி வந்தது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க எண்ணிய குருச்சேவ் 1955-ம் ஆண்டு அதன் அதிபர் மார்ஷல் டிட்டோவுடன் சந்தித்துப் பேசி இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்திக்கொண்டார்.

### 12.4.6. நடுநிலைமை கொள்கையை ஆதரித்தல்

இரண்டாம் உலகப்போருக்குப் பின் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளிடையே நிலவிய ஆதிக்கப் போட்டி கெடுபிடி போர்கள் தோன்ற வழிவகுத்தன. இது உலகில் அமைதியின்மையை ஏற்படுத்தும் என

அஞ்சிய இந்தியா, இலங்கை, இந்தோனேஷியா, எகிப்து, யூகோஸ்லேவியா போன்ற நாடுகள் நடுநிலைமை கொள்கை ஒன்றினை வகுத்து அமைதியை ஏற்படுத்த முயன்றன. இச்செயலை ஐரோப்பிய நாடுகள் கடுமையாக விமர்சித்தன. இவ்வேளையில் குருச்சேவ் நடுநிலைமைக் கொள்கையை ஆதரித்தது மட்டுமல்லாமல் அந்நாடுகளுக்கு அனைத்து உதவிகளும் அளிப்பதாக வாக்குறுதியளித்தார்.

### 12.4.7. பொருளாதார உதவி

வளர்ந்து வரும் நாடுகளுக்கு தன்னாலியன்ற உதவிகளை அளிப்பதில் ரஷ்யா அதிக அக்கறை காட்டியது. 1955-ம் ஆண்டிலிருந்து இந்தியா, எகிப்து, இந்தோனேஷியா, அல்ஜீரியா, ராக், கியூபா, கானா, சினிமா, மாலி, அப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளுக்கு ரஷ்யா ஏராளம் பொருளாதார தொழில்நுட்ப உதவிகளை அளித்தது. அதனடிப்படையில் இந்தியாவில் பிலாய், பொகாரோ ஆகிய இரும்புத் தொழிற்சாலைகளை அமைக்க பேருதவியளித்தது. இதே போன்று ஐந்நூறுக்கு மேற்பட்ட திட்டங்களை ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் நிறைவேற்றிக் கொடுத்து ஏழை நாடுகளின் உண்மை நண்பன் என்ற நற்பெயரைப் பெற்றது. மேலும் படை வலிமையைக் குறைப்பதிலும் ஆயுத அழிப்பு திட்டத்தை நிறைவேற்றுவதிலும் ரஷ்யா அதிக அக்கறை காட்டியது.

### 12.4.8. பதவியிழத்தல்

ரஷ்யாவின் வளர்ச்சிக்காகவும், உலக நாடுகளின் அமைதிக்காகவும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட குருச்சேவின் அரசியல் வாழ்வு திடீரென முடிவுற்றது. 1984-ம் ஆண்டு உடல் நலக்குறைவின் காரணமாக குருச்சேவ் ஓய்வு எடுத்த போது பிரிசீடியம் கூடியது. இது குருச்சேவின் கொள்கைகளைக் கடுமையாக விமர்சித்த தோடல்லாமல் அக்டோபர் 16-ம் நாள் அவரை பதவி நீக்கம் செய்தது. குருச்சேவ் பதவி இழந்த பின் பிரெஷ்னேவ் தனது அதிகாரத்தை நிலைநாட்டினார்.

## 12.5. பிரெஷ்னேவ்

குறிப்பு

லியோனித் இலியச் பிரெஷ்னேவ் 1906-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ம் நாள் உக்ரேனிலுள்ள ஒரு முக்கிய உருக்குமையமான நிப்ரோ ஜொனின்ஸ்க் நகரில் ஒரு தொழிலாளிக் குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தை வாழ்நாள் முழுதும் தனது சொந்த ஊரிலுள்ள உருக்கு ஆலை ஒன்றில் வேலை செய்து வந்தார். பிரெஷ்னேவ் இவ்வாலையில் தொழிலாளியாகவும், பொறியியல் கல்லூரியில் படித்து பட்டம் பெற்ற பின் பொறியியல் வல்லுநராகவும் பணிபுரிந்தார். அவரது தம்பியும், சகோதரியும் அதே நிறுவனத்தில் பணிபுரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. உயர் கல்வி கற்று உயர்பதவிகளை வகித்த இவர் இளமைப் பருவத்திலிருந்தே கம்யூனிஸ்ட் கட்சியில் நெருங்கிய ஈடுபாடு கொண்டிருந்தார். கட்சிப் பதவிகள்

இரண்டாம் உலகப்போர் இவருக்குத் தனது திறமையை வெளிப் படுத்துவதற்கான ஒரு வாய்ப்பை அளித்தது. ராணுவத்தில் மக்கள் பொறுப்பாளராகச் செயலாற்றி அனைவரின் நன்மதிப்பையும் பெற்றதால் மேஜர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். அதன் பின்படிப்படியாகவும் உயர்ந்து கி.பி. 1950-ல் சுப்ரீம் சோவியத்தின் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். கி.பி. 1952-ல் மையக்குழு உறுப்பினரானார். விவசாயத்துறையோடு நெருங்கிய ஈடுபாடு கொண்ட இவர் குருசேவ்-ன் கீழ் புது நிலங்களைச் சாகுபடிக்கு கொண்டு வரும் திட்டத்தின் கீழ் பணியாற்றினார். தனது நேர்மை, கடின உழைப்பு ஆகியவற்றின் காரணமாக குருச்சேவின் நன்மதிப்பைப் பெற்ற பிரஸனேவ் 1956-ம் ஆண்டு மீண்டும் மையக்குழு உறுப்பினர் பதவி பெற்றார். குருச்சேவின் பக்கபலமாக இருந்த பிரஸ்னேவ் அவதரு கொள்கைகளை முழுக்க முழுக்க ஆதரித்தார். இதன் விளைவால் கி.பி. 1960-ம் ஆண்டு தலைமை நிர்வாக குழுவின் தலைமைப் பொறுப்பேற்றார்.

### 12.5.1. குருச்சேவுடன் விரிசல்

குருச்சேவுடன் ஏற்பட்ட நெருக்கத்தின் காரணமாக 1964-ம் ஆண்டு மைய நிர்வாகக் குழுவின் இரண்டாவது செயலராக நியமிக்கப் பட்டார். இதே வேளையில் குருச்சேவின் உதவியாளராகவும் பணியாற்றினார். ஆனால் இருவருக்குமிடையே ஆன இவ்வுறவு நீண்ட நாட்கள்

குறிப்பு

நீடிக்கவில்லை. சிறிது காலத்திற்குள் இருவரும் பகைவராயினர். உடல் நலமின்மையின் காரணமாக குருச்சேவ் ஓய்வு எடுக்கச் சென்ற போது அவசரமாக தலைமை நிர்வாகக் குழுவைக் கூட்டிய பிரஷ்னேவ், குருச்சேவின் கொள்கைகளைக் கடுமையாக விமர்சித்தது. மட்டுமின்றிப் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் 1964-ம் ஆண்டு அக்டோபர் 15-ம் நாள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார்.

### 12.5.2. உள்நாட்டுக் கொள்கை

இரண்டாம் உலகப்போருக்குப்பின் ஐரோப்பிய நாடுகள் பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்தி ரஷ்யாவிற்கு எதிராகச் செயல்பட்டு வந்தார். இச்சூழ்நிலையில் நாட்டின் பாதுகாப்பிற்கு அதிக முக்கியத்துவம் அளித்த பிரஸ்னேவ் ராணுவ பலத்தைப் பெருக்க நடவடிக்கைகளை மேற் கொண்டார். இவரது நடவடிக்கைகள் மக்களுக்குப் பெரும் அதிருப்தியை அளித்தன. எனவே நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைதியின்மை நிலவியது. இவற்றைக் கடுமையாக ஒடுக்கி பிரஷ்னேவ் தனது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார். அதற்கெதிராகச் செயல்பட்டவர்கள் பதவி இரக்கம் செய்யப்பட்டதோடு வன்மையாகத்தண்டிக்கப்பட்டனர்.
குருச்சேவ் தனது ஆட்சி காலத்தில் கனரகத் தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வந்தார். ஆனால் பிரஸ்னேவ் அதற்கு எதிரான கொள்கையைக் கடைபிடித்து நுகர்வோர் பொருள் உற்பத்திக்கு முன்னுரிமையளித்தார். கல்வித் துறையிலும் இவரது ஆடுசி காலத்தில் பல்வேறு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. நவீன் ஆயுத உற்பத்தி விண்வெளிப்பயணம், அணு ஆயுத உற்பத்தி போன்ற வற்றில் குருச்சேவினுடைய கொள்கையை இவரும் கடைபிடித்தார். அமெரிக்காவின் வளர்ச்சிக்கு ஈடுகட்டும் வகையில் நவீன ஆயுத உற்பத்திக்கு அதிக முன்னுரிமை அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இவரது ஆட்சி காலத்தில் ஏற்பட்டது.

### 12.5.3. வெளிநாட்டுக் கொள்கை

இரண்டாவது உலகப்போருக்குப்பின் அமெரிக்காவின் தலைமையில் ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிற்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் பிரஸ்னேவ்க்கு அச்சத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தின. போர் ஏற்படுமாயின் அது ரஷ்யாவைப் பெருமளவு

பாதிக்கும் என எண்ணிய பிரஷ்னேவ் உலக அமைதியை நிலைநாட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார். குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள முயன்றார். 1968-ம் ஆண்டு செக்கோஸ்லா வாக்கியாவுடன் மோதல் ஏற்படுகின்ற நிலை ஏற்பட்ட போது நாட்டின் நலன் கருதி அப்போரைத்தவிர்க்க தீவிரமுயற்சியில் ஈடுபட்டார்.

அணு ஆயுத உற்பத்தி நாட்டின் பொருளாதாரத்தையும் உலக அமைதியையும் பெருமளவு பாதிக்கும் என பிரஸ்னேவ் எண்ணினார். இவ்வுணர்வின் காரணமாக இவர் அமெரிக்க ஜனாதிபதி நிக்சனுடன் சேர்ந்து அணு ஆயுத உற்பத்தி குறைப்பிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இருதலைவர்களும், பலமுறை சந்தித்துப் பேசியதன் விளைவாக இரு நாடுகளும் ஆயுதக் குறைப்பிற்கு உடன்பட்டனர். அமெரிக்கா - ரஷ்யா ஆகிய நாடுகளின் இம்முயற்சி அரசியலிலும் பெரும்மாற்றத்தை சமீப காலத்தில் ஏற்படுத்தியது. வியட்நாம் போரினால் ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்கு மிடையே ஏற்பட்ட விரிசலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் 1972-ம் ஆண்டு திட்டமிட்டப்படி ரஷ்யாவின் அழைப்பை ஏற்று அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் மாஸ்கோவிற்குப்பயணத்தை மேற்கொண்டார்.

இந்தியாவின் உண்மை நண்பராக பிரஷ்னேவ் விளங்கினார். இந்தியாவின் வளர்ச்சிக்கு இவர். அதிக அக்கரை காட்டினார். இந்தியாவிற்கு இவர் மேற்கொண்ட பயணங்கள் இருநாட்டிற்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தின. இந்தியா இக்கட்டான சூழ்நிலைகளில் சிக்கி தவித்த காலங்களில் ரஷ்யா ஆற்றிய உதவியை நாம் என்றும் மறக்கமுடியாது. மேற்கு பாகிஸ்தானின் ராணுவ ஆதிக்கத்தை எதிர்த்து வங்காள தேச மக்கள் 1971-ல் விடுதலைப் போரைத் தொடங்கினர். இதன் விளைவால் கிழக்கு வங்காளத்திலிருந்து ஒரு கோடி பேர் அகதிகளாக இந்தியாவிற்கு வந்தனர். இது இந்தியாவில் பல சிக்கல்களை ஏற்படுத்தியது. இச்சிக்கல்களுக்கு தீர்வு காண இந்தியாவில் அவ்விடுதலைப் போரில் பங்கெடுத்தது.

இந்திய எதிர்ப்பாளராக விளங்கிய நிக்சன் இந்தியாவிற்கு எதிராகக் கடற்படை அணியொன்றை அனுப்பி வைத்தார். இச்சூழ்நிலையில் ரஷ்யாவின் உதவியை இந்தியா நாடியது. உதவியளிக்க முன் வந்த ரஷ்யா இந்தியாவுடன் இருபது ஆண்டிற்கான

ராணுவ ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டது. இதன் விளைவால் ஏராளம் ஆயுதங்களை இந்தியாவிற்கு அனுப்பியது.

முதிர்ந்த அரசியல் அனுபவம் கொண்ட பிரஸ்னேவ் நிதானப் போக்கைக் கடைபிடித்தார். காலத்திற்கேற்றவாறு தனது கொள்கையை மாற்றிக் கொண்ட பிரஷ்னேவ் ஒரு உலக அமைதி விரும்பியவர். உலக மக்களுக்கு இவர் ஆற்றிய சேவைகளுக்காக சர்வதேச லெனினின் சமாதானப் பரிசும், ஜோலியோ கியூரி தங்கப்பதக்கமும் இவருக்கு அளிக்கப்பட்டன. இதைத் தவிர இவருக்குப் பல உள்நாட்டு வெளிநாட்டுப் பரிசுகளும் . தர்மராஜ் வழங்கப்பட்டன. நீண்டகாலம் ரஷ்யாவை ஆட்சி புரிந்த பிரஸ்னேவ் 1982-ம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## 12.6. ஆந்தரப்போவ் (1983 - 1984)

### 12.6.1. இளமைப்பருவம்

பிரஸ்னேவ் - க்குப் பின் ரஷ்யாவை ஆட்சி புரிந்தவர் ஆந்தரப் போவ் ஆவார். இரண்டு ஆண்டுகள் மட்டுமே ரஷ்யாவை ஆட்சிபுரிந்த இவர் ஒரு சிறந்த கல்விமான். இவர் 1914-ம் ஆண்டு ரஷ்யாவிலுள்ள வடகாக் கஸஸ் பகுதியில் பிறந்தார். தொழில் கல்வி கற்ற இவர் வோல்காவிலுள்ள கப்பல் கட்டும் பகுதியில் தொழிற்சாலையில் சிறிது காலம் பணிபுரிந்தார்.

### 12.6.2. அரசியல் ஈடுபாடு

அரசியலில் தீவிரமாக ஈடுபட்ட ஆந்தரப்போவ் மிக குறுகிய காலத்திற்குள் இளைஞர் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரானார். அதன் பின் லெனின் கிராடு கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாரக 1944-ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டார். இதை தொடர்ந்து 1947-ம் ஆண்டு கரியாலிப் பகுதியில் இரண்டாவது செயலராகத் தெரிவு செய்யப்பட்டார். தனது பணியைக் கடமை உணர்வுடன் மேற்கொண்டதால் இவரது செல்வாக்குப் படிப்படியாக உயர்ந்தது.

பல்வேறு பதவிகள் அவரை தேடி வந்தன. 1954-ம் ஆண்டு முதல் 1957-ம் ஆண்டு வரை இவர்ஹங்கேரி நாட்டின் தூதுவராக நியமிக்கப்பட்டார். பல்வேறு உயர்பகுதிகளை வகித்த இவரிடம் பல

முக்கிய பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன. தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை இவர் மிகச்சிறப்பாகச் செய்து முடித்தார். செயல்களின் மூலமாக தனது திறமையை வெளிக்காட்டிய இவர் 1967-ம் ஆண்டு போலிட்பிரோ உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அதன் பின் ரஷ்யாவின் மிகச்சிறந்த தலைவர்களுள் ஒருவராக இவரும் கருதப்பட்டார்.

### 12.6.3. ஆந்தரப்போவின் ஆட்சி

1982-ம் ஆண்டு பிரஷ்னேவ் காலமாகவே அவரது உடலை அடக்கம் செய்வது தொடர்பாக ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் தலைவராக இவர் நியமிக்கப்பட்டார். அதன் பின் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் இவரை எதிர்த்து போட்டியிட செரனன்கோவ் கூட்டுத் தலைமையை வலியுறுத்தியதால் கட்சியின் தலைமைப் பீடமான போலிட்பிரோவில் பிளவு ஏற்பட்டது. எனவே ஆந்தரப்போவ் ஆட்சிக்கு வருவதை போலிட்பிரோவில் ஒரு பிரிவினர் மட்டுமே ஆதரித்தனர். ஆனால் ஆட்சிக்கு வந்ததும் கட்சியில் தனக்கிருந்த எதிர்ப்புகளைக் களைந்ததோடு தனது ஆதரவாளர்களுக்கும், நம்பிக்கைக்குரியவர் களுக்கும் உயர் பதவிகளை அளித்து தனது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார்.

சோசலிசக் கோட்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட இவர் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய மார்க்சிய, லெனினிச கோட்பாட்டால் இயலாது என மனப்பூர்வமாக நம்பினார். எனவே இவர் அதிகாரத்தைப் பரவலாக்கி பொருளாதாரம் தொடர்பான முடிவுகளை மேற்கொள்ள சுய அதிகாரம் கொண்ட சமூக அமைப்புகளை உருவாக்கினார். இருப்பினும் இவரது ஆட்சி காலத்தில் தொழில் விவசாயத் துறைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாமையால் நாட்டின் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படவில்லை . வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்த வரையில் அயல்நாடு களுடன் நல்லுறவை ஏற்படுத்த முயன்றார். எனவே தனது அண்டை நாடான சீனாவுடனும் ஐரோப்பியா நாடான அமெரிக்கா வுடனும் நல்லுறவை ஏற்படுத்தினர்.

இவரது இச்செயல்கள் உலக நாடுகளிடையே ஆச்சரியத்தையும், வியப்பையும் ஏற்படுத்தின. அயல் நாடுகளுடன் நல்லுறவை

ஏற்படுத்தியதால் ராணுவத்திற்கு என ஒதுக்கப்பட வேண்டிய தொகையைக் கணிசமான அளவு குறைத்து அதனைப் பொருளாதார மேம்பாட்டிற்கும், மக்கள் நல வளர்ச்சிக்கும் ஒதுக்கினார். இருப்பினும் இவரது உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு எதிராக மக்களிடையேயும், அரசியல் தலைவர்களிடையேயும் கடும் எதிர்ப்பு கிளம்பியது. ஆந்தரப்போவ்க்குப் பின் சிறிது காலம் சொரனன்க்கோ ரஷ்யாவை ஆட்சி புரிந்தார்.

## 12.7. மிகெய்ல் கோர்பசேவ் 1985 - 1991

1985-ம் ஆண்டு மார்ச் மாதம் சோவியத் யூனியனின் அதிபராக செர்னன்கோவிற்குப் பிறகு பதவி ஏற்றார் மிகெய்ல் கோர்பசேவ். அப்போது அவருக்கு வயது 54. அவர் இதுவரை பதவியிலிருந்த அதிபர்களைவிட கொள்கையிலும், குணத்திலும், முற்றிலும் மாறுபட்டவராகக் காணப்பட்டார். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய மாபெரும் மனிதர் இவர். உலக வரலாற்றின் போக்கை மாற்றியமைத்த பெருமை இவருக்கு உண்டு. “வரலாற்றை உருவாக்கிய மாமேதை“ இவர். உள்நாட்டிலும், வெளி உறவிலும் பல புரட்சிகரமான சீர்திருத்தங்களை மேற்கொண்டு வரலாற்றின் ஏடுகளில் நீங்கா இடம் பிடித்துக் கொண்டவர் கோர்பசேவ் ஆவார். கோர்பசேவின்

### 12.7.1. வாழ்க்கைக் குறிப்பு:

தெற்கு ரஷ்யாவிலுள்ள பிரிவல்நோயி என்ற கிராமத்தில் 1931 மார்ச் மாதம் 2-ம் தேதி பிறந்தார். அப்பா பெயர் செர்கி அம்மா பெயர் மரியா . தனது இளம் வயதில் “இளம் கம்யூனிசக் கழகத்தில்“ உறுப்பினராகச் சேர்ந்தார். நன்றாகப் படித்து விவசாயத்தில் பட்டம் பெற்றார். 1955-ல் மாஸ்கோ பலக்லைக் கழகத்தில் சட்டம் பயின்று பட்டம் பெற்றார்.

1964-ல் தனது கிராமத்திற்கு அருகில் உள்ள ஸ்டாவ்ரோபோல் என்ற நகரத்தின் கம்யூனிசக் கட்சியின் அடிப்படை உறுப்பினரானார். தனது 35-ம் வயதில் அந்த நகரத்தின் கட்சித்தலைவரானார். 1971-ல் கம்யூனிசக் கட்சியின் மத்தியக்குழு உறுப்பினரானார். 1978-ல் கட்சியில்

பொலிட்பீரோ உறுப்பினரானார். சரியாக ஏழு வருடம் கழித்து கட்சியின் பொதுச் செயலராகி, சோவியத்யூனியனின் அதிபரானார்.

**குறிப்பு**

### 12.7.2. கோர்பசேவின் குண இயல்புகள்:

கோர்பசேவ் எப்போதும் புன்சிரிப்புடன் இருப்பார். இவருக்கு முன்பு பதவிவகித்த பிரஷ்னேவ் (1964-82), யூரி ஆந்திரபோவ் (1982-84), செர்னன்கோ (1984-85) ஆகியோர் தங்கள் முகத்தில் கோபமோ , புன்சிரிப்போ எந்த உணர்ச்சியும் வெளிப்படுத்தாமல் மரக்கட்டை போன்று முகத்தை வைத்துக் கொண்டிருந்தனர். இந்த முகங்களையே பார்த்து வெறுத்துப் போன ரஷ்ய மக்களை கோர்பசேவின் புன்சிரிப்பு நிறைந்த முகம் சந்தோஷப்படுத்தியது. பொது நிகழ்ச்சிகளுக்கும், வெளிநாட்டுப் பயணங்களிலும் தனது மனைவி ரெய்சா வை உடன் அழைத்துச் சென்றார். இதுவரை எந்த ரஷ்ய அதிபரும் தனது மனைவியை வெளியே அழைத்து வந்ததே கிடையாது! எனவே இவர் எப்போதும் தனது மனைவியுடன் தோன்றியது ரஷ்யர்கள் பார்த்திராத புதுமையாகும். கோர்பசேவ் மக்கள் தலைவர், மக்களோடு, மக்களாகப் பழகினார். மக்கள் பிரச்சனைகளை நேரில் சென்று கேட்டார். மக்கள் வேலை பார்க்கும் இடங்களுக்குச் சென்று தொழிலாளர்களிடம் பழகினார். மக்களிடம் கை குலுக்கினார். எனவே மக்கள் இந்த அதிசய அதிபரை மகிழ்ச்சியுடனும், வியப்புடனும் நோக்கினார்கள். அவரது பேச்சை கவனித்தார்கள். இவரை கோர்பி என்று செல்லமாக அழைத்தார்கள்.

### 12.7.3. கோர்பசேவின் சாதனைகள் :

### 12.7.4. கோர்பசேவின் உள்நாட்டுக் கொள்கை : (பெரஸ்த்ரோய்க்கா)

கோர்பசேவ் பதவியேற்ற பின் இரண்டு கொள்கைகளை அறிவித்தார். ஒன்று பெரஸ்த்ரோய்க்கா மற்றொன்று கிளாஸ்நாஸ்ட். அதாவது பெரஸ்த்ரோய்க்கா என்றால் உள்நாட்டில் "சீர்திருத்தங்களை" மேற்கொள்ளுவது ஆகும். கிளாஸ்நாஸ்ட் என்றால் வெளிநாட்டுறவில் "வெளிப்படையான" கொள்கைகளைக் கடைபிடிப்பது ஆகும்.

கோர்பசேவ் தனது கொள்கைகளை மிகவும் கவனமாகச் செயல்படுத்தினார். அதே நேரம் சீர்திருத்தங்களை விரைவாகச் செயல் படுத்தினார். தான் பதவி ஏற்றதும் மது அருந்தும் பழக்கத்திற்கெதிராக

குறிப்பு

பெரிய இயக்கம் ஒன்றை ஆரம்பித்தார். ரஷ்யாவின் வளர்ச்சியடையாத பொருளாதார நிலைக்குக் காரணம் மாஜி அதிபர் பிரஷ்னேவ் தான் என்று பகிங்கரமாகக் குற்றம் சாட்டினார். தனது சீர்திருத்தங்களைத தடையில்லாமல் செயல்படுத்துவதற்காக, கட்சியில் பழமைவாதி களை நீக்கி புதியவர்களை நியமித்தார். அப்படி நியமனம் பெற்றவர் களில் ஒருவர்தான் போரிஸ் எல்ட்ஸின் ஆவார். நாட்டில் சிறைகளில் வாடிய எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தார். மக்களுக்கு மத சுதந்திரம் கொடுக்கப்பட்டது. எழுபது வருடங்களாக மூடிக்கிடந்த தேவாலயங்கள் திறக்கப்பட்டன. நாட்டின் எல்லா பிரச்சனைகளையும் “விவாதிக்கும் உரிமை“ மக்களுக்கு வழங்கப்பட்டது. ரஷ்ய மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் உரிமையைக் கொடுத்தார். நாட்டில் பல கட்சி ஆட்சி முறை கொண்டு வரப்பட்டது. இதனால் கம்யூனிசக்கட்சியின் அஸ்திவாரம் ஆட்டம் கண்டது.

### 12.7.5. கோர்பசேவின் வெளிநாட்டுக் கொள்கை :

